CHUDAMANI

OR

THE VIRTUOUS MAIDEN

BY

T. K. V. NARASIAH

1918

தாமல்-க. வே. நரசையர் இயற்றிய இதர நூல்கள்

மரகதமணி

அல்லது

பேராசைப் பெருமாட்டி

இந்த நவீன நற்போத நாவல் செந்தமிழ் நடையில் எழுதப்பெற்று ஸாதாரணமான கல்வியறிவு படைத்த சிறுவர் சிறுமிகளுக்கும் எளிதில் பொருள் விளங்கக்கூடியதாயும், வாசிப்போர்க்கு நல்லறிவு நன்மார்க்கங்களைப் போதிப்பதாயும், தமது ஓய்வுகாலங்களைப் பயன்படச் செலுத்தக் கருதுவோர்க்குத் தகுந்ததாயும் இருக்கின்றது.

இப்புஸ்தகம் சென்னைக் கவர்னருட்படப் பல ராஜாங்க உத்தியோகஸ்தர்களாலும் அநேக வித்துவான்களாலும் நாட்டேசீமான்கள் பல்லோராலும் பாடசாலைத் தலைமை உபாத்தியாயர்களாலும் நற்சாக்ஷி பத்திரங்கள் மூலமாய்க் கொண்டாடப்பட்டுப் பாடசாலை மாணாக்கர்க்குப் பாடபுஸ்தகமாகத் துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

பற்பல விதமான அரிய பெரிய நற்போதனை விஷயங்களைப் பற்றிய உபந்யாஸங்கள் புஸ்தகத்தின் இடையிடையே சமயத்திற்கேற்றபடி அடங்கியுள்ளன: கதாஸந்தர்ப்பத்திற்கேற்ப ஆங்காங்குச் சேர்த்துள்ள நற்போதனை விஷயங்களின் உண்மைகளை யெடுத்துக்காட்டி வாசிப்போர்க்கு நன்னெறிகளை வற்புறுத்தும் பொருட்டு ஆங்காங்கே முதியோர் வாக்கியங்களும் கவிகளும் புராணக்கதைகளும் மேற்கோள்களாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன: ஆதலின் இப்புஸ்தகம் கல்வி கற்கும் மாணாக்கர்களுக்கு அதிக பயன் தருவதாகும். மத ஸம்பந்தமான விஷயங்களில் யாவரும் ஒற்றுமைப்படாரென்பதை யோர்ந்து அத்தகைய விஷயங்கள் இந்தப் புஸ்தகத்தினின்றும் விலக்கப்பட்டுள்ளனவாதலின், இஃது எல்லா மதத்தினரும் ஸமய வைராக்கியமின்றிக் கையாளக்கூடியதாகும். இதை ஒவ்வொருவரும் வாசித்து நன்மையடையவேண்டுமெனும் கருத்துடன் இதற்கு விலை ரூபாய் ஒன்றேயாக வைக்கப்பட்டது.

CHUDAMANI

OR

The Virtuous Maiden

BY

T. K. V. NARASIAH

Author of "Marakathamani or The Ambitious Queen" "The War & the British Raj" and "Loyalty"

WITH

FOREWORD BY

The Hon'ble Diwan Bahadur

P. Rajagopalachariar Avl., M.A., B.L., C.I.E.

Executive Council Member, Madras

AND

INTRODUCTION BY

M. R. Ry. A. S. Balasubrahmania Aiyar Avl., B.A., B.L.

Sub-Judge, Trichinopoly

1918

Price-Re. 1/-] [illegible] [Postage Extra

சென்னை
பழைய வண்ணாரப்பேட்டை
அவதானம் ராமஸ்வாமி ஐயர் தெரு
9-ம் நெ. க்ருஹத்திலிருக்கும்
பு. வே. சுந்தராராமையரால்
பிரசுரிக்கப்பட்டது

ஸ்ரீரங்கம்
ஸ்ரீ வாணீ விலாஸ அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது



S. Rm. M. Ct. PETHACHI CHETTIAR, Avl., M. R. A. S.

Zamindar of Andipatti.

To

Sriman

S. Rm. M. Ct. Pethachi Chettiar Averghal, M.R.A.S.

Zamindar of Andipatti

Vice-President, Madura Tamil Sangham

and

Honorary Chairman of the Municipal Council, Karur

whose Love for Tamil Literature and Solicitude

for its Advancement entitle him to be regarded

as one of its true and generous Patrons

This work is Dedicated

BY

THE AUTHOR

PREFACE

The reception which my maiden attempt at authorship met with at the hands of the vast Tamil-reading public of this Presidency has made me bold to seek its indulgence for the second time. "*Marakathamani* or *The Ambitious Queen*", my first novel, is distinctly didactic, and incidentally, certain notable social evils of the day are briefly surveyed in it. I have sought quite a different field for "Chudamani or The Virtuous Maiden" with an equally different objective.

The modern Hindu Society presents to an observant mind problems of endless variety and absorbing interest. We are every day witnessing the strange spectacle of two distinct ideals—the Oriental and the Occidental—at war; of our ancient customs and institutions being shaken to the root by the force of new ideas, while the increasing intensity of the struggle for existence leads society to strange compromises, more often dictated by expediency than by strict shastraic sanction. Here is a fertile field for a novelist, abounding in artistic situation, life's little ironies and its truly tragic sides.

In "Chudamani", I have made an attempt to place before my readers a few of our social problems and the complex situations created in everyday life as the result of the conflict between the old and new ideas. I have also, as far as it is practicable, presented the beliefs and

views of the opposing parties in this gradual social evolution, taking care not to obtrude my own ideas, which, by the way, may not be worth much. If my "Chudamani" should succeed, even in the smallest measure, in helping the readers to think of the many pressing social problems, on which depend the individual and communal happiness, I should deem my labor amply rewarded.

"Chudamani" appears at a time when a new world is being evolved in the sanguinary battlefields of Europe and Asia, and it is impossible to repress the temptation to refer to it, and, incidentally, to our Loyalty and our Duty, which both gratitude and enlightened self-interest demand, to the Great British Empire, which today bears the brunt of the struggle in the cause of Justice and Freedom.

I take this opportunity to tender my sincere thanks to M. R. Ry. S. Rm. M. Ct. Pethachi Chettiar Avl., M.R.A.S., Zamindar of Andipatti and Honorary Chairman of the Municipal Council, Karur, for kindly accepting the Dedication of this book; to the Hon'ble Diwan Bahadur P. Rajagopalachariar Avl., M. A., B. L., C. I. E., Executive Council Member for Madras, for his kind Foreword to the book; to M. R. Ry. A. S. Balasubrahmaniam Aiyar Avl., B.A., B.L., Subordinate Judge, Trichinopoly, for the erudite and critical Introduction contributed by him; and to the several gentlemen who have favored me with their opinions on

the book. My thanks are also due, among others, to M. R. Ry. V. Tirugnanasambanda Kavirayar Averghal, the State Poet of Andipatti Samsthanam, and to M. R. Ry. T. K. Balasubramania Aiyar Avl., B.A., Proprietor of the Sri Vani Vilas Press, Srirangam, who have materially helped me in bringing out this publication.

Errors and misprints might have crept in the preparation of this book. They are mainly due to my inability to bestow uninterrupted and undivided attention owing to my being called away mostly on Estate affairs, and I claim the reader's indulgence hoping to rectify them in the next edition.

"SURYA VILAS"
3, Avadhanam Ramaswami Aiyar Street
Washermenpet
MADRAS, 11th August, 1918

T. K. V. Narasiah.

FOREWORD

BY

The Hon'ble Diwan Bahadur

P. RAJAGOPALACHARIAR Avl.
M.A., B.L., C.I.E.

Executive Council Member, Madras.

I have been asked by Mr. T. K. V. Narasiah to write a Foreword to his new Novel "Chudamani" and I do so with pleasure. It is a fascinating novel written in a good style: it raises, and deals with, several of our social and religious problems in an interesting and instructive way, and I have no doubt that it would be found particularly useful for school boys and girls. Mr. Narasiah has already a record for loyal writing, and this record is well maintained in his present publication. I hope that the public will have several more equally readable novels from his pen.

Ootucamund
8th July, 1918 } P. RAJAGOPALACHARI

INTRODUCTION

BY

M. R. Ry. A. S. Balasubrahmania Aiyar Avl., B.A., B.L.

Sub-Judge, Trichinopoly.

THE author of "Chudamani", Mr. T. K. V. Narasiah, is already well-known to the Tamil-reading public as the author of "MARAKATHAMANI," which has been spoken well of by the educationists and the leading men of our Province, and which went through no less than three editions in three years, having been approved by the Text-Book Committee and prescribed as a Text-Book for Non-detailed study in connection with the Secondary School Leaving Certificate Public Examination and also as a text for the Training Schools. His pamphlet on "LOYALTY", being an extract from "MARAKATHAMANI" was distributed to several thousands of people in connection with the Coronation at Delhi. His brochure on "THE WAR AND THE BRITISH RAJ" was accepted and purchased by the Government for distribution in the Tamil and Telugu Districts for the dissemination of right and accurate knowledge among the rural parts.

So far as the simplicity of language, elegance of style and diction, the apt use of expressions and grammatical forms, and the vivid and accurate narration of the story are concerned, "Chudamani" maintains well and is even likely to augment the well-merited reputation of the author of "MARAKATHAMANI." The author's object in "Chudamani" appears to be to depict the present state of Hindu Society, which still retains an inexplicable love and regard for its ancient ideals and institutions but is unconsciously and in spite of itself led into difficult and delicate situations in life on account of its materialistic aspirations and consequent shifts to obtain immediate advantages even at the sacrifice of the ideals and principles that endure for ever, to inform the reader accurately about ancient Hindu ideals of life and the organisation of society, and to place before him the arguments for and against in respect of the several questions in connection with Hindu Institutions and Hindu Marriages in particular. The author has made an attempt to do all this without disclosing his own views as far as possible on these questions—leaving the reader to think for himself and to form his own conclusions—and has thereby enhanced the educative value of the book considerably.—

The story is a simple one and has been told artistically and with effect.—Chudamani, the heroine, is a motherless educated country-girl, who is the only child of Jayaramier, to inherit his lands in the Athur Pannai. Jayaramier was dissuaded from giving her in marriage till she attained puberty and could make an intelligent choice for herself with his guidance, on account of the decision of the Courts of Law with regard to the Estate of a relation, Kundala Deekshitar by name, who gave his four daughters in marriage without leaving them to decide for themselves about their partners in life. The episode of Kundala Deekshitar, the afflictions of Kundala Deekshitar during his last days for his having taken the responsibility of disposing of his daughters without any chance of self-determination, and the intricate questions of inheritance to his Estate resulting in a decision as to its devolution in favour of his daughter's sons who had become converts and the sons of his widowed and remarried daughter to the exclusion of the son of his daughter whom he got married after puberty,—a decision which did not satisfy the public including Jayaramier—are all vividly narrated in Chapter II, which ends with a reference to the unsuccessful attempt to introduce into our Provincial Legislature the Post-Puberty Marriage Bill. Chudamani's education was not such as to make her disdain domestic work and its concerns. Young as she was, she

invariably proceeded to the market and would not leave the choice of things or their purchase for the household to her father's servants. Sundaram, an orphan boy brought up by a Vaideeka Brahman of the place, who was managing the pannai of Chudamani's father and was looking after the work of that pannai as if the pannai were his own, was usually driving the carriage and accompanying Chudamani to the market. On one of such occasions, Chudamani sees old Dharmarajier in great distress, runs to his help, takes him home and tends and nurses him carefully. Dharmarajier put the qualities of Chudamani's head and heart to test in several ways, but she stands them all well. Jayaramier proposes Sundaram in marriage to Chudamani, but eventually leaves her to take time and to make her choice: but her aunt Bhagirathi proposes her sister's son Rajappan as a suitable bride-groom for Chudamani. Dazzled by the vain-boast and tall-talk of Rajappan, Chudamani almost falls in love with him and neglects the simple, benevolent and genial Sundaram, who absconds broken-hearted to the grief of all in the house. On account of Rajappan's disdain for the housewifely duties discharged by Chudamani and by the Providential appearance of the townswoman Savitri, whom Dharmarajier overhears charging Rajappan with infidelity, insincerity and abandonment, Rajappan's

diabolical life and ways were discovered, and Chudamani, who knew nothing about the world and its bad ways, was saved by Dharmarajier from her being united for ever with the insincere and dangerous Rajappan, who really coveted only the estate of Chudamani's father and not the hand of Chudamani. The heart of Chudamani becomes more and more fixed on Sundaram whose whereabouts were not known, but a gipsy soothsayer reads from Chudamani's palm the return of the absconding lover and his marriage with Chudamani. Dharmarajier purchases the Zamin Estate of Mambakam and invites, as such Zamindar, Jayaramier and all his sisters and their children for first-entry into his Zamin-House. Still appearing as a poor old man in his rags, Dharmarajier tests the heart of all his relations, and eventually narrates his thrilling adventures to Rangoon, Natal and Japan, and discloses his identity as Gopalier, the brother of Jayaramier, coming *incognito* as Dharmarajier. He regrets his parting company in a storm with his sister Padmakshi and tells the story of her having been taken by Sadasivier of Tanjore, then the Finance Minister of Japan, and her being married to Sadasivier's son, Narayanier, who was suspected of espionage in connection with the State secrets in the Russo-Japanese War and condemned without any trial to prison at Osaka and eventually escaped into Russian territory, and

of the absconding of Padmakshi, then pregnant, with her aged mother-in-law to escape death when they were ordered to be shot from the cannon's mouth by the Japanese Government after confiscating fifty lakhs worth of property belonging to Narayanier. Gopalier lived for a time after that with his brother, Jayaramier, and Chudamani, the child after his own heart. Rajappan again approaches Chudamani and tries to enlist her sympathy and love in his favour by offering to commit suicide. She gives him sound advice and tells him that Sundaram has won her heart and that Rajappan can never dream of any alliance with her. Chapter XIII contains a succinct debate on the several ideals of Marriage, in which Gopalier speaks in favour of the Hindu ideal of Marriage as the best. Gopalier had ascertained the whereabouts of Sundaram and arranged secretly for his education at Madras. He at last left the bulk of his estate to Chudamani and small legacies to his other relations. At the persistent intercession and importunity of Chudamani, Gopalier altered his dispositions and gave large legacies to Rajappan and other relations. He eventually became a Sanyasin and left his body voluntarily on account of his yoga practices by the bursting of his skull. Rajappan covets the hand of Chudamani all the more, and sets on her his concubine, Savitri, as an honest and respectable lady

under the assumed name of Sundari, to put into the ears of Chudamani a false story of the death of Sundaram, who, according to him, stood between him and the hand of Chudamani, and to persuade her to turn her affections towards Rajappan, who was represented by Sundari to be no longer what he was, after the death of his concubine Savitri, but a thoroughly reformed personage; but the plot is discovered and Rajappan resorts to violate Chudamani when he found her alone in a garden : but Sundaram suddenly appears and rescues her from Rajappan without staying to be recognised. Rajappan then tries to get hold of the Will of Gopalier and made away with it under a mistaken notion that but for any disposition by Gopalier he could inherit to his uncle. He is foibled even in this, as the document he got was only a codicil confirming a will which gave him little or nothing. Chudamani with her sympathy for her relations would not deny Rajappan or others what she got them under the purloined codicil by intercession from Gopalier. Rajappan received the major portion of his legacies and squandered them in gambling. He was plundered one night of what little he was able to regain that day, but was rescued by Sundaram *incognito* in the dark of the night. The hollowness of modern club-life, the characters that are generally met with there, and the atrocities and wretchedness of gambling are vividly described in Chapters XX to

XXIII. Rajappan was at last taken to jail and was helped even there by Sundaram. Sundaram completes his education. He is no other than the son of Padmakshi, sister of Gopalier and Jayaramier. His identity is proved by unimpeachable credentials. The marriage of Sundaram and Chudamani is celebrated and they live together happily and take parental care of the reformed and penitent Rajappan and their other cousins.—

In telling this natural story which has not indented in any place on active and grotesque intervention of supernatural agency, the author has taken full advantage of the situation to impart instruction to boys and girls and men and women on the ideals of ancient Hinduism, the arguments for and against the preservation of the ancient institutions of this country, with suggestive remarks for reform here and there without affecting the fundamentals, and on the moral and ethical principles, a disregard of which is the primrose-path to certain ruin. The author deserves to be congratulated on his attempt—notwithstanding slight inadvertent errors of conception and sentiment, due probably to want of direct and constant touch with Shastraic works, which can easily be rectified in a second or revised edition. He really deserves to be encouraged to continue writing books of such educative value on all the burning topics of the day.

At the assembly in connection with the celebration of the marriage of Chudamani, an address on the **Benefits of British Rule in India** and the **Indian's Duty of LOYALTY to Britain and the British Throne** is delivered by the Zamindar of Andipatti—a valuable lesson, which has to be brought home to the mind sespecially of young men and women in these days when democratic feelings are running riot in the country and are growing epidemic in character.

"Gowri Vilas"
Puthur
1st July, 1918

A. S. BALASUBRAHMANI

OPINIONS

THE HON'BLE

MR. JUSTICE T. V. SESHAGIRI AIYAR, B.A., B.L.,

Judge, High Court, Madras.

Thanks for your copy of the new novel " **Chudamani** ":— The distinctive feature of it is that it endeavours to depict the present day circumstances and to point out how they affect the daily life of the people. In other countries, novels which are very largely read generally relate to the life of the people as it exists and not to a description of times long gone by, although there are notable exceptions in this direction. In this country more than in any other, a novel should try to bring home to the reading public the evils which abound in society and their prejudicial effect on progress. So far as I have been able to read, your novel is conceived in the right direction. I particularly appreciate the last portion of it which relates to **the Benefits of English Rule in this country**.

THE HON'BLE DEWAN BAHADUR

JUSTICE T. SADASIVA AIYAR AVL., B.A., M.L.,

Judge, High Court, Madras.

I have had the pleasure of going through "**Chudamani**". The author has taken great pains to explain in an easy, correct and elegant style, the **Benefits of Social Reform**. Combining as the book does the interest of a romance, I am sure it will be greatly appreciated. The book will be specially **useful to the school-going population** as it teaches many useful moral lessons.

THE HON'BLE DEWAN BAHADUR

JUSTICE C. V. CUMARASWAMI SASTRIAR AVL,, B.A., B.L,

Judge, High Court, Madras.

" **Chudamani** ":—The book is well-written and will, I am sure, be popular and **instructive**. The novel has often been used as a means of exposing social evils and has been a powerful instrument of reform, and I think readers of your novel will have much food for reflection. It was a happy idea to wind up the book with the chapter on "**Loyalty**" of which in these days the need is apparent.

M. R. Ry. R. A. KRISHNASWAMI AIYAR AVL., B.A., B.L.,

Special S. C. Judge, Trichinopoly.

I congratulate you on the production of "**Chudamani**". The reading public must feel grateful to you for the service you are rendering to the motherland as an author. "**Chudamani**" like its predecessor, "MARAKATHAMANI", is written in beautiful poetic prose. You have exhibited remarkable skill in weaving the plot and arranging the incidents. The book displays high literary ability, great eloquence and genial humour. The plot is well-conceived and you have exhibited remarkable insight into human nature in the delineation of your characters. Character is analysed and portrayed in such a manner as to promote among novel readers a healthy tone of moral feeling. Your description of natural scenery is admirable and the dialogues have been beautifully worded and introduced for popularising high ideals regarding morality and religion. The unique feature of the book is the last chapter on "**Loyalty to the Throne.**" Such a book is bound to appeal to all tastes. I believe that **this book will do immense good to the young. The book deserves to be a text-book in all public schools.** I hope it will be received by the public with great favour.

RAO BAHADUR S. APPU SASTRIAR AVL., B. A.,

Manager and Hedmaster, Native HighSchool,

Kumbakonam.

"**Chudamani**" is an interesting novel which deserves every kind of encouragement at the hands of the **Headmasters of High Schools**. The subject-matter is on the whole good and will be **useful to the boys** for whom it is intended. It is written in a simple, easy and idiomatic style, an additional recommendation. The author has bestowed great care and thought in the preparation of this book, which I regard as an **entertaining and useful publication.**

M. R. Ry. T. CHELVAKESAVAROYA MUDALIAR AVL., M.A.,

Tamil Lecturer, Pachaiyappa's College,

and Examiner in Tamil, Madras University.

I perused portions of your "**Chudamani**" and am glad to find that it is written in **readable Tamil approaching......the requirements of modern Tamil prose**....I am extremely pleased to find that you do something now and then in bringing out such publications.

M. R. Ry. T. KANAKASUNDARAM PILLAI AVL., B. A.,

Formerly—Educational Superintendent, Government Secretariat, and Examiner in Tamil, Madras University.

"**Chudamani**" is a novel in Tamil by the author of "MARAKATHAMANI", Mr. T. K. V. Narasiah. ....It is interspersed with short discourses on Indian Achara, Asrama, Yoga and other topics and discusses the merits and demerits of Infant, Post-Puberty and Widow Marriages. It has also a chapter on "**Loyalty**" in which the author deals with the question of **the present War and the necessity or desirability of India's helping Great Britain to win the War**. I am very much pleased to learn that the first edition of the book is to be distributed gratis so as to promote loyalty amongst the Indians in general.

M. R. Ry.

A. V. GOPALACHARIAR AVERGHAL, M.A.,B.L.,

High Court Vakil, Trichinopoly.

I read through your Tamil Novel "**Chudamani.**" I find it very interesting reading. The Tamil is chaste and racy and faultless. The characters are varied and well-developed. **The book is excellent from a literary point of view and will be a suitable text-book for boys and girls**. The book breathes healthy feelings of **loyalty** throughout and contains many moral lessons.

DEWAN BAHADUR

T. DESIKACHARIAR AVERGHAL, B.A., B.L.,

Vakil, and President of the District Board,

Trichinopoly.

I have perused with considerable interest the advance copy of your novel "**Chudamani.**" **It is bound to be of great educative value for the class of people for whom it is intended**. It handles in a delicate and skilful manner current social problems. It inculcates at every turn, in an unobtrusive way, useful lessons in morality and loyalty. The book is sure to be in great request in every Indian household in this portion of the Presidency; and **if prescrided for detailed or nondetailed study, it is bound to be of no small benefit to the students of High Schools**.

"The Hindu Message"—Srirangam, August 8, 1918.

"Chudamani or the Virtuous Maiden" BY MR. T. K. V. NARASIAH.

"This is a novel in Tamil by Mr. T. K. V. Narasiah who is already well-known to the readers of Tamil literature by his already published novel "MARAKATHAMANI" which has run through three large editions within three years and which has been found good enough to be approved by the Text-Book Committee and prescribed as text-book in the schools. This novel also is written in his usual style **with a purpose** which has been very dexterously and carefully concealed in the midst of interesting scenes and protracted discourses. It is quite evident that it is intended to present different views to the different classes of readers, each in accordance with the standpoint from which he reads it. It is quite on the cards that the social reformers would hail it as a novel after their heart........The heroine is a girl who had attained puberty and she is left unmarried by her parents in order that she may choose a husband herself. Her self-determined choice unhappily falls upon a perfect rake (as such choices are sure to fall) and the parents have to intervene and warn her of the dangers ahead, thus justifying clearly our old-established custom of the parents' choice of a husband for their girls. There is a fine Introduction in English by Mr. A. S. Balasubrahmanya Aiyar, Sub-Judge, Trichinopoly, and a Foreword by the Hon'ble Dewan Bahadur P. Rajagopalachariar. The book is dedicated to that patron of Tamil literature, Mr S. Rm. M. Ct. Pethachi Chettiar, Zamindar of Andipatti, whose portrait forms the frontispiece to the book. In spite of its length, the story maintains its interest throughout, and as such we recommend it to our readers and wish the author success.

* * * * * * * * * * * *

சாத்து கவிகள்

ஆண்டிபட்டி ஸம்ஸ்தான வித்வான்

ம-ா-ா-ஸ்ரீ

வி. திருஞானசம்பந்தக் கவிராயரவர்கள்

இயற்றிய

சிறப்புப்பாயிரம்

சந்தமுறுஞ் செந்தமிழும் ஆரியமும் ஆங்கிலமுந்
    தழைப்பத் தேர்ந்தோன்
சிந்தைமகிழ் மரகதமா மணியையுலகினுக்கீந்து
    சிறப்பு வாய்ந்தோன்
செந்திருவா ழூரமகிபன் பெத்தாச்சி மந்திரியாய்த்
    திகழு மேன்மை
அந்தணர்கோன் தாமல்வரு கரிகிரிவேங்கடநரசிம்
    மைய னன்பாய்

வாணர்களுங் கல்விபயில் மாணவருஞ் செல்வகல
    மருவு மின்ப
யாணர்களுந் தருமநெறி முறைவிழையும் யாவருமேந்
    திழை யார்தாமும்
காணலமெந் நூலையுமிங் கிதகாறு மிதுபோலிக்
    காட்சி யாலே
பேணலமற் றெருநூலும் பிறந்ததனுற் பொருந்துபலன்
    பெற்றே மென்ன

கல்யாண விலக்கணமுங் கற்புடையோர் மகிமைகளும்
கடவுட் பேறும்
நல்யாக வியல்பினொடு நால்வகையாச் ரமதர்மம்
நகரம் நாடு
செல்வாறு பொழில்வளமுஞ் சீமான் மாட்டிகளின்
திறமும் வேதஞ்
சொல்யோகத் தகைமைகளுந் துஷ்டருற வாலடையுந்
துன்பந் தானும்

தக்கபெரி யோர்கடவுள் வழிபாடு சழக்குறாகு
தாட்டத் தீமை
புக்கவடைக் கலங்காத்தல் ரகசியத்தை யொருபோதும்
புறத்தோ தாமை
மிக்கபொழு தாபத்துச் சந்யாசம் விருந்தோம்பல்
விளம்பு மிந்தத்
தொக்கபல விஷயமுமித் தொல்புவியை யினிதாளுந்
தோன்ற லாய

அருட்குணத்தெம் மன்னர்பிரான் ஜார்ஜரசின் அரசாட்சி
நலங்கள் யாவும்
தெருட்குணத்தால் ஆண்டிபட்டி ஜமீந்தார்செப் பியதிறமுஞ்
சேர வாய்ந்து
குருட்கனங்கொள் நந்துணைத்த நங்கைசூ டாமணியாங்
கோலப்பேர் நூல்
பொருட்கணங்கொள் வேங்கடந்தென் குமரியிடைத்
தமிழ்நடையாற் புகன்றுன் மாதோ.

சென்னை ப்ரெஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப்பண்டிதரும்
மஹாமஹோபாத்யாய பட்டம் பெற்றவருமான
ப்ரஹ்மஸ்ரீ வே. சாமிநாதையரவர்கள்
எழுதியது

...சூடாமணியென்னும் புஸ்தகத்திற் சில பாகங்களைப் படித்துப்பார்த்தேன். எடுத்துக்கொண்ட விஷயமும் நடைப் போக்கும் இக்காலத்திற் கேற்றபடி நன்றாகவே யிருக்கின்றன......

சென்னை லெக்ஸிகன் கமிட்டி (தமிழகராதிச் சங்கம்)

பண்டிதர்

ஸ்ரீமாந், மு. இராகவையங்காரவர்கள்

எழுதியது

ப்ரஹ்மஸ்ரீ தா-க. வே. நரஸையா அவர்களால் எழுதப்பெற்ற "சூடாமணி அல்லது நற்குணத்த நங்கை" என்ற நவீன கதையின் பிரதி யொன்று கிடைக்கப் பெற்றேன். கதையை இன்பம் பயக்குமாறு இதனாசிரியர் ஒழுங்காகவும் அழகாகவும் அமைத்திருக்குமுறை முதலிற் புகழத்தக்கதாம். சூடாமணியின் உத்தம குணங்களும் புத்திப்பெருமையும் இதனுள் நன்குரைக்கப்பட்டிருப்பதோடு, எடுத்துக்கொண்ட மற்றைப் பாத்திர வியல்புகளும் திருத்த முறையே விளக்கப்பட்டுள்ளன. கதையின் இடையிடையே, தற்கால ஆசாரங்களிற் கைகூடக்கூடிய சில திருத்தமுறைகளும் நீதிகளும் தத்துவபோதனைகளும் இராஜவிசுவாசம் போலும் விஷயங்களும் விளக்கமாகக் காட்டியிருப்பது படித்தற் குரியதே. இந்நூலின் நடை இனிமையும் எளிமையும் வாய்ந்ததே: ஆதலால் மாணவரும் மகளிரும் படித்தறிதற் குற்றது. இதுபோலும் நவீனகங்கள் புனைந்துரைகளே யாயினும், உலகினடையுடைபாவனைகளையும் சில உத்தம தர்மங்களையும் உணர்த்தி அறிவூட்டவல்லன என்பதில் தடையில்லை. 'நாவல்'களாலும் மாணவர்க்கு அறிவூட்ட விரும்பும் கல்வியதிகாரிகள் இதுபோலும் நூல்களைச் சாதனமாக ஏற்படுத்திக்கொள்வது மிகவும் நன்மையாகுமென்றே எண்ணுகின்றேன்.

சென்னை மேரி மஹாராணியார் மாதர் கலாசாலைத்

தமிழ் உபநியாசகர்

ம-ா-ா-ஸ்ரீ கா. நமச்சிவாயமுதலியாரவர்கள்

இயற்றியது

நாகரிகப் பயனாக நவநவமாஞ் செய்கைபல
நாளுமோங்கும்
ஊகமுட னறிஞரவற் றானாகு நலந்தீமை
உலகிற் காண
பாகமுறு நூலாகக் காட்டுவரா லந்நீர்மை
பண்பி னோர்ந்து
தாகமுறச் செந்தமிழில் வருசூடா மணிநூலைத்
தந்திட் டானால்

அந்தணர்தம் மரபிலுறும் ஆசாரச் சீர்திருத்த
மவற்றை யாய்ந்து
முந்துபல அறிவாளர் கூறுமுறை தமைநாடி
முடிவு தேர
வந்தபல தடைவிடைகள் விளக்கமுற இந்நூலில்
வகுத்துத் தந்தான்
அந்தமிலா இன்புதரு நாவலெனும் புத்துரையாம்
அடைவின் மாதோ

எவரிடத்தும் இன்சொல்லும் இன்முகமுங்காட்டிடுமோ
ரியல்பு வாய்ந்தான்
தவரிடத்து மாறாத அன்புடையான் நண்பர்பெறு
தனமே போல்வான்
புவனியினுக் கணியாகும் தாமல்வரு கரிகிரியான்
புலமை சான்றான்
நவநவமாங் கருத்துறவேங் கடநரச ஐயனெனு
நாவ லோனே.

சேது ஸம்ஸ்தான மஹா வித்வான்

ஸ்ரீமாந் ரா. இராகவையங்காரவர்கள்

இயற்றியது

மாண்பினிய சூடா மணியாகன் மாதுகதை
காண்பினிய பல்லறமுங் காட்டியிவண்—பூண்புகழே
சார்வே னெனமொழிந்தான் நாமற் கரிகிரிவாழ்
கார்வேங் கடநரசிங் கன்.

திரிசிரபுரம் ஸெண்ட் ஜோஸெப் காலேஜ்

தலைமைத் தமிழ்ப்பண்டிதர்

ஸ்ரீமாந் வித்வான்

ஏ. எம். சடகோபராமாநுஜாசாரியாரவர்கள்

இயற்றியது

திருவளரும் பொழில்புடைசூழ் பொதியமுனி தந்ததமிழ்
செழிக்கச் செய்வான்
தருவளருங் காமுடையான் சகலகுண சம்பன்னன்
தரும மூர்த்தி
மருவளருஞ் சீரகத்தார் வணிகேசர் குலத்திற்கோர்
மணியே போல்வான்
உருவளரும் பேத்தாச்சிப் பேருடையான் ஆண்டிபட்டி
யுரிமைபூண்டான்

அன்னவன்ற னுஸ்தானக் காரியக்க ளனைத்துஞ்சீ
ரறிந்து நோக்கும்
நன்னயஞ்சேர் தமிழ்விரகன் மரகதமா மணிநாவல்
நமக்கே யீந்தான்

துன்னுபெரும் புவிமகிழுந் தொல்லறங்கள் பற்பலவுந்
தொகுத்து மேன்மை
மன்னுபெரி யோர்மதித்து மனங்களிக்குஞ் செந்தமிழால்
வசன மாக

கற்பவர்க்கு மதிபெருக்கு மற்புதச்சூ டாமணிப்பேர்
கவின காட்டி
விற்பனஞ்சேர் ஒருநாவல் விளங்கவுல கிலுக்கீந்து
மிகுசீர் பெற்றான்
எற்பொலிமென் மலர்த்தாமப் கரிகிரிவேங் கடநாசிம்
மேந்திா னென்னும்
பொற்புவளர் புனிதமிகும் பூசுரர்தங் குலம்விளக்கும்
புகழுள் ளோனே.

திரிசிரபுரம் எஸ். பி. ஜி. காலேஜ் தலைமைத்தமிழ்ப்பண்டிதர்

ம-m-m-ஸ்ரீ

என். எம். வெங்கடசாமி நாட்டாரவர்கள்

இயற்றியது

தெய்வத் தமிழின்கட் சீரியநூல் பற்பலவுஞ்
செய்யுள் வடிவிற் றிகழ்தலால்—எவ்வமின்றி
யாவருங் கற்குமா றெண்ணி லுரைநடைநூல்
மேவர வேண்டும் மிக

என்றுகொண் டிப்போழ் தியற்று புதியனவுள்
நன்றுசூ டாமணியா நாமநூல்—இன்றிதனைத்
தந்தன னுண்டிபட்டி தாங்கு சமீந்தாருக்
கந்தரங்க னும்நரசை யா.

மதுரைத் தமிழ்ச்சங்கத்து மஹாவித்வான்

சித்தாந்த சரபம் அஷ்டாவதானம்

சிவஸ்ரீ கலியாணசுந்தர யதீந்திர சுவாமிகள்

இயற்றியது

எத்தகைய விலம்பாடு வாய்ந்திடினு மெவரிடையூ
றியற்றி னாலும்
உத்தமநற் குணமுடையர் பார்மதிக்க வுயர்நிலையி
னுறுவ ரென்றும்
சித்தமா சுறுபவர்கல் லார்போல நடித்திடினுந்
திருவி ழந்து
தத்துபற் பலசூழ்ந்தங் கவமானத் துட்சிக்கித்
தளர்வ ரென்றும்

மடவார்க்கு வருபருவ முன்னும்பின் னுஞ்செய்யும்
வதுவை தன்னால
அடர்நன்மை தீமைகளுங் கைம்பெண் விவாகவியல்
பதுவு மென்றும்
இடரகற்றி யாள்கின்ற ஆங்கிலேயர் வைபவமு
மிராஜாங் கத்தில்
இடமாக விசுவாசம் வைத்திடலே கடனெனவுந்
தேறி யாரும்

ஆவிக்கு நிகருறுமை தவாமை நாகரிக
மமைந்து வாழ
நாவினிக்குஞ் செந்தமிழி னுயர்சூடா மணியெனுநா
னன்கு சொற்றுன்
தாவில்புகழ் மரகதம ணிப்பனுவல் முன்னளித்த
சதுர்விற் பன்னன்
வாவிசூழ்ந் தொளிர்தாமற் கரிகிரிவேங் கடநாத
மறையோர் கோவே.

மதுரைத் தமிழ்ச்சங்கத்து வித்வான்


ப்ரஹ்மஶ்ரீ பண்டித அ. கோபாலையரவர்கள்

இயற்றியது

சந்திர சேகரன் வந்துமு னுய்ந்துள சங்கத் தமிழ்நூல்கள்
மூந்திய செய்யுளி னுகிய வாதலின் முறையிற் பயில்கின்ற
புந்தியு மாயுளுஞ் சேர நிரம்பிய புண்ணியருக் கல்லால்
இந்த நிலத்தினி லெம்போன் றவருக் கியையா வென வெண்ணி

சுத்தமனம் பலவுல கியலுங்கொடு சூடா மணி யென்னும்
புத்தகம் யாவரும் ஏற்க வியற்றினன் பூந்தமிழ் வசனத்தில்
மூத்தியு மேனையறம் பொருளின்பமு முற்றுதல் செயலாக்
கொள்
வித்தகர் சேர்தரு தாமற் கரிகிரி வேங்கட நரசையன்

மற்றிவ னுங்கில மாணவர் பயிலுறு மரகதமணி யென்னும்
கற்றமிழ் நாவலும் வேறிரு நூலுநவின் று சிறப் புற்றுக்
கற்றவர் சூழ்தர வாண்டிபட்டிச் சமீன்காவல் புரி மன்னற்
குற்றுள மந்திரி யானவனன் கிவ்வுலகிய லோர்ந்தவனே.



அட்டவணை

ஓம்

கடவுள் துணை

சூடாமணி

அல்லது

நற்குணத்த நங்கை

ஆற்றார்ப் பண்ணை

அகிலசராசரங்களுக்கும் சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரகர்த்தனும் அவ்வவ்வதனை யததனுக்குரிய தொழில்களின் முறையே பிரவர்த்திப்பித்துத் தன்னுள்ளடக்கிக் காத்துத் தனி முதலாய் விளங்காநின்ற கருணைப்பெருங்கடவுளின் திருவருள் மிகப் பெற்றுக்காஞ்சிமண்டல சமீபமாகப் பாலாற்றங்கரை

யையடுத்து மிளிர்கின்றதோர் பெரிய கிராமம் ஆற்றூர் என்னும் பெயர் வாய்ந்துளது.

அஃதெக்காலத்தும் குறைவுறாத பாலாற்றின் ஜலப்பாய்ச்சலாற் செழித்து வளர்ந்த மா பலா தெங்கு கமுகு முதலிய வான்றோய் மரச்சோலைகளும், நாநாவித வாழைப் படப்பைகளும், கருப்பஞ் சூழல்களும், சண்பகம் பாதிரி கொன்றையாதிய கோட்டுப் பூக்களும், சம்பங்கி பிச்சியாதிய கொடிப் பூக்களும், தாமரை நீலம் சேதாம்பலாதிய நீர்ப்பூக் களும், அலரி பாரிசாதம் செவ்வரத்தம் முதலிய நிலப்பூக்களும் மாறாது மலர்ந்து மதுச்சொரிய வண்டுகள் மூசும் நந்தவனங்களும், இடையிடையே கொட்டியு மாம்பலும் ஓட்டி மலர்ந்து பன்மீனுகளும் நன்னீரோடைகளும், முப்போகமுந் தப்பாது விளையும் செந்நெற்கதிர்க்குலை துன்னிய கழனிகளும் தன்னகத்தே யுடைத்தாகிப் பார்ப்போருள்ளத்தைக் கவர்ந்து சோகமுந் தாகமுந் தீர்த்து அகங் குளிர்வித்தானந்த மூட்டுஞ் சிறப்பமைந்தது.

அத்தகைய கிராமத்தின் மத்தியில் சௌக்யாபிவிர்த்திக்கனுகூலமான வோரிடத்தில் ரவிமந்திரம் என்னும் பெயரதாய் ஓர் விசித்திர மாளிகை அமையப் பெற்றுளது. அது நீர்வளம் நிலவளம் பொழில்வளம் குறைவற வமையப்பெற்று, வடகாற்று வருங்காலத்துக் கயிலையிற் சிவபிரானணியுங் கொன்றைமலர் வாச

மும், தென்காற்று வீசும் வசந்தகாலத்துத் தண்டமி ழொடு தழைக்கின்ற சந்தன வாசமும் தன்னகத்தே தடையின்றி வரப்பெற்று, எதிரே நாமகளும் திரும களும் நயந் துறைகின்ற வெள்ளிய செய்ய தாமரையும் பிறவு மலர்ந்த நிறைநீர்வாவியொன்று திகழப் பெற் றிருக்கின்றது. அம்மாளிகைக்குப் பின்னே சுமார் ஒரு ஏக்கரளவுள்ள நிலப்பாங்கில் வைக்கோற்போரு மொன் றுண்டு. அதனையடுத்துப் பலவகை மாட்டுத் தொழுவங்களும், குதிரைப் பந்திகளும், கோச் பீட்டன் மோட்டார் முதலிய தற்காலத்து நவீன சவாரிச்சாத னங்கள் நிற்கும் வண்டிக்கூடங்களும் இனிது நிருமிக் கப்பட்டிருக்கின்றன.

தன்னகத்தே சுமார் ஆயிரம் ஏக்கர் நன் செயும் முன்னூறு ஏக்கர் புன்செயும் கொண்ட இந்தக் கிராமம் 1900-ம் வருடத்து ஏகபோகப்பண்ணையாய் விட்டது. இந்தப் பண்ணையின் பாத்தியத்தலைவர் ஜயராமையரென்பவர். இவர் இச்சூளிகையிலே வசிப்பவர். இவர் ஆங்கிலத்தில் பி. ஏ. பரீக்ஷை யிற் றேர்ச்சியடைந்தவர்: வடமொழியுந் தென் மொழியும் நன்கு கற்றவர். இவர் கைத்தொழில் அபி விர்த்தியில் ஊக்கமுள்ளவர்: ஆகவே, ஓர் பஞ்சுயந்திர சாலையும் நெல் யந்திரசாலையும் ஏற்படுத்தி அநேக வேலைக்காரர்களை நியமித்து அவை மூலமாகப் பல வேழைக் குடும்பங்களைக் காப்பாற்றிவருபவ ரானார்.

இவருக்கு 1900-ம் வருடத்து முடிவில் ஐம்பதாவது வயது பூர்த்தியாய்விட்டது. இவர் மிகவும் தயாளு: சாந்த குண முள்ளவர்: பொய் கொலை களவு குருநிந்தைகள் ளென்னும் பாவமைந்தையும் அதத னியனுக்கித்துறந் தெப்போதும் அல்லாதன தவிர்த்து விதித்தனவே செய் தொழுகுவார்: ஒய்வுள்ள நேரங்களில் கல்வியிற்றேர்ந்த வித்வான்களைத் தருவித் தவர்களிடம் ஆன்மவிசாரஞ் செய்து காலங்கழிப்பார். இவரிடம் 500 பண்ணையாட்களும் 2,000 யந்திரசாலை வேலையாட்களும் ஜீவிப்பர்.

1911ஹு ஜனவரிமீ ஒருநாள் அந்திப்பொழுதில் சிங்காரமான இரட்டைமாட்டுக் கூண்டுவண்டியொன்றை இக்கிராம நோக்கி யொரு சிறுவன் வெகு வேகமாய் ஓட்டிவந்தான். அவனுக்குச் சுமார் 19 வயதிருக்கும். அழகுள்ள வடிவின னாயினும் தற்போது முகங்கறுகி மெலிந்தவனாகக் காணப்பட்டான் அவன்: ஆனால் விலையுயர்ந்த சரிகை வேஷ்டியைக் கட்டிக்கொண்டும் சட்டைகளைத் தரித்துக்கொண்டும் துலங்கினன். முகக்குறிப்பினு லவன் தயாள குணமுள்ளவனென்று தெரியவந்தது. அவன் வசனித்ததால் ஆங்கிலம் தெளிவுறக் கற்றவனென்றும், மிகப் பணிவுள்ள சுபாவத்தினனென்றும், அடக்கம் பச்சாத்தாபம் பூததயை வாய்மை இத்தகைய நற்குணங்கள் நிறைவுற்றவ னென்றும் விளங்கிற்று. அச்சிறு

வன் றன் கையிலோர் சாட்டையையும் வைத்திருந்தான்.

வண்டிக்குள் சுமார் 15 வயதுள்ளவளாய் மிக்கழகுபொழிந்த வொரு சிறுமி விளங்கிக்கொண்டிருந்தாள். அணிந்திருந்த ஆபரணங்களாலும் உடுத்திருந்த ஆடைகளாலும் அவளோர் தனிக குடும்பத்தைச் சேர்ந்தவளென்று கருதத் தக்கவளாயிருந்தாள். ஆனால், அவள் அலங்காரஞ் செய்துகொண்டிருந்த விதத்தை நோக்கச் சற்று நாகரிக முற்றாக் கிராமவாசியாகத் தென்பட்டாள்: என்றாலும், அவள் பூரணசந்திரனையொத்த முகமும், கார்மேகம்போற் கறுத்து நீண்ட கூந்தலும், துடியினை நிகர்த்த இடையும், நீலோற்பலமலரைப் பழித்த கண்களும், குமிழனைய மூக்கும், கோவைப்பழத்தைப் போன்ற வாயும், முல்லையரும்பும் முத்தும்போல் வரிசைவாய்ந்த பற்களும் படைத்தவளாய்த் துலங்கினாள்: அவளது வாக்கிலிருந்து வெளிவந்த வார்த்தைகளினால் தான் மிகவும் கல்வித் தேர்ச்சி யடைந்தவளென்று காட்டினாள். மேலும், நன்மங்கையர்க்கு வேண்டிய மடம் நாணம் அச்சம் பயிர்ப்பு என்னும் நாற்குணங்களையுமேற்கொண்டு, கற்பென்னும் ஆடையுடுத்து, அன்பாகிய மலரை முடித்து, நற்குண நற்செய்கைகளைப் பொருந்தியவளாய் விளங்குதலால், பதுமன் படைத்த பல்வகை வகுப்பின் முதலாவதாம் பத்மினி யென்று

கருது தற் கேற்றவளாயிருந்தாள். அவளுக்கு இன்னும் விவாகம் நடந்ததாகத் தோற்றவில்லை.

இத்தகைய பெண்மணி யாரோவெனின், ஆற்றூர்ப் பண்ணை யாளும் ஜயராமையரின் அருமந்த புதல்வி. இவள் பெயர் சூடாமணி யென்பர். . இவள் தனது நான்காவது வயதில் அன்பார்ந்த தன் றாயை யிழந்துவிடத் தனது அத்தையான பாகீரதியம்மை யால் மிகப் பரிவுடன் வளர்க்கப்பட்டு வந்தாள். ஜயராமையருக்கு வேறு குழந்தைக ளில்லாததனால் அவர் இவளைத் தம் குலதெய்வமாகவே கொண்டாடி வந்தார்.

வண்டியோட்டிவந்த சிறுவன் இடையிடையே இவளைக் கீழ்க்கண்ணாற் பார்ப்பதுவும் உடனே யச் சத்தாற் றலை குனிந்துகொள்வதுவுமாக விருந்தான். அதனால் அவன் இந்நங்கையிடம் உட்காதல் கொண்டவன்போற் றோன்றினான். ஆனா லவன்றனது நிலை யை யோசித்துத் தன தபிப்பிராயத்தை எவரும் கண்டு கொள்ளாம லிருக்கும்படியாக நடந்துகொள்ள முயன்று வந்தான்: ஏனெனில், தான் 10 மாதக்குழந்தையாக விருந்தபோது திக்கற்று அப்பண்ணையைச் சார்ந்த அக்ரஹாரத்தில் வசித்துவந்த ஜயராமைய ருக்கு அத்யந்த நேசராகிய கிருஷ்ண கனபாடிக ளால் வளர்க்கப்பட்டு வந்தவன். இவன் அநாதையா யிருப்பினும், கனபாடிகள் இவனுக்குத்

போதுமான பாடசாலைப் படிப்பைத் தந்து தம் விவகாரங்களில் சர்வாதிகாரமுங் கொடுத்து மிகப் பரிவுடன் பாதுகாத்து வந்தார். ஆனால், இச்சிறு வனுக்குத் தன் வமிசபரம்பரை விளக்க மாகாதது மிகவும் தலையிறக்கமா யிருந்தது. ஐயருக்கும் கன பாடிகளுக்கும் உள்ள நேசம் பற்றி இச்சிறுவ னொழிய வேறு எவரும் சூடாமணியுடன் பேசத் தகாது. இவ்விருவரும் இளமைதொட்டு ஒன்றாய் நேசித்து விளையாடி வந்தவர். இப்போது இச்சிறுவன் சூடா மணியிடம் மனதைச் செலுத்தியிருந்தான். இதனைச் சூடாமணியோ அறிந்திலள். சில காலத்திலெல்லாம் இச்சிறுவன் ஜெபராமையரிடமே வந்து சேர்ந்து விட்டான்.

ஆற்றூருக்குச் சமீபமான சீவரம்ஜாகிரில் வாரத் தொருமுறை சந்தை கூடுவது வழக்கம். அச்சந் தையில் பல கிராமங்களிலிருந்தும் பற்பல சரக்கு களும் ஜவுளி வகைகளும் தட்டுமுட்டு சாமான்களும் அநேக பழவர்க்கங்களும் விற்பனைக்குக் கொண்டு வருவார்கள். சிற்சில சமயங்களில் அச்சந்தைக்குச் சூடாமணியும் தன் அத்தையாகிய பாகீரதியம்மை யுடன் சென்று தமக்கு வேண்டியவற்றை வாங்கிக் கொண்டு செல்வது வழக்கம். நாம் குறிக்குநாள் பாகீ ரதி தனக்கு உடம்பு சௌக்கியப்படாமையால் நம் சிறுவனை யழைத்து அவனோடு சூடாமணியைக் கூட்

ட்டிச் சந்தைக் கனுப்பினுள். சூடாமணியும் சிறுவ னும் ஆங்குச் சென்று தமக்கு வேண்டியவற்றை வாங்கித் தம்முடன் வந்த வேலையாட்களிடம் அனுப்பி விட்டுப் பண்ணை நோக்கி வெகு வேகமாய் வண்டி யோட்டிச் சென்றார்கள்.

அப்போது அஸ்தமன சமயம். வண்டியோ வெகு விரைவாய் வந்துகொண்டிருந்தது. வண்டிக் குள்ளிருந்த சூடாமணி, "சுந்தரம்! சுந்தரம்!! நிறு த்து! நிறுத்து!!" என்று கூவிக்கொண்டு வண்டி நிற்குமுன்னே வண்டியினின்றும் கீழே குதித்தாள். சுந்தரம் உடனே வண்டியை நிறுத்திச் சூடாமணி யிடம் ஓடிவந்தான்.

வண்டி நின்ற பக்கத்திற்குத் தெற்காக ஆற்றங் கரையோரத்தில் தள்ளாடிச் செல்லும் யாரோ ஒரு வயோதிகர் ஸ்மாரகமிழந்து கைகால்களை உதறிக் கொண்டு திடீரெனக் கீழே விழுந்து அல்லற்படுவ தைக் கண்டு இருவருமாய் அவ்விடம் ஓடினார்கள். மூர்ச்சித்து விழுந்தவருக்குச் சுமார் 80 வயதிருக் கும். அவர் நீண்டு வெளுத்த தாடியும் வழுக்கற் றலையும் உருத்திராக்கந் தரித்த கழுத்தும் முப்புரி நூல் மூன்று விளங்குமார்பும் வலுத்ததொரு ஊன்று தடியொடு பொருந்திய கையும் கிருஷ்ணஜினப்பெட் டியும் உடையராய்க் காணப்பட்டார். முகமோ வெ யிலினால் வாட்டமுற்று அதிக விகாரமாய்க்காணப்பட்

டது. ஆனால், முப்புரிநூலிற் கிருஷ்ணஜினத் துண்டொன்று கட்டியிருந்தமையாலும், அக்கைப்பெட்டியின்பேரில் தருமராஜையர் என்றெழுதப்பட்டிருந்தமையாலும், அவரை யாரோ ஒரு யாசகப்பிராமணரென்றெண்ணி, அவரது நிலையையும் வயதையும் கருதி அன்பு கூர்ந்து அவரைத் தூக்கிச் சூடாமணி தன் மடிமேற் சாய்த்துக்கொண்டாள். சுந்தரம் ஆற்றில் இறங்கித் தன் மேல்வேஷ்டியை நனைத்து அந்த ஜலத்தைக் கொண்டு அவரது முகத்தில் தெளித்து உபசாரஞ் செய்தான். கிழவர் சற்றுக் கண் திறந்து பார்த்தார். சூடாமணி தனக்காக வெடுத்துச் சென்ற சூடு மாறாக் காப்பிக்கூஜா (தெர்மாஸ் ப்ளாஸ்க்)வைக் கொண்டுவரும்படி சொல்லச் சுந்தரம் வெகு வேகமாய்ச் சென்று வண்டியிலிருந்து அக்கூஜாவையும் ஒரு வெள்ளிப்பாத்திரத்தையும் எடுத்து வந்தான். சூடாமணி சுடச்சுடக் காப்பியைப் பாத்திரத்தில் வார்த்துக் கிழவனார் வாயிற் கொஞ்சங் கொஞ்சமாகப் புகட்டவே, கிழவருக்குத் தெளிவு மீண்டு சற்றுத் தலை யெடுத்துப் பார்த்தார்: உடனே நடந்த வர்த்தமானம் கண்டு சந்தோஷமடைந்து தனக்குச்செய்த உபசாரத்திற்காக அவ்விருவரையும் வாழ்த்தினார். அவ்விருவரும் கிழவரது சிரமத்தைப் பரிகாரஞ் செய்வதற்காக மீண்டுங் கொஞ்சநேரம் கைகால்களைப் பிடித்து உபசரித்தார்கள். சூடாமணி, "தாதா! நீர் தயை செய்து எமது வீட்டிற்கு வரவேண்டும். அதோ

அண்மையிலிருப்பது ஆற்றூர்ப் பெரிய பண்ணை. ஏக போக மிராசுதாரரான என் தந்தையார் ஜயாராமைய ரவர்கள் பங்களா தெரிகிறது பாரும். அது இவ்விட மிருந்து ஒரு மைலுக்குள்ளேதா னிருக்கும். வாரும், வண்டி காத்திருக்கின்றது. எனது தந்தையார் நம்மை வெகு சந்தோஷத்துட னுபசரிப்பார். நாங்கள் எழுப் புகிறோம், மெல்லென எழுந்திரும், போவோம், வாரீர்!'' என்று வேண்டினாள்.

கிழவர் தருமராஜையர் அப்பெண்மணியை நன் ருக ஏறெடுத்துப் பார்த்துச் சற்றுப் புன்சிரிப்புடன், "குழந்தாய்! உனது பரோபகாரமான குணத்திற்கும் பெருந்தன்மைக்கும் மகிழ்வுறுகின்றேனியான். ஆயி னும், நான் அங்கு வருவதில் உங்கள் யாவருக்கும் அதிக கஷ்ட முண்டாகும். இந்த வலி யெனக்குப் பன்முறை வருவதுண்டு: வந்தால் இரண்டுமணிநேரம் அஃதென்னை வருத்தும்: அதுதான் கஷ்டம்: வேறு வித துன்ப முண்டாகாது'' என்றார். சுந்தரமும் சூடா மணியுஞ் சேர்ந்து அவர்க்கு நல்ல வார்த்தைகளைச் சொல்லி வண்டியிலேற்றிக்கொண்டு தமது பங்களா விற்கு அழைத்துச் சென்றனர்.

அச்சமயம் ஜயராமையர் சாயங்கால வனுஷ்டா னங்களை முடித்து வெளியில் வந்தார். சூடாமணி தந்தைக்கு நமஸ்கரித்து நடந்த விருத்தாந்தங்களை விவரமாகத் தெரிவித்தாள். ஜயராமையர் தம் வீட்

டிற்கு வந்த தருமராஜையரை வெகு உபசாரத்துடன் அழைத்துப் போஜனுதிகளைச் செய்வித்து இரவிற் படுக்க அவருக்குத் தனியாக வோர் படுக்கையறை யுங் கொடுத்தார்: மற்றும், செங்கற்பட்டிலிருந்து தேர்ந்த வைத்தியரொருவரை மறுநாட்காலைக்குள் கொண்டுவரும்படி இரவே ஆளை விடுத்தார். சுந்தரம் கிழவனுரை யன்றிரவு ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்வதாகச் சொல்ல, மற்றிருவரும் கவலை தீர்ந்து நித்திரைக்குச் சென்ருர்கள்.

2. குண்டல தீக்ஷிதர்

காஞ்சீபுரம் அக்ரஹாரத்தில் கருட சயனம் வாஜபேயம் முதலிய வேள்விகளைச் செய்து சகல கலா வல்லவராய் மிக்க புகழுடன் ஓர் அந்தணர் வசித்துவந்தார். இவர் வருஷாவருஷம் ஒவ்வோர் யாகஞ்செய்து மகரகுண்டலங்களை யணிந்திருந்ததனால், இவருக்குக் குண்டல தீக்ஷிதர் எனப் பெயர் வழங்கலாயிற்று.

இவருக்குச் சுமார் 12 லக்ஷம் ரூபாய் பெறும்படியான ஆஸ்தி யுண்டு. இந்தத் தீக்ஷிதர்க்கு நான்கு புதல்விகள். அவர்களில் மூத்த குமாரியான ஸரஸ்வதியைத் தம்மூரிலே ஒரு வைதிகச் சிறுவனுக்குக் கன்னிகாதானம் செய்தார். இரண்டாவது புத்திரி கோதாவரியைச் சென்னைக் கிறிஸ்தவக் கலாசாலையில் படித்து பி. ஏ. பரீக்ஷையிற் றேர்ந்த ஒரு சிறுவனுக்குச் சாஸ்திரப்படி எட்டாவது வயதில் விவாஹம்.

செய்துகொடுத்தார். மூன்றாங் குமாரத்தியான அம்புஜாக்ஷியை எட்டாம் பிராயத்தில் தஞ்சையில் ஓர் தனிகரின் குமாரன் பாணிக்ரஹணம் செய்துகொண்டான்.

விதிவசத்தால் இச்சிறுவன் விவாஹமான ஆறு மாதத்துக்குள் இறந்துவிட்டான். அதனால் குண்டல தீக்ஷிதர்க்கு அதிக வியாகுல முண்டாயிற்று: பால்ய விவாஹத்தினால் தம் மகள் அம்புஜாக்ஷி யடைந்த துன்பத்தை நினைத்து நினைத்து மனங் கசிந்து கதறுவா ராயினர். யாதுமறியாத குழந்தை யொன்பது வயதுக்குள் கணவனை யிழந்து உலகத்தோர் பழிச் சொற்களால் அவமதிக்கும்படியான நிலைமையை யடைந்ததைக் கண்டு, தீக்ஷிதர் அநேகம் பண்டிதர்களை வரவழைத்துக் குழந்தை அம்புஜத்துக்குப் பராசர ஸ்மிருதியை யாதாரமாகக் கொண்டு புனர்விவாஹம் செய்துவைக்க ஆலோசித்தார். விதவாவிவாஹத்தால் அநேகம் கொலை மானக்கேடு துர்மரணம் முதலிய சங்கடங்கள் சம்பவிக்குமென்றும், அப்படிப் புனர்விவாஹ மானால், மனு தர்ம சாஸ்திரப்படி அவளது இரண்டாவது புருஷனால் உண்டாகும் சந்திக்கு மற்றைப்படி தனக்குச் சொந்தமான முதற் புருஷன் சொத்துக்கள் யாவும் பாத்திய மில்லாததனாலும், புனர்விவாஹத்தாற் பதிவ்ரதாலக்ஷணத்திற்குப் பங்கமுண்டாவதனாலும், ஒரு தடவை யொரு பெண்ணைத் தானஞ் செய்த பிறகு அவளையே மறுபடியும் தானஞ்

செய்வதற்குத் தந்தைக்கு அதிகாரமில்லாததனுலும், முதல் விவாஹ சம்பந்தத்தால் பாத்தியதை யுண்டான புதிய குடும்பத்தாருக்கும் அவளை வேறு கோத்திரத்திற்கு மறுபடியும் மாற்றிக் கொடுக்க அதிகாரமில்லாததனுலும், புனர்விவாஹஞ் செய்வது தகாதென்றும் சாஸ்திரமறிந்தோர் எடுத்துச் சொல்லினர்.

தீக்ஷிதர் அம்புஜத்தின் "புனர்விவாஹ சங்கதியைக் குறித்த ஆலோசனையை மெள்ள மெள்ள முற்றுந் தவிர்த்தார்: தம் கடைசிக் குமாரத்தியான மீனுக்ஷிக்கு யுக்த வயது வருமளவும் விவாஹம் செய்யக் கூடாதெனத் தீர்மானித்துவிட்டார்.

மீனுக்ஷிக்கு வயது 11 ஆய் விட்டது. அவள் படிப்பில் அதிக ஊக்கமுற்றவளாய் ரூபத்திற் கமலையை யொத்தவளானுள். 12-வது வயதில் பித்த ஜ்வரம் கண்டு அவளை மூன்று வருடகாலம் படுக்கையிலேயே கிடத்தியது. இந்த ஜ்வரத்தை ஸ்வஸ்தப்படுத்த அநேகம் ஆங்கில வைத்தியர்களும் ராஜ வைத்திய யுனுனி வைத்தியர்களும் எவ்வளவோ கஷ்டப்பட்டும் பிரயோஜனப் படவில்லை. தீக்ஷிதர்க்கு மட்டும் சுமார் பதினுயிரம் ரூபாய்வரையில் செலவழிந்துவிட்டது. வியாதி குணப்படாதிருந்தும், தமது பந்து மித்திர வர்க்கங்களின் தொந்தாவினுல் தீக்ஷிதர் மீனுக்ஷிக்குப் பதின்மூருவது வயதில் விவாஹம் நடத்த நிச்சயித்தார். உயிருக்கு மன்ருடிக்

கொண்டிருக்கும் பெண்ணை யெவரும் விவாஹம் செய்துகொள்ள ஒப்பின ரில்லை. தீக்ஷிதரும் குழந்தை பிழைத்தாற்போது மென்றெண்ணிக் கல்யாண சங்கதியில் ஊக்கமற்றிருந்துவிட்டார். நோயாற் பீடிக்கப்பட்டும் பலவித ஔஷதங்களின் உஷ்ணத்தினாலும் வயோதர்மத்தின் கிரமத்தினாலும், மீனாக்ஷி 14-வது வயதிற் புஷ்பவதியாயினாள். ஈசுவர கடாக்ஷத்தினால் இவளுக்கு 15-வது வயது முடிவில் வியாதியும் நீங்கிற்று. வயதிற் கேற்ற சரீர லக்ஷணங்களைப் பொருந்திய அதி ரூபவ்தியாக விளங்கினாள் மீனாக்ஷி.

தீக்ஷிதர்க்கு இப்பொழுது மீனாக்ஷியின் விவாஹத்தைப்பற்றி அந்தரங்கத்திற் கவலையுண்டாயிற்று. தீக்ஷிதர் அதிக பணக்காரராகவிருந்தபோதிலும், தற்கால நாகரீகத்திற் சிறப்படையாதிருக்கும் தமது ஜாதியில் புஷ்பவதியான மீனாக்ஷிக்குத் தக்க கணவன் ஏற்படுவது வெகு கஷ்ட சாத்தியமாகவிருந்தது. இவளை விவாஹம் செய்துகொண்டால் தமது பந்துக்கள் கட்டுப்பாடாய்த் தமது வீட்டில் நடக்கும் சுபாசுபங்களுக்கு வராமல் நின்றுவிடுவார்களென்கிற பயம் ஒவ்வொருவருக்கும் மேலிட்டுவிட்டது. முடிவில், தீக்ஷிதரது தாயார் சந்ததியைச் சார்ந்து சென்னையில் தன் சகோதரியுடன் வசித்துவந்த 25 வயதுள்ள ஒருவன் 'பத்மகர்ப்பம்' என்னும் பிராயச்சித்தம் சாஸ்திர முறைப்படி முடித்து மீனாக்ஷியை விவாஹஞ் செய்துகொண்டான்.

மீனாக்ஷியின் வரன் பி. ஏ. பரீக்ஷையில் தேறின வன்: சத்தியவசனன்: இவன் பெயர் ஜயராமன். மீனாக்ஷிக்குத் தக்க கணவனிவனே யென்றெல்லாரும் புகழும்படி இவன் இல்லறம் நடத்திவந்தான். விவாஹ முதல் கட்டுப்பாடாய் நின்றிட்ட இவனது பந்துக்கள் நாளாவட்டத்தில் ஒவ்வொருவராய்த் தன்னுடன் பழைய வுறவு கொண்டாடி விருந்துண்டு போவாராயி னார். இவனது பந்துக்களில் தனிகராயுள்ள சிலரும் தம்தம் பெண் குழந்தைகளை மீனாக்ஷியைப்போல் யுக்த வயது வந்தபிறகே விவாஹம் செய்ய ஆரம்பித்துவிட் டனர். இவை யாவுங் காணக் குண்டல தீக்ஷிதர்க்கு வெகு சந்தோஷ முண்டாயிற்று.

இப்பால், தீக்ஷிதர்க்கு வயது 60 ஆய்விட்டது. தமது இரண்டாவது புதல்வி கோதாவரியைக் குறித் தும் இவருக்கு விசனமுண்டாயிற்று: ஏனெனின், கோதாவரியின் புருஷன் வக்கீல் பரீக்ஷையிற் றேறித் தன் மனைவியுடன் சில வருஷம் இல்லறம் நடத்தி தற் போது மதப்ராஷ்டனாகிக் கிறிஸ்தவ மதத்தில் தன் மனைவி மைந்தனுடன் சேர்ந்துவிட்டான். அநேக வேள்விகளை யியற்றி மிகவும் கீர்த்தியுடன் காலங் கழித்துவந்த தீக்ஷிதர்க்குத் தம் மகள் அந்ய ஜாதி யவலம்பித்துவிட்டா ளென்று கேள்விப் பட்டதும் தீராக் கவலை பற்றிக்கொண்டது. இதுவே யவருக் கொரு வியாதியாய் முடிந்து, அவர் ஆறுமாத காலங் கஷ்டப்பட்டுப் பரகதியடைந்தார்.

தீக்ஷிதருடைய மனைவியோ மீனாக்ஷியிடமே யிருந்துவிட்டாள். தீக்ஷிதரது ஏராளமான சொத்தை மீனாக்ஷியே தன் கணவனது சகாயத்தால் பரிபாலித்து வந்தாள். மீனாக்ஷி தன் தாயாரின் விருப்பப்படி வருடாவருடம் அந்தச் சொத்திற் கிடைக்கும் வரும்படியைத் தன் மற்றைச் சஹோதரிகள் மூவர்க்கும் தனக்குமாகப் பகிர்ந்து கொடுத்துவந்தாள். சில வருஷம் செல்ல மீனாக்ஷியின் தாயும் ஸ்வர்க்கமடைந்தாள். மீனாக்ஷி தன் கணவனுடன் ஆற்றூர் போய்ச் சேர்ந்தாள். எல்லாச் சஹோதரிகளின் சம்மதப்படி பிதாவின் சொத்து இதுகாறும் போலவே பரிபாலிக்கப்பட்டுவந்தது.

இடையில், அம்புஜாக்ஷி சிலரின் போதனைக்குச் செவிகொடுத்துப் புனர்விவாஹம் செய்துகொண்டுவிட்டாள். இப்போது சரஸ்வதிக்கு இரண்டு ஆண் குழந்தைகளும், கிறிஸ்துவத்திற் சேர்ந்த கோதாவரிக்கு ஒரு புதல்வனும், புனர்விவாஹம் செய்துகொண்டு ஜாதிப்ரஷ்டையாய்ப் போன அம்புஜாக்ஷிக்கு ஒரு புத்திரனும், மீனாக்ஷிக்கு ஒரு புதல்வனும் ஒரு புதல்வியும் உண்டு.

இங்ஙனம் ஐந்து வருடங்களாயின. காஞ்சீ மண்டலத்தில் ப்ளேக் என்னும் மஹாமாரி தோன்றிற்று. கடவுள் செயலால் குண்டல தீக்ஷிதருடைய நான்கு புத்திரிகளும் மஹாமாரிக் கிரையாயினார்கள். ஜயரா

மையர்மேல் மீனாக்ஷியின் சஹோதரிகளின் கணவர் மூவரும் குண்டல தீக்ஷிதருடைய சொத்தைக் குறித்து பாகத்திற்கு வந்தனர். வைதிக மார்க்கத்தனாகிய சரஸ்வதியின் புருஷன் சொத்து முழுவதும் தன் குழந்தைகளுக்குச் சேரவேண்டு மென்றும், கிறிஸ்தவ ஜாதிப்ரஷ்டனும் புனர்விவாஹ ஜாதிப்ரஷ்டனும் தம் குழந்தைகளுக்கும் பாக முண்டென்றும் ஜில்லா கோர்ட்டில் தாவா செய்தார்கள்.

இந்த வழக்கு ஜில்லா கோர்ட்டில் வெகு நாள் விசாரணையாகி, முடிவில், வைதிகர் குழந்தைகளிருவர்க்கும், அந்நியமதம் சார்ந்த கோதாவரியின் குழந்தைக்கும், புனர்விவாஹம் செய்துகொண்டு ஜாதிப்ரஷ்டையான அம்புஜாக்ஷியின் புதல்வனுக்கும் சொத்தில் பாத்யதை யுண்டென்றும், புஷ்பவதியானபின் விவாஹம் செய்துகொண்ட மீனாக்ஷியின் வயிற்றிற் பிறந்த குழந்தைகட்கு யாதொரு பாத்யதையு மில்லை யென்றும் தீர்மானிக்கப்பட்டது.

அத்தீர்மானம் அக்ரம மென்று ஜயராமையர் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார். அங்கே கீழ்க் கோர்ட்டின் தீர்மானமே ஸ்தாபிக்கப்பட்டது. இவ் வழக்கில் ஜயராமையருக்கு ஏராளமாகப் பொருள் செலவழிந்தது. தான் கெட்டபோதிலும், இனித் தன்னைப் போன்ற மற்றவரும் கெடாதிருப்பதற்காக, புஷ்பவதிகளான பெண்களுக்கு விவாஹம் செய்தால்,

மற்றவர்களைப்போல் அப்பெண்களின் சந்ததிகட்கும் சொத்துக்களிற் பாத்தியதை யுண்டென்று நமது காருண்ய கவர்ண்மென்டார் சட்ட நிர்மாணம் செய்ய வேண்டுமென்று வெகு விமரிசையுடன் ஓர் மசோதாவைச் சட்ட நிருமாணசபையில் தர்க்கததிற்குக் கொண்டுவரும்படி செய்தார்.—

நமது ராஜாங்கத்தார் இங்ஙனமாகிய சட்டத்தை யுதவுவாரானல், அநேக குடும்பங்களுக்கு அளவற்ற நன்மை யுண்டாகு மென்று சிலர் நினைக்கவும், மற்றுஞ் சிலர் அதனற் கெடுதிகள் பல உண்டாகு மென்று நினைக்கவும் இட முண்டாயிற்று. அவரவர் பந்துக்கள் ஏகோபித்துச் சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறபடி சௌகரியமநுசரித்து ப்ராயச்சித்தாதிகளை முடித்து அவ்வித விவாஹத்தை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவருவார்களாயின், விவாஹம் ஒப்பத் தகுந்ததென்றும், அதற்காகத் தனிச்சட்டமொன்று ஆவசியக மில்லை யென்றும் சிலர் அபிப்ராயப்பட்டனர்: ஆயினும், நமது கவர்ண்மென்டார் அந்த மசோதாவைக் குறித்துத் தற்சமயம் கவனிக்கவில்லை.

ஜயராமையருக்கோ இவ்விஷயத்தில் ஊக்கம் குறையவில்லை. யாதாயினும், தம் மகளைமட்டும் புஷ்பவதியானபிறகே சாஸ்திர விதிப்படி பிராயச்சித்த முடித்து விவாஹம் செய்வதாகத் தீர்மானித்து விட்டார்.—

நிற்க: ஒரு வருடத்திற்குள் ஜயராமையருடைய புதல்வன் இறந்துபோயினன். இப்படி யொன்றின் பின்னென்றாய்க் குடும்பத்திற் கஷ்டங்கள் சம்பவிக்கவே, ஜயராமையர் லோக ப்ரவ்ருத்தியில் மனம் வெறுத்து வேதாந்த விஷயமாய்த் தத்வ விசாரணை செய்வதில் மனஞ்செலுத்திவிட்டார்: ஆனல், இவரது தமக்கையான பாகீரதியம்மை மட்டும் இவரை யப்போதைக்கப்போது தேற்றிவந்தாள். ஜயராமையர் நாளாவர்த்தியிற் சற்று மனந்தேறித் தம் மகளைத் தம்மைக் காப்பாற்றவந்த தெய்வமேயாக வெண்ணி நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாகமிகப் பரிவுடன் வளர்த்துவந்தார். இப்பெண்மணிதான் சூடாமணி.

3. வியாதிஸ்தர்

ஜயராமையர் சொல்லி யனுப்பியபடி மறுநாள் அதிகாலையில் செங்கற்பட்டி லிருந்து கனவைத்திய ரொருவர் வந்தார். இரவு முழுவதும் பிரஜ்ஞை யற்றுக் கிடந்த தருமராஜையரைக் கண்டதும், வைத்தியர் அவர் பிழைப்பது வெகு கடின மென்று சொல்லித் தற்கால சாந்தியாகச் சில மருந்துகளைக் கொடுத்துப்போயினார். அவைகளைச் சூடாமணி தானே நேரில் வாங்கிக்கொண்டு வைத்தியர் சொன்னபடியே இரண்டு மணி நேரத்திற்கொரு முறை அந்நோயாளிக்குக் கொடுத்துவந்தாள்.

இப்படி யிரண்டுநாள் கழிந்தன. மூன்றாம் நாள் கிழவருக்குக் கொஞ்சம் தெளிவுண்டாயிற்று. சூடாமணி அதிக உபசரணை செய்துவருவதைக் கண்டு அவர் அவளுக்கு வெகு ஆசீர்வாதஞ் செய்தார். அன்று முழுதும் சூடாமணி கிழவரை விட்டுப் பிரியாம லிரு சமயம் பார்த்து வினயமாய், “ஐயா தாதா! உமக்கு

யாராவது சமீபமான பந்துக்க ளுண்டா? அவர்களை நீர் பார்க்க விரும்புகிறீரா? சொல்லும்.' என் தகப்பனார் அப்பந்துக்களை யுடனே தருவிப்பதாகச் சொன்னார். சற்றுத் தயவுசெய்து தெரிவிக்கவேண்டும்" என்று மிகு பயபக்தியுடன் கேட்டாள்.

அதைக் கேட்ட மாத்திரத்தில் நோயாளிக் கிழவர் அதிக கோபாவேசராய்க் கடுகடுத்த முகத்துடன், "அம்மா குழந்தாய்! எனக்கு வேறொருவரு மில்லை. நான் ஒருவரையும் பார்க்கவேண்டிய தில்லை. நீ பேசுவதை நோக்கின், நான் பிழைப்ப தரிதென்று வைத்தியர் சொன்னதாகத் தோற்றுகின்றது. இருக்கட்டும்.— நீ சற்றுத் தயை செய்து என் பெட்டியிலிருக்கும் சிறிய புஸ்தக ரூபமான தோற்பையை யெடுத்துக் கொண்டுவா" என்று சொன்னார். உடனே சூடாமணி அவர் குறித்த தோற்புத்தகப்பையைக் கொண்டு வந்து கொடுத்தாள்.

கிழவர் அதை வாங்கிக்கொண்டு, "குழந்தாய்! நீ பயப்படாதே! இந்தப் பையிலிருக்கும் நோட்டுக்களைப் பார்! நீங்கள் என பொருட்டாகச் செலவு செய்யுந் தொகைக்கு மேற்பட்ட ஐவேஜு வைத்திருக்கின்றேன். உங்கள் பணம் போய்விடாது. உன் தகப்பனுர்க்குத் தைரியம் சொல்" என்று சொல்லிப் பையைத் திறந்து சில நோட்டுக்களைக் கையிலெடுத்தார். சூடாமணி மனம் நொந்து, "ஐயா! உமது

பொருளை விரும்பி நாங்களும்மை யிவ்விடம் அழைத்துவந்தோமில்லை. எனது தந்தை அற்பகுணத்தவலர். நீர் இவ்விதம் பேச லாகாது. உமக்குற்ற உறவினரைத் நீரொரு சமயம் பார்க்க விரும்புகிறீரோ வென்னும் நல்லபிப்பிராயத்தினால் நான் கேட்டேனே யொழிய வேறில்லை" என்று சொல்லி முகஞ்சுளித்துக்கொண்டாள்: ஆயினும், தான் செய்யும் உபசரணையை யணுவளவும் குறைத்தவ ளல்லள்.

கிழவர் மறுபடியும் மூர்ச்சையடைந்தார். காய்ச்சல் உண்டாயிற்று: பித்தம் மேலிட்டது: வாய்குழறிப் பிதற்றல் அதிகரித்தது. "ஐயோ! நான் அநியாயம் செய்தேனே! நான் மஹாபாவி! ஈச்வரா! நீதான் மன்னிக்கவேண்டும்! என் செய்வேன்? எனக்கெந்த லோகமோ?" என்றிப்படிப் பலவாறாகத் தம்மை யிகழ்ந்து பேசுவாராயினர்: சூடாமணியைச் சிற்சில சமயங்களிற் கோபிப்பார்: அதட்டிப் பேசுவார்: கால்களாலும் உதைப்பார்: சில சமயங்களில் அடிப்பார்: துர்ப்பாஷைகள் வசனிப்பார். இது கண்ட ஜயராமையர் சூடாமணியை யவருக்குப் பணிவிடை செய்ய வேண்டா மென்பார். அப்போது சூடாமணி தந்தையைப் பணிந்து, "அப்பா! அவர் மதிமயங்கிச் செய்வதற்குக் கோபிக்கலாமோ நாம்? நோயாளியல்லரோ அவர்? தங்கட்குத் தெரியாதது நானென்ன சொல்லப் போகிறேன்?" என்று புன்சிரிப்புடன் சமாதானம்

சொல்லுவள். ஜயராமையர் சந்தோஷித்து, "குழந்தாய்! உன் பெருந்தன்மைக்கு மகிழ்கிறேன்: ஆம், அவரோ கிழவர். உன்னிஷ்டப்படியே அவரைப் பொறுமையுட ஞதரித்துவா!" என்று சொல்லிப் போவர்.

இப்படி 20 நாட்கள் கழிந்தன. நாளுக்குநாள் கிழவர்க்கு உடம்பு சௌக்யமாய்க்கொண்டேவந்தது. நோயாளியும் சூடாமணியிடம் சில சமயம் பக்ஷமாயும் சில சமயம் கோபமாயும் சில சமயம் அதிகாரமாயும் வேலை வாங்கிவந்தார். சூடாமணியோ எப்பொழுதும் பணிவாய் முகமலர்ச்சியுடனே அவருக்கு உபசரணை செய்துவருவாள். அவளது அத்தை பாகீரதியோ வியாதிஸ்தரிடம் நெருங்குவதே யில்லை. சுந்தரமோ சூடாமணியைப்போலவே உபசரணை செய்துகொண்டு நோயாளியிடம் மிகு பக்ஷமாய் நடந்துவந்தான்.

இப்படியிருக்க: ஒரு நாள் ஜயராமையர் தருமராஜையரைப் பார்க்க வந்தார். நோயாளி சூடாமணியையும் ஜயராமையரையும் மிகவும் புகழ்ந்து பேசி, "ஐயா! நான் உங்களுக்கு இந்த ஒருமாதகாலமாகப் பலவகைத் தொந்தரை கொடுத்துவந்தேன். ஆனுலும் நீங்கள் என்னிடம் காட்டிவந்த பக்ஷம் ஒருநாளு மறக்கத் தக்க தன்று. நான் இன்னும் ஒருமாத காலம் இவ்விடமே தங்கியிருக்க வெண்ணியிருக்கின்

றேன்" என்றார். ஜயராமையர் தம் குழந்தையின் முகத்தைப் பார்த்தார். அது கண்டு தருமராஜையர்,- "ஐயா! நீர் யோசனை செய்வது எனக்குத் தெரியும்: 'இந்தக் கிழவன் அதிக தொந்தரவு கொடுத்தான்: துர்ப்பாஷைகள் வசனித்தான்: சூடாமணியைச் சிற் சில சமயங்களில் அடிக்கவும் அடித்தான்: இவனது பிதற்றலால் இவன் ஏதோ கொடிய பாவஞ் செய்தவனாகத் தெரிகிறது: இனி நாம் இவனை யிங்கு வைத்திருப்பது உசிதமல்ல' என்று நீர் நினைத்துச் சூடாமணியின் முகத்தைப் பார்க்கின்றீர். இருக்கட்டும்.—நீர் நினைப்பதுபோல் யான் பாவியல்லேன். யான் எவருக்கேனும் துரோகம் செய்யவுமில்லை. என் வாழ்நாளைத் தத்துவ விசாரணை செய்யாது வீணாக்கினேனே, நித்ய கர்மாநுஷ்டானங்களைச் சிற்சில வமயங்களில் நழுவ விட்டேனே யென்று என்னை நானே வெறுத்துக்கொண்டிருப்பேன்" என்று சமாதானம் சொன்னார். சூடாமணி, "தாதா! நீர் அதுபற்றி யோசிக்கவேண்டாம். நீர் இங்கேயே யிருந்து நும துடம்பை முற்றும் சௌக்கியஞ் செய்துகொண்டுதான் போகவேண்டும்" என்றாள். ஜயராமையரும் நோயாளியின் கையைப் பிடித்து, "ஐயா! தாங்கள் இவ்விடத்திலேயே தங்கட் கிஷ்டமான கால மிருந்து போகலாம். ஒருமாத மல்ல ஒருவருடமிருந்தாலும் எங்களுக்குச் சிறிதுங் கஷ்டமில்லை: சந்தோஷமே" என்று அவர்க்குத் தேறுதல் சொன்னார். அதைக் கேட்கையில் நோயாளியான

தருமராஜையர் தம் கண்களில் ஜலம் தாரைதாரை யாய்ப் பெருகவிட்டு அழத்தொடங்கினர்.

சூடாமணி அவருக்குப் பலவாறாக உபசார வார்த்தைகள் சொல்லினள். தருமராஜையர் திடீரென்று எழுந்து மேற்சட்டையை மாட்டிக்கொண்டு அவர்களை விட்டுக் கடுகி நடந்து பூந்தோட்டத்திற்குள் நுழைந்துவிட்டார். ஜயராமையரும் சூடாமணியும் அவரைத் தேடிக்கொண்டு பூந்தோட்டம் சென்றனர். கிழவர் அகப்படவில்லை

பிறகு ஜயராமையர் தம் குழந்தையை யழைத்துக்கொண்டு ஓர் ஆலமரத்தடியில் உட்கார்ந்தார். அச்சமயம அவர்களிருவர்க்கும் எதிராகச் சற்றுத் தூரத்தில் சுந்தரம் வயல்களைச் சுற்றிப் பார்த்துப் பண்ணையாட்களை வேலைக்கு ஏவுவதையும் வெகு ஊக்கமாகத் தானுமவர்களுடன் கலந்து வேலை செய்வதையும் கண்டனர். கண்டு ஜயராமையர், "குழந்தாய் சூடாமணி! பார்த்தனையா அதோ நமது சுந்தரம் எவ்வளவு அக்கரையுடன் நமது வேலை பார்த்துவருகின்றான்? அவன் சிறு பையல்: எப். ஏ. பரீக்ஷை வரையிற் படித்துளவ: வெகு குணசாலி: அடக்கமுள்ளவன்: அழகும் சாந்தமும் பொருந்தியவன்.—எனக்கோ வயதாய் விட்டது. இனி வெகுநாள் யான பிழைத்திருப்பதரிது. பெண்களுக்குப் பருவங்கள் ஏழுள. அவையாவன:— 1 வயது முதல் 7 வயதுவரை பேதைப்பருவமென்றும், 8 முதல் 11 வரை பெதும்பைப் பருவமென்

றும், 12 முதல் 13 வரை மங்கைப்பருவமென்றும், 14 முதல் 19 வரை மடந்தைப்பருவமென்றும், 20 முதல் 25 வரை அரிவைப் பருவமென்றும், 26 முதல் 31 வரை தெரிவைப்பருவமென்றும், 32 முதல் 40 வரை பேரிளம் பெண்ணென்றும் பெரியோர் வகுத்துளர். அதன்படி உனக்கோ மங்கைப்பருவமாய் விட்டது. உனக்குத் தக்க கணவனை யான் எங்கே தேடப்போகின்றேன்? சுந்தரந்தான் உனக்குத் தக்க கணவனாவன. நான் கஷ்டப்பட்டுச் சம்பாதித்து வைத்திருக்கும் இந்தச் சொத்தை யழிக்காமல் விருத்திசெய்யத் தக்கவன் அவனே. அவனது தாய்தந்தையர் இன்னாரென நமக்குத் தெரியாவிடினும், அவன் நல்ல வம்சத்திற் பிறந்தவனென்று நமது கிருஷ்ண கனபாடிகள் சொல்லுகிறார். அதிற் பிசகு யாது மிராது. அவன் உயர்ந்த அந்தஸ்துக்கு வரத்தக்கவனென்றும் நமக்குப் புலப்படுகின்றது. உன் அத்தை பாகீரதிக்கோ தன் தங்கை மகனாகிய ராஜப்பனுக்கு உன்னைக் கொடுக்க வேண்டுமென்னு மெண்ணம் பூர்த்தியாக உண்டு. அஃதெனக்குச் சிறிதும் சம்மதமில்லை. ராஜப்பனை கெட்ட நடத்தையுள்ளவனென்றும், தனது ஏராளமான சொத்தைப் பாழாக்கினவனென்றும், மிகவும் டம்பக்காரனென்றும் கேள்விப்படுகின்றேன். ஆகையால், ராஜப்பன் உனக்குத் தக்க கணவனல்லன்" என்று சொன்னார். சூடாமணி தலை குனிந்து மௌனமாய் நின்றாள்.

ஜயராமையர், "குழந்தாய்! என்ன மௌனமாயிருக்கின்றாய்? சுந்தரம் உனக்கு எல்லாவிதத்திலும் தக்கவன். நீ வேறு ஆலோசனை செய்யாதே" என்று மறுபடியுஞ் சொல்ல, சூடாமணி, "எந்தாய்! தந்தை சொன் மிக்க மந்திர மில்லையாமால், தன் தந்தை தாயர் வசமான கன்னியானவள் தனக்கு அவராற் குறிக்கப் பட்ட கணவன் குணம் ரூபம் தொழில் செல்வம் முதலியவற்றாற் சிறவாதவனாயினும் அன்னவனைத் தன் குலதெய்வமாகப் பாவித்து வழிபடவேண்டு மென்றும், அத் தந்தை தாயர் மன மொத்துக்கொள்ளாவிடின், தன்னை விரும்பினவன் குமார யௌவன முடையவனாயினும் அவனை யருவருக்கவேண்டு மென்றும் ஆன்றோர் கூறிய நீதிகளைத் தங்களாலும் என் அத்தையாலும் கேள்வியுற்றும் நூல்கள் வாயிலாகக் கற்றும் தெளிந்திருக்கிறேன். இவ்விஷயத்திற் கன்னியர்களுக்குச் சுதந்தர மில்லை யாதலால், தங்கள் இஷ்டமே கட்டளையாகக் கொள்வேன். ஆனால் யான் இதுவரை அதைக் கருதியறியேன். என் தீர்மானத்தைத் தெரிவிப்பதற்காக எனக்குச் சுமார் ஆறுமாதகாலமாவது கொடுக்க விரும்புகின்றேன். அதுவரையில் என்னை மன்னிக்கவேண்டும்" என்று கேட்டாள். ஜயராமையர், "குழந்தாய்! நீ விரும்பியபடியே ஆகட்டும்—விளக்கேற்றும் நேரமாய்விட்டது. வீட்டிற்குப் போவோம், வா. கிழவனாரைக் காணோம்" என்று சொல்லி யிருவரும் எழுந்தனர்.

உடனே இவர்களுக்குப் பின்புறமிருந்து அவ்வாலமரத்தின் ஓரமாகத் தருமராஜையர் தோன்றி ஜயராமையரது கையைப் பிடித்துக் குலுக்கி, "ஐயா! நான் சற்றுக் காற்று வாங்க இப்புறமாக வந்தேன். நீங்கள் பேசின உபசரணை வார்த்தைகளினால் மனந் தளர்ந்து நான் சில சமயங்களிற் சூடாமணியிடம் கடினமாக நடந்துகொண்டதற்கு விசனித்தேன். உங்களைக் காண வெட்கித் திடீரென உங்களைவிட்டுப் பிரிந்தேன். மன்னிக்கவும்" என, சூடாமணி அவரது பாதங்களிற் பணிந்து கைகட்டி நின்றாள். தருமராஜையர் சூடாமணியை ஆசீர்வதித்துப் பின்னர் மூவருமாகச் சென்று ரவிமந்திரஞ் சேர்ந்தனர்.

மறுநாள் வெள்ளிக்கிழமை. அன்று கோயிலுக்குச் சென்று அம்பை தரிசனம் செய்துவருவதற்காகச் சூடாமணி புறப்பட்டாள். தருமராஜையர் தம் கைப்பெட்டியிலிருந்து ஓர் அழகான சிறிய தந்தப் பெட்டி யொன்றைச் சூடாமணியிடம் கொடுத்தார். அதில் வைர அட்டிகை யொன் றிருந்தது. அதைத் தருமராஜையர் கையிலெடுத்து, "குழந்தாய்! இதை யுனக்கு நான் வெகுமதியாகக் கொடுக்கின்றேன், பெற்றுக்கொள். நீ யெனக்குச் செய்த வுபகாரத்தை மறக்கமாட்டேன்" என்று சொல்லி அவள் கையில் அதைக் கொடுத்தார்.

சூடாமணி யதை வாங்கி நன்றாகப் பார்த்து அக்

கிழவரது பாதங்களில் அதனை வைத்து நமஸ்கரித்து, "தாதா! நான் ஒரு நாட்டுப்புறத்து நாகரீகமில்லாத குடும்பத்துப் பெண். பட்டினவாசிகளாகிய நாகரீக முள்ள தனிகர் குடும்பத்துப் பெண்கள் அணியத்தக்க இத்தனையுயர்வான ஆபரணத்தை யான் அணியத் தக்கவ ளல்லேன். என் நிலைமைக்குத் தக்க நகைப் பூண வேண்டுமே யொழிய அந்தஸ்து மீறி நடக்கலாகாது. மேலும், எனக்கு வேண்டியவற்றை என் தந்தை வாங் கிக் கொடுத்திருக்கின்றார். இன்னும் வேண்டுவன வெல்லாம் அவர் முறைப்படி செய்வார். அன்றியும், உம்முடைய வெகுமானத்தை யெதிர்பார்த்து நுமக் குத் தொண்டு செய்தவளல்லேன் யான். அதைக் குறித்து நும்பால் யான் ஒரு துரும்பேனும் பெறச் சித்தமாக வில்லை. இதற்காக என்னை மன்னிக்க வேண்டுகின்றேன்" என்று சொல்லிப் பணிந்தாள். தருமராஜையர் மறுபடியும், "குழந்தாய்! இந்த நகை உனக்கு வேண்டாமா? இது ஐம்பதினாயிரம் ரூபாய் வரையில் பெறுமானதே, நன்றாய் ஆலோசனை செய். பிறகு விசனிக்காதே" என்றார்.

சூடாமணி முகங்கோணிட்டு, "தாதா! அது ஐம் பதினாயிரமானாலும் சரி, லக்ஷமானாலும் சரி, எனக்கு வேண்டாம். அது எங்கள் அந்தஸ்திற்கு மேற்பட் டது. நானாவது என் தந்தையாவது வீணாசை கொ ண்டவர்க ளல்லேம். என்னிடம தங்கட்கு உண்மை

யான அபிமான மிருக்கும்பக்ஷத்தில், அதனை யுடனே எடுத்து நுமது பெட்டியிற் பத்திரப்படுத்திக் கொள்ளவேண்டும். உமது ஆசீர்வாதமே எனக்கு அநேக கோடிரூபாய் பெறும்படியான சிறந்த ஆபரணமாகும்" என்றாள். தருமராஜையர் புன்சிரிப்புடன் சூடாமணியைத் தட்டிக்கொடுத்து அந்தத் தந்தப் பெட்டியை மறுபடியும் தம் கைப்பெட்டியுட் பத்திரப்படுத்தினர்.

பிறகு சூடாமணியும் தருமராஜையரும் பாகீரதியம்மையுமாகக் கோயிலுக்குச் சென்று அர்ச்சனை முதலியவற்றால் பகவதியைப் பூஜித்துப் பிரசாதம் பெற்றுக்கொண்டு வீடு சேர்ந்தனர்.

சூடாமணி தன் தந்தையிடம் சென்று தருமராஜையர் தனக்கு வெகுமதி கொடுக்கவந்த விஷயமும் அதைத் தான் மறுத்துவிட்ட சங்கதியும் விவரமாய்த் தெரிவித்தாள். ஜயராமையர் தமது மகளின் உத்தம குணத்திற்கு மெச்சினர். மிகவும் ஏழையாகக் காணப்பட்ட அந்தக் கிழப்பிராமணரிடம் அவ்வளவு விலையுயர்ந்த ஆபரணம் இனமாய்க் கொடுப்பதற்காகப் பண மெவ்வாறு சித்தமா யிருந்த தென்பதைக் குறித்து யாவரும் ஆலோசிக்கலாயினர்.

4. பூங்கோத்து

ஒரு வாரங் கழித்தோர் நாள் அந்திப் பொழுதில் சூடாமணி தன்னந்தனியாகப் புஷ்பவனஞ் சென்று சற்று உலாவித் திரிந்து அங்கோர் ரோஜாச் செடியின் ஒரே கிளையில் 12 புஷ்பங்கள் ஒருமிக்கப் பூத்திருக்கக் கண்டு, அப்பூங்கொத்தை யொடித்துத் தனது கையிற் பிடித்துக்கொண்டு அதன் அழகைப் பார்த்துக்கொண்டே மெல்லென நடந்துவந்து ஆலமரத்தடியில் உட்கார்ந்தாள்.

தன் கைப்பூங்கொத்தைப் பார்த்துப் பார்த்து மோந்து முத்தமிட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டு, "ஆஹா! இந்த அற்புத புஷ்பங்களுக்கு அன்று அக்கிழவர் கொடுத்த வைர அட்டிகை யீடாகுமா? இந்தப் புஷ்பங்களை மாலையாகச் செய்து என் கழுத்தில் அணிந்துகொள்வேனானால், அதனாலெனக் குண்டாகு மானந்தம் அந்த வைர அட்டிகையினால் உண்டாகாதே! தெய்வ சிருஷ்டியைக்காட்டிலும் மானுட

சிருஷ்டி உயர்ந்ததாமோ?" என்று தன்னொடுதானே பேசிக்கொண்டிருந்தாள். அப்போது திடீரென ஒருவன் அந்த மரத்துக்குப் பின்புறத்திலிருந்தோடிவந்து அப்பூங்கொத்தை யவளது கையினின்றும் பிடுங்கிக் கொண்டு சிரித்து, "சூடாமணீ! இதன் சுகம் அந்த வைர அட்டிகையினால் உண்டாகாதுதான். நீ சொன்னது சரியே. அந்த அட்டிகையை வேண்டாமென்று மறுத்துவிட்ட நினது அறிவின் மாட்சியை யெவ்வாறு யான் புகழவல்லேன்?" என்று புன்சிரிப்புடன் அந்தப் புஷ்பங்களை மோந்து தன் கண்களில் ஒற்றிக்கொண்டான்.

சூடாமணி திடுக்கிட்டெழுந்து, "அப்பா சுந்தரம்! அந்தச் சங்கதி உனக்கெப்படித் தெரியும்? யார் சொன்னது?" என்று கேட்டாள். சுந்தரம், "சூடா! அஃது உன் தகப்பனார் எனக்குச் சொன்னார். இந்தப் புஷ்பக் கொத்திலிருக்கும் நறுமலர்களை நான் எடுத்து உன்னிஷ்டப்படியே மாலையாகத் தொடுத்து உனக்குக் கொடுக்கின்றேன். நீயதை அணிந்துகொள்" என்று சொல்லிக்கொண்டே அக்கொத்திலிருந்த புஷ்பங்களைத் தனித்தனியாகக் கிள்ளிச் சமீபத்திலிருந்ததோர் வாழை மரத்தினின்று நாரைக் கொணர்ந்து மாலை தொடுக்க வாரம்பித்தான்.

சூடாமணி மந்தஹாஸத்துடன், "சுந்தரம்! ஏது நீ இவ்வேளையி லிங்கு வந்தது?" என்று கேட்

டாள். சுந்தரம், "சூடா! வழக்கம்போல் நான் வயல் களைச் சுற்றிப் பார்த்து வீட்டிற்குத் திரும்புகையில் நீ இம்மரத்தை நோக்கி வருவதைக் கண்டேன். உன்னைத் தனியாகக் கண்டு பேசுவதற்குச் சமயம் பார்த்திருந்த நான் இதுதான் தக்க சமய மென நினைத்து வெகு சீக்கிரமாக ஓடி வந்தேன். இதோ மாலையுந் தொடுத்தாய்விட்டது" என்றுசொல்லி அம்மாலையைச் சூடாமணி கழுத்திற் போட யத்தனித்தான்.

சூடாமணி தடுத்து, "அப்பா சுந்தரம்! அவசரப்படாதே. நீ தொடுத்த மாலையை நான் பார்க்கட்டும். இப்படிக் கொடு" என்று சொல்லி அம்மாலையைத் தன் கையில் வாங்கிக்கொண்டாள். சுந்தரம் முகம் வாடி, "சூடாமணி! உன் தந்தை நம்முடைய விவாஹத்தைப்பற்றி யுன்னிடம் பேசியிருப்பதாகச் சொல்லி உன்னை நான் தனித்துக் காணும்படி உத்தாவு அளித்துளார். அதனாற்றான் நான் இன்று உன்னிடம் வெகு சுவாதீனமாய்ப் புஷ்ப மாலையை யுனக்காகத் தொடுத்தேன்.—நீ ஏன் உனக்குப் போடவந்த மாலையைத் தடுத்துக் கையில் வாங்கிக்கொண்டனை?" என்று விசனமாய்க் கேட்டான்.

சூடாமணி, "சுந்தரம்! நீ வேறுவிதமாய் நினைக்க வேண்டாம். இதோ வாங்கிக்கொள் உன் மாலையை" என்று சொல்லி அதையவன் கையிற் கொடுக்குந்தருணத்தில், பாரேதியம்மை ஓரழகிய சிறுவனுடன் அவ்

விடம் வெகு வேகமாய் வருவதைக் கண்டனர்: இருவரும் ஒருவரோடொருவர் கடைக்கண் சாடையாய்ப் பேசிக்கொண்டனர்.

பாகீரதியம்மையும் அங்குவந்துசேர்ந்து, "குழந்தாய் சூடாமணி! இதோ உன் அத்தான் ராஜப்பன் உன்னைக் காண்பான் சென்னையிலிருந்து வந்திருக்கின்றான்" என்று சொல்லி யவனைக் காட்டினுள். சூடாமணி, "அத்தான்! எப்பொழுது இங்கு வந்தது? வாரும். க்ஷேமமா? உம்மைக் கண்டு சுமார் 8 வருடங்களாயின" என் றுபசார வார்த்தையாடினுள். ராஜப்பன், "சூடா! இதோதான் வந்துகொண்டிருக்கிறேன். ஆம், க்ஷேமமே. நாமிருவரும் இம்மரத்தடியில் விளையாடினதை மறந்துவிட்டனையா? அப்போது நீ ஏழுவயதிய விளங் குழந்தை: இப்போதோ பருவமுற்றிய மங்கையாகிவிட்டாய். ஆனுலும் நீ எனக்குப் பழைய சூடாவே காண்!" என்று சிரித்துக் கொண்டே விடை பகர்ந்தான்.

பாகீரதி, "குழந்தைகாள்! நேரமாகின்றது: அஸ்தமன சமயம்: வாருங்கள், நமது ரவிமந்திரத்திற்குச் செல்லுவோம். ஆங்குப் போய்ப் பேசலாம்" என்று சொல்லிக்கொண்டே அவ்விடம் விட்டு நடந்தாள்.

சூடாமணியும் வந்த ராஜப்பனுடன் யோகக்ஷேமங்களை விசாரித்துக்கொண்டே நடந்து சென்றுள்: செல்கையில், பக்கத்திற் பூமாலையுடன் சுந்தரம் நின்று

கொண்டிருந்ததை மறந்தவளானாள். பாகீரதியும் வந்த அவசரத்திற் சுந்தரத்தைக் கவனிக்கவேயில்லை. இவையெல்லாம் பார்த்திருந்த சுந்தரம் தான் அலக்ஷியம் செய்யப்பட்டவனாக நினைத்துவிட்டான்: ஆனால் தன் கை ரோஜாப்புஷ்பமாலையைப் பத்திரமாகத் தன் சட்டைப்பையில் மறைத்துக்கொண்டு அம்மரத்தடியிலே இறக்க மனத்துடன் சற்று நின்றிருந்து சடக்கெனப் பங்களா நோக்கிச் சென்றான்.

5. ருணபாதக ராஜப்பன்

ஜயராமையருடைய தந்தையான ஜானகிராமையருக்கு இரண்டு பிள்ளைகளும் ஐந்து பெண்களும் பிறந்தனர். அவர்களுள் மூத்தவன் கோபாலன்: இரண்டாவது பாகீரதி: மூன்றாவது ஜயராமன்: 4-வது நீலலோசனி: 5-வது காவேரி: 6-வது கிருஷ்ணவேணி: 7-வது பத்மாக்ஷி. பத்மாக்ஷி பிறந்தவுடனே தந்தை மாண்டுபோயினார். பிறகு ஒரு வருஷத்திற்குள் தாயும் இறந்துபோயினாள்.

ஜானகிராமையர் உயிருடனிருந்த காலத்தில் இருபது வயதுள்ள கோபாலனுக்கும் எட்டு வயதுள்ள பாகீரதிக்கும் விவாஹமாயிருந்தது. அவர் தமது 2-வது பிள்ளையான ஜயராமனைத் தமது சினேகரும்

சகலருமான ஆற்றார்ப்பண்ணை ராமசந்திரையருக்கு ஸ்வீகாரம் செய்து கொடுத்துவிட்டார். பாகீரதி விவாஹம்செய்துகொண்ட இரண்டாம் வருடத்திலே தன் கணவனை யிழந்தாள். 'ஐந்து பெண்களைப் பெற்றால் அரசனும் ஆண்டியாவன்' எனும் லோகவசனத்திற் கிணங்க, ஜானகிராமையர் பெரிய கடன்காரராய்ச் சிவபதமடைந்துவிட்டார். இனி அக்குடும்பத்திற்குத் தலைவரான கோபாலையர் தமது பிதுரார்ஜித சொத்துக்கள் யாவும் விற்றுத் தந்தை பட்ட கடனைத் தும் தீர்த்துவிட்டுத் தம் தங்கைகளுடன் சென்னை சேர்ந்து அங்கு ஓர் பெரிய வர்த்தகஞ் செய்ய வாரம்பித்தார். வர்த்தகத்தில் இவர் பெரிய லாபமும் பெயரும் கீர்த்தியும் சம்பாதித்தார்: நான்கு வருடங் கழித்துத் தமது தங்கைகளாகிய நீலலோசனி காவேரி கிருஷ்ணவேணி யென்னும் மூவரையும் தனிகர் வீட்டுச் சிறுவர்களுக்குத் தக்க வரதக்ஷிணைகளுடன் கன்னிகாதானஞ் செய்தார்.

இடையில், தமது தம்பியை ஸ்வீகாரமாகக் கொண்ட ராமசந்திரையர் காலமாய்விட, கோபாலையர் ஜயராமனைச் சென்னைக் கழைத்துவந்து கல்வி கற்பிக்க வாரம்பித்தார். கோபாலையர் ரங்கூனுக்கு வர்த்தக விஷயமாய்ப் போய் இரண்டு மூன்று வருஷம் ஆங்கே தங்கவேண்டிநேர, குடும்பத்திற் சில வேற்பாடுகள் செய்யவேண்டியிருந்தன.—

நீலலோசனி காவேரி கிருஷ்ணவேணியாகிய மூவரும் யுக்த வய தடைந்திருந்தனர். கோபாலையர் அவர்கட்குத் தகுந்த வரிசைகளுடன் சீர் எடுத்து அவ்வவர்களைப் புருஷர் வீட்டுக் கனுப்பினுர். ஜயராமனையும் பாகீரதியையும் சென்னையிற்றனே வசித்திருக்கும்படி ஏற்பாடுகள் செய்து மனைவியுடன் தாம் ரங்கூனுக்குப் புறப்பட்டார். இவரது கடைசித் தங்கையான 5 வயதுள்ள பத்மாக்ஷி இவரைவிட்டுப் பிரியாமல் மிக்க அன்புடன் வளர்க்கப்பட்டுவந்தமையால் அக்குழந்தையையும் தம்மோடழைத்துப் போகவேண்டியிருந்தது.

ரங்கூன் சேர்ந்த ஒரு வருடத்தில் கோபாலையர் வர்த்தகத்தில் அதிக லாபத்தை யடைந்து யாவராலும் நன்குமதிக்கப்பட்டார்: மறு வருடத்தில் தமது அன்பின் மிகுந்த மனைவியை யிழந்துவிட்டார்: அதனுல் இவர்க் கதிக மனவருத்த முண்டாகி வர்த்தகத்தில் ஊக்கம் குறைந்துவிட்டது. சிலவருடம் வரையில் தமது சங்கதிகளைச் சென்னையில் ஒருவர்க்கும் இவர் தெரியப்படுத்தவில்லை. அதனுல் இவரது தம்பி ஜயராமையர் ரங்கூனுக்குச் சென்று விசாரித்தார்.—கோபாலையர் தம் மனைவி மாண்ட மறுமாதத்தில் ரங்கூன் வர்த்தகத்தை முடிவு செய்துவிட்டுத் தங்கையுடன் ஜப்பான் தேசம் போவதற்காகக் கப்பலொன் றெப்பந்தஞ்செய்துகொண்டு போனதாகவும்,

அந்தக் கப்பல் மார்க்கத்தில் காற்றுமழையால் திசை தப்பியோடி யோர் பாறையில் மோதி உடைந்து மூழ்கிப்போய்விட்டதாகவும், அதிலிருந் தொருவரும் பிழைக்கவில்லை யென்றும் கேள்விப்பட்டு ஜயராமை யர் அதிக விசனத்துடன் சென்னை திரும்பிவந்து குண்டல தீக்ஷிதர் கடைசிப்பெண், மீனாக்ஷியை விவா ஹஞ்செய்துகொண்டு தமக்கை பாகீரதியுடன் ஆற் றூர்ப்பண்ணையில் வசிக்கலாயினார்.

இடையில், காவேரிக்கு இரண்டு பெண்குழந்தை களும் கிருஷ்ணவேணிக்கு இரண்டு பெண்குழந்தைக ளும் பிறந்தன. ஆனால் காவேரியும் கிருஷ்ணவேணி யும் இறந்துபோயினர்.

நீலலோசனிக்கும் ஒரு புதல்வன் பிறந்தான். இவன் பெயர் ராஜப்பன். இவன் பாலியத்தில் மிகு அழகனும் புத்திசாலியுமாயிருந்தான்: இவன் சம் பாஷணைத் திறத்தில் வல்லவன்: ஆளுக்குத் தக்கபடி யும் சமயத்திற் கேற்றவாறும் பேசித் தன் காரியத்தை நிறைவேற்றிக்கொள்ளுஞ் சாமர்த்திய மிகுதியுமுள்ள வன். இவன் தன் 18-வது வயதில் தாயை யிழந்து மறு வருடத்தில் தந்தையையும் இழந்துவிட்டான். இவன் தந்தை இறக்கும்போது சுமார் 2 லக்ஷம் ரூபாய் பெறுமான சொத்து வைத்திருந்தார். இவ னுக்குக் கல்வி விஷயத்தில் பால்யத்திலிருந்த ஊக்கம் வரவரக் குறைவுற்று எப். ஏ. வகுப்பில் கலாசாலை

விட்டுவிட்டான். இவன் வர்த்தகத்தில் அதிக பற்றுக் கொண்டு தன் படிப்பை நிறுத்திவிட்டதும் வர்த்தகஞ் செய்ய வாரம்பித்தான்.

ராஜப்பன் ஏராளமாக வர்த்தகம் செய்துவருங் காலத்தில் அநேக கனவான்களின் சிநேகம் பெற்றான். இவனுக்கு வர்த்தகத்தில் நஷ்டம் நேர்ந்தது. அதனால் இவன் பொய் வஞ்சகம் ஏய்ப்பு முதலிய தூர்க்குண துர்நடத்தைகளை யநுஷ்டித்து அநேகரை மோசஞ்செய்து நம்பிய பல வேழைக் குடும்பங்களை அதோகதி யடைவித்தான். இவனுக்கு நெருங்கின பந்துக்களும் காவேரி கிருஷ்ணவேணிகளின் புருஷர்களுமான பலராமையர் சுப்பையர் ஆகிய இருவரையும் வர்த்தகத்திற் பிரவேசிப்பித்துக் கடன்காரர்களாக்கிவிட்டான். இத்தகைத் தீக்காரியங்களினால் இவனுக்கு ருணபாதக ராஜப்பன் என்று பெயர் வழங்கலாயிற்று.—இவனைப் பற்றி இன்னும் விரிவாய்க் காண்போம்.—

இவனுக்கு வயது முப்பதுக் குள்ளாயினும், இவன் கைதேர்ந்த மோசக்காரன்: வெகு சத்தியவான்போன்றும் தயாளுபோன்றும் அபிநயித்துப் பிரிய வசனங்களினால் யாவரையும் மயக்கும் சாமர்த்தியம் மிகுதியும் கொண்டவன். இப்படிப்பட்டவன் தன் மாமன் மகளாகிய சூடாமணியைப் பிரிய வசனங்களினாலும் டம்பமான உடைகளினாலும் ஏமாற்

றித் தன் கைவசப்படுத்த வெண்ணி ரவிமந்திரத்திற்கு வந்தான்.

தமது வயல்களைச் சுற்றிப்பார்க்கப் போயிருந்த ஜயராமையர் சூளிகை சேர்ந்து தமது மருமகனுன ராஜப்பன் வந்ததற்கு மகிழ்ச்சியடைந்து மிக்க உபசாரத்துடன் அவனுக்கு நல்வரவு கூறினர். ஐயர் அவனைப் பார்த்து 8 வருடங்களுக்கு மேலானதனுல் அவனது குணங்களை நன்கறிந்தவரல்லர். மாமனும் மருமகனும் ஒருவர்க்கொருவர் யோகக்ஷேமங்களை விசாரித்துவருகையில், ஜயராமையர், "அப்பா! குழந்தாய் ராஜப்பா! உன் வர்த்தகம் எப்படியிருக்கின்றது? நீ நஷ்ட மடைந்தனையாமே? அநேகரை ஏமாற்றினையாமே? குடும்பஸ்திரீ யொருத்தியைக் குடும்பத்தினின்றும் விலக்கிக் கெட்ட வழியிற் கொண்டு சேர்ப்பித்துப் பின்னர் அவளை அநாதரவாய் விட்டுவிட்டதாகவும் கேள்விப்பட்டேனே. அது உண்மையல்ல வென்று நம்புகிறேன். அதன விவரமென்ன?" என்று கேட்டார்.

ராஜப்பன் கலகலவென்று சிரித்து, "மாமா! உலகம் பலவித மன்றோ? சூனியத்தைப் பிரமாண்டமாகச் சொல்லும் இயற்கைத் தென உமக்குத் தெரியாதா? நான் வர்த்தகத்திற் சிறிது நஷ்டமடைந்தது உண்மையே. அது அடுத்த வருஷம் கிடைத்த லாபத்தாற் சரியாய்விட்டது. வர்த்தகத்தின் உண்மை விஷ

யம் எவருக்கும் சொல்லலாகா தன்றே? நான் எவரையேனும் ஏன் ஏமாற்றவேண்டும்? நஷ்ட காலத்தில் திடீரெனப் பணத்திற்குக் கடன்காரர் ஏககாலத்திலே என்னை வருத்தியதனுல் நான் அப்போது யாதியாதோ சாக்குப் போக்குச் சொல்லி கெடுவுகள் கேட்டுக் கொள்ள வேண்டி நேர்ந்தது. யாவும் மறு வருஷத் சரியாக்கி விட்டேன்.—மற்று நீர் கேட்ட விஷயமெல்லாம் வெறும் பொய்யே" என்று மிகப் பொறுமையாய் மறுமொழி சொன்னுன். ஜயராமையர் தம் மருமகன் சொல்லியதை நம்பினர்.

அச்சமயத்தில் தருமராஜையர் அவ்விடம் வந்தார். ஜயராமையர் எழுந்து நின்று, "ராஜப்பா! இதோ வருகின்றவர் நமக்கு மிகவும் வேண்டியவர்: இரண்டு மாதகாலமாய் நம்மிடத்திலே யிருக்கின்றார்" என்றார். ராஜப்பன் பெரியவரைக் கண்டு முகஞ் சுளித்து, "ஆ! அப்படியா?" என்று தலையசைத்து விட்டு வேறு வார்த்தைகள் பேசலாயினன். அது கண்டு தருமராஜையர் ராஜப்பனை ஆபாதமஸ்தகம் உற்றுப்பார்த்துத் தலையசைத்து எதிரே யோரி நாற்காலியில் உட்கார்ந்தார். பஞ்சைபோற் சரியான உடைகளற்று வெளுத்து நீண்ட தாடியுடன் முதுமையினல் விகார ரூபம் படைத்துத் தன்னெதிரில் உட்கார்ந்த கிழவரைக் கண்டு ராஜப்பன் அருவை மேற்கொண்டான்: எனினும், தன் மாமன் அவரி

டம் காட்டும் விசுவாச மரியாதைகளைக் கண்டு பயந்து சும்மா விருந்தான். ராஜப்பனது அகங்காரத்தைத் தருமராஜையர் நன்றாகத் தெரிந்துகொண்டபோதி லும் ஒன்றுந் தெரியாதவரேபோல் நடந்துகொண் டார்.

ராஜப்பன் : மாமா! இந்த விஷயங்களைக் குறித்துத் தாங்கள் எழுதின கடிதத்திற்கு உடனே பதி லெழுதினேனே, அது மறந்திட்டீர்கள் போலும்.

ஜயராமையர்: குழந்தாய்! நான் மறக்கவில்லை. உன் னை நேரிற் கேட்டுச் சந்தேக நிவர்த்தி பண்ணிக் கொண்டேனே யொழிய வேறில்லை.

ராஜப்பன் : மாமா! குழந்தையாயிருந்த சூடாமணி இப்பொழுது பெரியவளாய்விட்டாள்: மிகவும் புத்திசாலியாகவும் காணப்படுகின்றாள்.

ஜயராமையர் : ஆமாம்! சூடாமணிக்கு வயதாய்விட் டது. அதற்குச் சீக்கிரம் விவாஹம் நடத்த வேண்டும். உன்னுடன் முன் விளையாட்டு நேசனாகிய சுந்தரத்தைக் கண்டாயா?

ஜயராமையர் அப்படிக் கேட்கவே சூடாமணிக் குச் சுந்தரத்தைப்பூமாலையுடன் தோட்டத்தில் விட்டு வந்தது நினைப்புக்கு வந்து தான் அவனிடம் காட் டிய அசட்டைக்காக மனம் நொந்தாள்.

சூடாமணி (பெருமூச்சுவிட்டு) அத்தான்! நீர் வரும்

போது என் சமீபமாக நின்றுகொண்டிருந்த சிறுவன்றான் சுந்தரம்.

ராஜப்பன்: அப்படியா? அவன் இன்னுனென ‘அச் சமயம் யான் அறிந்துகொள்ளவில்லை.

ராஜப்பன் மேற்கூறியவண்ணம் சொல்லிச் சூடாமணியைக் கீழ்க் கண்ணுற் பார்த்தான். சூடாமணியும் ராஜப்பனைக் கடைக்கண்ணுற் பார்த்து வெட்கத் தாற்றலை குனிந்தாள்.

தருமராஜையர்: ராஜப்பா! நீ சீக்கிரத்தில் க்ரஹஸ்தாச்ரமத்தை மேற்கொள்ள வேண்டும். நீ தர்ம பத்நியுடன் இல்லறம் நடத்தினுற்றான் உனக்குக் கௌரவ முண்டு. பிராமண குலத்திற் பிறந்தவனுக்கும் அடுத்த விரண்டு குலத்தனுக்கும் ப்ரஹ்மசரியம் க்ரஹஸ்தம் வாநப்ரஸ்தம் ஸந்யாஸம் என்று ஆச்ரமங்கள் நான்குண்டு. அவற்றின் முறைகளைக் கேள்.

“ப்ரஹ்மசர்யமாவது:—சிறு பிராயத்திலே ஏழாவது வயதில் உபநயனஞ் செய்யப்பெற்று நியமத்தோடு வித்தை கற்றுக்கொண்டு பன்னிரண்டு வருஷம் குருவின் வீட்டிலே வசிக்கவேண்டும்; ஆசார ஸம்பன்னனுய்க் குருவுக்குப் பணிவிடைசெய்யவேண்டும்; காலை உச்சி மாலை முப்போழ்தும் சூரியனையும் அக்கினியையும் மனத்துட் பூஜித்துக் குருவந்தனமுஞ் செய்யவேண்டும்; குரு நிற்கும்போது நின்றும் அவர் செல்லுங்கால் உடன் சென்றும், அவர்

மேலான ஆசனத்திலிருந்தபிறகு அவரது அனுமதி பெற்றுப் பின்பு கீழான ஆசனத்தி லமர்ந்தும் அமரிக்கையுட னொழுகப் பழகவேண்டும்; தான் செய்யுங் காரியங்க ளொன்றிலேனும் குருவின் அபிப்ராய விரோதமா யிருக்கலாகாது; அவர் ஓ தென்றவுடனே வேறு நினைப்பின்றி யோதி யுணரவேண்டும்; ஓதிய பின்பு குருவினால் அநுஜ்ஞை செய்யப்பெற்றுப் பிக்ஷையிற் கொண்டுவந்த அடிசிலை யுண்டு பசிதீர வேண்டும். இம்முறையே நின்று குருவினிடத்திற் றெரிந்து கொள்ளவேண்டிய வேத வேதாந்த விஷயங்களை யதார்த்தஞானம்பெறும்வரையிலோதியுணர்ந்து குருதக்ஷிணை சமர்ப்பித்துப் பின்னர் அவரிடத்துக் கட்டளை பெற்றுப் பிரம்மசரியத்தை முடித்து மேலதாகிய ஆச்ரமத்தை யனுஷ்டிக்க முயல வேண்டும்.

"இனி இரண்டாவதாகிய க்ரஹஸ்தாச்ரமமாவது:—விதிப்படி பிரம்மசரியம் நிறைவேற்றியபின்பு வேத வொழுக்கங் குன்றாத உத்தம குலத் துதித்த கன்னிகையை விவாஹஞ் செய்துகொண்டு தன் குலத்துக்கும் ஒழுக்கத்துக்கும் இழுக்கில்லா வழியாற்பொருள் சம்பாதித்து அப்பொருளளவிற் கேம்பத் தென்புலத்தார் தெய்வம் விருந்து சுற்றம் தான் என்கிற ஐந்து வழிகளிற் பங்கிட்டு இல்லறதருமத்தை இனிது நடாத்தி வரவேண்டும். இப்படி மறைமுறை மநுமுறை தவறாமல் இல்லறத்தை

நிறைவேற்றும் க்ரஹஸ்தன் உயிர் நீத்த பின்னர் தனது ஸத்கருமங்களினாலே யீட்டிய புண்ணியங்களால் உயர்ந்த லோகங்களை யடைவான்.—சிற்றின்ப நுகர்ச்சி யொழித்த சந்யாசிகளும் குருகுலவாசிகளாகிய பிரம்மசாரிகளும் மற்றும் பிக்ஷான்ன போஜனர் பலரும் க்ரஹஸ்தனிடத்திலேதான் தங்கள்வாழ்க்கைகளை யொப்புவித்து ஜீவிக்கின்றார்கள். ஆகவே நான்கு ஆச்சிரமங்களினும் இக்கிரகத்தாச்சிரமமே மேலானதென்று ஆன்றோர் தீர்மானியாநிற்பர். ஆதலாற் பரோபகாரமே தலைமைக்கடனாகக் கொண்ட கிரஹஸ்தனானவன் வல்லாரிடம் வேதங்களைக் கிரஹிப்பதற்காகவும் ஆகாமி ஸஞ்சித ப்ராரப்த பாபங்களைப் போக்குவான்வேண்டித் தீர்த்த க்ஷேத்ர யாத்திரைகள் செய்வதற்காகவும் தம்தேசம் விட்டுப் பூப்ரதக்ஷணம் பண்ணித்திரியும் பக்த சிரோமணிகள் பலர்க்கும் தஞ்சஸ்தானமாக விருக்கின்றான். இவன தன்னிடத்துத் தேசாந்தரிகள் அணுகும்போது அன்னவர்க்கு முகமலர்ந்து நல்வரவுகூறன் முதலாக வின்சொற்புகன்று ஆசனம் போஜனம் சயனம் இன்னன சௌகரியங் கருதிக் குறைவின்றியளித்து மகிழ்வுறவேண்டும். ஓர் அதிதியானவன் எவ்வில்லறத்தானிடஞ் சென்று தன் விருப்பத்தைப் பெற்றுப் போகின்றானோ அவன் அவ்வில்லறத்தானுக்குத் தன் புண்ணிய பலன்களைக் கொடுத்துவிட்டு அன்னவனுடைய பாபங்களைக் கைக்கொள்ளுகிறானும். இல்லறத்தொழுகுவோனுக்கு அவ

மதிப்பு அகங்காரம் டம்பம் கோபம் பொறாமை கடுஞ் சொல் பேராசை முதலியவைகள் தர்ம பலன்களை அறக்கெடுக்குஞ் சத்துருக்களாகும். இத்தகைச் சத்துருக்களை அப்புறத்தகற்றி மேற்கூறிய நெறிவழி யொழுகிக் கிரஹஸ்தாச்ரமத்தை நிறைவேற்றும் புண்ணிய புருஷனே புனிதனுவான்.

"மூன்றாவதாகிய வாநப்ரஸ்தமாவது :—கிரஹஸ்தம் நிறைவேற்றினோன் நாடு துறந்து வனத்திற் சென்று கந்தமூலபலாதிகளைப் புசித்தும், தாடி சடைகளைத் தரித்தவனும் எப்பொருளினும் பற்றற்றுச் சரீரசுகத்தை நோக்காது கட்டாந்தரையிற் சயனித்து மான்றோல் நாணற்புல் மரவுரி யிவைகளை யுடுத்துக் காலையுச்சிமாலையாகிய முச்சந்திகளிலும் பிரதிதினம் தப்பாது நன்னீராடிச் சுசிமேற்கொண்டு ஸமஸ்த ஜகதாதாரமாய் விளங்காநின்ற கருணைப்பெருங்கடவுளிடத்து மனத்தையிருத்தித் தவமியற்றியும், தானும் தன் மனைவியுமாகக் கூடியமட்டிற் காட்டிலுறையுமிதர வாநப்ரஸ்தருக் கதிதிபூசனைக ளியற்றியும் தேவதாராதந நித்யாக்நி ஹோமாதி விரதங்க ளநுஷ்டித்தும், இல்லார்க்குக் கிடைத்தமட்டில் வழங்கியும் சற்கருமங்களிற் காலங்கடத்துவது முக்கிய விதியாகும். வாநப்ரஸ்தனானவன் அப்யங்கஸ்நானம் செய்ய வேண்டு மிடத்துக் காட்டெண்ணெயினாற் செய்தல் உத்தமமாகும். தவஞ்செய்தலும், குளிர் வெப்பம்

முதலானவற்றைப் பொறுத்தலும் சிறந்த கடமைக ளாம். இப்படி வானப்ரஸ்த நெறிகளை முறை பிறழா வண்ணம் நிறைவேற்றிய சுசீலனது சர்வ பாபமும் வெந்தழல்வாய்ப்பட்ட மாசுணம்போல் நசித்துப்போ கும்.

"நான்காவதும் கடைசியுமான ஸந்யாஸமா வது:—இதனை யநுஷ்டிப்பவர் அறம்பொருளின்பங் களின் பலன்களை விரும்பாத மனத்தொடு செய் கருமத்தினராய்க் காமம் க்ரோதம் லோபம் மோகம் மதம் மாச்சரியம் எனு முட்பகை யாறினையும் வென்று பிரம்மஞான நிஷ்டையைப் புரிபவராவர்: ஸகல ஜீவராசிகளிடத்தும் பிரம்மஸம்பந்த மிருத்தலி னால், வேதஸம்பந்த பிராமணன்முதலாக நாயடித்துத் தின்னும் சண்டாளனிடத்தும், சிற்றெறும்பு முத லாக அத்திவரையுமுள்ள ஸர்வ பிராணிகளிடத்தும் பொதுவான அருளுடையவராயிருத்தல் வேண்டும். சந்யாசியானவர் தேசஸஞ்சாரம் செய்ய நேரிட்ட விடத்துக் கிராமமாகில் அங்கு ஒரு இரவும், பெரும் பட்டினமாகில் அங்கு ஐந்திரவும் வசிக்கலாம்: ஒருவ ரிடத்து நட்பேனும் பகையேனும் கொள்ளலாகாது. அஹங்கார மமகார ரஹிதரா யிருப்பவர்க்கு எந்தப் பயமு மில்லை. ஸ்திரபுத்தியுடன் பரிசுத்தாத்மாவாய் இவ்வாச்சிரம மாசரிப்பவர் நாளடைவில் மனச்சாந் தம் பெற்று உண்மை நிலையாகிய ஸத்தையும் பின்னர்

ஞானமயமான சித்தையும் இறுதியிற் பேரின்பமாகிய மோக்ஷானந்தத்தையும் பெற்றுய்வார்."

இவ்வாறு நான்கு ஆச்சிரம தர்மங்களையும் அததன் கோட்பாடுகளையும் தருமராஜையர் உபதேசித்துக்கொண்டுவந்ததற்கு ருணபாதகன் நன்கு கவனிப்பதுபோற் பசப்பினனேயன்றிக் கருத்துட் கொண்டவனல்லன். அது தெரிந்தும் தருமராஜையர், "ராஜப்பா! இப்படிச் சொல்லப்பட்டிருக்கும் ஆச்ரம தர்ம விதிப்படி நீ சீக்கிரம் விவாஹம் செய்து கொண்டு கீர்த்தி யடையவேண்டும்" என்று சொல்லி முடித்தார். ராஜப்பன், "நீங்க ளிருக்க வெனக்கு யாது குறையுளது? உங்கள் யாவரி னிஷ்டப்படியே நடக்கச் சித்தமாயிருக்கின்றேன் யான்"என்றான்.

இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில் சுந்தரம் அவ்விடம் வர, ஜயராமையர் அவனை யின்னானென ராஜப்பனுக்குத் தெரிவித்தார். ராஜப்பன், "அப்படியா?" என்று சொல்லித் தலையசைத்துத் தானொரு பெரிய கனவான்போலவும் அவனோர் அற்ப சிறுவன்போலவும் பாவித்து அலக்ஷியமாயிருந்துவிட்டான். இவ்விறுமாப்பு சூடாமணிக்கும் ஜயராமையருக்கும் மனவருத்த மூட்டிற்று: சுந்தரமோ அசைவற்று நின்றுவிட்டான்.

இது சமயத்தில் தருமராஜையர் யாதோ வேடிக்கையாகச் சில விஷயங்களைப் பேச வாரம்பித்தார்.

ராஜப்பனும் அவருடன் கலந்து யாவர்க்கும் சிரிப் பெழும்படி பேசத் தொடங்கினன். சுந்தரத்துக்கு மட்டிலும் தான் சூடாமணியால் அலக்ஷியம்பண்ணப் பட்டது போதாமல் அன்றே வந்த ராஜப்பனலும் அவமதிக்கப்பட்டதற்காகக் கவலே மனத்துள் ஊடுருவிச் சென்று நிலைபெற்றது.—

தகுந்த வேளையில் எல்லோருமாகக் கூடிப் போஜனத்திற்குச் சென்றனர். அப்போதும் ராஜப்பன் சுந்தரத்தை யலக்ஷியமாகவே பார்த்தான். சூடாமணிக்கு அதிக விசன முண்டாயிற்று. ஆனல் ராஜப்பன் வெகு சாதுர்யமாகப் பேசி அனைவர்க்கும் சந்தோஷத்தை யூட்டினன். சூடாமணி ராஜப்பனுடைய அழகுக்கும் வசனசாதுர்யத்துக்கும் மயங்கி அவன்மீது மோகங்கொண்டவளானள். இவை யாவற்றையும் தருமராஜையர் பிற ரறியாமற் கவனித்து வந்தார். சுந்தரமோ தனது நிலைமையையும் கள்ளங்கபடற்ற தன்மையையும் ராஜப்பனது நிலைமையையும் பேசுஞ் சாமர்த்தியத்தையுங் குறித்து ஆலோசிப்பான்: சூடாமணி ராஜப்பனிடம் அதிக பக்ஷங்காட்டுவதை யறிந்து தானடைந்த அவமானத்திற்கு மிகவும் விசனமுற்று நிற்பன்: தனிமையாய்ப் பூமாலையை யெடுத்தெடுத்துப் பன்முறை முத்தமிட்டுக் கண்ணீருகுத்துப் பத்திரமாக வதனைத் தன் மடியிற்றனே வைத்துக்கொள்வான்.

போஜனமானபின்பு தாம்பூலாதிகளைக் கொண்டு அவரவர் தம்தம் சயநக்ருஹங்களுக் கேகினர். சூடாமணி சுந்தரத்தினுடையவும் ராஜப்பனுடையவும் சாமர்த்தியம் ரூபம் பாவனை முதலியவைகளைத் தன்னுள் சீர்தூக்கிப் பார்த்து ராஜப்பன்மேல் அதிக பிரியங் கொண்டாள். பாகீரதியம்மையும் தனது தங்கையின் மகனான ராஜப்பனைக் குறித்துச் சூடாமணியிடம் புகழ்ந்து பேசி அன்னவளவனை விவாஹஞ்செய்து கொண்டக்கால் தனக்கு அதிக சந்தோஷம் விளைக்குமென்று வற்புறுத்திச் சொன்னாள்.—முடிவாக ராஜப்பனே தனக்குச் சந்தோஷத்தை யுண்டாக்கக் கூடிய மணவாளனென்று தீர்மானித்துவிட்டாள் சூடாமணி.



6. குடும்ப விசாரணை

மறுநாட் காலை மாமனும் மருமகனும் தனித்து உட்கார்ந்து தமது குடும்ப சங்கதிகளைப் பேச வாரம்பித்தனர். காவேரி கிருஷ்ணவேணி யாகிய தமது தங்கைக ளிருவரும் அகாலமரணமானதைக்குறித்து ஜயராமையர் மிகவும் விசனித்தார்: அவர்களது குழந்தைகளைப்பற்றி வெகு கருத்துடன் விசாரித்தார். தனது சிற்றன்னைமார்களின் பெண்கள் தற்கால நவீன நாகரீகத்தை யநுசரித்து யுக்த வயதடைந்திருப்பினும் இன்னும் விவாஹமாகாமலிருக்கிறார்க ளென்றும், அவர்களது தந்தையரான பலராமையர் சுப்பையரென்பவ ரிருவரும் வீண் டம்ப மேற்கொண்டு கடன்காரராகித் தமது சொத்துக்களைத்துமிழந்துவிட்டுத் தற்கால தரித்திர நிலைமை பிறர்க்குத் தெரியாதிருக்கும்பொருட்டுப் பற்பல விடங்களி லின்னும் கடன் வாங்கிச் செலவழித்து வெளிவேஷம் போட்டுத் திரிகின்றன ரென்றும், தமது குழந்தை

களின் விவாஹத்திற்குப் போதுமான பொருளில்லாமல் பரிதபிக்கின்றன ரென்றும் ராஜப்பன் தெரிவித்தான்.—ஜயராமையர் தாம் கேட்டது யாவும் உண்மைதா னென்று நினைத்து அந்தக் குழந்தைகளின் நிலைமையைக் குறித்து ஆலோசிக்கலானார்: பிறகு தாம் சூடாமணியைச் சுந்தரத்துக்குக் கன்னிகாதானஞ்செய்து ஆற்றார்ப்பண்ணை முற்றும் சூடாமணிக்குரித்தாக்கிச் சுந்தரத்தின் பரிபாலநத்துக் குட்படுத்துவதாய்ச் சொல்லி முடித்தார்.

ராஜப்பன் இவ்விஷயத்தைக் குறித்து யாதொரு பதிலுஞ் சொல்லாமல் தனது பெரிய மாமனாரான கோபாலையரைக் குறித்து விசாரித்தான். ஜயராமையர் தாம் ரங்கூனுக்குச் சென்றறிந்துவந்த விஷயங்களை யெடுத்துச் சொல்லி விசனித்தார். ராஜப்பன், "நான் வேறு விதமாகக்கேள்விப்பட்டேனே" என்று தனக்குத்தானே முணுமுணுத்துப் பேசிக்கொண்டான். "ராஜப்பா! என்ன சொல்கின்றாய்?" என்று பரபரப்புடன் மாமனார் கேட்க, மருமகன், "ஒன்றுமில்லை மாமா! நானும் அதைக் குறித்துதான் விசனிக்கின்றேன். நான் அவரைக் கண்டதே யில்லையே!" என்று சொல்லிச் சற்று ஆலோசனை செய்பவன்போலிருந்து, "மாமா! நேற்று நம்மொடு பேசிக்கொண்டிருந்த கிழவர் யாவர்? அவர் விர்த்தாந்தமென்ன?" என்று கேட்டான்.—

தருமராஜையர் தமது பங்களாவிற்கு வந்தது முதல் அவர் சூடாமணிக்கு வைர அட்டிகையைக் கொடுக்க முயன்றதுட்பட வெல்லா விஷயங்களையும் ஜயராமையர் அவனுக் கெடுத்துக்கூறினர்.

ராஜப்பன், "சூடாமணியின் குணமே குணம்! மிகவும் மெச்சத்தக்கது! மற்றை ஸ்திரீகளைப்போல வீணாசை கொள்ளாமற் றன் அந்தஸ்தை யுன்னி அவ் வைரவட்டிகையையேற்க மறுத்த பெருங்குணமன்றோ குண மெனத் தகும்? பரம தரித்திராய்க் காணப் படும் அக்கிழவரிடம் அவ்வளவு விலையுயர்ந்த நகை ஏது?" என்று கேட்டதற்கு ஐயர், "அவரோ தாம் மிக்க ஏழையென்றே சொல்லிக்கொள்ளுகிறார். இப் போது ஏழையாகக் காணப்பட்டாலும் அவர் முன் னொரு சமயம் பெரிய தனிகராக விருந்திருக்க வேண் டும். அவர் வரவர நம்மிடம் அதிக அன்பு காட்டி வருகின்றார். இன்னும் ஒரு வாரம்வரைதான் அவர் இங்கிருப்பார்" என்றார்.

இப்படிச் சற்றுநேரம் பேசிக்கொண்டிருக்கை யில் தருமராஜையர் தமது நித்திய கர்மாநுஷ்டா னங்களை முடித்துக்கொண்டு அங்கு வர, யாவரும் வேறு விஷயங்களைப் பேசியிருந்து பின்னர் போஜ னத்திற்குச் சென்றனர்.

ஒரு வாரம் கழிந்தது.—ராஜப்பன் சுந்தரத்தை அலக்ஷியஞ் செய்துகொண்டேவந்தான். சூடாமணி

யும் அவளது தந்தையும் அது ராஜப்பனது சுபாவ மென்று சொல்லிச் சுந்தரத்தைச் சமாதானப்படுத்தி வந்தனர். தருமராஜையரும் இதனை முற்றுங் கவனித்துவந்தார்: தாம் போகக் குறித்த காலம் சமீபித்தபோதிலும் அந்தச் சங்கதியைப் பற்றி யொன்றும் பேசவேயில்லை. ஜயராமையருக்கும் அப்பெரியவரிடம் அதிக விசுவாஸ முண்டாயிற்று. ராஜப்பன் தருமராஜையரிடம் மிக்க மரியாதையும் பக்ஷமு முள்ளவன்போல் மாரீசம் பண்ணிவந்தான்: அப்போதப்போது அவருடன் தோட்டத்துக்குச் செல்வதும் வேடிக்கையாகப் பல விஷயங்களைக் குறித்துப் பேசுவதுமாக விருந்தான்: அவரும் இவனிடம் சிநேகம் பாராட்டிவந்தார். ராஜப்பன் சூடாமணியின் மனத்தைக் கவரத் தக்கவாறு சாமர்த்தியமாக நடந்து வந்தான். சூடாமணியும் அவனிடம் அதிக பக்ஷம் காட்டினுள். இவை யாவும் கிழவருக்குத் தெரியும்.

ஒரு நாள் தருமராஜையரும் ராஜப்பனும் ஓர் குதிரைவண்டியிலேறி அடுத்துப் பத்துமைல் தூரத்திலுள்ள மாம்பாக்கம் ஜமீனுக்குச் சென்றனர். அந்த ஜமீன் விற்பனைக்குவந்திருப்பதாகவும் அத னரமனையிற் பல வற்புதமான சித்திரப்படங்க ளிருப்பதாகவும் கேள்விப்பட்டுத் தருமராஜையர் அந்தப் படங்களைப் பார்த்துவரவேண்டுமென்று எண்ணங் கொண்டிருப்பதாகச் சொல்ல, ராஜப்பன் வெகு டம்பமாக

உடைதரித்துச் சுந்தரமல்லாது தானே வண்டியோட்டுவதாக வொப்புக்கொண்டு அவரை யழைத்துச் சென்றான்.

மாம்பாக்கம் ஜமீன் 30 கிராமங்க ளடங்கியது: சுமார் 15 மைல் விஸ்தீரண முள்ளது: மாம்பாக்கம் கிராமத்தைத் தலைமையாகக்கொண்டது. அதில் ராம மந்திரம் என்றோர் அழகிய மாளிகை யுண்டு. அதிற்றான் ஜமீன்தார் உறைவது. அந்த ஜமீன்தார் அதிக கடனாளி யாய்விட்டதால் ஜமீன் விற்பனைக்கு வந்திருப்பதாகவும், அதன் விலை 20 லக்ஷம் ரூபாயாமென்றும் தெரிந்தது. தருமராஜையர் ராஜப்பனுடன் புத்தக சாலைக்குச் சென்று அங்குச் சேர்த்து வைக்கப் பட்டிருந்த சித்திரப்படங்களை நன்றாகப் பரிசோதித்துப் பார்த்துவிட்டு இருவருமாக ஊர்க்குத் திரும்பினார். வழி முழுவதும் கிழவர் ஆங்காங்கு ஈசுவர சிருஷ்டியிற் காணப்படும் மஹத்வங்களைக் கொண்டாடிப் பேசிக்கொண் டிருவரும் ரவிமந்திரம் சேர்ந்தனர். ராஜப்பன் கிழவரோடு சம்பாஷித்த காலையில் மிக்க அசட்டை காட்டினான். அதைக் கிழவர் கவனித்திருந்தார்.

தருமராஜையர் போஜன முடித்துச் சற்றுச் சிரம பரிகாரமாகத் தமது அறைக்குச் சமீபத்திலிருந்ததோர் சாய்ப்புநாற்காலியிற் படுத்துக் கண்வளர்ந்தார். சற்று நேரத்திற்குள் ராஜப்பன் அங்கு வந்து அவர்

தூங்குகிறாரென்று நினைத்து அவரது படுக்கையறைக்குள் மெல்லெனச் சந்தடி செய்யாமற் சென்றான்: அங்கு மேஜையின்மேல் அவருடைய சிறிய தோற் புத்தகம் இருக்கக் கண்டு, உடனே வெளியில் வந்து அவர் நன்றாகத் தூங்குகின்றாரென்று கவனித்தறிந்து மீண்டும் அவ்வறை சேர்ந்து அப் புத்தகத்தைத் திறந்து பார்த்தான். அநேக பத்திரங்கள் அதிற் காணப்பட்டன: அநேக சங்கதிகள் அதிற் குறிக்கப்பட்டிருந்தன. அவற்றையெல்லாம் ராஜப்பன் நன்றாகப் பரிசோதித்துப் பார்த்துவிட்டு ஒருவர்க்குந் தெரியாமல் வெளியே போய்விட்டான். இவை யெல்லாம் தூங்குகிறவரேபோற் பாவித்திருந்த தருமராஜையர் நன்றாகக் கவனித்தார்: ஆனபோதிலும் தாம் தெரிந்து கொண்டதாக வெளிக்குக் காட்டவில்லை.

ராஜப்பன் தானறிந்த விஷயங்களைப்பற்றி வெகு நேரம் ஆலோசனையாயிருந்தான்: அது துவக்கிக் கிழவரிடம் மிகு மரியாதையாக நடந்துவந்தான்.

7. ஸ்நேஹ வாஞ்சை

மறு நாள் அதிகாலையில் ஜயராமையர் கோர்ட்டு வேலையாகச் செங்கற்பட்டுக்குப் போகவேண்டிற்று. தமக்குச் சாக்ஷிக்காக ராஜப்பனையும் அழைத்துச் சென்றனர். அற்றை மாலைத் தருமராஜையர் சுந்தரத்தைத் தனிமையாகத் தம தறைக்கு வரவழைத்து, "குழந்தாய் சுந்தரம்! உன்மீதெனக்குள்ள ஸ்நேஹ வாஞ்சையினாற் சில சங்கதிகளைப் பேசவேண்டுகிறேன். இவ் விஷயம் மர்மமா யிருக்க வேண்டும்" என்றார். சுந்தரம், "தாதா! நுமது கட்டளையை யெதிர்பார்க்கின்றேன்" என்று சொல்லிக் கைகட்டி வணக்கத்தோடு நின்றான்.—

தருமராஜையர்: குழந்தாய்! நீ சூடாமணியின்மேற் காதல் கொண்டிருக்கின்றா யல்லவா?

சுந்தரம்: (தலை குனிந்து வெட்கத்துடன்) ஆமாம். நான் செய்தது தப்பிதம்போல் ஏற்படுகின்றது. நான் அவளிடத்து வைத்திருக்கு மபிமானம் ஈசுவர னுக்குத்தான் தெரியும்.

தருமராஜையர்: அப்பா! நீ செய்வது தப்பிதமல்ல, இயற்கைதான். உனக்கு அவள் தந்தை ஜயரா மையர் உத்தரவு கொடுத்திருக்கின்றாரல்லவா?

சுந்தரம்: உத்தரவு கொடுத்திருப்பது உண்மைதான். ஆனால்—

தருமராஜையர்: ஆனால்—என்ன? உன் மனத் திருப் பது எனக்குத் தெரியும். உன தெண்ணம் நிறை வேறுதென் றுனக்குத் தோற்றுகின்றதல்லவா? ராஜப்பன் இங்கு வந்ததுமுதல் சூடாமணி உன் னிடம் பக்ஷம் குறைந்திருப்பதாகத் தெரிகின் றது. ராஜப்பனும் உன்னை வெகு அலக்ஷிய மாகப் பார்த்துவருகின்றான். அஃது உனக்கு மனவருத்த முண்டுபண்ணியிருக்கின்றது. குற்ற மில்லை, இருக்கட்டும். சூடாமணி யுன்னிடம் உள்ளன்பு வைத்திருக்கின்றனளாவென் றறிய வேண்டியது மிகவும் ஆவசியக மல்லவா?

சுந்தரம் முன்பு தனக்கும் சூடாமணிக்கும் நடந் துள்ள விருத்தாந்தத்தைத் தருமராஜையருக்கு விவ ரமாக வெடுத்துச் சொன்னான்.

தருமராஜையர்: சரி. சூடாமணியைச் சற்று நேரம் கழித்துப் பூந்தோட்டத்தின் வழியாகத் தனித்து வரச்செய்கிறேன். அச்சமயம் நீ அவளைக் கண்டு உன்னை விவாஹஞ்செய்துகொள்ள அவளுக்குச் சம்மத முண்டென்பதையும் இல்லையென்பதையும் தெரிந்துகொள். நாளுக்குநாள் அதே கவலையாய் நீ இளைத்துப்போகின்றாய்! அதைக் குறித்துச் சந்தேக நிலைமையி லிருப்பதைக்காட்டிலும் யாதாயினும் முடிவாகத் தெரிந்துகொள்வது நலம். என் சொற்படி நட. யான் நின் க்ஷேமத்தை மிக்கு விரும்பியவன்.

சுந்தரம் பெரியவர் தாள்பணிந்து அவர் தன் மீது காட்டிய விசுவாசத்திற்காக வந்தனமளித்து அவரது கட்டளைப்படி நடப்பதாகச் சொல்லி அவரிடம் உத்தரவு பெற்றுப் போனான்.

பிறகு ஒரு மணி நேரத்திலெல்லாம் சூடாமணி பூந்தோட்டத்தி லிருப்பதைக் கண்டான் சுந்தரம்: கண்டு திடீரெனச் சூடாமணி முன்னிலையிற் றோன்றினான். இவனை யெதிர்பாராத சூடாமணி திடுக்கிட்டுக் குனிந்த தலையுடன் சம்பாஷிக்கத் தொடங்கினாள்.

சூடாமணி: அப்பா சுந்தரம்! என்ன சாமசாரம்? எங்கு வந்தாய் ?

சுந்தரம்: எங்கு வந்தேனா? சூடா! உன்னைப் பார்த்துச் சங்கதி தெரிந்துகொள்ளத்தான் வந்தேன்.

சூடாமணி : என்ன சங்கதி உனக்குத் தெரிய வேண்டும்? நீ பேசுவது ஆச்சரியமாக விருக்கின்றதே!

சுந்தரம் : ஆச்சரியம்தான் ! உன் தந்தை எனக்குன்னை விவாஹஞ்செய்துகொடுப்பதாகச் சொன்னார். அஃதுனக்குத் தெரியு மல்லவா?

சூடாமணி : சுந்தரம்! அதற்கென்ன இப்போது?

சுந்தரம் : அதற்கென்னவா? என் மனத்தை நீயறிந்தா யில்லையே! இருக்கட்டும். சுமார் இருபது நாட்களாக நீ என்னிடம் ஒரு மாதிரியாகத்தானிருக்கின்று யென் றெனக்குத் தோற்றுகின்றது.—என்னை விவாஹஞ்செய்துகொள்வதற்கு உனக் கந்தரங்க நேச மில்லாவிடின் உன்னைக் கட்டாயப்படுத்தி வருத்த வெனக்குச் சம்மத மில்லை. உன துண்மை யபிப்பிராயத்தைத் தெரிவிக்கக் கோருகிறேன்.

சூடாமணி : (நாணத்துடன் தலை குனிந்து) சுந்தரம்! நீ மிகு சத்தியவான். உன்னை யிக்கணபரியந்தம் என் தமையன்போலவே யான் பாவித்திருக்கிறேன். உன்னிட மெனக்கு வேறு விதமான அபிப்பிராயம்தோன்றிற்றன்று. ஆகிலும் எனக்கெந்தையின் கட்டளை யொன்றிருக்கின்றது.—

சுந்தரம் : போதும்! போதும்! இனிக் கேட்க விரும்பிலேன்!

இப்படிச் சொல்லிச் சுந்தரம் தனது காதுகளை மூடிக்கொண்டு கண்களில் நீர் தாரைதாரையாகத் ததும்பி வடியச் சூடாமணியை விட்டுத் திடீரென மறைந்துபோய் விட்டான்.

சூடாமணி தலை நிமிர்ந்து பார்த்து எதிரே சுந்தரத்தைக் காணுமல் அதிக மனவருத்தங்கொண்டாள். இவ்விஷயத்தில் தன்னைத் தந்தைசொல் மீறியவளாகக் கருதிக் கண்ணீருகுத் தோர் மரத்தடியிற் சோர்ந்து நின்றிட்டாள். பூந்தோட்ட முழுவதும் சந்திர பிரகாசத்தால் விளங்கிக்கொண்டிருந்தபோதிலும், சூடாமணிக்கோ உள்ளும்புறம்பும் இருள் பரவியதேபோல் ஒன்றுந் தோன்றவில்லை. சுந்தரத்திற்குத் தான் கொடுத்த மறுமொழி யவனை மிகவும் வருத்துமெனக் கருதி மனம் நொந்து விம்மிவிம்மி யழத்தொடங்கினாள். என் செய்வாள்? பாவம்! சுந்தரத்தை நினைப்பாள்! கைகளைப் பிசைந்து தலைமேலறைந்து பெருமூச்சு விடுவாள்! கண்ணீர் நனிபெருக்குவாள்.

இப்படிச் சுமார் அரைமணி நேரம் தத்தளித்துக்கொண்டிருக்கையில் ஒருவன் பின்புறமாக வந்து தோன்றி அவளது கைகளைப் பிடித்துக்கொண்டு, "சூடா! கண்மணீ! ஏன் அழுகின்றாய்? என்னைப் பார். நான் செங்கற்பட்டிலிருந்து வந்துவிட்டேன்" என்று சொல்லி நின்றான். சூடாமணி, "அத்தான்! இவ்வளவு நேரமாயிற்று?" என்று புன்சிரிப்புடன்

கண்களைத் துடைத்துக்கொண்டாள். ராஜப்பன் தனது கைக்குட்டையினால் அவளது கண்களைத் துடைத்து, "கண்மணீ! உனக்காக வல்லவா நானிங்கு வந்திருக்கின்றேன்? நீ என் விசனப்படுகின்றாய்? உன்னை மூடனான அந்தக் காட்டுப்பயல் சுந்தரத்துக்கு விவாஹஞ்செய்துகொடுப்பதாக மாமனார் என்னிடம் சொன்னார். உன்னை யெனக்கே விவாஹஞ் செய்துகொடுக்க வேற்பாடு செய்வதாகச் சொல்லிப் பிரதி தினமும் என் பெரியதாயார் என்னை யிங்கேயே நிறுத்தியிருக்கின்றாளென்பது உனக்குத் தெரியாதா? கண்மணீ! உன் அபிப்பிராய மென்னையோ? என்னைப் பார்த்து வெட்கப்படாமற் சொல்" என்று கேட்டான்.—

கலியாண விஷயத்தில், பெண்ணின் தாய்க்குப் பணக்காரன்பேரிலும், தந்தைக்குக் கல்வியு மொழுக்கமு முடையவன்பேரிலும், பெண்ணுக்கு யௌவனமும் அழகும் படைத்தவன்பேரிலும், சுற்றத்தினர்க்கு நற்குலத்தவன்பேரிலும் அபிப்பிராயம் நாடுவது இயற்கை.—

ராஜப்பனது இயற்கை வடிவத்தழகினையும் நடையுடை பாவனைகளையுமே கண்டு மயங்கி அவன்மீது அதிகமோகங் கொண்டவளாதலாற் சூடாமணி, "அத்தான்! சுந்தரமோ மிகவும் நல்லவன், சத்தியவான், சாமர்த்தியவான். அவனைத் தூஷிக்க வொண்ணாது

அவனுக் கென்தந்தை வாக்களித்திருக்கின்றரென்னை விவாஹத்திற் கொடுப்பதாக. அவனிடம் தப்பிதம் யாதுமில்லை.—நானும் அத்தையுமாகச் சமயம் பார்த்து உன் மாமனாரிடம் பேசிக் காரியசித்தி பெற வெண்ணி யிருக்கின்றோம். நீ அவசரப்படவேண்டாம்" என்று சொன்னாள். ராஜப்பன் சந்தோஷத்துடன், "சரி சரி. இனி யதிகமாகச் சொல்லவேண்டாம். என்மீது உனக்குள்ளன்பிருக்கிறதென் றறிந்துகொண்டேன்" என்று சொல்லிச் சூடாமணியின் கைகளைப் பிடித்துக்கொண்டு இருவரும் சந்தோஷமாக வார்த்தையாடிச் சோலை சுற்றித் திரிந்து மந்திரஞ் சேர்ந்தனர்.—ராஜப்பனைக் கண்டதும் சூடாமணி சுந்தரத்தை மறந்தவளானாள்.

இரவு ஒன்பது மணியாயிற்று: ஜயராமையர் தருமராஜையரைப் போஜனத்திற் கழைக்க வந்தார். யாவரும் போஜனசாலைக்குச் சென்றதும் சுந்தரம் வராமலிருப்பது கண் டெல்லாரும் சற்று நேரம் அவனை யெதிர்பார்த்துக் காத்திருந்தனர். சுந்தரம் வரவில்லை: அவன் வயல்களைச் சுற்றிப் பார்த்துவர நேரமாயிற்றென்று நினைத்தார் ஜயராமையர். சூடாமணிக்குச் சந்தேக முண்டாயிற்று. ராஜப்பன் பசி வேளை மீறுவதாகத் தெரிவிக்க, எல்லாரும் போஜனம் செய்தனர். சூடாமணி முகத்திற் பிரகாசம் குன்றினவளாகக் காணப்பட்டாள். ஜயராமையரும் போஜன

முடிவதற்குள் சுந்தரத்தைக் குறித்து மூன்று முறை விசாரித்தார்: போஜன முடிந்ததும் பண்ணையாட்களைக் கூப்பிட்டுச் சுந்தரத்தைத் தேடச்செய்தார்.

இரவு மணி பன்னிரண்டு ஆயிற்று. சுந்தரத்தையொருவருங் கண்டிலர். ஜயராமையர் திகிலடைந்தார். சூடாமணிக்குக் கைகால்கள் நடுங்கின. ஜயராமையரது படுக்கையறையிலுள்ள மேஜையின்மீது ஓர் கடிதமிருக்கக் கண்டு வேலைக்காரன் அதை யவரிடம் கொண்டு சேர்த்தான். ஜயராமையர் வெகு பரபரப்புடன் அதை வாங்கிப் பார்த்தார். அது சுந்தரத்தின் கையெழுத்து. அதில் சுந்தரம் ஜயராமையர் தன்னை நட்புடன் ஆதரித்ததற்காக அவர்க்கு அநேக வந்தனம் செய்தான்: இனித் தன்னைக் குறித்து அவர் வைத்திருந்த வெண்ணத்தை மாற்றிவிடும்படி கேட்டுக்கொண்டான்: தன் தங்கையாகப் பாவிக்கும் சூடாமணிக்குத் தீர்க்காயுளும் எப்போதும் குறைவுறாச் சந்தோஷமும் குடும்பவிர்த்தியும் உண்டாகவேண்டுமென்று தெய்வத்தைப் பிரார்த்தித்தான்: தனது நமஸ்காரங்களைத் தன்னிடத்துப் பரிவுகொண்ட பாகீரதியம்மைக்கும் தயாரூபியாகிய தருமராஜையர்க்கும் தனது நேசனாகிய ராஜப்பனுக்கும் தெரியப்படுத்தும்படிக்கும் வேண்டிக்கொண்டான்.

அதைக்கண்டு ஜயராமையர் விம்மிவிம்மி அழவாரம்பித்தார்: ராஜப்பன் வந்தது முதல் சுந்தரம்

அசட்டையுடனும் அவமதிப்புடனும் கருதப்பட்டானென்றும், அவன் தம்மை விட்டுப் போனதற்கு ராஜப்பனே காரணமென்றும் நிச்சயித்தார். சுந்தரம் போய்விட்டதற்குத் தானே காரண மென்றறிந்து சூடாமணியும் அழ வாரம்பித்தாள்.—ராஜப்பனைத் தவிர மற்றெல்லார்க்கும் அதிக கவலையுண்டாயிற்று.

ஜயராமையர் முடிவில் காலையிற் சுந்தரத்தைத் தேடுவதற்கான வேற்பாடுகள் செய்வதாகத் தீர்மானித்தார். இவை யாவும் பார்த்திருந்த தருமராஜையர் எல்லார்க்கும் சமாதானம் சொல்லிக்கொண்டே சூடாமணியைக் கீழ்க்கண்ணாற் பார்த்தார். அதைக்காணச் சூடாமணிக்குத் திகி லுண்டாயிற்று. பின் பவரவர் தத்தம் படுக்கைக் கேகினர்.—

சூடாமணி அன்று நடந்த சங்கதிகளைப் பாகீரதிக்கு விவரமாகச் சொன்னாள். பாகீரதியும் சூடாமணியும் சுந்தரத்தைக் குறித்து விசனித்தனர். சூடாமணிக்கு அன்றிரவு முழுவதும் தூக்கம் பிடிக்கவில்லை.

மறு நாட் காலைச் சூரியோதயத்திற்கு முன்னாகவே ஜயராமையர் எழுந்து சென்று வயல்களைச் சுற்றிப் பார்த்துப் பண்ணையாட்களைச் சேர்த்துச் சுந்தரத்தைத் தேட வேற்பாடுசெய் தனுப்பினார்.

தருமராஜையரும் இவர்க்கு முன்னதாகவே யெழுந்து வயலுக்குச் சென்று ஜயராமையரைக்

கண்டு அவருக்குச் சுந்தரத்தின் விஷயத்திற் சமா தானஞ் சொல்லித் தாம் ஜயராமையரிடம் கொண்ட சிநேஹவாஞ்சையினுற் சொல்லப்புகும் ஆலோசனைக்கு அவர் மதிப்புக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். ஜயராமையரும் ஒப்புக்கொண் டார். அப்பொழுது சுந்தரத்தைத் தேடும் விஷயத்தில் அதிக கவலை யெடுத்துக்கொள்ள வேண்டா மென்றும், சுந்தரம் சாதாரணமான சஞ்சலபுத்தி யுள்ளவ னல்லனென்றும், தற்சமயம் அவனிஷ்டப் படியே விட்டுப் பிறகு நாளாவட்டத்தில் மற்றை விஷயங்களைக் குறித்து ஆலோசிப்பது உசிதமென்றும் தருமராஜையர் சொன்னுர். தருமராஜையரிடம் அதிக கௌரவமும் விசுவாஸமும் நம்பிக்கையும் உண்டாகையால், ஜயராமையர் அவர் வரைந்த தீர்மானத்திற் குடன்பட்டார்: ஆனல் சுந்தரத்தைக் குறித்த கவலையோ அவரைவிட்டு நீங்கிற்றில்லை.

சூடாமணியும் தான் சுந்தரத்தைக் கண்ட சங்கதியும் அவனுக்குப் பதில் கொடுத்த விவரமும் தன் தந்தைக்குத் தெரிவிக்கும்பொருட்டு அவரைத் தேடி வயல்நோக்கிச் செல்வுழி எதிரே தருமராஜையர் அவளைக் கண்டு, "குழந்தாய்! நீ இவ்வளவு அதி காலையில் எங்கே போகின்றுய்? யான் உன்னிடம் சில சங்கதிகளைப் பேசவேண்டும்" என்ருர். தருமராஜையர் சுந்தரத்தின் விஷயத்தைக் குறித்துப்

பேசப்போகின்ரு ரெனச் சந்தேகித்துச் சூடாமணி நாணம் மேற்கொண்டு தலைகுனிந்து அவரது வார்த்தைகளுக்குத் தடுத்துப் பேச முடியாதவளாய் நின்று விட்டாள்.

தருமராஜையர்: குழந்தாய்! நீ உன் தந்தையைத் தேடிச் செல்கின்ருய்போலும்.—என்ன காரியத்திற்காகச் செல்கின்ருய்? நான் இவ்விடம் சென்ற சில நாட்களாகத்தான் தங்கியிருந்த போதிலும், உங்களிடம் எனக்குச் சிநேஹவாஞ்சை அதிகமாய்விட்டது.–உத்தமர்களுடன் பல நாள் நேசிக்க வேண்டிய தவசிய மில்லை. ஒரு நாழிகை பழகினுலும் போதும்.—உங்கள் குடும்ப ரஹஸ்யங்களை யான் அநாவசியமாய் அறிய முயல்வதாகக் கருதவேண்டாம்.

சூடாமணி: தாதா! என் தந்தையிடம் சில சங்கதிகளை நேரில் தெரிவிக்கப் போகிறேன்.

தருமராஜையர்: (சூடாமணியை உற்றுப் பார்த்தவாறே) சரி! அந்தச் சங்கதிகள் சுந்தரத்தின் விஷயமாயல்லவா?

சூடாமணி: (கைகால் நடுக்கத்துடன் கண்ணீர் வடிய) ஆமாம், ஆமாம்.

தருமராஜையர்: எனக்கு உன் ரஹசியங்களைத் தெரிந்துகொள்ளும் சக்தி யுண்டு. நீ அவனை விவா

ஹஞ் செய்துகொள்ளச் சம்மதமில்லை யென்று மறுத்துவிட்டனை யல்லவா?

சூடாமணி: (கண்ணீர்ப் பெருக்குடன் தருமராஜையர் பாதங்களிற் பணிந்து) ஆமாம், மறுத்துவிட்டேன். தாதா! நான் வெகு புத்தியீனமான வேலையைச் செய்தேன். என் அத்தையின் அபிப்பிராயத்திற்கு இணங்கி என் தந்தையின் கட்டளையை அசட்டைசெய்துவிட்டேன். என் தந்தை சுந்தரத்தை விவாஹஞ் செய்துகொள்ளச் சொல்லினர். நான் ஒரு ஆறுமாதகாலம் தாமதித்துப் பின்னர் சொல்லுகிறேனென்றேன். இதற்குள் நேற்றே நான் சுந்தரத்தைத் திரஸ்காரஞ்செய்தேன். இவ்வாறாக யான் தந்தை சொற் கடந்த கொடும்பாவியாயினேன். சுந்தரமோ நற்குண நற்செய்கைகளிற் சிறந்த உத்தமன். அவன் மனத்தைப் புண்ணாக்கிவிட்டேன் பாவி நான். அவன் காணாமற்போனதற்கும் நானே காரணமென்று நினைக்கின்றேன். நான் இந்த விஷயத்தை என் தந்தைக்குத் தெரிவிக்க விரும்பிப் போகின்றேன்.

தருமராஜையர்: (சூடாமணியை யெடுத்துத் தேற்றி அவளது கண்களைத் துடைத்து) குழந்தாய்! நீ ராஜப்பனுடைய சௌந்தரியத்தைக் கண்டு மயங்கி அவன்மீது காதல் கொண்டு சுந்தரத்தைத்

திரஸ்காரஞ் செய்தனே. அதற்கு நின் அத்தை உடந்தையாக விருந்தனள். இவ்விஷயம் உன் தந்தைக்குத் தெரிவிக்க நினைக்கின்றனேயே? குழந்தாய்! நீ அப்படிச் செய்யலாகாது. சுந்தரத்தின்மீது நின் தந்தை அதிக அபிமானம் வைத்திருக்கின்றார். சுந்தரம் உன்பொருட்டாகத் தம்மை விட்டு நீங்கினனென்று அவர்க்குத் தெரிந்தால், அவரது மனம் இன்னு மதிகமாக நோவதுடன் உன்னைத் தங் கட்டளையை மீறும்படி செய்த அந்த அத்தையினிடமும் விரோதமுண்டாகும். அன்றியும், ராஜப்பனிடம் சில நாளாக உனக் கேற்பட்டிருக்கு மபிமானமும் காதலும் நீடித்து நிற்குமா வென்பதை நீ இன்னும் சில நாட் பரீக்ஷித்துப் பார்க்கவேண்டும். பிறகு அவனிடம் உன் அபிப்பிராயம் மாறாமலிருந்ததானால், என்னைப்போன்றவர்கள் அவ்விஷயத்தை யுன் தந்தையிடம் பேசித் தகுந்த வேற்பாடுகள் செய்யவேண்டுமே யொழிய நீ நேரிற் பேசலாகாது. அது வரையில் ராஜப்பனது விஷயம் உன் தந்தைக்குத் தெரியவேண்டாம். நீ சுந்தரத்துக்கு விடை சொன்னதும் தப்பல்ல. உன துண்மை யபிப்பிராயத்தை யவன் வற்புறுத்தினனக, நீ யதனைக் கபடின்றி வெளியிட்டனே. அந்தரங்க விசுவாச மில்லாதவிடத்

தில் விவாஹஞ்செய்துகொண்டால் அநேக கேடு களே சம்பவிக்கும். புருஷனும் மனைவியும் ஒருவரிடத்தொருவர் உள்ளன்பு பூண்டு மனமொத்து இல்லறம் நடத்துவதே உத்தமமானது. அங்ஙனஞ் செய்யு நற்கருமங்களே ஒன்று நூறாய்ப் பலனைத் தருவனவாகும்.—தற்சமயம் நின் தந்தைக்கு இந்தச் சங்கதி யொன்றும் தெரிய வேண்டாம். இது சொல்வதனால் நீ யுன் தந்தையிடம் உண்மையாய் நடந்துகொள்ளவேண்டாமென்றும், உன்னைக் கெட்ட வழியிற் புகுத்துகிறேனென்றும் நீ நினையேல். இதைக் குறித்து நானுன்னிடம் பேசியது எவர்க்கும் தெரிய வேண்டாம்.—

இங்ஙனம் தருமராஜையர் சொல்லக் கேட்டுச் சூடாமணி யப்போது தன் மனக்கவலை நீங்கினவளாய் அவர் சொன்ன புத்திமதிகளுக்காக அவர்க் கனேக வந்தன மளித்தாள்.—தருமராஜையர் சூடாமணியைத் தம்முடன் பங்களாவிற் கழைத்துச் சென்றனர்.

8. சண்டி சாவித்திரி

சுந்தரம் காணாமற் போனதற்காக ஜயாராமையருக்கு அதிக மனக்கவலை யுண்டானதல்லாமற் பண்ணைக் காரியங்களிலும் தவக்க மிகுதியு மேற்பட்டது. அவனிடத் தபிமான மிகுதி கொண்ட பாகீரதியம்மை விசனத்தால் மெலிந்து காய்ச்சலில் விழுந்தாள். சூடாமணியும் மனத்திற் கஷ்டமடைந்த போதிலும், அதனை வெளிக் காட்டாமல் அத்தை தந்தை முதலானவர்கட்கு உபசாரஞ் செய்துகொண்டு வீட்டு வேலைகளைச் சரிவரப்பார்த்து வந்தாள்.—

இடையில் ஒருநாள் சூடாமணி சந்தைக்குப் போகவேண்டியதாயிற்று. பண்ணையில் வேலை அதிகமாயிருந்ததனால் சுந்தரம் இல்லாததுபற்றி ஜயாராமையருக்கு ஓய்வு நேரம் கிடைப்ப தரிதாயிற்று. சூடாமணிக்குத் தகுந்த துணையாய் வண்டி யோட்

டத் தகுந்த நம்பிக்கையான ஆள் காணப்படவில்லை. சூடாமணி ராஜப்பனைத் தன்னோடு சந்தைக்கு வரும் படி யழைத்தாள். ராஜப்பன் வண்டி யோட்டிச் செல்ல மறுத்துவிட்டதுந் தவிர, சூடாமணியையும் சந்தைக்குப் போகவேண்டாமென்றும் தடுத்தான்.— சூடாமணியோ வீட்டுக்கு வேண்டிய சாமான்களை யவ்வப்போது தானே நேரிற் பார்த்து வாங்கிவருவது வழக்கம். அவள் இன்று ராஜப்பன் போகவேண்டா மென்று தடுப்பதை மதிக்காமற் சந்தைக்குப் போகப் புறப்பட்டாள். ஜயராமையரே வண்டி யோட்டிச் செல்ல நேரிட்டது. அதனால் சூடாமணிக்கும் அவளது தந்தைக்கும் ராஜப்பனிடம் சற்று மனப்பிணக்கு நேரிட்டது.—

அற்றைப் பகல் வெப்பம் அதிக தீக்ஷணமாக விருந்ததனால் தருமராஜையர் வெளியிற் செல்ல வியலாமல் தம் படுக்கையறைக்குமுன் ஒரு சாய்வுநாற் காலியில் படுத்துக்கொண்டார். எதிரே பூந்தோட்டத்திலிருந்து குளிர்ந்த காற்று வீச வாரம்பித்தது. பெரியவர் கண்களை மூடிக்கொண்டு காற்றுச் சுகத்தை நுகர்ந்திருந்தார்.—

ராஜப்பன் தன்னோ டொருவரும் சம்பாஷிக்க வகப்படாததனாற் புத்தக மொன்றைக் கையிற் கொண்டு பூந்தோட்டத்தின்கண் ஓர் மரத்தடியி லமர்ந்து வாசித்துக்கொண்டிருந்தான். அச்சமயம்

இருபத்தைந்து வயதுள்ள ஓரழகிய ஸ்திரீ தானிருக்குமிடத்தை நோக்கி வருவதைக் கண்டு ராஜப்பன் திடுக்கிட்டெழுந்து, "ஹா! பாவி இந்தச் சண்டாளி இங்கெங்கே வந்தாள்?" என்று தனக்குத்தானே வெறுப்புடன் பேசிக்கொண்டேயவளையெதிர் நோக்கிச் சென்றான். யௌவனம் பொருந்திய அந்த ஸ்திரீயும் சமீபமாக வரவே இருவரும் ஒருவரையொருவர் முறைத்து பார்த்தனர். ராஜப்பனுக்கு அவளைக் கண்டதும் கோபமும் பயமும் தோன்றிக் கைகால்கள் நடுங்கத் தொடங்கின.

சாவித்திரி கலகலவென்றுரத்த சத்தத்துடன் நகைத்து, "ருணபாதக ராஜப்பா! இங்கு யார் உனக்கு ருணப்பட்டு உன் வலையிற் சிக்கினர்? ஐயோ பாவம்! இன்னும் நீ அவர்களை உயிருடனும் வைத்திருக்கின்றனையோ?" என்று கேட்டாள். ராஜப்பன், "அடீ பாதகீ!, சண்டீ! நீ யிங்கும் தொடர்ந்து வந்தனையா? என் மானத்தை வாங்கிடாதே! போதும் போதும்!" என்று அவள் வாயைத் தன் கையாலழுத்தி மூட முயன்றான். சாவித்திரி அவனைத் திமிரிக்கொண்டு பகபகவென்று சிரித்து, "அடே மூடா! உன் சாமர்த்தியம் என்னிடம் பலிக்குமா? நான் சண்டி சாவித்திரி யென்பது மறந்தாயோ? சற்று நினைத்துப் பார்" என்று சொல்லி யவனிட மிருந்த புஸ்தகத்தைப் பிடுங்கித் தன்கையில் வைத்துக்கொண்

டவனைப் பரபரப்புடனிழுத்து ஓர் மரத்தடியிற் றள்ளி யுட்காரவைத்தாள்.

ராஜப்பன் பயந்தவனுய்ச் சாவித்திரிக்குச் சமாதானம் சொல்லி அவளை அம்மரத்து மறைவில் இருக்கச் செய்து, நாற்புறமும் பார்த்து அங்கெவரும் இல்லாமை தெரிந்து சற்றுத் தைரியமடைந்து வெகு வேகமாகச் சந்தடி செய்யாமற் சென்று எதிரே மாளிகைத் தாழ்வாரத்திற் சாய்வுநாற்காலியிற் படுத்துக் கொண்டிருந்த தருமராஜையரைப் பயத்துட னுற்றுப் பார்த்தான். ராஜப்பன் வந்த சமயத்தில் பெரியவர் தம் முகத்தை மேல்வேஷ்டியால் மூடிக்கொண்டு குரட்டைவிட்டுக்கொண்டிருப்பதைக் கண்டு சந்தோஷித்தான்: மறுபடியும் அவர் முகத்தைக் குனிந்து பார்த்தான்: அவர் அசையவில்லை: அக்கம்பக்கம் சுற்றிப் பார்த்தான்: ஒருவரும் நடமாடவில்லை: அதனுல் மனேதிடங்கொண்டு மறுபடியு மரத்தடி சேர்ந்து சாவித்திரியைப் பூஞ்சோலைக்குள் அழைத்துச்சென்ருன்.—தருமராஜையரோ உண்மையாகத் தூங்கவில்லை.

வந்த சண்டியுடன் ராஜப்பன் சோலைக்குட் சென்றதும், தருமராஜையர் தாமும் எழுந்து மெல்லென வவர்களுக்குத் தெரியாமலே பின்பற்றிச் சென்று அவர்களங்குட்கார்ந்திருந்த புஷ்பப்படருக்குப் பின்புறத்தில் மறைந்துநின்று அவ்விருவருக்கும் நிகழும் ஸம்பாஷணையை யுற்றுக்கேட்டார். அதனுல் ராஜப்

பன் எவ்வித கொலைபாதகங்கட்குமஞ்சாத துர்நடத்தைக் களஞ்சியமென்றும், சாவித்திரி ராஜப்பனது வைப்பாட்டியென்றும், ராஜப்பன் ஆற்றார் வந்தது மோசக்கருத்துடனேயென்றும், முடிவில், அவ்விருவரின் தீர்மானத்தையும் அறிந்து பெருங்கோபமும் அசூயையும் அடைந்தவராய் அவ்விருவரும் கூடிச் செய்யும் சூழ்ச்சிகளனைத்தையும் தோற்கடிக்கத் தீர்மானித்தார்.

ராஜப்பன் சாவித்திரி யிருவர்க்கும் சம்பாஷணை இரண்டு நாழிகை நடந்தது. இறுதியில் ராஜப்பன் தன் சிறு பையிலிருந்து பதினைந்து ரூபாய் சாவித்திரிக்குக் கொடுத்து அவளைச் சமாதானப்படுத்தித் தோட்டத்திற்கு வெளியே விட்டுவரச் சென்றான்.

ராஜப்பன் சென்றதும் தருமராஜையர் தம் மறைவிடத்தினின்று புறப்பட்டு அவன் திரும்பிவருமுன்னமே தா மிருந்தவிடம் கடுகிச் சேர்ந்து முன்போலவே போலிநித்திரை கொண்டார்.

சாவித்திரியை வெளியே விட்டு வந்து ராஜப்பன் அக்கம்பக்கத்தில் ஒருவரையுங் காணாமல் தருமராஜையரும் முன்போலவே தூங்கிக்கொண்டிருப்பதைக் கண்டு, தன் ரகசியம் வெளியாகாமலிருப்பதுடன் தன் சூழ்ச்சிகளும் தனக்கு லாபகரமாய் முற்றுப்பெறுமென்று பெருமகிழ்ச்சியடைந்தான்.

9. பிரயாணம்

சந்தைக்குப் போயிருந்த ஜயராமையரும் சூடாமணியும் மாலை ஏழு மணிக்குப் பண்ணைவந்து சேர்ந்தனர். மறுநாள் வழக்கம்போல் வைகறையிற் றுயிலெழுந்து தருமராஜையரும் ராஜப்பனும் ஆற்றிற்கு நீராடச் சென்றனர். வழி நடக்கையிற் பற்பல விஷயங்களைப் பேசி வருங்கால், அடியிற் குறித்த சம்பாஷணை நிகழ்ந்தது.—

தருமராஜையர்: ராஜப்பா! நீ சென்னைக்குச் செல்ல நாளாகுமோ?

ராஜப்பன்: தாதா! சமீபத்தில் ஆற்றூர் விட்டுப் போக எனக் குத்தேச மில்லை.—ஏன், தாதா! அம்மாதிரி கேட்கிறீர்? என்னாற் றங்களுக்கு ஆகவேண்டியது யாதாயினு முண்டோ?

தருமராஜையர்: குழந்தாய்! விசேஷ மொன்றுமில்லை.

யான் சில முக்கியமான பத்திரங்களைச் சென்னைக் கனுப்பவேண்டும். அவற்றைக் கண்டவர் வசம் அனுப்பலாகாது. ஒருகால் நீ செல்வதானால் உன் வசம் அனுப்பலாமோ வென்று கேட்டேன். மற்றொன்று மில்லை.

ராஜப்பன்: இதுதானா? தாதா! நுமது விஷயத்தில் என்னாலாகக் கூடிய எந்த வேலையாயினும் யான் செய்யத் தயாரா யிருக்கின்றேன். நுமக்குத் தொண்டு செய்து சந்தோஷமுண்டாக்கும் பாக்கிய மெளியேனுக் கெச்சமயம் கிடைக்குமோ வென் றெதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றேனே! தாதா! யாது காரணமோ நும்பா லடியேனுக்குச் சொல்லற்கரிய பரமப்ரீதியும் கௌரவமும் தோற்றுகின்றன. இன்றே யான் நுமக்காகச் சென்னைக்குப் புறப்படுகின்றேன். நுமது கட்டளை யென்னோ புகலுவீர்.

தருமராஜையர்: குழந்தாய்! எனக்காகவா நீ சென்னைக்குச் செல்ல வெண்ணுகிறாய்? அவ்வளவு கஷ்டம் உனக்கு வேண்டாம்.

ராஜப்பன்: ஆம், உமக்காகத்தான் நான் சென்னைக்குச் செல்வேன். அதனா லெனக்கு யாதொரு கஷ்டமுமில்லை. நீர் என்மேல் வைத்திருக்கும் விசுவாஸத்திற்கும் சிநேகத்திற்கும் இந்த அற்ப ஊழியந்தானா நான் செய்யலாம்? அன்றியும்,

நீர் எனக் கிதுகாறும் புங்கானுபுங்கமாகப் போதித்தருளிய அற்புதமான நீதிகளேயும் கதைத் தொடர்களேயும் வேதாந்தஞானேபதேசத்தையும் என்றேனும் மறக்க முடியுமா? என்னிடம் நீர் நம்பிக்கை வைத்ததனு லெனக்குப் பெருங் கௌரவத்தைக் கொடுத்தவரானீர்.—நான் எப்போது புறப்படக் கட்டளேயிடுகின்றீர்?

தருமராஜையர்: ராஜப்பா! அப்படி யுனக்கு மனப்பூர்வமாக இச்சகாயஞ்செய்ய இஷ்டமிருக்கும்பக்ஷத்தில் இன்று புறப்படக் கூடுமோ?

ராஜப்பன்: அப்படியே சித்தமா யிருக்கின்றேன், தாதா!

தருமராஜையர்: ஆனல், ராஜப்பா! இவ்வேற்பாடெவர்க்கும் தெரியலாகாது.

ராஜப்பன்: அப்படியே, தாதா! அதற்குத் தகுந்த யுக்தி செய்கிறேன்.—ஆனல், தாதா! ஒன் றறிவீர். நான் எப்போதும் உண்மையே பேசுவது. எந்த ஆபத்துக்காலத்தாகிலும் கடுகத்தனே பொய்யாகிலும் சொல்லத் துணியேன். இதுவரையிலும் அங்ஙனே நடந்துவந்தேன். நுமது கட்டளையை முடிப்பான்வேண்டி நான் தற்சமயம் என் மாமனரிடத்திலும் மூத்த தாயாரிடத்திலும் மனச்சாட்சிக்கு மாருகச் சற்று உண்மையை மறைக்கவேண்டி யிருக்கின்றது.

தருமராஜையர்: ராஜப்பா! நான் உன்னுடைய யோக்கியதையை நன்கறிந்துளேன். உன் நடவடிக்கைகளை நானே கண்ணாரப் பார்த்தும் மற்றவர் சொல்லக் காதாரக் கேட்டும் திருப்தியடைந்திருக்கின்றேன். இச்சமயம் நான் உன்னைச் சென்னைக் கனுப்புதற்குக் காரணம் உன் நடத்தையே. உன்னிடம் வேறுவித அபிப்பிராயம் கொண்டிருந்தேனாகில் உனக்கிவ்வேலை கொடுத்திருக்க மாட்டேன்.—

தருமராஜையர் தன்னைக்குறித்து இப்படிச் சொல்லக் கேட்டு ராஜப்பன் அவர் வார்த்தைகளின் உட்கருத்தறியானாய் அவர் தன்மீது நல்ல அபிப்பிராயம் வைத்திருக்கிறாரென நினைத்துச் சந்தோஷ சாகரத்தின் மூழ்கினான். கிரமப்படி இருவரும் ஆற்றங்கரையில் தமது நித்திய கர்மாநுஷ்டானங்களை விதிப்படி முடித்துக்கொண்டு ரவிமந்திரஞ் சேர்ந்தனர். அன்று போஜனமான பின்பு ராஜப்பன் தான் ஏதோ ஒரு அவசரமான சொந்த வேலையை யுத்தேசித்துச் சென்னைக்கு அற்றை நான்கா நாட் சென்று ஒரு வாரத்திற் பண்ணைக்குத் திரும்புவதாகச் சொன்னான். ஜயராமையருக்குத் தமது மருமகனை விட்டுப் பிரிய மனமில்லை,

சூடாமணிக்கும் அப்படியே தோன்றி ராஜப்பனைப் போகவேண்டாமென்று கேட்டுக்கொண்டாள்.

அது கண்ட தருமராஜையர் ராஜப்பனைப் பார்த்து, "அப்பா குழந்தாய்! நீ நம் சூடாமணியின் அபிப்பிராயப்படி யுன் பிரயாணத்தை இச்சமயம் நிறுத்தி விடலாம். ஆனால் நேற் றுனக்குக் கிடைத்ததாக வெனக்குக் காட்டிய கடிதங்களால் உன் வேலை முக்கியமானதென்று தோற்றுகின்றது. சூடாமணியோ சிறு குழந்தை, உலகப்பழக்க மறியாதவள். அத்தானாகிய உன்மேலிருக்கும் வாஞ்சையினால் அவட்கு உன்னைப் பிரிய மன மில்லாதிருப்பது இயல்புதான். எங்கட்கும் அப்படித்தா னிருக்கின்றது. ஆனால் நீ யுன் வேலையை முடித்துக்கொண்டு சீக்கிரம் பண்ணைக்குத் திரும்பிவருவாய்.—குழந்தாய் சூடாமணி! ராஜப்பன் போய் வரட்டும்: நீ தடுக்காதே" என்று சொல்லி அவளைக் கீழ்க்கண்ணாற் பார்த்தார். சூடாமணி வெட்கித் தலை குனிந்து சும்மா விருந்திட்டாள். ஐயராமையரும் தருமராஜையர் சொன்னபடியே சொல்ல, சற்று யோசனையிலிருந்த ராஜப்பன் கட்டாயம் தான் போகத்தான்வேண்டு மெனத் தீர்மானமாய்ச் சொன்னான்: தருமராஜையரது சமயத்திற் கேற்ற சமாதானத்திற்கு வியப்புற்றான்.

அன்று முழுவதும் தருமராஜையர் ராஜப்பனை விட்டுப் பிரியாமற் பூந்தோட்டத்தைச் சுற்றிப் பார்க்க அழைத்தேகினர். மறு நாள் வெள்ளிக்கிழமை—எல்லோருமாக அவ்வூர் அம்பிகைக்கோயிலுக்குச்

செல்லுகையில், அவர் சூடாமணியைத் தம் பக்கலிற் றானே யிருக்கச்செய்தார். சனி ஞாயிற்றுக் கிழமைகளிற் சூடாமணியும் ராஜப்பனும் ஒருவர்க்கொருவர் தனித்துப்பேச வெகு ஆவலாய்ச் சமயம் பார்த்திருந்தனர். தருமராஜையர் அதற் கிடங் கொடாமல் ராஜப்பனை யொரு நிமிஷமாயினும் விட்டுப் பிரியாமலிருந்தார். அவரிடமிருந்து அவன் தப்பித்துக் கொள்ள எவ்வளவோ முயற்சி செய்தும் பலிக்கவில்லை. அவரை அலக்ஷியஞ்செய்யவும் தைரிய மில்லாதவனாய் ராஜப்பன் அவரிடமே நின்றுவிட்டான். இடையில் ராஜப்பனுக்குச் சந்தேக முண்டாகாவண்ணம் தருமராஜையர் பற்பல வேதாந்த விசாரணைகளையும் தேசப்பொதுநன்மை விஷயங்களையும் ஒன்றின்மேலொன்றாய்ப் பேசிக்கொண்டிருந்தார்.

நான்காநாள் திங்கட்கிழமைத்தினம் காலை மந்திரத்தில் எவரும் படுக்கையைவிட் டெழுமுன்னரே தருமராஜையர் ராஜப்பனது படுக்கை யறைக்குமுன் உலாவிக்கொண்டிருந்தார். ராஜப்பன் எழுந்ததும் வெளியே வர, தருமராஜையர் அவனிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்து, “அப்பா! நீ இதைக் கொண்டுபோய்ச் சென்னையி லெனது வக்கீல் ராமஸ்வாமையரிடங் கொடுத்து உன்னா லாகவேண்டியதேதாவது இருப்பின் அவர் சொற்படி நடந்து எனக்குத் தெரியப்படுத்தவேண்டும்” என்று சொல்லி,

வழிச்செலவிற்காக 50 ரூபாயையும் கொடுத்தார். பணத்தாசை மிக்கிருந்தபோதிலும் வெளிக்குமட்டும் ராஜப்பன் வழிச்செலவிற்குப் பணம் வேண்டாமென்று மறுத்தான்: இறுதியில் பெரியவர் பணத்தை வற்புறுத்திக் கொடுக்கப் பெற்றுக்கொண்டான்.

ராஜப்பனுக்காகக் குதிரைவண்டி யொன்று தயாராய் வாசலில் வந்து நின்றது. ராஜப்பன் தன் பெரிய தாயாரிடமும் சூடாமணியிடமும் விடைபெற்றுவர வீட்டிற்குட் செல்ல, தருமராஜையர் அவனுடன் பிரிய வசனம் பேசிச் சென்று அவன் யாவரிடமும் விடைபெற்று வண்டியேறும்வரையில் அவனிடமே யிருந்தனர். ராஜப்பன் பண்ணையை விட்டுச் சென்றான். ஜயராமையரும் அவனுடன் கூட வழிவிட்டு வரச் சென்றார்.

10. ஸாமுத்ரிகம்

மாமனும் மருமகனும் பண்ணை விட்டுச் சென்றதும், தருமராஜையர் சூடாமணியைத் தனித்துப் பூந்தோட்டத்திற் கழைத்துச்சென்று அவள் ராஜப்பனை மணம்புரிய வெண்ணி யிருப்பது தெய்வ சம்மத மில்லை யென்றும், அவள் அவன் மேல் வைத்திருக்கும் அன்பை மறந்துவிடவேண்டுமென்றும் சொன்னார். சூடாமணி மிக்க விசனத்துடன் சங்கதி யாதென்று வினவினள். நான்கு நாளுக்கு முன் ராஜப்பனும் சாவித்திரியும் பேசிக்கொண்டதனால் தாமறிந்த சங்கதி யாவும் அவர் விவரமாக வெடுத்துச்சொன்னார். சூடாமணி ராஜப்பன் சங்கதி முற்றும் கேள்வியுற்றுக் கண்ணீர் பெருக அவரது பாதங்களிற் பணிந்து உலகப்பழக்கமறியாத தன்னைப் பெரியதோ ராபத்தினின்றும் காப்பாற்றினதற்காக வந்தன மளித்தாள். பெரியவர் பின்னும் சொல்லத் தொடங்கினார் :—

"குழந்தாய் சூடாமணீ! நான் சொல்வதைச் சற்றுக் கவனமாய்க் கேள்.—விவாஹமென்பது ஆணும்பெண்ணுமாகிய விருவரும் ஒத்த அன்பினராய் ஒரு மனத்துடன் இல்லற நடத்தி இன்புற வாழ்ந்து இம்மைச்சுகாநுபோகநுகர்ச்சிக்குப் பெருந்துணைக்கருவியாக வேற்படுத்திக்கொள்ளும் ஓர் வித பகிரங்கமான உடன்படிக்கையாம். தமது ஆயுளுள்ள பரியந்தம் சதிபதிகளிருவரும் ஏகோபித்து வாழ்ந்து குடும்ப ப்ரதிஷ்டை செய்யவேண்டியிருப்பதால், ஓர் விவாஹம் நிச்சயப்படுத்தும்போது மணமகனும் கன்னியும் மலரு மணமும்போலும் பாலு நிறமும்போலும் பிரிப்பினும்பிரியா நேசத்தினராய் வாழ்தற்குத் தக்க வேற்பாடுகளின் குணகுணங்களையும் பொருத்தங்களையும் முன்னதாகவே ஆலோசித்துச் சீர்தூக்கிப்பார்ப்பது புத்திசாலிகளின் கடமையாகும். இல்லற மொழுங்கு நடத்தற்குப் புருஷனுக்கும் இல்லாளுக்கும் ஆஸ்தி அந்தஸ்து கல்வி குணம் குடும்பம் எழில் வயது கொள்கை—இன்னவற்றின் பொருத்த மிக்கிருக்கவேண்டும். இன்றேல், அவ்விருவர்க்கும் சமாதானமும் சந்தோஷமு மற்று உடனுக்குடன் சண்டை சச்சரவுகளும் வெறுப்பு முண்டாகிக் குடும்பம் சீர்குன்றிச் சிதைந்துபோகும். ஆண் பெண்ணிருவரின் குணகுணங்களை நன்று யாராய்ந்து அவற்றுள் ஒற்றுமை யுண்டாயின்றானே விவாஹஞ் செய்து முடிப்பது உசிதமாகும்.—

"இருவரும் எக்காரியங்களிலு மேகோபித்து மனச்சாக்ஷிக்கு விரோத மில்லாமல் அமரிக்கையொடு வாழவேண்டும். குடும்பத்திற் சமாதான மிருந்தாற்றான் சுகத்தில் இன்பமும் துக்கத்தில் ஆறுதலும் காணலாம். தம்பதிகள் ஒருவர்க்கொருவர் ஈடுபட்டுச் சம்சாரத்திற் சம்பவிக்கும் துன்பங்களை யறிவினாற் பொறுத்தும் போக்கியும் சந்தோஷங்களைப் பெருக்கியும் அருந்திட்டும் மனைவாழ்க்கை நடத்தவேண்டும். அங்ஙன மின்றிக் கொண்டானோ டெதிர்மாறு பேசிக் குடும்பங்குலைத்தல் பெண்ணிற்குக் கற்புநீத்தபாவத்தைச் சுமைகட்டும்.—

"நந்தவனத்துச் சுகந்த புஷ்பங்களையும் இன்சுவைப் பழங்களையும் அளிக்கின்ற விருக்ஷங்களின் மேல் நாம் எவ்வளவு பிரியங் காட்டுகின்றோமோ அதனினும் பதின்மடங்கதிகமாக வில்லறத்திற் பிரியங்கொண்டு புண்ணிய காரியங்களிற் றலைகொடுத்து நல்லொழுகத்தே நின்று கற்புநிலை தவறாமல் பந்துமித்திராவிருந்துக்க ளோம்பிக் கணவனைக் களிப்பிக்கும் ஸ்த்ரீயாவாள் யாவரிடத்திலும் கீர்த்தி விசுவாஸ மரியாதைகளைத் திண்ணமாய்ப் பெறுவள்.—

"குடும்ப ஸ்த்ரீக்குப் பதிபக்தியும் தெய்வ நிச்சயமும் இன்றியமையாதன வாகும். இவை யுள்ளக்கால் மற்றை நற்குணங்கள் யாவும் இயல்பாகத் தாமாகவே வந்தடையும். கற்புநிலை நீத்த கமலிநிகர்

ரூபவதியும் நராலும் பிறராலும் தூற்றப்படுவள்: கற்பின் மிக்க கருங்குரங்கனைய சுந்தரியும் மூவராலும் தேவராலும் போற்றப்படுவள்.—புருஷனும் இல்லற நெறிகளை யொழுக்கந் தவறாமல் நடத்தித் தன் பத்தினியைத் தன துயிருக்குயிராகவும் சரீரத்திற் பாதியேயாகவும் பாவித்து என்றும் அவளுக் குண்டாகு மின்பதுன்பங்களைத் தனதெனவே கொண்டு மிகுப்பரிவுட னுதரித்துவரவேண்டும்.—

“இல்லறதருமமாவ திங்ஙன மிருக்க, சூடாமணீ! நீ மணம்புரிய வெண்ணியிருக்கும் ராஜப்பன் உனக் கெவ்விதத்தாலும் தக்கவ னல்லன்! உனது புண்ணியப் பெருக்கினால் அவனது துர்க்குணங்கள் யாவும் எனக்குக் கரதலாமலக மாயின. நீ யச்சண்டாளனை யினிக் கனவிலும் நினைக்காதே. உனக்கேற்ற உத்தம புருஷன் அகப்படாமற் போகான். எப்பொருட்குஞ்சூத்ரதாரியாமிறைவனைப் போற்றிப் பணிந்திட்டிரு: அவர் அருள் சுரந் தநுக்கிரகிப்பர். கடவுளை நம்பினோர் கைவிடப்படாரெனு முண்மையை மறந்திடாதே. கோபம் பகை பொய் மோசம் புறங்கூற்று களவு முதலிய துர்க்குணங்களை மேற்கொண்டார் இக்காசினியில் விருத்தியடைவது அரிதாகும்: எற்றைக்கும் தருமமே தலைகாக்கும். ஆகையால், குழந்தாய் சூடாமணி! நீ எள்ளளவும் சத்திய நெறியினின்றும் தவறாமல் உனது தந்தை முதலிய பெரி

யோர்க்குக் கீழ்ப்படிந்து நடந்து பெருவாழ்வு பெறுவா யென்று நம்புகின்றேன்.—

"நமக்கு நேரும் நன்மைதீமைகள் யாவும் நாம் பிறக்கும்போதே கடவுளால் நிச்சயிக்கப்பட்டனவாதலின், எல்லா விஷயங்களிலும் நாம் கடவுளின் திருவடிகளை நம்பி அவர் திருவருளையே யெதிர்பார்த்தோமாகில் நம்மிடத்து மலைபோல் யருந் தீங்குகள் யாவும் பனிபோல் நீங்கிடும்."—

இத்தகை நீதிகள் பலவற்றைத் தருமராஜையர் சொல்லி முடிக்கவே, சூடாமணி அவரது புத்திமதிகளுக்காகப் பல வந்தன மளித்து இனி ராஜப்பனைக் குறித்துத் தான் கனவிலும் நினைப்பதில்லையென்று உறுதிமொழி பகர்ந்தாள்: தன்னுள், புத்தியீனத்தாற் சுந்தரத்தைத் திரஸ்கரித்ததற்காக அதிக விசனங் கொண்டாள்: தருமராஜையரைத் தன் குலதெய்வமாகக் கருதிப் போற்றிப் பாதங்களிற் பணிந்தாள்.

தருமராஜையர் சூடாமணியை வாரியெடுத்துத் தம்மடிமேலிருத்தி யுச்சிமோந்து, "கண்மணி! சூடா! நீ நற்குணத்த நங்கை. உனக்கு யாதொரு தீங்கும் நேரிடாது: கடவுள் நின் ஸர்வாபீஷ்டமு மளித்துக் காப்பாராக!" என்று வாழ்த்தினர். ராஜப்பனது வரலாற்றைச் சமயம் பார்த்து ஜயராமையருக்கும் பாகீரதியம்மைக்கும் தருமராஜையர் தெரிவிப்பதாகவும், அப்போது சூடாமணி சுந்தரத்தை நிக்ரஹித்த விஷ

யத்தைமட்டும் அவர் மறைத்துவிடுவதாகவும் சொல்லக் கேட்டுச் சூடாமணி அவரது பெருந்தன்மைக்கு மிகச் சந்தோஷித்துப் பலவாருகப் புகழ்ந்தாள்.—

ஒரு வாரம் சென்றது. சூடாமணியும் தருமராஜையரும் ஒரு நாளந்திப்போழ்தில் ஆற்றோரமாகப் போகுகையில் ஓரடர்ந்த மாந்தோப்பின் மத்தியிற் சிலர் கும்பற்கூடியிருக்கக் கண்டு இருவரும் அவ்விடஞ் சென்றனர். அங்குச் சில குடுகுடுக்கைக்காரர் கூட்டங்கூடித் தம்மிடம் வந்த ஜனங்களின் அங்கையைப் பரீக்ஷித்துச் சாமுத்திரிக மறிந்து அவ்வவர்க் கேற்பட்ட பலன்களைச் சொல்லிவந்தனர். அதனல் அவ்வழியே போய்க்கொண்டிருந்த ஜனங்கள் யாவரும் வெகு ஆவலுடன் தமது கைகளையவர்களிடங் காட்டித் தத்தம் ஜீவிதகாலபரியந்தம் உண்டாகக் கூடிய லாப நஷ்ட விவரங்களை முன்னதாயறிந்துகொள்ள விரும்பிக் கூட்டங்கூட்டமாய் வந்துகொண்டிருந்தனர். சூடாமணி தானெவர்க்கு வாழ்க்கைப்பட் டின்புறுவளோவென்ப தறிந்துகொள்ள வெகு ஆவல் கொண்டவளாய்த் தருமராஜைய ரநுமதியின்பேரில் அக்குடுகுடுப்பாண்டிகளுள் வயதின் மூத்த வொருவனிடம் தனது இடது கையை நீட்டினுள். ஸாமுத்ரிகன் சூடாமணியின் உள்ளங்கை ரேகைகளை யெண்ணிப் பார்த்துப் பலாபலங்களையெடுத்துச் சொன்னுன்:—

மாதுகேள்! உனது செங்கை வரைகளிற் குதிரையானை
கோதிலாத் துவஜம் சங்குத் தாமரை குடை கிரீடம்
பேதமில்லா திருக்கின்றன மதிபெருகுஞ் சூரியன்
மாதிரி ரேகையுண்டு மாண்பொடு மரசியாவாய்
செப்பிய தெய்வ பக்தி தேச பூஜ்யதை யுண்டாகும்
ஒப்பிலா மச்சரேகை யுண்டதாற் றரும தானம்
தப்பிற் புத்திரசம்பத்துஞ் சார்ந்திடும் உனது நெஞ்சத்
திப்பொழு திருப்போன் வாழ்க்கைக் கிசைவுறுங் கண- [வனாக
உன்னுட னெடுநாளாக வுவப்பொடும் பழகிவந்தோன்
இன்னுயிர்க் கணவனாவான் இப்பொழுதவ னிவ்வூர் விட்
டன்னிய வூர் போயுள்ளான் அவனுன்னை விவாகஞ்- [செய்யப்
பன்னெடு நாள் நீ பேறு பதினாறும் பெற்று வாழ்வாய்!

இவ்வாறாகக் குடுகுடுக்கிழவன் சொல்லி முடித்ததும், சூடாமணியின் மனத்தில் அநேக வெண்ணங்கள் தோன்றிக் குழப்பமடைந்து கடைசியில் அவன் சொல்லியவற்றில் நம்பிக்கையின்மை யுண்டாகி அவளக்கிழவனை யேசிப் பேச வாரம்பித்தாள். தருமராஜையர் நேரமாயிற்றென்று குறி சொல்லியவனுக்கு ஐந்து ரூபாய் இனும் கொடுத்துச் சூடாமணியை அவ்விடம்விட் டழைத்துச் சென்றார். செல்லும் வழியிற் சூடாமணி சிறிது தர்க்கித்துப் பேசுகையில், சாமுத்திரிகமூலென்ப தொன் றுண்டென்றும் அஃது

அறிந்து கிழவன் சொல்லியபடியே நடத்தலும் கூடுமென்றும் தருமராஜையர் எடுத்துச்சொல்ல, சூடாமணி மனவெழுச்சிக்கொண்டவளாய் இல்லஞ் சேர்ந்தனள்.

11. க்ரஹப்ரவேசம்

ராஜப்பன் சென்ற பின்னர் பிரதி தினம் தருமராஜையருக்குச் சென்னையில் வக்கீல் ராமஸ்வாமையரிடமிருந்து அநேக கடிதங்கள் தபால் மூலமாக வந்துகொண்டிருந்தன. தருமராஜையரும் பிரதி தினம் அக்கடிதங்களுக்குப் பதில் எழுதி வந்தனர். வழிப்போக்கராய்த் திக்கற்றவராகத் தம்மிடம் சேர்ந்த கிழவருக்குச் சமீப காலத்திலேற்பட்ட கடிதப் போக்குவரவுகளைக் காண ஜயராமையர் சூடாமணி முதலிய மந்திரத்தவர்களுக்கு அதிக ஆச்சரியமாகவிருந்தது.—

சொல்லிப்போனபடி ராஜப்பன் ஒரு வாரத்திற் பண்ணைக்குத் திரும்பி வாராததுபற்றி ஜயராமையர் விசனித்து அவனுக்குக் கடித மெழுத உத்தேசித்தார். தருமராஜையர் அவருக்கு ராஜப்பனுடைய நடத்தை யெல்லாம் விவரமாக வெடுத்துச் சொல்லினர். அது கேட்டு ஜயராமையர் தம் மருமகனது

கெட்ட நடத்தையைக் குறித்து அதிக விசனங் கொண்டார்: அவனது கூட்டுறவு வேண்டா மென்று அவனுக்குக் கடித மெழுதுவதை நிறுத்தி விட்டார்: தருமராஜையர் தம் குடும்ப விஷயத்தில் மிகவும் ச்ரத்தை யெடுத்துக்கொண்டிருப்பதற்காக அவருக்கு அநேக வந்தன மளித்தார்.

சில நாள் கழிந்தன.—ஜயராமையர் ஒரு நாள் தருமராஜையரைக் கண்டு, "ஐயா! தாங்கள் சில நாளுக்குமுன் அண்மைத்தாய மாம்பாக்கம் ஜமீனுக்குப் போய் ராமமந்திரத்திலுள்ள சித்திரப்படங்களைப் பார்த்துவந்தீர்க ளல்லவா? அந்த ஜமீன் இருபது லக்ஷம் ரூபாய்க்கு விற்பனையாய்விட்டதாகக் கேள்விப்படுகின்றேன். அஃது நமது ஜாதியின ரொருவரால் வாங்கப்பட்டதாம். ஆனால் அவர் இன்னாரென்னுஞ் சங்கதிமட்டிலும் தெரியவில்லை. அந்த ஜமீனின் சொந்தக்காரரும் அதன்மேற் கடன் கொடுத்தவரும்-இருவரும் சென்னையிற்றானே யிருப்பதால் க்ரய சாசன முதலானவை ஆங்கே நடந்துவிட்டதாகக் கேள்வி. மாம்பாக்கம் ஜமீன் மிக்க வளமானது: நீர் வளமும் நிலவளமும் நன்றாகப் பெற்றுச் செழிப்புற்ற சோலைகளும் கந்த மிகு நந்தவனங்களும் நிரம்பி யுள்ளது. அதன் குடிகளிற் பலர் மிகவும் தனவான்களும் சத்தியவான்களும் கல்விமான்களுமாவர். ஜமீன் தார் வசிக்கும் ராமமந்திர மென்னும் அரமனை வெகு

அத்புதமான சிற்பித்திறங்காட்டுங்கட்டடம். அதைச் சுற்றிலும் பல அருமைப் பழவர்க்கங்களை யேராளமாகக் கொடுக்கும் விருக்ஷ ஜாதிகள் நிரம்பிய வளமிகு சோலைகளும் ப்ருந்தாவனங்களு மிருக்கின்றன. அரமனைக் குள்ளென்றாலோ, சித்திரவிசித்திரமான படங்களும், விலையுயர்ந்த தந்த சாமான்களும், சிறந்த சிற்பி சாஸ்திரிகளாற் செய்யப்பட்ட அற்புத பொம்மைகளும், கற்றோர் பலரு மெச்சத்தக்க அரிய பெரிய புத்தகங்களடங்கிய புத்தகசாலையும், விலை மிகுந்த விதம் விதமான பாத்திரங்கள் நிறைந்த பண்டசாலையும் உண்டு. அன்றியும், ஜமீன்தாருடைய சொந்த வுபயோகத்திற் கென்று புஷ்பகவிமானம்போன்ற நவீன மாதிரி வண்டிகளும், வாயுவோ டெதிர்த்து வேகமாய்ச் செல்லத்தக்க அழகிற் சிறந்த நீலவேணிக்குதிரைகளும், பசுபதியின் விடையோ வெனத்தகும் காளைமாடுகளும், காமதேனுவெனும் தெய்வப்பசுவை யொத்து க்ஷீராம்ருதங் கறக்கும் பசுக்கோட்டிகளும் இருப்பதைக் காண்போர் மிகக் களிப்புறுகிற்பர். இவைகளைப் பரிபாலநஞ்செய்துவரப் பல வேலையாட்களுமங் கமைந் துளர். இவ்வளவு லக்ஷ்மீகடாக்ஷம் பெற்ற ராமமந்திரத்தை விலைக்குவாங்கிய பிரபு யாவரோ அவரை மிகவும் பாக்யசாலி யென்பதற் கையமின்று. அவர் கூடிய சீக்கிரத்தில் ராமமந்திரத்தில் வந்து வசிக்கப்போகின்றாராம்" என்றனர். அதைக்

கேட்டுத் தருமராஜையரும் சூடாமணியும் மிக ஆச்சரிய மடைந்து அந்த ஜமீன்தாரைப் பார்க்க ஆவ லுற்றவராயினர்.—

ஒரு வாரத்திலெல்லாம் தருமராஜையர் சூடாமணியிடம் தாம் சீக்கிரம் பண்ணையை விட்டுப் போக வேண்டியிருப்பதாகத் தெரிவித்தார். சூடாமணி மிகவும் மனம் வருந்தி தருமராஜையர் தம் வாணுள் முழுமையும் தம்மிடத்திற்ருனே யிருக்கவேண்டு மென்று வேண்டிக்கொண்டனள். அவர் அவளது விசுவாசத்திற்கு மெச்சினர். தருமராஜையர் தம்மை விட்டுப் போக வெண்ணியிருப்பதைத் தன் தந்தைக்குத் தெரிவித்தாள் சூடாமணி. அவரும் தமக்குத் தருமராஜையரிடம் சொல்லற்கரிய அன்பும் மரியாதையும் ஏற்பட்டிருப்பதனுல் அவரது பிரிவாற் றல் முடியாதென்று அவரைப் பண்ணையை விட்டுப் போகக் கூடாதென்று தடுத்துத் தம்மிடமே வசித் திருக்கும்படி வேண்டிக்கொண்டனர்.

மூன்றுநாட் காலைப் பத்து மணிக்கு ராமமந்திரத் திலிருந் தோர் கடிதம் வந்தது. அஃது ஜமீன்தாரின் ஸர்வாதிகாரி யனுப்பியது. மாம்பாக்கம் ஜமீன் விற் கப்பட்டதென்றும், அதனை விலைக்கு வாங்கின ஜமீன் தாரர் மறுநாள் இரண்டுமணிக்குத் தமது குடும்ப சமேதராய் அரண்மனைக்குத் பிரவேசஞ்செய்ய நிச்ச யித்திருக்கின்ருரென்றும், அவரது வேண்டுகோளின்

படி ஜயராசமையர் தமது புதல்வி சுற்றத்தார் விருந்தினர் யாவரோடும் அச்சமயம் விஜயஞ்செய்து விருந்தருந்தித் தம்மைக் கௌரவப்படுத்தவேண்டு மென்றும் அங்கிருபத்திற் சர்வாதிகாரி வெகு வணக்கமாயெழுதியிருந்தார். யாவரும் சந்தோஷித்துக் கிரகப்பிரவேசத்திற்குப் போக நிச்சயித்தனர். மிக்க வற்புறுத்தலினால் தருமராஜையரும் ஜயராமையரைத் தொடர்ந்துசெல்ல வொப்புக்கொண்டார்.

மறுநாள் பன்னிரண்டு மணிக்கு ஜயராமையரும் சூடாமணியும் நல்ல வுடைகளை யுடுத்து விலையுயர்ந்த வாபரணங்களைத் தரித்துக்கொண்டு ராமமந்திரத்திற்குப் போகப் பயணமாயினர். பண்ணையினின்றும் இரட்டைக்குதிரைவண்டி தயாராய் வந்து நின்றது. தருமராஜையரும் தமது தளர்வுற்று மெலிந்த தேக முழுவதும் வெண்ணீற்றுப்பூச்சுடன் முதுமையினுல் மடிப்புப் படர்ந்த நெற்றியிற் பிறைச்சந்திரன் வடிவமைந்த சந்தனப்பொட் டிட்டும், முப்புரிநூல்விளங்கு மார்பில் ருத்ராக்ஷ ஸ்படிக மாலைகள் தொங்கவிட்டும், ஒரு கரத்திற் கிருஷ்ணாஜினப்பையும் மற்றைக் கரத்தில் ஊன்றுதடியும் பிடித்தும், அழுக்கிறைற் பழும் படைந்து ஆங்காங்கே தேகம் வெளிப்படக் கிழிந்த வஸ்திரம் தரித்தும், நரைத்த தாடியுடனும் பொக்கு வாயுடனும் இருமல் இடையிடையேதோன்றி வாதிக்கச் சிவசிவவென்று ஜபித்துக்கொண்டு தள்ளாடித்

தள்ளாடிக் குசேலமுனிவரைப் பழித்த வோர் யாசகப் பிராமணராய்க் கிரகப்பிரவேசத்திற்குப் புறப்பட்டார். அது கண்டு அவ்வளவு விகார வுடையுடன் தருமராஜையரை யவ்விடமழைத்துச் செல்ல ஜயராமையர் அதிருப்தியுற்றாராயினும், அதை வெளிக்குக் காட்டாமலே மௌனமாக நின்றார். தருமராஜையர் ஒன்றுமறியாதவர்போற் சிறுநகையுடன் எல்லாருக்கு முன்னதாகவே வண்டியிலேறிக்கொண்டார். உடனே ஜயராமையர் அவர் பின்னே ஏறினர். சூடாமணியும் கிழவாது தாடியைப் பிடித்திழுத்து வேடிக்கையான வார்த்தைகளைப் பேசிக்கொண்டே வண்டியிலேறினள்.—

சமார் பாதி வழி சென்றதும், சூரிய வெப்ப மிகுதியினால் வழிக்களைப்புத் தீர்ப்பான்வேண்டி அங்கோரடர்ந்த தோப்பின் சமீபமாக வண்டியை நிறுத்திக் களைப்பாறினர். குளிர்ந்த காற்று வீசிற்று. அச்சமயம் தருமராஜையர் சூடாமணியைப் பார்த்துச் செல்வச்சிரிப்புடன், "குழந்தாய்! அந்த ராமமந்திரத்திற்கும் அதைச் சேர்ந்த ஜமீனுக்கும் நீதான் சொந்தக்காரியாவாயென் றெனக்குத் தோற்றுகின்றது!" என, சூடாமணி முகஞ்சுளித்து, "தாதா! என்ன! நீர் என்னைப் பரிகாசஞ் செய்கின்றீர்போற் றோற்றுகின்றதே? முகமறியாதவர் சொத்துக்கு நானெப்படி யதிகாரியாவேன்? எனக்கென்ன பேரா

சைப்பேய் பிடித்திருக்கின்றதா?" என்று கேட்டாள். தருமராஜையர், "குழந்தாய்! நீ பேராசைக்காரியல்ல வென்றெனக்கு நன்றாகத் தெரியும்.—அந்த ராமமந்திரத்தை யாண்டனுபவிக்கத்தக்க வேற்றமுனக்குத் தானுண்டென்று நினைக்கின்றேன். நான் அப்படிச் சொல்வதற்கு நினது உத்தமகுணமும் உதாரசிந்தையும் மலர்ப்பொன்னினழகுமேயாம். இத்தகைய ஐசுவரியத்துக் குன்னை யுரியவளாக்கவோ எல்லாமறிந்த ஜகதீச்வரன் உனக்குச் சகாயஞ்செய்யப் பின்னிடுவான்? நீ சீக்கிரமே செல்வச்சீமாட்டி யாவாய்! ஏழை பேச்சு அம்பலத்துக்கேறுதோ பார்ப்போம்!" என்று சொல்லிக் கக்கக்கவெனச் சிரித்தார். தருமராஜையர் அப்படிச் சந்தோஷமாய்ச் சிரித்து வேடிக்கையாகப் பேசினதை யிதுவரையிலும் பார்த்திராத ஐயுராமையரும் சூடாமணியும் ஆச்சரியமுற்று அவருடனே தாமும் சிரிக்கலாயினர்.

வேடிக்கை சற்றடங்கியதும், சூடாமணி, "தாதா! தாங்கள் சொல்வது முடவன் கொம்புதேனுக்காசைப்பட்டாற்போ லிருக்கின்றது.—ராமமந்திரம் வேறொருவரால் வாங்கப்பட்டு அவர் வேண்டுகோளின்படி நாம் விருந்திற்குச் செல்லுகின்றோமே. மேலும், என் தந்தை எப்பொழுதேனு மந்த ஜமீனை வாங்குமவ்வளவு பணக்காரருமல்லர். அஃது எங்களுக்கசாத்தியமான காரியம்.—உமக்கேதோ இன்று

என்றுமில்லாத சந்தோஷமுண்டாயிருக்கிறதுபோற் றோற்றுகின்றது. நீர் பொழுதுபோக்குக்காக வென்னி டம் வேடிக்கை செய்கின்றீர்: இன்றேல், உமக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதென்றே எண்ணவேண்டி யிருக்கின்றது. நீர் இதுவரை யிம்மாதிரி வீண்வார்த் தைகள் பேசிக் காலத்தைப் போக்கினதில்லை. இன்றே தோ குசால்!" என்று சொல்லி யவரது தாடியை யிழுத்து உருவிவிட்டாள். தருமராஜையர், "கண் மணீ! எனக்குப் பைத்தியமா? சரி, இருக்கட்டும்!— நீதான் அந்த ஜமீனுக்குச் சொந்தக்காரி! உனக்குத் தெய்வகடாக்ஷ மிருக்கின்றது நானறிவேன். அன் றங்குப் பார்த்த சாமுத்திரக பரீக்ஷையின் உண்மை இன்று விளங்கப்போகின்றது. ஏழைப் பிராமண னாகிய நான் சொல்வதும் நடைபெறப்போகின்றது பார்!" என்றார்.—

இவை யாவும் மந்தஹாஸத்துடன் கேட்டிருந்த ஜயராமையர் தம் மகள் சூடாமணியின் முகத்தில் அன்றேதோ விசேஷமான தெளிவும் மங்களகரமான மலர்ச்சியு மிருக்கக் கண்டு கிழவரது பித்துப்பிதற் றலும் மெய்க்குமோவென்று ஆச்சரியப்பட்டார்: ஆனால் அத்தகைய முடிவிற்குக் கனவிலும் காரண மில்லை யெனத் தேர்ந்து அவரைக் கண்டு தாமும் வேடிக்கையாகச் சிரிக்கத் தொடங்கினர்.—

சூடாமணி, "தாதா! என்னைப் பைத்தியக்காரி

யாக நினைக்கவேண்டாம். என் நிலைமை யெனக்குத் தெரியாததன்று. இப்போ துமது நிலைமை யுமக்குத் தெரியவில்லை. நான் உமது வார்த்தைகளுக்கு மயங்க மாட்டேன். இருக்கட்டும்.—நீர்தான் அந்த ஜமீனின் சொந்தக்கார ரென்று எதனாற் சொல்லக் கூடாது?" என்று சிரிப்புடன் கேட்டாள். கருமராஜையரும் சிரித்துக்கொண்டே, "குழந்தாய்! என்னைப் பார்த்தாலே பைத்தியக்கார னென்பர் யாவரும். நீயும் அப்படியே சொல்லிவிட்டாய். என்னைப் பார், என் னுடையைப் பார். நான் இந்த விருந்திற்கு உங்களுடன்கூட வரத் தக்கவனா? என்னைக் கூடவழைத்து வர உங்களுக்குச் சற்றுமுன் அதிருப்தியா யிருந்ததன்றோ? அங்கு நடக்கும் தடுப்போடலைப் பார்க்க வாசை கொண் டன்றோ நானே யாவர்க்கு முன்னே வண்டி யேறினேன்? நான் தரித்திரனென்பது என்னைப் பார்த்தமாத்திரத்தானே யாவர்க்கும் துணிபுற விளங்குமே! ஆனபோதிலும், குழந்தாய்! நீசொல்லுகிறபடியே நானே ஜமீன்தாரனென நினைத்துக்கொள்கிறேன். நல்லது,—அந்த ராமமந்திரம் அதனா லிப்பொழுது என்சுவாதீனமாய்விட்டதன்றோ?—அதைக் கொடுத்துவிட்டே னிப்போ துனக்கு! நீ ஜமீன்தாரிணி யாய்விட்டாய்!" என்று ஜலத்தினா லவள் கையில் தாரைவார்த்து, "குழந்தாய்! இப்போ தென்ன சொல்கின்றனை?" என்று அவள் முகத்தைக் கவனித்தார்.—சூடாமணி, "தாதா! என்ன

வேடிக்கை! என்ன வேடிக்கை!! நீர் ஜமீன்தாராய் விட்டீர்! ஜமீனையும் தத்தஞ்செய்துவிட்டீர்! நானும் ஜமீன்தாரினியாய்விட்டேன்!!" என்று சொல்லிச் சிரித்துக்கொண்டே, "வாரும், வாரும்! காலதாமத மாகின்றது. உமது ஜமீன் கிரகப்பிரவேசத்திற்குப் போகவேண்டும்!!" என்றெழுந்தாள். இளைப்பாற வங்குத் தங்கி யரைமணியாயிற்று. யாவரும் வேடிக்கையாகப் பேசிக்கொண்டே மறுபடியும் வண்டியி லேறி ராமமந்திரம் போய்ச் சேர்ந்தனர்.—

குதிரைவண்டி அம்மந்திரத்து வாசலில் நின்ற வுடனே அரமனைச்சர்வாதிகாரி விரைவுட னெதிர் கொண்டுவந்து நல்வரவுகூறி இவர்களை யாசனங்களி லமர்த்திச் சூடாமணியை யோர் தனிமையான வறைக் கழைத்துச் சென்று உபசரிக்கக் கட்டளை யிட்டார்.—பகல் மணி $1\frac{1}{2}$ ஆயிற்று. மந்திரத்தில் இவர்களைத் தவிர மற்றெவரையுங் கண்டிலர்.—சூடா மணியும் ஜயராமையரும் சற்று அச்சமடைந்தார்கள். தருமராஜையரைக் காணவே மந்திரத்து வேலைக்கார ரும் சர்வாதிகாரியும் அருவைப்பட்டனர்: ஆயினு மவர் ஜயராமையருடன் வந்தமையால் அவருக்கும் ஆசனங் கொடுத்து மரியாதை செய்தனர்: எனினும், அவரது ரூபத்தையும் உடையையும் குறித்து எல் லார் காதிலும் படும்படியாக வேளனஞ் செய்ய வாரம்பித்தனர்.

ஜயராமையருக்கும் சூடாமணிக்கும் சற்று மனத் தாங்க லுண்டாயிற்று: ஒருவரையொருவர் பார்த் துக்கொண்டனர். தருமராஜையரோ யாவையும் நன்ருகக் கவனித்தாராயினும் ஒன்றுங் கேளாதவரே போ லிருந்துவிட்டார். சர்வாதிகாரி புதிய ஜமீன் தாரர் தம் குடும்பத்துடன் சென்னையிலிருந்து வரப் போகிறதாகவும், அவரை யொவ்வொரு நிமிஷமும் மந்திரத்தி லெதிர்பார்த்திருப்பதாகவும், அவரது வக் கீல் ராமஸ்வாமிஐயர் முன்னதாகவே வந்து சில புத்திரங்களை ரஹஸ்யமாகப் பரிசோதித்துக்கொண் டிருப்பதாகவும் அப்பரிசோதனை முடிந்ததும் ஜய ராமையரைக் காண்பா ரெனவும் தெரிவித்தார். ஜய ராமையர் சற்றுச் சமாதான மடைந்தார்.

மணியோ இரண்டு ஆய்விட்டது. சூடாமணிக்கு அவ்விடத்திற் றனிமையா யிருக்க விருப்பமின்ருகப், பண்ணைக்குத் திரும்பிப் போகலாமென்று தன் தந் தையை வற்புறுத்தினுள். அச்சமயத்தில் நான்கு குதிரைவண்டிகள் வேகமாக வோடிவந்து நின்றன. மந்திரத்தின் வேலையாட்கள் ஓடிச்சென்று வண்டியி லிருந்தவர்களை யிறக்கிச் சாமான்களுடன் மந்திரத் திற்குள் ளழைத்துவந்தனர். வந்தவர்களைக் கண் டதும் ஜயராமையர் அதிக மகிழ்ச்சியுற்றுக், "குழந் தாய்! என் மைத்துனன்மார் பலராமையரும் சுப்பை யரும் வருகிருர்கள்" என்று சொல்லிக்கொண் டெழு

ரே சென்று அவர்களுடன் கைகுலுக்கினர். ஐயராமையரைக் கண்டதற்காக அவ்விருவரும் அகமகிழ்ந்தனர். வண்டிகளிலிருந்து நான்கு சிறுமிகளும் இறங்கினார்கள். அவர்களைத் தமது தமக்கைகளின் குழந்தைகளென்று தெரிந்துகொண்டு ஐயராமையர் அவர்களிடம் சென்றுபசரித்து யாவருமாகச் சூடாமணியிருக்குமிடம் சேர்ந்தனர். இதுவரையிலும் சூடாமணி யவர்களைக் கண்டதே யில்லை. ஒருவரொருவர்க்குள்ள சுற்றத்தை யறிந்து அனைவரும் பெருமகிழ்ச்சி கொண்டனர்.

பலராமையரின் புதல்விகள் முதலிற் சற்றுக் கர்வத்தைக் காட்டினர்: ஆயினும் வரவரக் குதூஹலமாய்ப் பேசத் தொடங்கினர்.—ஐயராமையர் தருமராஜையரைப் பலராமையருக்கும் சுப்பையருக்கும் காட்டிச் சிநேகம்பண்ணுவித்தார்: ஆனால் அவ்விருவரும் தருமராஜையரைக் கண்டதும் அருவையை மிகக்கொண்டு தூரத்தே நின்று பேசாமற் றலையசைத்தனர். அது போதாமல், பலராமையர் கோபத்துடன் ஐயராமையரைப் பார்த்து, "அந்தப் பிச்சைக்காரப்பையனுக்கு யாசகம் வாங்கிக் கொடுக்க இது தானா சமயம்?—உமது நாட்டுப்புறத்து நாகரிகமற்ற புத்தியை யின்னும் விட்டீரில்லையே! உமக்குப் படிப்பு எவ்வளவிருந்தபோதிலும் பயனென்னவாயிற்று? நாகரீக நடவடிக்கைகளுக்காக எம்மைப் போல்வாரிடமன்றோ பழகவேண்டும்?" என்றார்.

சுப்பையர், “அண்ணா! நாட்டுப்புறத்தாசாமியின் மேற் கோபிக்க லாகுமா? அவர் நம்போன்றவர் களின் ஸஹவாஸம் விட்டுச் சுமார் இருபது வருடங்க ளாயினவே!” என்று சமாதானம் சொன்னார். ஜயரா மையர் அவர்களின் மூடத்தனத்திற்கும் கர்வத்திற் கும் விசனித்து அலக்ஷியமா யவர்களை விட்டுத் திரும்பி வந்துவிட்டார்.

யாவும் கவனித்துவந்த தருமராஜையர் ஒன்றும் பேசாமல் திடீரெனப் பெண்குழந்தைகள் சேர்ந்தி ருந்த அறைக்குட் சென்றார். அங்குச் சூடாமணி தன் அத்தைமக்கள் நால்வர்க்கும் தருமராஜையரைக் காட்டி அவர் தம் குடும்பத்திற்கு மிகவும் வேண்டியவ ரென்று சொன்னாள். பலராமையரின் மூத்த பெண் ணான கமலா அவரைக் கண்டு அலக்ஷியமாய், “ஓய் பிக்ஷாடகப் பிராமணா! நீர் வெளியே போம்: இங்கே எங்கள் விலையுயர்ந்த நகைகளும் சாமான்களு மிருக் கின்றன!” என்றாள்: இளையபெண்ணான பாலா முகஞ் சுளித்து உறுமினாள். தருமராஜையர் அவ்விடத்தை விட்டு வெளிப் போந்தார். அது கண்டு சூடாமணி மிக மனநொந்து பெரியவர் பின்னே தானும் வெளி யே வர, சுப்பையருடைய குமாரத்திகளான வன ஜாக்ஷி லக்ஷ்மிஎன்னுமிருவரு மோடி வந்து தருமரா ஜையரது பாதங்களில் விழுந்து அவரிடத்துக் கமலா வும் பாலாவு மியற்றிய பிழைக்காக மன்னிப்புக் கேட்

டுக்கொண்டனர். சூடாமணி தன் துக்கத்தை யடக்க முடியாதவளா யவ்விருவரையுங்கட்டிக்கொண்டு விம்மி விம்மி யழத் தொடங்கினுள். அவர்கள் சூடாமணியைச் சமாதானப்படுத்தினுர்கள். இவை யாவையும் பார்த்துவிட்டுத் தருமராஜையர் தக்ஷணமே யவ்விடம் விட்டுப் புத்தகசாலைக்குச் சென்றுர்.—

மணியோ மூன் றடித்தது. புதிய ஜமீன்தாரரின் வண்டி வரக் காணுராய்ப் பலராமையரும் சுப்பையரும் தாமலக்ஷியஞ்செய்யப்பட்டதாக மனத்தாபப்பட்டார்கள். சர்வாதிகாரி யெவ்வளவு சமாதானஞ்சொல்லியும் அவர்கள் கோபம் தணியவில்லை. உள்ளே தஸ்தாவேஜுகளைப் பரிசோதித்துக்கொண்டிருந்த வக்கீல் ராமஸ்வாமி ஐயர் அவர்களிடம் வந்தார். எல்லோரும் சந்தோஷித்து ஒருவரொருவர் யோக க்ஷேமங்களை விசாரித்துவருகையில், ராமஸ்வாமி ஐயர் தமது கைக்கெடியாரத்தை யெடுத்துப் பார்த்து, "ஐயா! மணி நான்கு ஆய்விட்டது. புதிய ஜமீன்தாரரும் வந்து இரண்டுமணி நேரத்திற்குமே லாயிற்று. அவரும் நானுமாகச் சில பத்திரங்களைப் பரிசோதிக்க வேண்டியிருந்தமையால் யாவரையும் நேரில் உபசரிக்கத் தாமதமாய்விட்டது. அவர் தங்களைப் புத்தகசாலைக் கடுத்த சபாமண்டபத்தில் இன்னும் அரைமணி நேரத்திற் கண்டுபேசுவார். இதுவரையிற் காலதாமதமானதற்காக யாவரிடமும் என்மூலமாய் மன்

னிப்புக் கேட்டுக்கொள்கிறார்" என்று சொல்லி, வந்த யாவர்க்கும் வெகு உபசாரத்துடன் சிற்றுண்டி காப்பி டீ முதலியவைகளைக் கொடுத்தார். பின்னர் அனை வரும் சபாமண்டபம் சேர்ந்தனர்.

கோபாலையர்

சபாமண்டபத்தில் யாவரு மமர்ந்தவுடனே தென்னிந்தியாவிற் பிரசித்திபெற்ற சில சங்கீத வித்வான்கள் தகுந்த முஸ்தீதுடன் வந்து கூடினார்கள். வக்கீல் ராமஸ்வாமியையர் அவர் களுக்குச் சந்தனுதிதாம்பூலங்களைக் கொடுத்துச் சங் கீதக் கச்சேரியை யாரம்பிக்கச்செய்தார்.—கச்சேரி துவக்கிச் சுமார் அரைமணி யாயிற்று. கச்சேரியும் வெகு ரம்யமாய் நடந்துகொண்டிருந்தது.

அச்சமயம் தருமராஜையர் வெளுத்த வஸ்திரங் களைத் தரித்து விலையுயர்ந்த பட்டுபீதாம்பர மொன் றை மேலே போர்த்துக்கொண்டு சபாமண்டபம் வந் தார். வக்கீல் ராமஸ்வாமியைய ரெழுந்து மரியாதை செய்து அவர்தாம் மாம்பாக்கம் ஜமீன்தாரரென்று சபைக்குத் தெரிவித்து ரோஜாப்பூ மாலை யொன்றை யவர் கழுத்திற் சாத்தி இரண்டெலுமிச்சம்பழங்களை யவர் கையிற் கொடுத்து மரியாதைசெய்து நின்றார்.

அனைவரும் திடுக்கிட் டெழுந்து பெரு வியப் புற்றனர். ஜயராமையர் புதிய ஜமீன்தாரின் கை

களைப் பிடித்துக் குலுக்கி யானந்தக்கூத்தாடினர். இதற்குள் பலராமையரும் சுப்பையரும் வெட்கி ஜமீன்தாரருடன் சென்றுபேசுவதற் கச்சப்பட்டு நின்றனர்: சற்றுப் பொறுத்துத் தைரியங்கொண்டு வக்கீலிடமிருந்த ஆளுக் கிரண்டெலுமிச்சம்பழங்களைக் கேட்டு வாங்கிக்கொண்டு தருமராஜையரிடம் சென்று தம்மை மன்னிக்கும்படி வெகுவாக மன்றாடி வேண்டி வந்தனமளித்துக் குனிந்ததலையுடனே தம தாசனங்களுக்குத் திரும்பினர். பலராமையரின் புதல்விகள் அவரைக் காணுதற்கு மிகுந்த வெட்கத்துடன் நிற்க, சுப்பையரின் புதல்விகள் சரேலெனச் சென்று அவர் பாதங்களிற் பணிந்து அவரது ஆசீர்வாதங்களைப் பெற்றுப் போயினர். சூடாமணி ஆனந்தபாஷ்பம் பெருகத் தருமராஜையருக்குச் சமீபமாகச் செல்லவே, அவர் எழுந்து அவளை வாரியெடுத்துத் தமது மடிமேலிருத்தி உச்சிமோந்து அன்புகாட்டி ஆநந்த பரவசராயினர்.

சபாமண்டபத்திற் சற்றுச் சந்தடி யடங்கினவுடனே மறுபடியும் கச்சேரி நடந்தது. புதிய ஜமீன்தார் சங்கீத வித்வான்களுக்குத் தக்க பரிசுக ளளித்து வந்த விருந்தினரனைவர்க்கும் அறுசுவையுண்டிகளூட்டி மகிழ்வித்தார். யாவரும் குதூஹலமாகப் பேசிக்கொண்டு போஜன சந்தன தாம்பூலாதிகளை முடித்துக் களிப்புற்றிருக்கையில், புதிய ஜமீன்தார்

தம்மைக் கௌரவிக்க வந்த யாவரையும் சபை கூட்டித் தா மோர் சோபாவினமே லுட்கார்ந்து, ஜயராமையர் பலராமையர் சுப்பையர் சூடாமணி மற்ற நான்கு பெண்குழந்தைகள் வக்கீல் ராமஸ்வாமையர்—இவர்களை யரு கழைத்துப் பலவாருக உபசாரவார்த்தைகளைச் சொல்லித் தம் பக்கத்தே யுட்காரவைத்துக்கொண்டு யாவரையும் நோக்கிச் சொல்லத் தொடங்கினர்:—

"சபையோர்களே! நீங்கள் முக்கியமாய்த்தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் பல வுள. சற்றுச் சாவதானமாய்க் கேட்கவேண்டும்.—இந்த ஜயராமையருடைய தந்தை ஜானகிராமையருக்குக் கோபாலையர் ஜயராமையர் என் றிரண்டு புதல்வரும், பாகீரதி நீலலோசனி காவேரி கிருஷ்ணவேணி பத்மாக்ஷி என் றைந்து புதல்விகளும் பிறந்தனர். அவர்களில் ஜயராமையர் ஸ்வீகாரமாகக் கொடுக்கப்பட்டார்: பாகீரதி கணவனை யிழந்தவளானுள்: நீலலோசனி காவேரி கிருஷ்ணவேணி ஆகிய மூவரும் தற்காலம் இறந்துபோயினர். நீலலோசனியின் புத்திரன் ராஜப்பன்: காவேரியின் புத்திரிகள் இந்தக் கமலாவும் பாலாவும்: கிருஷ்ணவேணியின் புத்திரிகள் வனஜாக்ஷியும் லக்ஷ்மியும். யாவர்க்கு மூத்தவரானகோபாலையர் தமது தந்தை யிறந்துவிட்ட பின்னர் தங்கைகளுக்கு விவாஹங்கள் செய்துமுடித்துக் கடைசித்தங்கையான பத்மாக்ஷியுடன் ரங்கூன் சென்

ளூர்: சென்றவர் அவ்விடம் பெரிய வர்த்தகஞ் செய்து அதிக லாபமடைந்தார்: ஆனால் அங்கே தம் பத்தினியை யிழந்து துக்கசாகரத்தின் மூழ்கித்தமது இயற்கைத்தைரியம் குன்றினவரானார்: சிலநாளுக்குப் பிறகு சற்றுத் தெளிவுகொண்டு மறுபடியும் வர்த்தகஞ் செய்ய வாரம்பித்தார்: பெரிய வர்த்தகக்கப்பலொன்றை முழுதும் ஒப்பந்தஞ்செய்துகொண்டு பத்மாக்ஷியுடன் ஜப்பான் தேசத்திற்குப் புறப்பட்டார். மார்க்கத்திற் புயற்காற்று அதிகரித்து அதனாற் கப்பல் தத்தளித்துத் தலைகீழாயிற்று!"—என்று சொல்லி நிதானித்தார்.

ஜயராமையர் அதிக ஆவலுடன், "ஐயா! மேலே சொல்லவேண்டும்! சொல்லவேண்டும்!! பிறகு என்னவாயிற்று? எனது மூத்தோன் கதி யாதாய் முடிந்தது? நானே நேரில் ரங்கூனுக்குச் சென்று விசாரித்ததில், அவர் தம் தங்கையுடன் கடலில் மாண்டுபோய்விட்டதாகக் கேள்விப்பட்டேனே! அப்படிக் கின்றி யவர்கள் பிழைத்திருந்து எங்களைக் காணும் பாக்கியத்தைப் பெற்றுளோமோ?—ஈசா! காணாது போனவர்களை யெம்மிடம் கொண்டு சேர்ப்பையோ?" என்று கண்மாரி புனல்மாரி யெனப் பெருகவிட்டுத் தேம்பித்தேம்பி யழத்தொடங்கினார்.

தருமராஜையர், "அவசரப்படவேண்டாம்! கேளுங்கள்.—கப்பல் தத்தளித்துத் தலைகீழாயிற்று. அச்

சமயத்தில், ஜப்பான் தேசத்துப் பொக்கிஷமந்திரி யான தஞ்சாவூர் ஜில்லா நமது ஜாதியைச் 'சேர்ந்த ஸதாசிவையர் ஸர்க்கார் வேலையாகக் கல்கத்தாவுக் குச் சென்றிருந்து ஜப்பானுக்குத் திரும்பி வருகை யில், சமுத்திரத்திற் கட்டுக்கடங்காம லோர் கப்பல் தத்தளிப்பதைக் கண்டு தம் கப்பலுடன் சகாயமாகச் சென்று அதிற் பிராணனிடத்துப் பற்றைத் துறந்து ஸர்வேச்வரனே கதியென்று த்யானியா நின்ற கோ பாலையரையும் ஐந்து பிராயமுள்ள அவரது தங்கை யையும் ஒரு கைப்பெட்டியுடனே தமது ஸர்க்கார் தோணியி லேற்றிக்கொண்டார். அதே தருணத்தில் முன்கப்பல் திடீரென வேலையாட்களுடனும் சாமான் களுடனும் கவிழ்ந்துவிட்டது! வேலையாட்களி லொரு வன்தவரும லெல்லாரும் சமுத்திரத்திற் கிரையாய் விட்டனர். கோபாலையர் மிகுதியும் விசனப்பட்டார். நிகழ்ந்த ஸம்பாஷணையில் ஸதாசிவையர் தன் குலத் தவரே யென்றறிந்தார் கோபாலையர். இப்படியிருக் கத் தலைகீழாகக் கவிழ்ந்த கப்பல் மறுபடியும் நிமிர்ந் தது: கொடிமரம் காணப்பட்டது. கோபாலையர் அதிக ஆவலுடன் ஸதாசிவையரைப் பார்த்து, "நண்பரே! இந்தக் குழந்தை என் தங்கை! இவளையும் இந்தப் பெட்டியையும் தங்களிடம் சற்று வைத்துக்கொள் ளுங்கள். தாங்கள் தயைசெய்து இத்தோணியைச் சேர்ந்த படகுகளிலொன்றை யென் வசப்படுத்துவீ ரேல், யான் அந்த நிர்ப்பாக்கியமான வென் கப்பலை

யொருதரம் பார்த்து வருகின்றேன். தயை செய்வீர்களோ?" என்று கேட்டார்.

சதாசிவையர் அவரை வெகுதூரம் தடுத்தும் அவர் கேட்டாரல்லராக, தமது ஆட்களிலிலவரை யவர்க்குச் சகாயமாகத் தம் படகொன்றிலேற்றி யக் கப்பலைச் சீக்கிரமே பார்த்துத் திரும்புக வென் றனுப்பினர். வர்த்தகக்கப்பலில் நான்கு வேலையாட்கள் குற்றுயிராய் மன்றாடிக்கொண்டிருந்தனர். அவர்களைக் காப்பாற்றற் பொருட்டுக்கோபாலையர் தமக்குச் சகாயமாக வந்த ஐந்து வேலையாட்களுடனும் அக் கப்பலி லேறினர். உடனே தெய்வகடாக்ஷயின்மையி னாலோ வென்னோ புயற்காற் றதிகரித்து வீச அக்கப்பல் மறுபடியுங் கவிழ்ந்திட்டது. சகாயம் வந்த படகும் கவிழ்ந்த கப்பலுக்குக் கீழகப்பட்டுக்கொண்டது. சர்க்கார் கப்பலிலிருந்து சதாசிவையர் இவ்வாகஸ்மிகத்தைப் பார்த்துத் திகிலடைந்து தமது தோணிக்கும் புயற்காற்றாற் பேராபத்து நேர்க்கூடுமென்று தன் கப்பலை வேகமாய் நடத்தி யவ்விடம் விட்டுத் தம்மிடமடைக்கலமாக்கப்பட்ட குழந்தை பத்மாக்ஷியுடன் இறைவ னனுக்கிரகத்தால வழியி லினித் துன்புறாமல் க்ஷேமமாய் ஜப்பான் தேசம் போய்ச் சேர்ந்தார்.—

"சதாசிவையரது கப்பல் புறப்பட்டுச் சென்றதும், கவிழ்ந்த கப்பல் மறுபடியும் நிமிர்ந்து தன்னிலை

யடைந்தது. கோபாலையர் நீங்கலாக மற்றை யாவரும் சமுத்திரத்திற் கிரையாயினர்.—அந்தோ! என் செய்வார்? இங்ஙனம் தனிமையாக நடுக்கடலில் ஸஹாயமின்றி விடப்பட்ட கோபாலையர் மதிமயங்கியவராய் மூர்ச்சையடைந்தார். கப்பலோ கடலில் திசை தப்பிக் காற்றின் வலிமையினால் நாற்புறமும் அடிபட்டுத் தள்ளாடித்திரியாநிற்புழி, மூன்றுநாள் நெட்டால் தேசத்துக்குப் போய்க்கொண்டிருந்த புகைக் கப்பலொன்று நெருங்கி வந்தது. அதன் மாலுமி இவ்வநாதைக்கப்பலில் பிரஜ்ஞை தப்பிக் கிடந்த கோபாலையரிடத் தருள் சுரந்து அவரைத் தன் கப்பலிலேற்றிக்கொண்டு நெட்டாலாஸ்பத்திரியில் விட்டுச் சென்றான். கோபாலையர் ஆஸ்பத்திரியில் தம் ஸ்வாதீனமும் பிரஜ்ஞையும் அற்றுச் சுமார் ஆறுமாதகாலம் விழுந்துகிடந்தார்.—அவனன்றி யோரணுவு மசையாதாக, ஆரறிவார் அவன் செயல்? படிப்படியாகத் தம் மறிவடைகையில் கோபாலையர் உடல் வலிமை முற்றுமொழிந்து உருவறமாறிப் பரகாயப்ரவேசியே போன்றார். அவராஸ்பத்ரியி லிருந்தகாலை யோர் தாசியுமங்குச் சிகிச்சையிலிருந்தாள். அப்போதவளுக் கிவர்மீதோர் கனிகர முண்டாயிற்று. கோபாலையருக் கினிப் பிராணபய மில்லையென்று சொன்னவுடனே யக்கணிகைமாது அவரை யழைத்துச் சென்று சகலவித உபசாரங்களினாலும் அவரது உடம்பைத் தேற்றினாள். அதனால் கோபாலையர் அப்பொழுமக

ளின்மேற் கொண்ட அன்பினுலும் மோஹத்தினுலும் தம் பந்துஜனங்கள் யாவரையு மறந்து ரெட்டாவிலே தானே பெரிய வர்த்தகஞ்செய்யத் தொடங்கி ஏராள மாகத் தமக்குக் கிடைத்துவந்த லாபத்தை முற்றும் அவட்கே யர்ப்பணஞ்செய்துவந்தார்.—

"சதாசிவையர் ஜப்பான் சேர்ந்ததும் கோபாலைய ரைக் குறித்துத் தேடச்செய்தார். கப்ப லுடைந்து அதி லிருந்தவர்களிற் சிலர் பிணங்களாய்ச் சமீப மான துறைகளில் ஒதுக்கப்பட்டதாகச் செய்தி தெரிந்தது: அதனு லவர் கோபாலைய ரிறந்துவிட் டதாகத் தீர்மானித்துப் பத்மாக்ஷியை மிகவும் அன்புடன் வளர்த்துவரலாயினுர். பத்மாக்ஷி அழ கிற் சிறந்து உத்தமகுணங்கள் நிரம்பப் பெற்றவளா யிருந்தமையால், அவளைத் தம் புதல்வனுன நாராயண னென்னுஞ் சிறுவனுக்கு விவாஹஞ்செய்துவைத்தார். நாராயணன் பி.எ. பரீக்ஷையில் தேறினவன்: வெகு புத்திமான்: நீதிமான்: சகல குண சம்பன்னன்: தன் மனைவியை மிகு அன்புடன் பாதுகாத்துவந்தான்.

கோபாலையர் ரெட்டாவில் வர்த்தகம் துவக்கிச் சுமார் பத்து வருஷங்களாயின. ஒரு நாள் தமது இளஞ்சகோதரி பத்மாக்ஷி நினைவுக்கு வர, அவளது க்ஷேமத்தைத் தெரிந்துகொள்ள வெகு ஆவல்கொண் டார். அந்தத் தாசியோ அவரை விட்டுப் பிரியச் சம்மதித்தாளல்லள்: ஆகவே தாம் ரெட்டாவை விட்

டுப் புறப்படாமலே சில ஆட்களை ஜப்பானுக் கனுப்பி னூர். அங்கு நடந்த விஷயங்கள்யாவும் தாமனுப்பிய ஆட்களறிந்துவந்து சொல்லக்கோபாலையர் பெருமகிழ் வுற்ருர். 30 வருஷம் கடந்தன; கோபாலையர் ஏரா ளமாகப் பணத்தைச் சேர்த்து செட்டாலில் பெரியஸ்ரீ மானெனவிளங்கினூர்; அவருடைய ஆதீனத்திலிருந்த தாசியும் காலகதி யடைந்துவிட்டாள். கோபாலைய ருக்கு மூப்பு மேலிட்டு, அவர் தம் பந்துக்களைப் பார்க்க மிகவும் ஆவல்கொண்டார்: செட்டாலின் வர்த்தகத்தை நிறுத்திவிட்டார்: தாம் சம்பாதித்த பொருள்களை யெல்லாம் விற்று ரொக்கமாக்கிச் சென்னையிலுள்ள கஜானு வொன்றிற்கு மாற்றிவிட் டார்: பிறகு தமது சகோதரி பத்மாக்ஷியைக் காணு வான் ஜப்பானுக்குச் சென்ருர்.—

“ஜப்பானில் சதாசிவையர் இறந்து 30 வருஷங்க ளாயின. அவ ரிறந்த பத்தாம்வருஷத்தில் ருஷியா வுக்கும் ஜப்பானுக்கும் சண்டை மூண்டது. அப் போது சதாசிவையர் குமாரராகிய நாராயணையர் ஜப்பானியர்க்கு விரோதமாக ருஷியருடன் கூட்டுறவு செய்து ராஜாங்க ரகசியங்களை வெளிப்படுத்தியதா கச் சில விரோதிகளாற் குற்றஞ் சாட்டப்பட்டுத் தகுந்த விசாரணை யின்றியே ஒசாகா வென்னுமூர்ச் சிறையி லடைக்கப்பட்டார்: அவணிருந்தவாறே ரகசியமாய் ருஷியர்சகாயத்தால் சிறை தப்பியோடிப் போயினூர். நாராயணையரது ஐம்பது லக்ஷம் ரூபாய்


பெறும்படியான சொத்து முழுவதையும் ஜப்பானியர் கைப்பற்றினர்: அது போதாமல் நான்கு மாத கர்ப்பிணியாயிருந்த அவருடைய இல்லாளாகிய பத்மாக்ஷியையும் 65 வயதுள்ள தாயையும் பிடித்துக் குண்டுக் கிரையாக்கிவிடத் தீர்மானித்தனர். இவ்வேற்பாட்டினை யறிந்து பத்மாக்ஷியும் மாமியும் மாறு வேடத்துடன் ரகசியமாய் அத்தேசம் விட்டுப் போய் விட்டனர்.—

"கோபாலையர் இச்சங்கதி யாவும் அங்கறிந்தார்: ஆனல் நாராயணையரும் அவரது மனைவியாகிய பத்மாக்ஷியும் அவர் தாயாரும் எங்கிருப்பதும் என்னவாயினதும் அறியக் கூடாமல் மிகவும் கவலையடைந்தார். உடனே கோபாலையர் மாறு பெயருடன் சென்னைக்கு வந்து தம் பந்துக்களின் நிலைமையை ரகசியமாகத் தெரிந்துகொண்டார். தம் பந்துக்கள் தம்மை இன்னாரென் றறிந்துகொள்ளுமுன்னமே யவர்களது குணாதிசயங்களைத் தாமே நேரிற் பார்த்துத் தெரிந்து கொள்ள வுத்தேசித்து அம்மாறுபெயருடனே தரித்திரவேடந்தரித்து முதன்முதலில் தம்பியைப் பார்க்கச் சென்றார்.—அவர் கால் நடையாய் ஆற்றூர் நோக்கிச் செல்வுழி வழியில் நடைக்களைப்பினாலும் வெப்பக்கொடுமையினாலும் மூர்ச்சையாய் விழுந்து விட்டார்.—கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்ததென—இதோ—என்னருமைச் சூடாமணி யவரைக் கண்டு யின்னாரெனத் தெரியாததற்கு முன்

ணமே யுபசரணை மிகச் செய்து தன் வண்டியிலேற்றிக் கொண்டு ஆற்றூருக் கழைத்துச் சென்று வெகு பரிவுடன் ஆதரித்துக் காப்பாற்றினாள்."—

இப்படித் தருமராஜையரென்று மாறுபெயர் பூண்டுவந்த கோபாலையர் தம் சரித்திரத்தைச் சொல்லிக்கொண்டுவருகையிலே, ஜயராமையர் எழுந்து குதித்து, "அண்ணா! அண்ணா!!" என்று அலறி அவரைக் கட்டி யணைத்துக்கொள்ளச் சூடாமணியும், "பெரியப்பா! பெரியப்பா!!" என்று கூவிக்கொண்டோடி அவர் பாதங்களைத் தன் சிரமேல் வைத்தவளாய் ஆனந்தபாஷ்பம் சொரியாநின்றாள். பலராமையரும் சுப்பையரும் அவர்களுடைய மக்களாகிய நான்கு சிறுமிகளும் விநோதத்துடன் அவரிடம் நெருங்கி யார்ப்பரித்துச் சந்தோஷ மடைந்தனர். ராமமந்திர முற்றும் விநோதமும் குதூஹலமுமா யிருந்தது. கிரகப்பிரவேசச் சடங்குகள் வெகு ஸம்ப்ரமமாய் நடந்தன. மறு நாள் சூடாமணியும் ஜயராமையரும் தம் பண்ணைக்குத் திரும்பினர்.

12. சூடாமணியும் ராஜப்பனும்



சூடாமணி ரவிமந்திரம் சேர்ந்ததும், அவசரமான வீட்டு வேலைகளைக் கவனித்துப் பிறகு மாலைப்பொழுதில் பூந்தோட்டத்திற்குச் சென்றாள்: தமது பெரிய தகப்பனார் பண்ணைக்கு வந்ததுமுதல் அநேக விஷயங்கள் ஒன்றன்பின்னொன்றாகச் சடிதியில் நடந்தமையால், அவற்றைக் குறித்துச் சாவதானமாக ஆலோசிக்கலானாள்:—

“வெகு ஆச்சரியம்! யாவும் கடவுள் செயலெனவே தோற்றுகின்றது. ஆம், நமது செயலானாவதொன்றுமில்லை.—சுமார் நான்கு மாதங்களுக்குமுன் வறுமையே யுருக்கொண்டு வந்த தெனத்தகு மத்தருமராஜையர் இன்றோர் பெரிய ஜமீன்தாரராகிவிட்

டார்: எனது பெரிய பிதாவு மாயினர். அவர் இன்னு ரென வெனக்குத் தெரியுமுன்னமே அவரை நான் மிகவன்புட னுற்றேரத்தின்கண் கண்டுபசரித்து மூர்ச்சை தெளிவித்தே னல்லவா ? அப்போ தென்னை யவர் நகசிகாபரியந்தம் உற்று நோக்கினரே, அஃது நான் அவரது தம்பியின் புதல்வியெனத் துணிவான் பொருட்டே போலும். எவரை நாடி யிங் குற்றரோ அவரே தம்மை யிரங் தழைத்துச் செல்ல வேற்பட்டது தெய்வச்செய லன்றிப் பிறி தென்னே? அவர் எமது பொறையும் உண்மையும் ஒழுக்கமும் நன் கறியக் கருதி எத்தனை தரம் எம்மிடத்து அருவை கொண்டவர்போலும் கோபமடைந்தவர்போலும் நன்றிகுன்றியவர்போலும் நடித்துத் துர்ப்பாஷைகளாடியும் என்னைக் கையா லடித்தும் காலா லுதைத்தும் பரீக்ஷித்துப் பார்த்தார்? ஒருவர்க்கொருவ ரின்னு ரென் றறியு முன்னமே பரஸ்பரம் அன்பு ஏற்பட்டதன்றே? அஃது ஈசன் செயலல்லவா? எமது குடும்ப விஷய வேற்பாடுகளில் அவர் அவ்வளவு கருத்துக் கொண் டவ்வப்போது நடக்கவேண்டிய முறைகளைப் புகட்டியதன் காரணம் இப்போது நான் தெற்றெனத் தெளிகின்றேன். ராமமங்கிரத்துக் கிரஹப்ரவேசத்திற்குப் போகும் வழியில் என்னிடம் அவர் வேடிக்கையாகப்போல் பேசினவற்றில் ஒருவிஷயம் உண்மையாயிற்று.—அவர் ஜமீன்தா ராய்விட்டார். பின்னர் ? நான் ஜமீன்தாரினியாவே னென்றர். வழியில் அவர்

விளையாட்டாகச் சொன்னது உண்மையாகும்படி யவர் தம் அந்த ஏராளமான சொத்து யாவையும் ஜமீனையும் எனக்குக் கொடுத்துவிட வெண்ணியிருக் கலாம். அவ்வளவு சொத்து எனக் கெதற்காக? என் தந்தையினதே எனக்குப் போதுமே. அவர் தம் சொத்தை மற்றோர்க்குப் பகிர்ந்து தரட்டும்: எனக்கு வேண்டாம். இவ்விஷயத்தில் அவர் சொல்லைப் பொய்ப்பிக்கிறேன்.—ஆனால் அன்று குறி சொன்னவன் நானே பெருஞ் செல்வச் சீமாட்டி யாவே னென்றானே: இப்போதே நான் செல்வம் படைத்தவ ளல்லவோ? அவன் சொன்னது வீண் பிதற்றே.— அஃதிருக்கட்டும். அக்குடுகுடுப்பாண்டி தற்போதிய வெனது அந்தரங்க நேசம் பலிக்கா தென்றும், அதற் கிலக்கானவன் யோக்கிய னல்ல னென்றும், மற்று, காணாமற்போனவன் காதலுடன் கைப்பற்றுவா னென்றும் சொன்னானே. இதில் ஏதோ உண்மை யுண்டுபோலத் தோற்றுகின்றது: நானந்தரங்கத்தில் நேசித்ததோ ராஜப்பனை: அவனோ அயோக்கியனென்று தெரிய, அவனை மனத்தே யகற்றினேன். இனிக் காதலுடன் காணாமற் போனவன் சுந்தரமே யல்லவா? அந்தோ! நான் அவனை வீணாய்த் திரஸ்காரஞ் செய் திழந்துவிட்டேனே! அவன் இனித் திரும்பி வந் தென்னை யங்கீகரிப்பானோ? குறி சொன்னவன் உண்மைச் சாமுத்திரிகன்தான். கடவுள் எனக் கனுக்கிரகிப்பாராக!—இப்போ தெனக்குச் சுந்தரத்

தின்மேற் சொல்ல முடியாத தோரன்பு மேன்மேல் வளர்கின்றது: அவன் எவனுற்ருனே? எனது பெரிய தந்தையின் சொற்களுக் கியைந்ததனுல் தந்தைசொல் மீருதவ ளானேன்: பாதகன் ராஜப்பன் வலையிற் சிக்குருது மீண்டேன்: அதுவும் ஈசன் செயலே.—"

இம்மாதிரியாகச் சூடாமணி ஸ்வபாஷித்துக் கொண்டு பூங்காவில் நடந்து செல்கையில், ஒருவன் திடீரென அவள் முன்னிலையிற்ருேன்றி வழி தடுத்து அவ ளிரு கைகளையும் பிடித்துக்கொண்டான். சூடாமணி திடுக்கிட்டு அவனினின்றும் தன் கைகளைத் திமிரிக்கொண்டு அச்சத்துட னின்ருள்.—பூங்காவில் இருள்படர்ந்து சந்தடியற்றிருந்தது. மப்புக்களின் மத்தியிற் ருேன்றும் சந்திரிகையின் பிரகாசத்தால் அடர்ந்த மரங்களின் கிளைகள் அசைந்தாடுஞ் சமயத்திற் சற்று வெளிச்சம் காணப்பட்டது.—வந்தவன் சூடாமணியை நோக்கி, "கண்மணீ! பயப்படாதே! நான்தான் உன்னுடைய அத்தான்: என் முகத்தைப் பார்" என்று சொல்லி அவளைச் சந்திரிகையின் பிரகாச மிருக்கு மிடத்திற் கழைத்துச் சென்று, "சூடா! தயை செய் தென்னை மன்னிப்பாய். நம திந்தச் சந்திப்பு ஒருவர்க்கும் தெரிய வேண்டாம். உனது பெரிய தந்தையின் வரலாறு முற்றும் முன்னமே எனக்குத் தெரியும். நானுன்னுடன் சில காலம்வரை

யில் நேரிற்கண்டாவது கடிதமூலமாயாவது எவ்வித ஸஹவாஸமும் செய்யக்கூடா தென் றவர் விதித்திருக் கின்றார்: ஆதலின் நானிப்படி யுன்னைக் கண்டது அவர்க்குத் தெரிந்திடின், அவருடைய கோபத்தால் எனக்கு வெகு கஷ்டமும் நஷ்டமும் விளையும்" என்று சொல்லி நின்றான்.

சூடாமணி, "ராஜப்பா! அப்படி யவர் கொடு நிபந்தனைகளுண்டாக்கும்படியான தப்பிதம் நீ செய் துள்ளா யல்லவா? அங்ஙனமாக, நீ யெப்படி யென் னைப் பார்க்கத் துணிந்தனை? உனக்கு வெட்கமென்ப தில்லையா? உன்னுடன் நான் பேசத் தகாது! ஒதுங் கிடு!" என்று சொல்லி யவனை விட்டு விலகினாள். ராஜப்பன் மறுபடியும் வழி மறித்து, "கண்மணீ! சூடா! கோபப்படாதே, சற்று நில். உன்னுட னிரண் டொரு வார்த்தைமட்டும் பேசி யுன் மனத்தை யறி ந்துகொண்டு மற்றைக் காரியங்களைச் செய்யத் தீர் மானித்திருக்கின்றேன்" என்றான். சூடாமணி அதிக கோபத்துடன், "துஷ்டா! நீ யென்னைக் கண்மணீ யென்று விளிக்கத் தகாது காண். அந்தக் காலம் போய்விட்டது. உலகப்பழக்கமற்ற வென்னை நீ வஞ் சகமாய்ப் பேசி மயக்கி யேமாற்றிப் படுகுழி வீழ்த் தக் கருதினாய். உனது மூதன்னையான என் அத்தை பாகீரதியம்மை யுன்நடத்தை யறியாமையினா லுனது க்ஷேமத்திற் கருத்துக்கொண்டு உன்னை நான் விவா

ஹம் செய்துகொள்ளும்படி தூண்டிடவே, நானும் அவளிடத்துள்ள கௌரவத்தையுன்னி யவள் சொற்படி நடக்க விரைந்தேன்.—சண்டி சாவித்திரியுடன் கூட்டுறவு கொண்டு நீ செய்த வஞ்சயாயங்களும், என் சொத்துக்களைக் கைப்பற்றி யென்னைக் கெடுக்க வெண்ணிய நின் துணிபும், மற்ற நின் துர்நடத்தைகளும் எனக் கிப்போது வெட்ட வெளிச்சமாயின. இனி நம்மிருவர்க்கும் நேச முண்டாகுமென்று கனவிலு மெண்ணற்க.—துஷ்டா! தூர நில்!" என்று கடிந்து பேசி ராஜப்பனை விலகிச் சென்றாள்.

ராஜப்பன் மறுபடியும் அவளைப் பின்பற்றியோடி, "சூடா! நானுன்னுடன் சில விஷயங்களைப் பேசி யுன் கட்டளை வழியே நடக்க வெண்ணி யுன்னிடம் வராநிற்க, நீ வெறுக்கின்றனையே? இது தர்மமா? என்னிடத் துள்ளன் புனக் கின்றெனினும், நான் அத்தான் முறை யென்பது கருதியேனும் எனக்குத் தகுந்த விடை சொல்ல லாகாதோ? நானுன்னிட்ம் வஞ்சகமாக நடந்த துண்மையே யெனினும், சமயம் வாய்க்குங்கால் உள்ள விஷயம் விளக்க வெண்ணினேன். என் வைப்பிலிருந்த சண்டி சாவித்திரி யுயிர்நீத்தனள். எற்றைக்கும் நா னவளைக் காப்பாற்றுவதா யெழுதிக்கொடுத்த நிபந்தனை யாவும் பயனில. தமியேனுக் குன்னைத்தவிர இவ்வுலகினில் யாதொருசுற்றமும் துணையுமின்று. யாதாயினும், நின்சொல் மீறி நடவேன் நா னென்றைக்கும். இன்

னும் நீ யென்னைக் கடிந்து தூரத்துவையேல், இதோ வப்பாழ்ங்கிணற்றில் வீழ்ந் துயிர் போக்குவேன் பார்!" என்று சொல்லி யவளது பாதங்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான்.

சூடாமணி பிரமித்து நின்றுவிட்டாள்: தன் பொருட்டாக அவன் தற்கொலை செய்துகொள்ள வெண்ணியது கேட்டு அவன்மேற் பச்சாத்தாபம் கொண்டு, "ராஜப்பா! எழுந்திரு. இப்போது நா னுன்னுடன் தனிவாய்ப் பேசுவதனுல் வேறுவிதமாய் நினைத்திடாதே.—நீ என் அத்தை மகனுவதுபற்றியே உன்னுடன் பேசுகின்றே னன்றி, மற்று எப்பற்றுங்கொண்டல்ல வென் றறிக. உலகப்பழக்கமற்ற பேதையா மென்னிடம் நீ கேட்டறியவேண்டிய ஆலோசனை யென்னிருக்கின்றது? நானோ நாகரீகமற்ற நாட்டுப் புறத்து வாசி: தந்திர மொன்று மறியாதவள்: வெளுத்ததெல்லாம் பாலா வெண்ணிடும் பேதை. நீயோ உலகத்தை நன்கறிந்தவன்: வெகு தந்திரசாலி. நீ என்னிடம் கற்கவேண்டிய தொன்றுமில்லை. இத்தகைப் புரட்டுவார்த்தைகளினு லென்னை யேமாற்றிவிட நீ நினைக்காதே. நானோ மனோதிட மிகுதியுங்கொண்டவளென வறி. என்மீ துனக்கிருந்த வேறுவிதமான வெண்ணத்தை யறத் துறந்திடு.—நீ நேசித்துவந்த சாவித்திரி யுயிருடனிருந்தா லெனக்கென்ன? மாண்டா லெனக்கென்ன? நீ யவளுக் கெழுதிக் கொடுத்துள்ள பத்திரத்துஷரத்துக்கள் பயனுளவாயினெனக்

கென்ன? இலவாயி னெனக் கென்ன? அவற்று லெனக் காகவேண்டிய தொன்று மில்லை. இனியாகி லும் நீ தீவழி நாடாமல் நன்மார்க்கங் கைக்கொள்வா யேல், பேரும் புகழும் சம்பாதித்துக் கௌரவமு மடையலாம்" என்று சொன்னாள்.—

சூடாமணி பேசிய கடைசி வார்த்தைகளினாற் றன்னெண்ண மீடேறுமென்று நினைத்து ராஜப்பன், "சூடாமணி! நீ சொல்வதெல்லா முண்மையே. நீ வகு க்கு முறையே நன்னெறி கடைப்பிடித்து இரண்டு மூன்று வருஷ காலத்திற்குள் பேரும் புகழும் சம்பா தித்தேனாகில், அப்பொழுதாகிலு நீ யென்னை யெள் ளாது விவாஹஞ்செய்துகொள்வதாக வாக்களிக்கின் றனையா?" என்று கேட்டான். சூடாமணி, "அடா மூடா! இனி நா னுன்னை விவாஹம் செய்து கொள்வேனென்னு மாசையைக் கனவிலும் விட்டிடு. நீயும் சுகப்பட்டு உன் பிறந்த குலத்திற்கும் கீர்த்தி யுண்டாகவேண்டு மென்னும் நல்லெண்ணத்தினாற் சொன்னதற்கு நீ வேறு அர்த்தங்கொள்ளாதே. நீ யளவற்ற தீக்காரியங்களைச் செய்துள்ளாய். அவற் றிற்குப் பரிகாரங்களைத் தேடிக்கொள்.—மானிட ருக் கிவ்வுலகம் ஓர் பாடசாலை யொக்கும். அதை நடத்தும் குரு யாவரோவெனின், நானாவகைச் சீவ ராசிகளைப் படைத்து நல்வழி புகுத்தி யவரவர் பாபங்களைப் போக்கி ஞானமெனும் சம்பத்தைத் தந்து காக்கும் அறப்பெருங்கடவுளே யாவர். உல

கத்திலேற்படும்சுகதுக்கங்களும் அவற்ருனுண்டாகும் நன்மைதீமைகளுமே நாம் படிக்கும் பாடங்களாம். நமக்குப் பார்ப்பதாலும் கேட்பதாலும் அனுபவத்தாலும் உண்டாகும் ஞானமே கல்வியெனப்படும். அக்கல்வியை நன்மார்க்கத்திற் செலுத்தும்படி குருவாகிய ஸர்வேச்வரன் நமக்குப் பகுத்தறிவு கொடுத்திருக்கின்ருன். புன்மார்க்கத்தைக் கைப்பற்றினுர் நாசமடைவது திண்ணம்: நன்மார்க்கத்தே யொழுகுவார் அக்குருவினருளால் ஸகல ஐசுவரிய ஸாம்ராஜ்யங்களேயும்பெற்றுக் கடைத்தேறுவா ரென்பதற்கைய மின்று. பேதைப் பெண்ணுகிய நான் மற்றவர்க்குப் போதிக்கும் திறமை பெற்றிருக்கின்றேனே? நான் பெற்றுள்ள சிறிதுகல்வியி னுதாரமாய்ப் பெரியோர் வகுத்தமுறையை யெடுத்துச்சொன்னேன்.—ராஜப்பா! இனி நீ பிதுகாறும் பற்றியுள்ள தீயநெறிகளே யொழித்து நன்னெறி மேற்கொள்வாயென நம்புகிறேன். இதுதான் நான் சொல்லத் தக்கது. காலதாமத மாயிற்று: நீ போகலாம்" என்று சொல்லிக்கொண்டே வெகுவேகமாய் மந்திரத்தைநோக்கி நடந்தாள்.—சூடாமணிக் கொன்றும் தெரியாதென்றநினைத்திருந்த ராஜப்பன் அவளது வேதாந்த உபநியாசத்தைக் கேட்டு ஆச்சரியங்கொண்டு பதில் பேசமுடியாமல் அசைவற்று நின்றுவிட்டான்.—

13. விவாஹ விமர்சனம்

ஜமீன்தார் கோபாலையர் தமது மைத்துனன்மார் பலராமையரையும் சுப்பையரையும் அவர் பெண்களுடன் சிலநாள் தம்மிட மிருத்திக் கொண்டார். அவர்களுக்குப் பிரதிதினம் நானாவகை யின்சுவையுண்டிக ளளித்து அவர்களுல்லாஸார்த்தம் அந்திப்போழ்தில் சித்திரவிசித்திர இரட்டைப்பரி வண்டிகளிலும் நவீன மின்சார மோட்டார் வண்டிக ளிலு மேறியும், கண்களைக் கவரழகு வாய்ந்த உத்தம ஜாதிக்குதிரைச் சவாரியாயும், தமது ஜமீன் கிராமங்க ளனைத்தையும் சுற்றிப் பார்த்துவரும்படி ஏற்பாடுகள் செய்து வெகு பக்ஷமுட னுபசரித்தார்.

இடையில் சூடாமணியும் தந்தையுடன் வாரத் திருமுறை ஜமீனுக்கு வந்து போகலாயினள். ஒருநாள் ஜமீனிலிருந்து யாவரையும் ஜயராமையர் தம் பண்ணைக்கழைத்துச் சென்று ம்ருஷ்டான்ன போஜ

ஞாதிகளுடன் விருந்துகளிட் டுபசரித்து ஒரு வாரம் வரையிற் றம்மிட நிறுத்திக்கொண்டு மீண்டும் ராம மந்திரத்திற் கனுப்பினர்.—

கோபாலையர் தமது தங்கையின் புதல்விகளின் குணாதிசயங்களையும் மைத்துனன்மாரின் யோக்கியதைகளையும் நன்றாய்ப் பரிசோதித் தறிந்துகொண்டார்.—பலராமையரும் சுப்பையரும் அந்தரங்கத்தில் கோபாலையரிடம் விசுவாச மில்லாதவர்களாய்த் தனிமையாய் அவரைத் தூஷித்துப் பேசுவது வழக்கம். ஆனால் அவ்விருவரும் கோபாலையரது ஏராளமான பணத்திற்பேராசை வைத்து அவரிடம் வெகு உள்ளன்பு கொண்டவர்போல் நடித்தொழுகுவர். இதனுண்மை கோபாலையர் அறிவார்.

ஒரு நாள் கோபாலையர் பலராமைர் சுப்பையர் மூவரும் ஒன்று கூடிப்பேசிவருங்கால், பின்னிருவரின் பெண்களது விவாஹங்களைப்பற்றி ப்ரஸ்தாபமுண்டாக, எவ் விவாஹம் நல மென்பதைக் குறித்த வாரய்ச்சி நிகழ்ந்தது:—

பாலிய விவாஹம்

பலராமையர்: கோபாலையரே! நீர் சொல்வது முற்காலத்து நடவடிக்கைகளுக்கு ஒக்குமே யன்றித் தற்கால குடும்பங்களி னமைப்பிற்கு ஏற்றதாகப் புலப்படவில்லை.—வரனுக்கும் கன்னிக்கும் பகுத்தறிவேற்படாமுன்னமே விவாஹ

மென்னும்பெருஞ்சடங்கை முடித்துவிடுவதனுற் பெரும்பான்மை சங்கடங்களே நிகழ்கின்றன.—பிறந்த குழந்தை பதினைந்து பதினறு வயது கடக்கும்வரையில் மிகவும் எளிதில் மரணத்திற் குட்படுமென்று கருதவேண்டும். எந்த வயதினரும் கடவுளது நியமனத்திற் குட்பட்டவரே யெனினும், ஆங்காங்கு ஜனனமரணகுறிப்புப்புத்தகங்களை நோக்குமிடத்துப் பாலிய மரணங்களேமிருந்திருப்பதாகத் தெரியவரும். இதுவரை பூர்விகர் வகுத்துள்ளபடி, விவாஹமாகிய பின்னர் இறந்தது பெண்ணுயிருப்பின், தாரமிழந்த சிறுவன் இரண்டாவது விவாஹம்பண்ணிக்கொள்ளலாம், வேண்டுமிடத்து மூன்ருவது விவாஹமும் பண்ணிக்கொள்ளலாம். இவ்வனம் சந்தர்ப்பமேற்பவெத்தனை விவாஹங்களேனும் செய்துகொள்வதற்குச் சாஸ்திரமிடங்கொடுக்கின்றது.—மற்று, விவாஹமாகிய பின்னர் இறந்துவிட்டது புருஷனுக விருப்பின், அதனுற் கைம்பெண்ணுன சிறுமி மற்ருேர் முறை விவாஹிக்க லாகாதென் றல்லவோ சாஸ்திரம் விதிக்கின்றது? அத்தகைய பெண்மணி இனித் தன் வாழ்நாளளவும் சரீரதர்மத்திற் கெதிர்முறையாய் நடந்து தீரவேண்டுமே! அதனுற் குறைகள் நேரிடின், குலத்திற் கிழுக் கெனக் கருதப்படுகின்றதே!

சுப்பையர் : ஐயா! ஏன் மரண விஷயத்தை முன்னால் யோசிக்கின்றீர் ? ஆணும் பெண்ணும் ஜீவித்திருப்பதாகவே யெண்ணுவோம்.—சிறுவன் சிறுமிகள் தம்மைத்தா முணரா முன்னரே யொருவரோடொருவர் பிணைக்கப்பட்டுக் காலவளவில் யுக்தவய தடைந்து பகுத்தறிவு பெற்றபோது ஒருவரது குணநடவடிக்கைகள் மற்றவர்க்கு ஒவ்வாத பக்ஷத்தில், இல்லற வாழ்க்கையினிது நடவாது புலி கிடந்த தூறாய்விடு மன்றோ? பிணக்குப்பட்டுச் சமுசார மோட்டுவதினும் துறவற மேற்றுப் பிச்சை புக்குத் திரிவது மேலாகு மன்றோ?–இங்ஙன மல்லாது, சம்சாரம் செவ்வென நடப்பதாகவே கருதுவோம். பாலியவிவாஹத்தின் பலனாக வுதிக்கும் குழந்தைகள் பெரும்பாலும் அற்பாயுக்களாயும் வலிமை குன்றியவர்களாயுமே யிருக்கின்றனர். மேனாட்டைப் பார்க்கிலும் நமது இந்தியாவில் கணக்கிடப்படும் சிசு மரணத்தின் தொகையை நோக்குமிடத்து இதனுண்மை மிக்க பரிதாபத்தை யுண்டுபண்ணுமாறு தெற்றென விளங்கும். மேலும், மற்றை நாட்டினரைப் பார்க்கினும் பாலிய விவாஹத்தை யாமோதிக்கும் நம்மிந்தியர், ஆராயுமிடத்து, மிகு நோய் பற்றிப் பலவீனர்களா யிருப்பது வழக்கற்ற உண்மையாகக் காண்போம். பெரும்பாலும்

நமது பெண்மக்களிற் பலர் தேகமுற்றி வலிமை பெறுமுன்னமே கர்ப்பிணிகளாகிச் சுகப்பிரஸவ மில்லாமலும் இளமையிற்றானே முதுமை பற்றி யும் அகாலமரணமடைவதும், ஆண் மக்க ளிலு மவ்வாறே அகால முதுமையினல் உடல் வலி யிழந்து ஐம்புல னொடுங்கி யல்லற்பட் டழிவதும் சாதாரணமாகக் காண்கிறோ மில் லையா?

பலராமையர்: அன்றியும், சிற்சில குடும்பங்களுக் குப் பரம்பரையாய்ச் சிற்சில மேக முதலிய நீர் வியாதிகளும் குஷ்ட முதலிய தொத்து வியா திகளும் தொடர்வ துண்டல்லவா? பெரும்பான் மை அத்தகைய வியாதிகள் குழந்தைப்பரு வத்திற் றோன்றாமல் ப்ரௌடபருவத்திற் றலை காட்டிச் சீர்குலைப்பது யாவர்க்கும் வெளிச்ச மானதே!

சுப்பையர்: அல்லாமலும், பாலியத்தில் ஒருவன் வித் யார்த்தியா யிருக்கும்போதே யோர் தனிக குடும்பத்துப் பெண்ணுக்கு விவாஹம் பண்ணப் பட்டுச் சின்னாட் கழித்துச் சந்தர்ப்ப விழுக் கா லச்சிறுவன் கல்வி கற்பதை விட்டிட்டு உழைத்துச் சீவிக்க நேரிடுமாயின், வருமானம் சமுசார செலவிற்குப் போதாதாகி யதனுல்

வினேயுங் கேடுகளும் மனத்தாபங்களும் பல வுள வன்றோ?

பலராமையர்: மற்றோ ரஙியாய வதிசயமும் பெரும்பாலும் நம்மவர்களில் நடைபெறுகின்றதைப் பார்க்கின்றோமே!—பேராசைப்பெருக்கினல் ஏழைக்குடும்பியாகிய தகப்பன் ஏழெட்டு வயதுக்கு மேற்படாத தனது புத்திரியைச் செல்வவானுகிய எழுபது எண்பது வயதுக்குக் குறைவுபடாதானும் அக்கன்னிகைக்குப் பாட்டனு முப்பாட்டனு மெனத்தகுவானுமோர் தொண்டுகிழவனுக்கு விவாஹத்திற்கொடுத்து அவ்வணங்கின் பெருவாழ்வை யெத்தகையானும் கெடுத்துவிடுகின்றுனே! இத்தகைச் சேர்க்கையினுல், அந்தோ! அச்சிறுமி நுகர்ந்த வில்லறவின்பந்தானென்னே! காலன் தனது பாசத்தை வீசிப் பாதி வழிக்குமே லழைத்துச் சென்ற கிழவன் தான் யாது செய்யமாட்டுவான்! மதி யிழந்து அணேயப்போகும் விளக்கினிடத்துத் தோன்றிய வெளிச்சத்தை யகங்காரத்தாற் சாசுவதமெனக் கருதி யோர் சிறுமியின் வாழ்விற்கு நாசம் தேடி யிக்காரியத்திற் றலைகொடுத்த கிழவனது மோஹாந்தகாரத்தை யாதெனப் புகலுவோம்! கலியாணமான விரண்டு மூன்று வருஷங்களாதற் குள்ளே கிழவனும் மண்ணுலகம் நீத்து

விண்ணுலகத்தே நின்று பாரினிற் றன்பாரியை யனுபவிக்கும் சுகத்தைப் பார்த்துப் பார்த்துக் களிப்புறுவான்போலும்! தன் மகளின் வாழ் வைக் கொன்ற பாதகனுனேன் அவளது ஆஸ் திக்குச் சொந்தக்கார னுகின்ருன்: இவனன்ருே இறுதியிலி லாபமடைந்தவ னுனன்? கைம்பெண் களான மக்களின் சொத்துக்களைக் கொண்டு நம்மில் எத்தனே தந்தைமார்களும் தமையன் மார்களும் தம்பிமார்களும் மற்றுமுள்ள சுற்றத் தாரும் ஜீவித்துவருவதைக் காண்கின்ருேம்? அநேகமாகச் சொத்துக்குச் சொந்தக்காரியாகிய அச்சிறுமியோ பொருளிழந் திடர்ப்படுகின்ருள். இவ்விதமான நிர்ப்பந்தங்களுக்கும் அசௌகரி யங்களுக்கும் உட்படுத்திப் பின்னர் அப்பெண் ணினிடத்துத் தோஷங்கள் தோன்றுமாயின், யாரைப் பழித்து என்ன வாகும்? இத்தகைய விவாஹங்களினுல் நேரும் தீங்குகள் எண்ணி றந்த விதத்தன வென்பதைப் பிரதி தினமும் ஆங்காங்கு அனுபவத்திற் கரதலாமலகமாக அறிகின்ருேமே நாம்!

சுப்பையர்: அன்றியும், நம்மில் அநேகர் ஒருவரொரு வர்க்குள்ள சம்பந்தம் தமக்குப் பின்னுல் விட்டுப் போகுமென்று கருதி ஸ்திரீ புருஷக் குழந்தை களின் சிறுபிராயத்திற்ருனே கலியாணமுடித்து விட்டு, அதனுல் விளையும் கேடுகளைப் பார்க்கப்

பெருராய்க் காலகதி யடைகின்றனர். பின்னர் இச்சிறு குடும்பம் தீராச் சங்கடங்களுக் குட்படு மிடத்து, அவற்றைத் தம் பேறிவாற் றவிர்ப்ப தற்கு ஒருவரும் இலராகின்றனர்.—இவ்வித மாகக் கணக்கிற் கடங்காத பலவித விடுக்கண்க ளுக்கே காரணமாயுள்ள பாலியவிவாஹ வழக் கத்தைப் போக்கிப் பேரறிவாளரா முதியோர் தாமே யேனையோர்க்கு அத்தகைய விவாஹங்க ளான் விளையும் மானக்கேடு குலவீனம் மனக் கஷ்டம் பொருணஷ்டம் இவைபோன்ற பல் வகைக் கெடுதிகளை யெடுத்துச் சொல்லித் தாமே யத்தகைய விவாஹங்களைச் செய்யாமலும் செய் விக்காமலும் தவிர்த்து லோகத்திற் கிதம் தேடு வார்களாயின், எத்துணைச் சிறந்தவராகக் கரு தப்படுவர்?

இவ்வனமாக அவ்விருவரும் பாலியவிவாஹத் தை யறப்பழித்துப் பேசுவதைக் கோபாலையர் கேட்டு, இன்னும் அவர்களது அபிப்பிராய முற்றும் அறிந்து கொள்ளக் கருதி யிடையில் தடுத்துப் பேசாதிருந்து விட்டார்.

ப்ரௌடா விவாஹம்.

சுப்பையர்: இத்தகைப் பெருங்குறைகளையே பலனாகக் கொண்ட பால்ய விவாஹத்தைப் பெரியோர் நிக்ரஹித்து இனிப் பிரௌடா விவாஹத்தை யாமோதித்தலே நலமாகும். மேற்கூறிய கேடுகள் பல நீங்கினவாக, இவ்விவாஹத்தான் மணமகனுக்கும் கன்னிக்கும் விளையக் கூடிய பெருவாழ்வு ஒன்றுண்டு. அதாவது: ஸ்திரீ புருஷ ரிருவரும் தம்மைத்தா முணர்ந்து ஒருவரொருவர்க்குள்ள வேற்றத்தாழ் வறிந்து உடன்பட்டு விவாஹித்துக்கொள்ளலால், சமுசாரம் வெகு அழகாய் நடக்கு மென்பதற்குச் சிறிதும் ஐயமின்று. இங்கு, ஒருவர் மனநோக்கத்தை யொட்டி மற்றவர் நடக்க வியலுமாதலான், இல்லற வின்பமுற்றும் அநுபவித்தற் கிடமுண்டாகும். இச்சேர்க்கையினு லுதித்த குழந்தைகளும் பின்னர் புத்திமான்களும் தேஜோவான்களுமாகிக் குலத்திற்குப் பெரும் புகழும் லோகத்திற் குயர்ந்த நன்மையும் இழைக்கக் கூடியவர்களாவார்கள்.

பலராமையர்: அண்ணு! நீர் சொல்வது மிகவும் ஒப்பத்தகுந்ததே யாயினும், ஒரு விஷயம் கவனிக்க வேண்டும்.—பிரௌடா விவாஹம் நலந்தருவதாயினும், வெள்ளமிகுந்தோடுமோற்றினைத் தகுந்த வணைபோட்டு நீரைத் திருப்பி வேண்டியபடி

யுபயோகித்துக்கொண்டா லன்றி யவ்வாற்றுப் பெருக்கு நன்மை பயக்காததே யாகுமாபோல், விவாஹத்தை முடிப்பது உலகப்பழக்க சிறிதும் பெறாத சிறுவன் சிறுமிகளிடத்தே நாம் விட்டு விட்டோமானல், அது பின்னர் தீங்கிற்கேயேது வாகும்: ஆதலாற் சிறுவரது குறிப்பறிந்து அவ்வவரின் மனவோட்டம் நல்லிடத்தோ புல்லிடத்தோ வென் றாராய்ந் தறிந்து அதனை யாமோதித்தலோ கண்டித்தலோ பெரியோரது கடமையே யாகும்.

பலராமையர்: இத்தகைய ப்ரௌடா விவாஹமும் முதற் குலத்தோராகிய பிராமணரால் நீக்கப் பெற்றுளதேயன்றி, மற்ற வகுப்பினருள் பெரும்பாலும் வழக்கமாயுள தன்றோ? ஆதனல் சாஸ்திரம் இதனை முற்றும் நிஷேதிக்கின்றதில்லையென் றேற்படுகின்றது. நமது இந்திய பூர்வீக மஹான்களைக் குறித்து நோக்குங்காற் பெரும்பான்மை யிவ்விதவிவாஹங்களே யொழுக்கத்திலிருந்தனவாகத் தெரிகின்றது: இன்றும், கலியாணகாலங்களி லோதப்படு மந்திரங்களானும், கலியாணம் நடைபெற நான்கு நாளிரவிலும் ஔபாஸநாக்நி வளர்த்திருக்கும் அறையில் கலியாணப்பெண் கண்வளர்தல் முதலிய சில சடங்குகளினும், ப்ரௌடா விவாஹம் புராதனமாக வழக்கத்திலிருந்த தென்றே தெளிதற்

பாலது. ஆனல், பிராமணர் மட்டும் யாது காரணம் பற்றியோ பாலிய விவாஹமே விதியாகக் கருதி அதை வெகு கட்டுப்பாடுடன் நடத்தி வருகின்றனரே—என் செய்வோம்?—

சுப்பையர்: ஏன்?—இவ்விஷயத்தில் தற்காலத்துப் பிரஜைகளின் மனநாட்டத்தைக் கருதி நம்மில் புத்திமான்களாயும் கல்வியும் செல்வாக்கும் படைத்தோராயுமுள்ள சிரியர் லோகோபகாரமும் நாட்டுநலமும் விரதமாகக்கொண்டு பாலிய விவாஹத்தால் நேரும் தீமைகளை நன்கெடுத்துச் சொல்லி, நம்மவர்களது கட்டுப்பாட்டை விலக்கச்செய்வதுடன், அவ்வித கட்டுப்பாட்டை மீறி நடந்தவர் மற்றவர்களால் அவமதிக்கப்பட்டும் ஜாதியினின்றும் நீக்கப்பட்டும் துன்புறுவண்ணம் நமது கவர்ண்மெண்டார்க்கோர் பிரேரக சட்டத்தை மசோதாவாகக் கொடுத்து அதைச் சட்ட நிர்ணயத்தார் அங்கீகரிக்குமாறு செய்து, அத்தகைய பிரௌடா விவாஹம் யாவராலும் பழுதின்றி யநுசரிக்கத் தகுந்ததே யென்றும், மீறிப் பாலிய விவாஹம் நடத்தினேர் தண்டனைக் குள்ளாவா ரென்றும் ராஜகியமவிதியாக வேற்படுத்திவிட்டால், அனைவரும் செங்கோலுக் கெதிர்முறை நாடவொண்ணாது புதச்சட்டப் படி யொழுகி நாளாவட்டத்தில் ப்ரௌடா

விவாஹ முறைக்குப் பழகிப்போகமாட்டாரோ? அதனால் நாட்டிற்கு எவ்வளவோ நலமுண்டாகுமல்லவா? பழமையாக வநுஷ்டிக்கப்பட்டுவந்த ஸஹகமனமெனும் அகோர வழக்கம் கொடியதென்று பெண்டிங்க் பிரபுவினா லெங்ஙனம் சட்ட மூலமாக நிறுத்தப்பட்டதோ, அங்ஙனமாகவே பால்ய விவாஹ வழக்கமும் தவிர்க்கப்படவேண்டியது ஆவசியகமாகும்.

பலராமையர்: ஐயா! நீர் சொல்வது நலந்தருமெனினும், இவ்விஷயத்தில் ராஜாங்கத்தாரின் பிரவேசம் இன்றியமையாததாகத் தோற்றவில்லை. ஏனெனில், பிரௌடா விவாஹத்தின் நன்மைகளை யாவரும் நன்கறிந்து பெரும்பான்மையோர் தாமே ஸ்வதரியத்துட னொழுக்கத்திற்குக் கொண்டுவருவாராயின், தம்மொழுக்கத்தினின்றும் பிறழ்ந்து நடப்பதற் கிணங்காத மிகுந்த சிலரும் நாளாவட்டத்தில் இவ்வித முறையின் நன்மையைப் படிப்படியாக அனுபவத்தானறிந்து இறுதியில் இம்முறையே தமதாசாரமாகக் கொள்வரென நினைத்தல் பொருந்தும். இன்னுஞ் சில வருஷங்களிலெல்லாம் இப்பிரௌடா விவாஹ முறையே நாட்டிற் பெரும்பான்மை பழக்கமாகி, அதனால் முற்கூறிய வநேக துன்பங்கள் நீங்கிப் பிரஜைகளுக்கும் தேசத்திற்கும் நன்மை பயக்குமென்று நம்புகிறோம்.

கைம்பெண் விவாஹம்

கோபாலையர்: சரி. நீவிர் எடுத்துக்காட்டிய விஷயங்கள் யாவும் என தறிவிற் றொண்டேன். பாலிய விவாஹத்தைக் கண்டித்தீர்: ப்ரௌட விவாஹத்தைப் போற்றினீர்: மற் றோர் வகை கைம்பெண் விவாஹ மென்பதும் ஒன் றுண்டே—அதைக் குறித்து உங்க ளபிப்பிராய மேதோ?

பலராமையர்: மைத்துனரே! அவ்விஷயத்திலும் நீர் பேதப்படுகின்றீர்போலும்.—பாலியத்தில் விவாஹஞ்செய்யப்பெற்றுக் கைம்பெண்ணான சிறுமியாவாள்மங்கைப்பருவம் அடைந்தபோது இயற்கையின்பங்களை நுகர்தற்கில்லாது தனது ஆயுளை வீணே கடக்கவேண்டுமென்ப தல்லவோ நமது ஏற்பாடு? அவ்வக்காலத்தே ஸகல ஜீவராசிகளும் இயற்கைச் சுகங்களை யனுபவிக்க வேண்டுமென்பது கடவுளின் கருத்தே யல்லவா? விதி வசத்தான் இடையிற் சில விடையூறுகள் நேர்ந்தக்கால், அவற்றிற்குப் பரிகாரம் தேடி நெறிப்பழுதின்றி நடத்தல் பெரியோரின்கடமை யல்லவா? மங்கைப்பருவமுன்னமே மணமகனெழிந்த கன்னி யியற்றிய பாவம் யாதோ! அத்தகைச் சிறுமிக்கு நம்மவர் கேவலம் துறவறமே மேற்கொள்ளும்படி விதிக்கின்றனர். தன் வயதினரும் மூத்தோரும் இல்லறம் நடத்தி

வருவதைப் பார்க்கும் பெண்ணானவள் தன்னியற்கை நாட்டங்களை வென்று ஆயுளளவும் பால கன்னிகாவிரதம் அநுஷ்டித்துவர இயலுமோ? இயற்கைச்சுபாவத் தோற்றங்கள் ஆண்மக்களுக்கே யன்றிப் பெண்மக்களுக்கு இலவாகுமோ? புருஷன்மட்டிலும் தன்மனைவியையிழந்தபோதும், அவள் மலடாயிருப்பினும், அன்றி, தனக்குப் பொருந்தாதவளாய் அவளிடத்துக் குற்றம் கண்டபோதும், மற்றோர் கன்னிகையை மணத்திற் கொள்ளலாமென்று விதிக்கின்றார்கள். இவ்விதிகளைத்திருப்பிப் பெண்பாலர்களிடத்து ஏன் உபயோகித்த லாகாது? இவ்விஷயத்தில் ஆண்மக்கள் சுயநயமே மிகுதியும் பாராட்டுங் குறுாார்களெனக் கருதல் தகும்.

சுப்பையர்: அண்ணா! அஃதிருக்கட்டும். நான் தீர்மானமாகச் சொல்லுகிறேன்.—உள்ள நியாய அநியாயங்களைக் கருதியும், லாப நஷ்டங்களை நோக்கியும், இயலு மியலா தென்பதை யுன்னியும், தற்காலத்து மனப்போக்கை நாடியும், கைம்பெண் விவாஹம் ஒப்பத்தகுந்ததேயென்றும் யாவரும் ஆமோதித்து நடத்தவேண்டிய காரியமே யென்றும் நான் துணிகின்றேன். இவ்விஷயத்தில் முக்கியமாகக் கவனிக்கவேண்டியதொன்றுண்டு.—இல்லறம் நடத்தக்கூடியகாலத்

திற் கைம்பெண்ணனவளைப் புனர்விவாஹம் கூடாதென்று தடுத்துவிட்டோமானுல், ஜனக் குறைவு நேருகின்றது. சகல சிருஷ்டி கர்த்தா வாகிய கடவுள் ஆணினம் பெண்ணினமாகிய விரண்டினையும் படைத்து இனி யவ்வப்பொரு ளின் தொகையைத் தாம்தாமே பெருக்கிக்கொள் ளுமாறு இயற்கையறிவு விஷயாநுபோகம் முதலிய கருவிகளைத் தந்துள்ளார். அங்ஙன மாகிய அவரது ஏற்பாட்டிற் கெதிர்முறை யாய் நடத்தல் தகாததாகும். ஓர் யௌவன ஸ்த்ரீயாவாள் புருஷனுடன் வாழ்ந்துவந்தாளா யின், நாளடைவில் இயற்கை யநுசரித்துப் பிர ஜாவிர்த்தி எம்மட்டு நடக்கும், பார்த்தீரா? அன்னவளது சந்ததியாலும் எவ்வளவு ஜன விர்த்தி யாகலாம்! அங்ஙனமின்றி, அவ்யுவதி கைம்பெண்ணுகி மறுபடியும் விவாஹமாகா தவளாகவே யிருந்திட்டால், அவளால் இனிப் பிரஜாவிர்த்திக் கிட முண்டோ? அதனுல் ஜனத்தொகை குறைந்து நாடு சீர் கெடு மன்றோ? மேனுட்டார் முதலிய மற்றைத் தேச வாசிகள் இவ்விதக் கட்டுப்பாட்டை யாமோ திக்காமல் புனர்விவாஹங்களை நடவடிக்கை யிற் கொண்டுவந்துள்ளாராக, அன்னவர் நம் மிந்தியரைவிட எத்தகையாலும் சிறந்திருக்கின் றன ரென்பது யாவரு மறிந்த விஷயமே. ஆத

லால், நாம் அயலாரது உயர்தரவொழுக்கம் நாக ரீகம் சிறப்புக்களை நோக்கி யவற்றிற்குக் காரண காரியங்களை யாராய்ந் தறிந்து அம்மாதிரியான வொழுக்க முதலியவற்றை யநுசரித்து நாமும் ஏன் சிறப்புறலாகாது?

பலராமையர்: அண்ணா! நீர் சொல்வது சரியே. ஆனால் நமக்குள் தொன்றுதொட்டு அநுஷ்டிக் கப்பட்டுவருகின்ற ஜாதியாசாரமென்பதன்றோ எவ்வித சீர்திருத்தங்களுக்கும் தடங்கலாய் நிற்கின்றது? ஆதலால், இவ்விஷயத்தில் பெரி யோராவார் மற்றவர்க்குப் புனர்விவாஹத்தால் விளையும் நன்மைகளை யெடுத்துக்காட்டித் தா மும் வழக்கத்திற்குக் கொணர்ந்து, வேண்டு மிடத்து ராஜாங்கத்தாரிடமும் அநுஸரணை ஆமோதிப்பு முதலியன பெற்றுத் தக்க சீர்திருத் தங்களைச் செய்யக் கடமைப்படுதல் நாட்டிற்கு மிக்க நலன் தருவதாகும். ஆனால், நம் தேசத்தார் பழைய ஆசாரங் கட்கே படிமைப்பட்டவராத லின், முதலில் எவ்வித நன்மை பயக்கத்தக்க சீர்திருத்தமாயினும் சிறிது கஷ்டமும் நஷ்ட மும் மனத்தாபமும் இன்றி ஸ்தாபித்தல் வெகு கடினமாகும். எனினும், நாட்டின் நலத்தை மனத்துள் உறுதியாகக் கொண்டவன் சிறிது கஷ்ட நஷ்டங்களுக்குத் தா னுடம்பட்டா லொ

ழியப், பெரிய காரியமாகிய லோகோபகார மென்பது சித்திபெறுது.

சுப்பையர்: ஆமாம். முன்னர்க் கைம்பெண்களரனேர் 'ஸஹகமனம்' என்னும் கொடிய வழக்கத்திற் காட்பட்டிருந்தன ரன்றே? அது எவ்வ ளவு அகோரமான செய்கை! புருஷனை யிழந்த ஸ்த்ரீ இனிப் பிழைத்தல் தகாதென்று கரு திக் கணவனைச் சிதையிலேற்றி யக்கி மூட்டும் போது அந்த ஸ்த்ரீயும் அவ்வக்கியில் வீழ்ந்து உயிர் நீப்பள். அக்காரியம் முழு மனத்துடன் நடந்ததோ வென்று சற்று நிதா னித்துப் பார்ப்போமாயின், பெரும்பாலும் லோக அபவாதத்திற்குப் பயந்து நடத்திய தாகவே யறியலாம். அமங்கலையானவள் முது மைப்பருவம்வரை வாழ்ந்து இல்லற வின்பங் களை விழைந்தவளானல், விஷயம் ஒருவாறுய்க் கருதப்படும். அங்ஙனமன்று அவள் யௌவன ஸ்த்ரீயா யிருப்பின், அவளைப் பெற்றுர் உற்றுர் முதலியோர்க்கும் அவளுக்குமே யக்கொடுவழக் கத்தில் மனம் நாடாமல் இறுதியில் பழிப்புக்குப் பயந்து உடனிருப்பவர் அவளை யவ்வக்கிக் கிரை யாக்குவர். இதைவிடக் கொடிய காரியமும் ஒன் றுளதோ? அது நோக்கித்தான் நமது காருண்ய கவர்ன்மென்டார் உடன்கட்டை யேறுதலாகும் கொடிய உயிர்வதையைச்

சட்டபூர்வமாக நடத்தல் கூடாதென்று நிறுத்தி விட்டனர். ஆயினும், அவ்வித சட்டம் உண்டான சிறிது காலம்வரையில் அதனை யாக்ஷேபமின்றி யனைவரும் ஏகசித்தமாக ஒப்புக்கொண்டா ரல்லர். பின்னால், நாள் செல்லச்செல்ல, ஸஹகமனவொழுக்கம் ரத்து செய்யப்பட்டதன் மேன்மைக்கு யாவரும் சந்தோஷித்து ராஜாங்கத்தாருக்கு வந்தனமளிப்பாரு மாயினர்.–ஸஹகமனம் நடைபெறுங் காலத்தே கைம்பெண்கள் விரும்பியவிடத்துப் புனர்விவாஹஞ் செய்துகொள்ளலாமென்னும் உரிமை யொன்றுளதாயின், வரவர அந்தச் சஹகமனம்தானே அனுஷ்டிக்கப்படாமல் க்ஷீணித்து அற்றுப்போயிருக்கும்: தேசமு மின்னும் சிறந்திருக்கும்.—அவரவர் ஜாதி யொழுக்கங்களில் ராஜாங்கத்தார் தாமே பிரவேசித்துச் சீர்திருத்தங்களைச் செய்வது 1858ம்வருஷத்தில்நமது இந்தியர்க்குமாக்ஷிமை தங்கிய விக்டோரியா மஹாராணியார் அளித்தஉறுதிச்சாஸனத்திற்கு எதிர்முறையா யிருத்தலால், அவர் தூரமே நிற்கின்றனர். நாமே வேண்டிய சீர்திருத்தங்களை ஸ்திரப்படுத்திக் கொண்டு ஒருமனத்துடன் ராஜாங்கத்தாரது உதவியைக் கேட்டால் அவர் நமக்கு வேண்டிய சுதந்தரங்களைச் சட்டபூர்வமாக வளித்துக் காக்கத் தயாராயிருக்கின்றனர். ஆதலால், நம்மிற்

பெரியோராவார் இப் புனர்விவாஹ விஷயத்தில் ஊக்க மெடுத்துக்கொண்டு தகுந்தபடி நம்மவர்களைத் தம் வழிக்குத் திருப்பி, அவ்வழி நடப்போரை ஜாதி சம்பந்தம் முதலியவற்றினின்றும் விலக்குகளின்றி மிகுதியும் ஆமோதித்து அவ்வொழுக்கத்தை அநேகமாகத் தேச மெங்கும் பரவச்செய்து, முடிவில், அவ்வொழுக்க மனுசரித்தார்க்கு எவ்வித நஷ்டமும் அணுகாவண்ணம் ராஜாங்க சட்டம் வழங்கும்படி முயற்சி செய்தல்வேண்டும்.

கோபாலையர்: மைத்துனன்மார்களே! நீவிரிருவரும் சொல்லியவெல்லாம் நான் நன்கு கொண்டேன். நுமது மனப்போக்கு முற்றும் முற்காலத்ததை மறுக்கின்றது. அது துணிபுறச் சரியென் றெனக்குத் தோன்றிற்றிலது.—இதனல் நான் மற்றவர்களைத் தூஷிப்பதாக நினைக்க வேண்டாம். நமது முன்னோர் வகுத்த விதிகளை மறுத்து நடத்தற்கு எத்தகையாக நாம் அவரைவிடச் சிறந்துள்ளோ மென்பதைக் கருதவேண்டும்.—உலகத்திற் பல தேசங்களிலும் பற்பல மதங்க ளேற்பட்டு, அவ் வம் மதத்தின் மூலபுருஷர்களால் ஏற்படுத்தப்பட்ட விதிகளைக் கொண்டு, உலகத்திலுள்ள யாவரும் அந்தந்த மதங்களைத் தழுவிவருகின்றனர். ஒவ்

வொரு மதத்தினனும் தான் தழுவிவரும் மதா சாரங்களின்படியே யனுஷ்டித்துவராவிட்டால், அவன் மதப்ரஷ்டனுகின்ருன். இந்த வேற் பாடு எல்லா மதத்திலும் உண்டு. உலகத்தில் இப்பொழுது பரவியிருக்கு மதங்களில் ஹிந்து மதம் அனுதியானதென்று யாவராலும் அங்கீக ரிக்கப்பட்டிருக்கின்றது. ஹிந்து மதந் தவிர மற்றெல்லா மதங்களிலும் கால தேச வர்த்த மானங்களே யனுசரித்துப் பற்பல சீர்திருத் தங்கள் செய்துகொள்ள இட முண்டு: ஹிந்து மதத்திலோ அதற்காக ஏற்படுத்தப்பட்டிருக் கும் விதிகளினின்றும் மாறி நடப்பதற் கிடங் கொடுக்கப்பட வில்லை. நமது முன்னோர்கள் நன்ருகக் கல்வி கற்று நாகரீகம் பெற்றிருந்ததாக நமது பூர்வீக கிரந்தங்களினுல் தெற்றென விளங் குகின்றது. அவர்கள் செய்திருக்கும் ஏற்பாடு களே சிறந்தனவென்பதற்குச் சிறிதுஞ் சந்தே கம் வேண்டா. நாம் நம் முன்னோர்களின் வழி பற்றி நடப்பதே யுசிதம்.—

“ஹிந்து சாஸ்திரப்படி சிருஷ்டி கர்த்தாவி னருளாற்சொல்லப்பட் டிருக்கின்ற வாக்கியங்க ளுக்கு வேதமென்று பெயர் வழங்குகின்றது. அந்தவேதத்திற்சொல்லியுள்ளதாவது:—கடவுள் தாமே நான்கு வருணங்களேப் படைத்தாராம்.

அவரது முகத்தினின்று பிராமணரும், புயத்தினின்று க்ஷத்திரியரும், உதரத்தினின்று வைசியரும், காலினின்று சூத்திரரும் உதித்தனராம். அவரவர் பிறப்பினை யொட்டி யவரவர்க்குரிய தொழிலையும் ஏற்படுத்தினராம் கடவுள்.-கடவுள் முகத்தினின் றுதித்த பிராமணன் வாக்குச் சாதுரியமும் புத்தி சூட்சுமமும் கலைக்கியானமும் அடைந்தவனாக, அன்னவன் மற்ற முக்குலத்தார்க்கும் குருவாக விருந்து வித்தை முறைகளைப் புகட்டி யவர்களைச் சந்தர்ப்பத்திற் கேற்றபடி நன்மார்க்கத்தி லொழுகச்செய்யவேண்டுமென்பதும், புயத்தினின் றுதித்த க்ஷத்திரியன் புயவலிமை மிகப்பெற்றவனாய்ச் சத்துருக்களைச் சம்ஹாரம் செய்து மற்றை முக்குலத்தார்க்கும் ராஜனாக விருந்து அவர்களைக் காப்பாற்றவேண்டுமென்பதும், உதரத்தினின் றுதித்த வைசியன் மற்றவர்தம் உதர போஷணார்த்தம் வர்த்தக மூலமாய் வேண்டுவன உதவவேண்டுமென்பதும், பாதங்களினின் றுதித்த சூத்திரன் மற்றை மூன்று குலத்தார்க் கேற்பட்ட தொழில்கள் சரிவர நடக்குமாறு அவர்களுக்கு ஊழியஞ் செய் துதவவேண்டு மென்பதும், அவர் விதித்த முறைகளாகும்.—

கலிகாலமாகிய விப்போது சகல நெறி முறைகளும் க்ஷீணித்து வர்ண ஸங்கரமு முண்

டாகி, அவரவர் தத்தமக் குரிய தொழில் களினின்றும் பிறழ்ந்து நடந்து புது வாசாரங் களை மேற்கொண்டும், ஒருவரொருவர்க்குள்ள ஏற்றத்தாழ்வை யுன்னுமல் யாவரும் சமமெ னக் கருதி மேலோர் சொற் கடந்தும், தம் மனப்போக்கே தமக்குக் குரு காப்போன் உத வுவோன் ஆகிய எல்லாமுமென்றுங் கருதி நட வாநிற்பர் இக்காலத்தார்.—இவர்களது சுபா வம் என்னே? இவர் பழையன கழியப் புதியன தோன்றல் காலவியல்பெனக் கொள்வர்: மே ஞட்டு நாகரீக முணராக் காலத்து வரைந்த கோட்பாடுகள் அது மிகுந்த விக்காலத்துப் பொருந்தா வென்பர்; தொன்மை விதிகளே வரையாகக் கொள்ளும் முதியோர் இக்காலத் தமைப்புக்குத் தக்க முறைகளைப் போதிக்க வல் லவரல்லா ரென்பர்: எக்காலத்தோ தாடிசடை களைக்கொண்ட விருடிகள் வகுத்த முறைகள் நமக்காக வல்ல வென்பர்: தொன்றுதொட்டு வழங்கும் மதக் கட்டுப்பாடுகளையொழித்து, வைராக்கிய மகற்றி, ஏற்றத்தாழ் வின்றி எல்லா மதத்தினரும் ஜாதியினரும் சமமேயென்று வாதித்து, ஒரேபங்திபோஜனம் பரஸ்பரவிவா ஹம் முதலிய சம்பந்தங்களே நாட்டுக்கு நலந்தருவனவாகு மென்று வாதித்து நிலை நாட் டமுயல்வர்: எல்லாம் இயற்கையா னுயதன்றிக்

கடவுளாற்ருனய தென்பது பொய் பிதற்றே யென்பர்: தெய்வபக்தி குருபக்தி முதலியன நீப்பர்: பூர்வீக முறைக ளனைத்தும் துறந்து புது முறைகளே தொடர்வர்: ஆலயம் புகாது சாலவும விதண்டாவாதக் கூட்டங்களே சேர்வர்: மறை நூல்களைக் கைவிடுவர்: குடும்பத்திற் புதுக்கோட்பாடுகளும் புல்லாசாரங்களும் புகுத்துவர்: இவ்விதமாக பற்பல புது நடவடிக்கைகளை மேற்கொண்டு அவற்றைத்தான் தற்கால நாகரீக மென்பர்.—இங்ஙனம் பழைய நெறிகள் முற்றும் பயனற்றனவாகக் கருதுவதனுற் பலவித துன்பங்கள் விளையுமே யன்றி, நன்மை நாடுமென் றெண்ணி மோசம் போகன்மின். ஆன்றோர் வகுத்த முறைகளே அறம் பொரு ளின்பமும் வீடும் தரும்.—

"நீவிர் பாலிய பிரௌடா விதவாவிவாஹங்களைப்பற்றிப் பேசினீர். நீங்கள் எடுத்துக்காட்டிய சங்கதிகள் யாவும் உண்மையே யெனினும், பொதுவாக இவ்விஷயத்தில் ஒன்று தெளிய வேண்டியதுண்டு. அவனன்றி யோரணுவு மசையாதெனுமாப்தர்மொழி யொன்றுளதன்றே ? சிருஷ்டியின்போதே பிரமன் வகுத்த முறையைக் கடந்து நடத்தற்கு எம்மட்டுப் பொருள் பெற்றூர்க்கும் அரிதேயாகும். 'மண

வணியணிந்த மகளிர் ஆங்கே பிணவணியணிந்து தம் கொழுநரைத் தழீஇ உடுத்த ஆடை கோடியாக முடித்த கூந்தல் விரிப்பினும் விரிப்பர்' என்னும் ஆன்றோர் வாக்கிய முணர்ந்திலீரா? நமன் கிட்டுவ தெக்காலத் தென் றறிவதற்கு எவராலாகும்? பாலிய விவாஹத்தான்மட்டும் மரணம் அதிகமாக நேருமென்பதும், பிரௌடா விவாஹத்தால் அஃது குறையுமென்பதும் பிசகாகும்.—நமது மதக் கோட்பாடுகள் சான்றோரால் நன்கு ஆராய்ந்தறிந்து ஏற்படுத்தப்பட்டனவாதலால், அவை மிகவும் சிரேஷ்டமானவை. அவை பெரும்பான்மை தெய்வத்தன்மை கொண்ட இருடிகளால் வரைக்கப்பட்டன. அத்தகைய கோட்பாடுகளைப் புல்லறிவாளராகிய நாம் எங்ஙனம் மாற்ற வல்லோம்? இடையில் எத்தனையோ மதங்கள் தோன்றின; தோன்றிப் பரவின; பரவி யுயர்ந்தன; உயர்ந்து மாறின; மாறிக் குறைந்தன; குறைந்து அழிந்தன: இவ்விதமாக எந்த மாறுபாட்டிற்கு முட்படாத நமது ஹிந்துமதத்துத் தொன்மைக் கோட்பாடுகளைப் பழுதுள்ளனவாகக் கருதி மாற்றலாமோ? —பெண் புஷ்பவதியாயினபின்னர் விவாஹஞ் செய்வதாகும் வழக்கம் நம் முன்னோர் சிலரில் இருந்ததென்பது உண்மையேயெனினும், சாஸ்திரப்படி புஷ்பிணியாகாத கன்னிகையை விவா

ஹம் செய்துகொடுப்பதே உசிதமெனக் கருதி நம்முன்னோரிற் பெரும்பான்மையோர் பாலிய விவாஹத்தையே அனுஷ்டித்துவந்தனர். ஹிந்து குலப்பெண் யுக்த வயதடைவதற்கு முன்னம் விவாஹஞ் செய்துகொள்வது உத்தம பக்ஷமென்றும், ப்ரௌடையான பிறகு விவாஹித்தல் மத்யம பக்ஷ மென்றும், விவாஹமே யில்லாமல் வேசியாய்த் திரிவது அதம பக்ஷமென்றும், விவாஹித்த பெண் தன் கணவனை யிழந்தவிடத்து உடனே தானும் உயிர்துறப்பது உத்தம பக்ஷமென்றும், தன தாயுட்பரியந்தம் பிரமசரிய மனுஷ்டித் தொழுகுவது மத்யம பக்ஷமென்றும், கேவலம் பொதுமகளினியல்பு மேற்கொண்டு நடத்தல் அதம பக்ஷமென்றும் சாஸ்திரங்கள் குறிக்கின்றன. இப்படிச் சொல்லப்பட்ட முறைகளில் அதம பக்ஷங்களை மேற்கொள்ளல் யார்க்கும் தகாதாதலால், அவை நிவர்த்திக்கப்பட்டன: மற்று, உத்தம பக்ஷங்களை உத்தமஜாதியாரென்னும்பிராமணரும், மத்திம பக்ஷங்களை மற்ற ஜாதியாரும் அநுஷ்டிக்கலாயினர்.—ஸஹகமன வொழுக்கம் சட்ட பூர்வமாகத் தடுக்கப்படவே, அது துவக்கிக் கைம்பெண்களான பிராமண ஸ்திரீகளும் வேறு வழியில்லாமல் மத்யம பக்ஷத்தையே யவலம்பிக்கலாயினர்.—உங்களால் மற்றெடுத்துரைக்கப்பட்ட கேடுகளைத்

தும் நாம் நிவர்த்திக்க வியலாத தெய்வசங்கற் பங்களேயாம். நாம் தகுந்த முயற்சிகளெடுத் துக்கொண்டாலும் கொள்ளாவிட்டாலும் பொருந்துவன போமி னென்றாற் போமா? பிறப்பு இறப்புக்கள், கஷ்ட சுகங்கள், நன்மை தீமைகள் முதலிய த்வந்த்வங்கள் நேருதற்கு ஒரு காலம் அநுகூலமென்றும் பிறிதொரு காலம் பிரதிகூல மென்றும் இலவாகும்.—பிரௌடா விவாஹ முறையை யனுசரித்து, பிரௌடையாகியபின் னர் கருத்தரிக்கத்தகுங் காலத்தும் விவாஹ மாகாமலே யிருக்கும் பெண்களின் தாய்தந்தை யர் பாவத்திற் குட்படுவராம்.—நீவிர் எடுத்துச் சொல்லியபடி அநுபவஞானம் பெறாத பாலர்க்- குச் சுதந்தரம் கொடுத்தலால் பெரும்பாலும் நன்மைபயப்ப தரிதேயாம்.—

"கைம்பெண் விவாஹத்தினாற் பெண்ணுக் குப் பேரணிகலமாகிய கற்புக் கிழுக்குண்டாவ துடன், வெவ்வேறு விவாஹங்களினா லுண்டான சந்ததிகளுக்குச் சொத்துக்களைக் குறித்து அநேக விதமான விவாதங்களும் வழக்குகளும் மனத்தாபங்களும் நேருதலால், அது பெரியோ ரால் நீக்கப்பட்டது. அன்றியும், பிராமணரும் ப்ரௌடா விவாஹ முறையை மேற்கொள்வா ராயின், அவர்கட்கும் மற்றவர்கட்கும் உள்ள

ஏற்றத்தாழ்வு நீக்கிப் பெரியோர் வகுத்த வருணாச்சிரம தருமத்திற்குக் குறை நேருமெனக் கருதி, அவ்வொழுக்கத்தைப் பிராமணர் கைப்பற்றினரிலர். எனினும், தற்காலத்து ஜனங்களின் மனப்போக்கையும் பாலிய விவாஹத்தின் அசௌகரியங்களையும் கருதி, இவ்வொழுக்கமட்டும் பேதமின்றிப் பிராமணருட்பட யாவராலும் நடைபெறுமாயின், நாட்டிற்கு மிக்க நலமுண்டாகுமென்று நம்மிற் கல்விமான்கள் சிலர் இப்போ தபிப்பிராயப்பட்டு முயல்வதும் ஒழுங்கே யெனலாம்.—

"யாவராயினும் தம்மிற் புத்தேற்பாடுகளைச் செய்யுமுன்னர், தம் முயற்சி நாட்டிற்கு நலத்தையே தருமெனத் தேர்ந்து துணிந்து தாம் செய்யக் கருதும் மாறுபாடுகளுக்கு யாவருடைய சம்மதமும்பெறுதல் நலமதாகும். ஒருவன் தன்னைச் சேர்ந்த யாவரும் கட்டுப்பாடாக ஏற்பாடொன்று செய்து அதனை யனுஷ்டித்து வரும்பக்ஷத்தில், அது சாஸ்திர சம்மத மில்லாததாயினும், 'ஊருடன் ஒத்துவாழ்' என்பதற்கிணங்க, மற்றவருடன் தானும் கலந்துகொள்ள வேண்டியது வெகு அவசியமே யாகும்.—குலத்திலாயினும் மதத்திலாயினும் எவ்விதமான புத்தேற்பாடுகள் வழங்கவேண்டு மிடத்து, அவற்

திற்குரிய மற்றவரனைவரின் முழுச் சம்மதம் பெற்றுச் சீர்திருத்தங்களைச் செய்தா லன்றி, நாடு ஒருமைப்படாது. ஆதலால், நம்மிற் பெரியோராவாரும் செல்வாக்குள்ளாரும் படிப்படியாகத் தாம் கருதும் சீர்திருத்தங்களை யனைவரு மங்கீகரிக்கும்படி செய்து, தக்க சமயம் நோக்கி யவ்வித சீர்திருத்தங்களை ராஜாங்க அங்கீகாரமும் பெறச்செய்து நாளடைவில் சட்டமாகவு மாக்கிவிடவேண்டும்.—

"நானோ சென்ற சில வருஷங்களாக நம்மவர் சங்கதி யொன்றும் கவனிக்கா திருந்தேன்: பாலியத்திலே பொருளாசை கொண்டு சாஸ்திர விலக்கான சமுத்திரயானஞ் செய்தேன். ஆனால், சமுத்திரயானஞ்செய்து பற்பல தேசங்களைக் காணுதலாற் பல நன்மைகள் விளையுமென்பது அனுபவஞானத்தால் தெரியவருகின்றது. சமுத்திரயானத்தால் அவரவர் மதாசார விதிப்படி நித்ய கர்மானுஷ்டானங்களுக்கும் அன்னபானுதிகளுக்கும் பற்பல சமயங்களில் தனிகருக்கும் சங்கடங்கள் உண்டாகின்றன. ஆதலால் சமுத்திரயானம் நிஷேதிக்கப்பட்டதாகத் தோற்றுகின்றது. மற்றை விஷயங்கள் நோக்குமிடத்து, அதனுல் நன்மையே யன்றித் தீமையைக் காணேம். நான் புதிய வழியிற் பிரவேசித்ததுபோல என் தம்பி ஜயராமனும் ஏதோ கால

த்தை யனுசரித்து நவீன நாகரீகத்தைக் கைக் கொண்டுவிட்டான். தற்சமயம் யான் அவனது சிலகொள்கைகட்கு எதிரிடையான அபிப்பிரா யங்கொண்டிருக்கின்றேனுயினும், மிஞ்சிய காரி யத்தில் விசனித்துப் பிரயோசனமில்லை யென நினைத்து, அவனுடைய கொள்கைகட்கு மாறு படாமலேயவனுடன் கலந்து நடந்துவரத் தீர்மா னித்தேன்: அன்றியும், மூப்பும் பிணியும் டிருக் குமிப்போது நான் எவ் விஷயத்திலும் நவீன முறைகளை வற்புறுத்தி வழக்கத்திற்குக்கொண்டு வருவதற்குச் சக்தியற்றவனு யிருக்கின்றேன்.— நீவிரிருவரும் நம் பெண்களின் விவாஹ விஷய மாய்த்தகுந்த வேற்பாடுகளைச் செய்யாதிருந்தது யுக்தமன்று. இனி யுடனே அவ்விஷயத்திற்கான முயற்சி செய்வீரென்று நம்புகின்றேன்."—

இம்மாதிரியாகப் பல விஷயங்களைப் பேசிய பின்னர் சபைகூடிய மூவரும் கலந்து சிற்றுண்டிக் குச் சென்றனர்.

கோபாலையர் தம் மைத்துனன்மாரிருவரையும் அவர் பெண்களுடன் சுமார் ஒருமாத காலம் தமது மந்திரத்திலே யிருத்திக்கொண்டு அப்பெண்களுக்கு அநேக விலையுயர்ந்த ஆடையாபரணங்களைத் தந்து அவரவரிருப்பிட மனுப்பினர்.

14. சாஸந நிர்வாகம்

ஜமீன்தார் கோபாலையர் தம் மைத்துனர்களையும் அவர்களது குழந்தைகளையும் சென்னைக்கனுப்பின மறுநாட் காலமே வக்கீல் ராமஸ்வாமி ஐயர் ராமமந்திரத்திற்கு வந்தார். ஜமீன்தார் அவருடன் சில சங்கதிகளைப் பற்றித் தனிமையாகப் பேசிவருகையில், கோபாலையர் தம் மருமகன் ராஜப்பனைக் குறித்து விசாரித்தார்.

வக்கீல், "ஜமீன்தாரவர்களே! நமது கட்டளைப் படி ராஜப்பனிடம் பதினாயிரம் ரூபாய் கொடுத்தனுப்பினேன். நான் அவனது நடத்தைகளை வெகு கவனமாக விசாரித்துவருகின்றேன். அவன் இப்போது கன்னடத்தையுடனும் நாணயத்துடனும் ஜவுளி வர்த்தகம் செய்கின்றான்: தனக்குரிய நித்யகர்மாநுஷ்டானங்களை நியமத்துடன் நடத்தி ஆசாரத்துடனேயொழுகுகின்றான்.—அவன் நேசித்திருந்த சண்டி சாவித்திரியென்பவள் ஒருமாதத்திற்கு முன் விஷக்

காய்ச்சலினுல் பரலோகமடைந்தனளாம். அவளது உத்தரக்கிரியைகளை ராஜப்பன் தகுந்த அந்தணரைக் கொண்டு நடத்தினும். அக்கிரியைகளைச் சென்று நடத்தின சாஸ்திரிகளிற் சிலரை யெனக்குத் தெரியும். நான் அவர்கள் மூலமாய் இச்சங்கதிகளை விசாரித் தறிந்தேன். சாவித்திரி யொழிந்துவிட்டதால் ராஜப்பன் வர்த்தகசாலையின் வேலை யொழிந்த நேரங்களில் வேதாந்தச்ரவண விஷயங்களில் அதிக ஊக்கமுள்ளவனுய்க் காணப்படுகின்றுன்" என்று சொன்னர்.

ஜமீன்தார் சற்றுச் சந்தோஷ மடைந்தவராகக் காணப்பட்டார்: பிறகு வக்கீலுடன் மற்றுஞ் சில சங்கதிகளை யந்தரங்கமாகப்பேசி அவரைச் சென்னைக் கனுப்பிவிட்டுத் தாம் ஆற்றூருக்குச் சென்றனர்.

கோபாலையரது வரவை யெதிர்பாராத சூடாமணி அவரைக் கண்ட வெகு ஆனந்தங்கொண்டாள். தமையனும் தம்பியும் ஒருவரை யொருவர் வெகு விசுவாசத்துட னுலிங்கனஞ்செய்துகொண்டனர்.— ஜமீன்தார் பண்ணையின் வேலையாட்களுக்கு அவரவர் ஏற்றத்துக்குத் தக்கபடி பரிசுகளளித்தார்.

பண்ணையில் ஒருவாரம் தங்குகையில், ஒருநாட் காலை ஜமீன்தாருக்கு வக்கீலிடமிருந்து தபால்மார்க்கமாய்ச் சிறிய பெட்டியென்று வந்தது.—அன்று மாலை தமதுதம்பியைத் தனியாகப் பூந்தோட்டத்திற்

கழைத்துச்சென்று, கோபாலையர், "ஜயராமா! நானிப்போதுபேசப்புகும் விஷயத்தை நீ கவனமாகக் கேட்கவேண்டும்" என்றார். ஜயராமையர் தமையனாரைப் பணிந்து கைகட்டி நின்றார். ஜமீன்தார் அங்கோர் மரத்தடியில் சாவதானமாக உட்கார்ந்து, "தம்பி! எனக்கோ வயதாய்விட்டது. வழக்கமாய் மாதத்தொருமுறை யெனக்குண்டாகும் மூர்ச்சை வலியானது இப்போது வாரத் தொருமுறையாகத் தோன்றி என்னை மிகவும் வருத்துகின்றது நீ யறிவையே. இனி நான் வெகு நாள் ஜீவித்திருப்ப தரிதெனத் தோற்றுகின்றது. நான் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பொருளை எனக்கிஷ்டமானவர்களுக்குப் பிரயோஜனப்படும்படியாகச் செய்யவேண்டி, வக்கீல் ராமஸ்வாமிஐயர் மூலமாய் என்னிஷ்டத்தைச் சாஸனமாக வெழுதி அதனைச் சட்டப்படி சர்க்கார் புஸ்தகங்களிற்பதிந்து (ரெஜிஸ்டர் செய்து) வைக்கச் சொன்னேன். அங்ஙனமே செய்து வக்கீல் அச்சாஸனத்தை யிங் கனுப்ப, அஃது இன்று காலை யெனக்குக் கிடைத்தது. அதை நான் இதோ உன்னிடம் கொடுக்கின்றேன், பத்திரப்படுத்தி வை. அதன் விஷயம் ஒருவரு மறியலாகாது. அதிற் குறிப்பிட்டுள்ள சில விஷயங்களை நீ முற்றும் ஆமோதிக்காவிட்டாலும், அவை உன் மனத்திற்கு நேர் விரோதமாக விருந்தாலும், நீ குறுக் கொன்றுஞ் சொல்லாமல் என் மரணத்திற்குப் பிறகு அதிற் கண்டுள்ள

என் னபிப்பிராயப்படியேதான் ஈசுவரனுணைக் கேற்பச் சரிவர நடத்தவேண்டும். நீ சாஸனத்தை வாசித்துப்பார்க்கலாம். நான் அதோ நம் தாமரைப் பொய்கைக்குச் சென்று மாலைக்கடனைக் கழித்து வருகின்றேன்" என்று சொல்லி, அரக்கு முத்திரைகள் போட்டதோர் காகிதப் பையை ஜயராமையரிடம் கொடுத்துப் போந்து மறைந்தார்.—

ஜயராமையர் அச்சாஸனத்தை வாசிக்கையில் கண்ணீர் தாரைதாரையாகப் பெருக வாரம்பித்தது.—அவர் அதனை வாசித்து முடித்தார்: தமையனாது கருணைக்குக் களித்தார்: சாஸனத்தைத் தம் மடியில் பத்திரப்படுத்திக்கொண்டார். ஜமீன்தாரும் திரும்பி வந்தார். ஜயராமையர் உடனே அவர் பாதங்களிற் பணிந்து, "அண்ணா! நீர் இம்மாதிரியாகச் செய்துவிடுவீரென்று நான் கனவிலும் நினைக்கவில்லை; எதிர்பார்க்கவு மில்லை. ஏராளமான நுமது சொத்தைச் சட்டப்படி யடையவேண்டியவனொருவனிருக்க,—" என்று மேலே சொல்லப்போகையில், ஜமீன்தார் தடுத்து, "தம்பி! அதைக் குறித்து நீயொன்றும் பேசலாகாதென்று நான் முன்னமே யுனக்குத் தெரிவிக்கவில்லையா? நான் வரைந்துள்ளபடியே நடத்துதற்குன்னைச் சாஸநிருவாகாதிகாரியாக நியமித்தேனே யன்றி, மற்றுச் சாஸனத்தின் ஏற்றத்தாழ்வுகளை யறிந்து சொல்லக் கேட்டேனில்

லேயே?" என்று கோபக்குறியுடன் கேட்டார். ஜய ராமையர் வாய்பொத்தி, "அண்ணு! சரி சரி! மன் னிக்கவும்: உமதிஷ்டப்படியே நடக்கட்டும். ஆனல், சாஸனத்தில் எனக்குத் தெரியாத விஷயமொன் றிருக்கின்றதே, அதன் விவரமென்னையோ?" என்று கேட்டார்.

ஜமீன்தார், "நீ கேட்பது நானறிந்துகொண் டேன். பரம துஷ்டனுன ராஜப்பன் சூடாமணியை மயக்கின விஷய மல்லவா? ஆனல், நான் சூடா மணிக்கு உண்மையைத் தெரிவித்து ராஜப்பனதெண் ணம் ஈடேருமல் தடுத்துவிட, அவ்விஷயத்தைச் சூடாமணி யுனக்குப் பலதடவை வெளியிட வெத்த னித்தபோதெல்லாம், சுந்தரத்தை யிழந்து மெலிந்த உனக்கு மேலும் மனவருத்த முண்டாக்க லாகா தெனக் கருதி நானே குழந்தையைத் தடுத்துவந் தேன். சூடாமணி நற்குணத்த நங்கை, கற்புக்கரசி, மாசிலாமணி, நமது குலத்திற்கோர் திலகமேயானவள். நீ இவ்விஷயமறிந்ததாகச் சூடாமணியிடம் காட்டிக் கொள்ளற்க. சாஸனத்தி லடங்கியிருக்கும் சங்கதி களைச் சூடாமணிக்கு நானே தக்க சமயம் பார்த்து மெல்லமெல்லத் தெரிவிக்கிறேன். நீ யொன்றும் சொல்லவேண்டாம்" என்று சொல்லிப் பின்னர் வேறு சில விஷயங்களைப் பேசிக்கொண்டே தம்பியை ரவிமந்திரத்திற் கழைத்துச் சென்ருர்.

மறுநாள் ஜமீன்தாரும் சூடாமணியும் மாம்பாக்கத்திற்குப் பயணமாயினர். சூடாமணி ராமமந்திரஞ் சேர்ந்த ஒருவாரத்தில், ஜமீன்தார் அக்கம்பக்கத்திலுள்ள தனிகரையும் மற்ற ஜமீன் ஜாகீர் மிட்டாதார்களையும் கல்விமான்களையும் அவரவர் பெண்டு பிள்ளைகளுடன் தமது மந்திரத்திற்கழைத்து வெகு ஆடம்பரத்துடன் பலவித விருந்துகளிட வாரம்பித்தார். ராமமந்திரத்தில் இவ்விதமாகச் சிலநாள் நித்யோத்ஸவங்கள் நடந்தன. சூடாமணியே அம்மந்திரத்திற்குச் சொந்தக்காரிபோல வந்த விருந்தினர் யாவர்க்கும் தக்க மரியாதை செய்துபசரிக்கும்படி செய்தார். ஜமீன்தாரது விருந்தினர் யாவரும் சூடாமணியிடம் அதிக மரியாதையும் அன்பும் பாராட்டினர். சூடாமணியே அம்மந்திரத்திற்குச் சொந்தக்காரியென யாவரும் நினைத்தனர்: அவளது அன்புமிக்க உபசாரத்திற்கும் அமரிக்கையான குணத்திற்கும் பெருந்தன்மையான நடத்தைக்கும் வெகுவாகப் புகழ்ந்து பேசலாயினர். சூடாமணி பிறகு சில காலம் மாம்பாக்கத்து ஜமீனிலே தங்கியிருந்தனள்.—

சுமார் நான்கு மாதங்களாயின. ஜயராமையரும் பாகீரதியும் ராமமந்திரத்திற்குப் பன்முறை வந்து போகலாயினர்.—இடையில் தீபாவளிப் பண்டிகை நாள் வந்தது. ஜமீன்தார் சென்னையிலுள்ள தமது தங்கையின் புதல்விகளுக்குச் சில ஆபரணங்களையும்

விலையுயர்ந்த பட்டாடை முதலியவைகளையும் பரிசாக வனுப்பினர்: தன் கைப்பெட்டியில் பத்திரமாக வைத்திருந்த வைர அட்டிகையைக் கையிற்கொண்டு சூடாமணியை விளித்து, "குழந்தாய்! இதோ இந்த ஆபரணத்தை நீ பார்த்ததில்லையா? இதைத்தான் நீ முன் வாங்கமாட்டேனென்று மறுத்துவிட்டது.—இதனை நீ யப்போது விரும்பிப் பெற்றிருந்தாயானால், இப்போ துனக் குண்டாயிருக்கும் கௌரவமும் உயர்நிலைமையும் கிடைத்திரா.—நான் முதன்முதலில் இங்கு விருந்திற்கு வரும்வழியில் உனக்குச்சொன்ன சங்கதிகளை விளையாட்டாக நினைத்தாயல்லவா? அவை உண்மையாய்விட்டனவே! நானும் ஜமீன்தாரனாய்விட்டேன், நீயும் சீமாட்டி யாய்விட்டாய்: ஜோசியமும் பலித்துவிட்டது: இந்த ஜமீனுக்கு நீதான் சொந்தக்காரி ஆகப்போகின்றாய். இந்த மந்திரமும் மற்றெல்லாச் சொத்துக்களும் என் பிறகு உன்னவைகளே. இப்பொழுது நீ இவ் வைர அட்டிகையினும் மேலான வாபரணத்தை யணிந்துகொள்ளும் ஏற்றம் மிகப் பெற்றிருக்கின்றாய். இவ்வாபரணத்தை நானே உன் கழுத்திற் பூட்டுகின்றேன்" என்று சொல்லி அந்த நகையைச் சூடாமணி கழுத்திற் பூட்டி, வாத்ஸல்யத்தால் உச்சி மோந்து, மறுபடியும், "குழந்தாய்! நீ முன் பார்த்தறிந்த சாமுத்ரிகக் குறியின் பலாபலன்கள் யாவும் சொன்ன விதமே பலிக்குமென் றறுதி

யாய்க் கொள்.—ஈசன் உன தெண்ணத்தைப் பூர்த்தி செய்வான்!" என்று சொல்லி அவளைக் கடைக்கண்ணுற் பார்த்தார்.—

சூடாமணிக்கு மனத்தில் அநேக வெண்ணங்கள் தோன்றின. ஆனந்தபாஷ்பஞ் சொரிந்தாள். முன் குடுகுடுக்கைக்காரர் சொன்ன சங்கதிகளில் அவளுக்கிப்போது முழு நம்பிக்கை யுண்டாயிற்று. சுந்தரத்தை நினைத்தாள்: பெருமூச்சு விட்டாள்: விண்மாரியெனக் கண்மாரி பொழிந்தாள்: தன் பெரிய தந்தையின் கருணையைக் கருதினாள்: அவரைப் போற்றினாள்: அவருக்கு வந்தனமளித்தாள்: ஆனால், அவரது ஏராளமான சொத்து முழுவதையும் தானே யடைவது நியாயமல்ல வென் றெண்ணினாள்: இது விஷயம் தன் பெரிய தந்தையிடம் பேச வெத்தனித்தாள்: ஆயினும் அவர்க்கு மாறாகப் பேசப் பயந்தாள். அது கண்டு கிழவர் சற்றுப் புன்முறுவல் காட்டினார். சூடாமணி சிறிது தைரியம் கொண்டவளாய், அவரது பாதங்களிற்பணிந்து, "அடியேனைக் காப்பாற்றுவான் வந்த தெய்வமே! நுமது மகளாகும் பாக்கிய மெனக்குக்கிடைத்ததைப்பற்றி நான் மிகவும் சந்தோஷிக்கின்றேன். யான் சொல்வதைச் சற்றுத் தயைசெய்து கேட்கவேண்டும்.—என்னைப்போற் றங்களுக்கு நெருங்கின மற்றைப் பந்துக்களு மிருக்க, இவ்வளவு ஏராளமான சொத்து முழுவதையும் நீர் மஹா தயை

யுடன் எனக்கே கொடுத்திட்ட போதிலும், நான் ஏற்றுக்கொள்ள லாகாதெனத் தோற்றுகின்றது. என்னைப்போல் நும்மைச் சேர்ந்த மற்றவர்களும் சுகப்படவேண்டுமே. எனக்கோ எந்தையின் சொத்தே போதுமானது. மேன்மேலும் தனம் அதிகரித்துவிட்டால் மனம் மாறிப்போகும்: மதமென்னும் அந்தகாரம் சௌவிக்கொள்ளும்: தன்னைத் தானே மறக்கச்செய்யும்: அளவற்ற அநேக துன்பங்க ளுண்டாகும். இப்படிப் பல விடுக்கண்களுக்குக் காரணமாகிய அதிக தனத்தை யான் பெற்றுக்கொள்ளச் சம்மதித்தேனில்லை. என்னை மன்னிக்கவேண்டுகிறேன்" என்று சொல்லி அவர் பாதங்களைப் பிடித்துக்கொண்டாள்.

ஜமீன்தார் சூடாமணியைச் சடக்கென வாரியெடுத்துத் தம் மடியி லுட்காரவைத்துக்கொண்டு, அவளது கண்ணீர் துடைத்து, புன்சிரிப்புடன், "நற்குணத்த நங்காய்! என் கண்மணி! நின் நிகரற்ற குணத்தை நான் நன்றாக வறிந்தேன்.—நீ செல்வத்தி னுண்டாகக் கூடிய கெடுதிகளைக் கருதினையேயன்றி, அதனு லுண்டாகக் கூடிய பல நன்மைகளை ஆலோசித்தாயில்லை. செல்வத்தான் விளையும் நன்மை தீமைகள் அச்செல்வத்தை யுபயோகிப்பவர்களின் குணத்துக்கும் நடத்தைக்கும் தக்கபடி யுண்டாகின்றன.—ஓர் கத்தியானது நல்ல வைத்தியனிட மிருந்தானல், அது ரணத்தைச் சோதித்துப் பிராணனைக்

காப்பாற்றும்: அதுலே யொரு குடியனிட மிருந்த தானல், உயிர்க்கொலைக்குஞ் சாதனமாகும். செல்வம் இத்தன்மைத்தே யாகும்.—எனது ஏராளமான செல் வத்தைத் தீயாரிடம் ஒப்புவிக்க வெனக்குச் சம்மத மின்று. குழந்தாய்! நான் சுதேசம் விட்டுப் பன் னெடு நாள் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பொருளை யுன்னிட மொப்புவித்தால், என் காலத்திற்கப்பால், நீ யதை நல்ல வழிகளிற் செலவழித்துப் பலபேர்க்கு நன்மை யுண்டாக்கி நீயும் கீர்த்தியடைந்து எனக் கும் மோக்ஷ வீட்டைச் சம்பாதித்துக் கொடுப்பா யென்னும் நம்பிக்கையினல் உனக்குக் கொடுக்கத் தீர்மானித்தேன். நீ யதை யேற்றுக்கொண்டு பரோ பகார சிந்தையுடன் சாஸ்திர முறைப்படி தான தருமங்களைச் செய்து மேன்மை யடையவேண்டும். யாரும் பிறக்கும்போதியாதுங் கொடுவந்ததில்லை, இறக்கும்போதியாதுங் கொடுபோவதில்லை. கைப் பொருளை நல்வழியோ தீவழியோ உபயோகப்படுத் துவதா லுண்டாகும் புண்ணியபாவங்களே கூடுவிட் டுச் செல்லும்போது ஒருவரைத் தொடரு மென்பர். நமக்குத் தெய்வகடாக்ஷத்தினற் கிடைத்துள்ள பொ ருளைச் சந்தோஷத்துடன் நாம் அநுபவித்து நம்மை நாடிய மற்றவர்க்கும் வழங்கவேண்டும். அப்படிக் கின்றிக் காட்டு மிருகங்களைப்போற் கேவலம் உதர போஷணார்த்தமட்டும் பொருட் செலவிடலாகாது.—

குழந்தாய் சூடாமணீ! நீ பல வேழைக்குடும்பங்க ளுக்குப் பொக்கிஷக்காரியாயிருந்து லோகத்திற்குப் பேருபகாரம் புரிவாயென்று நம்புகின்றேன்" என்றார். சூடாமணி அவர் சொல்லியவற்றிற் கிசைந்ததாகச் சிரங்குவித்தாள்: ஜமீன்தார் வெகு சந்தோஷ மடைந்தார்.



15. யோகாநுஷ்டானம்

ஜமீன்தார் கோபாலையர் பாலியத்தே தானே ஆத்ம விசாரணை செய்யத் தொடங்கிப் பெரியோரது அநுக்ரஹம் சம்பாதித்து யோகாப்யாஸம் செய்துவந்தார். நேட்டால் முதலிய விடங்களிலும் தமது வாழ்நாளை வீணாக்காமற் றிரவியத்தை யேராளமாகச் சேகரித்ததுமன்றிப் பரலோக ஸாதனார்த்தம் ஒய்வு நேரங்களில் அடிக்கடி நெடுநேரம் யோகநிஷ்டையிலிருப்பது வழக்கம்.—

இவர் ஆற்றூர்ப்பண்ணையி லிருந்த சமயத்தில், எவர்க்கும் தெரியாமல் தமது சயநக்ரஹத்தின் கதவுகளை மூடித் தனிமையாக வுட்கார்ந்து யோக நிஷ்டையி லிருப்பதுண்டு. அது நாளாவட்டத்தில் ஜயராமையருக்கும் சூடாமணிக்கும் தெரிந்தது.— ஒரு நாள் ஜயராமையர் தமது தமையனாருடன் வேதாந்த விஷயமாய்ப் பேசிக்கொண்டுவருகையில், ஸம்பாஷணை யோகாப்யாஸத்தைக் குறித்துத் திரும்

பவே, கோபாலையர் தமது சகோதரனின் அபிப்பிரா யத்திற் கிணங்கி அவ் யோகாப்யாஸ நிலையைப் பற்றி விரிவாய் எடுத்துரைக்கலாயினர் :—

"அப்பா, தம்பி ஜயராமா! நீ ஆத்ம விசாரணை செய்திருக்கின்றா யென்பதை நோக்க வெனக்குப் பெருமகிழ்ச்சி யுண்டாகின்றது. ஆனல், நின் மனம் பரிபக்குவமாவதற்கு இன்னும் சில காலம் செல்லும். கடைத்தேறவேண்டு மொருவன் உலகப்பற்றினின் றும் முற்றும் விட் டகலவேண்டும். ஆனபோதிலும் உனக்கு நான் சில சங்கதிகளை யுபதேசிக்கின்றேன். அவற்றைக் கருத்துட னேற்று விதிப்படி யொழுகு வையேல், நீ பரமேச்வரன் கருணை மிகப் பெற்று, இறுதியில், அவனுடைய ஸாமீப்ய ஸாரூப்ய ஸாயுஜ்ய பதவிகளைப் பெற்று ஜீவன் முக்தனுவாய்.—

"தம்பி! மனத்தை நாற்புறமுமோட்டா தொரு வழிப்படுத்தி யொரேபொருளின்கண்ணே நாட்டி யசையாமற் கட்டுதலே யோக மெனப்படும். அறம் பொருளின்பங்களிற் பற்றுத் துறந்து, 'ஊரிலாமல் குணமிலாமல் குறியிலாமல் செயலிலாமல் உரைக்கும் பேரிலாமல் ஒரு முன்னிலாமல் பின்னிலாமல் பிறி தோர் சாரிலாமல் வரல்போக்கிலாமல் மேலிலாமல் தனக்கு நேரிலாமல்' நித்தியமாய் விளங்காநின்ற பர ப்ரஹ்மத்தை நாடி, மெய் வாய் கண் மூக்கு செவி யெனும் ஐம்பொறிகளின் சேஷ்டை யொடுக்கி, ரேச

கம் பூரகம் கும்பகம் எனு முபாயங்களினால் இடைபிங் கலை யென்னும் சுவாஸநாடிகளின் காரிய மடக்கி, மூலாதாரமாகிய பிராணவாயுவை யெழுப்பி நாதத் தோடு கலக்கச் செய்து, சுழிமுனை வழியாய்ச் சிதா காசத்திற் பிரணவாகாரத்தைக் கண்டு ஆனந்தமடை வதுதான் யோகநிலை யென்பர்.—யோக மென்பது முக்கியமாய்க் கர்மயோகம் ஹடயோகம் ராஜயோகம் என மூவகைத்து:—இம்மையிற் பெருவாழ்வு கருதி, இச்சித்த தொரு காரியத்தின் சித்தியை முன்னிட்டுத் தான் விசுவசித்த கடவுளை வைராக்கியத்துட னர்ச் சித்துப் போற்றி வழிபட்டு, அதன் பொருட்டுக் கடின தவ விரதங்க ளனுட்டித்துவருவது காம்ய கர்மயோக மென்றும், இம்மையில் எத்தகைப் பிரதி பலனையும் எதிர்பாராமற் கேவலம் ஈச்வர முகோல் லாஸத்தைமட்டுமே யுத்தேசப்பொருளாகக் கொண்டு தவ முதலிய வேற்றொழுகுதல் அகாம்ய (நிஷ்காம்ய) கர்மயோக மென்றும் சொல்வர். முன் கூறப்பட்டதை முதலிரண்டு ஆச்சிரம நிலைகளிலிருப்போரும், பின் கூறப்பட்டதை மற் றிரண்டு ஆச்சிரமத்தோரும் பெரும்பான்மை மேற்கொள்வர். இவ் விருவகைக் கர்மயோகங்களுள் எதனை மேற்கொள்ளினும் சான் றதே யாகும்: எனினும், யாவும் தத்தம் விதியின் பயனே யாகு மாக, நமக்கு நன்மை சேர்த்தலும் தீமை புகுத்தலும் எல்லா மறிந்த கடவுளின் கட

மையே யெனத் துணிந்து அவன் அறிந்தவர் தளித்த நன்மை தீமைகளைச் சந்தோஷத்துடனும் திருப்தியுடனு மேற்று, அவனிடத் தெக்காலத்தும் பக்தி குன்றாமல் நன்னெறியே கடைப்பிடித் தொழுகுவதாகும் அகாமியகருமமே சிரேஷ்டமெனக் கருதப்படும். பிரம்மசாரியனொருவன் தனக்கு விவாஹமாகவேண்டு மென்றும், கிரகத்தன் மக்கட் பேறுஞ் செல்வமும் அடையவேண்டுமென்றும், நியாய சபையில் வழக்குத் தொடுத்தானும் தொடுக்கப்பட்டானும் தம் தம் பக்ஷமே தீர்மானமாகவேண்டுமென்றும், வியாதிக்ரஸ்தன் தன் நோய் நீங்கவேண்டுமென்றும், வித்யார்த்தியாமொருவன் கல்விச் சபையிற் சன்மானம் பெறவேண்டுமென்றும், இன்னன பற்பல பலன்களை யுத்தேசித்துச் செய்யும் நித்திய தேவதாராதனம் ஆலயஞ்சுற்றல் தீக்ஷையேற்றல் முதலிய விரதங்கள் உத்தேசங் கைகூடும்வரையிற்றான் செய்யப் பட்டுப் பின்னர் பெரும்பான்மையோரால் கைவிடப் படுகின்றன வாதலின், மற்றதினும் இத்தகைக் காமிய கருமம் இழுக்குடையதாகக் கருதப்படுகின்றது. ஆகினும் நாளடைவில் இவ்வொழுக்கமும் ஞானத்தைத் தந்து அதன் மூலமாய் அகாமிய கருமத்திற்கும் சாதனமாகிச் சிறப்பதுண்டு.—

"யோகமாசரிக்கும்போது ஐம்புல நுகர்ச்சி கொன்று, கந்தமூலாதிகளைப் புசித்து, யமம் நியமம்

ஆஸனம் ப்ராணுயாமம் ப்ரத்யாகாரம் த்யானம் தாரணை ஸமாதி யென்னும் அஷ்டாங்க யோக முறைகளினுல் அல்லும் பகலும் சரீரகஷ்டம் நோக்காமற் பூமியில் நாற்றிசைக்கு நான்கு தீக்குண்டங்களும் மேலே சூரியனுமாகப் பஞ்சாக்கி மத்தியிலும் நீர்நிலையிலும் மழையிலும் காற்றிலும் யாதோ ராதரவுமின்றி ஆகாயத்திலும் நின்று தனதெண்ணம் ஆந்தனையுஞ் சலியாமல் ஹடங்கொண்டு தத்தேகத்தியானநிஷ்டையி லிருப்பது ஹடயோக மெனப்படும். இவ் யோக முஞற்றுதல் சரீரத்திற்கு அதிக கஷ்டத்தைக்கொடுக் குமாதலால், கருணையே யுருக்கொண்ட கடவுள் இங் ஙனம் தம்மக்கள் செய்யும் ஹடத்திற்கு ஆற்ருதவ ராய் அவர்கள் வேண்டுவன வளித்துக்காப்பர். இஃது சாமானியரால் அப்பியாசஞ் செய்தற்கு வெகு கடி னமானது: ஹிரண்ய ராவண கும்பகர்ணுதி ராக்ஷ சர்களால் அநுஷ்டிக்கப் பெற்றது: காரிய சித்தி யடைந்ததும் இத்தவத்தையாசரித்தோர் தம் பழைய நடவடிக்கைகளைக் கைக்கொள்வது முண்டு. இது போன்ற தவவிரதங்கள் குருவுபதேசம் பெற் றனுஷ் டிக்கப்பட்டாலன்றி, காரிய சாதன மாகாமற்போவ துடன் உடலுக்கு நாசமுமுண்டாகும்.—தக்க ஆசான் வதும் கடைப்பிடித்த காரியங் கைகூடுவதும் முன் செய்த நல்வினையின் பயனேயாகும்.—

"மேற்கூறிய விரண்டினும் சிரேஷ்டமானது

ராஜயோக மெனப்படும். அதனை யநுசரிப்பவன் வீடு வாசல் பெண்டு பிள்ளைகளைத் துறந்து வெளிப் போக வேண்டாம்: க்ரஹஸ்தாச்ரமத்தி லிருந்து கொண்டே பழகிவரலாம்.—மனத்தைப் பலவழிகளிற் செல்லவிடாமல் ஓரே நிலையில் நிறுத்தி வசப்படுத்து வதற்காகத் தன் வழிபடு கடவுளின் பிம்பத்தை மனத்தே யிருத்தி அதையே இடைவிடாமல் தியா னித்தும், தான் உபதேசம பெற்ற மந்திரத்தைப் பலதரம் ஜபித்துருவேற்றியும், நிஷ்காம்ய கர்ம நிஷ் டாபரனாய் மனத்தைத் தன்னிடத்தே பிணைப்படுத்த வேண்டும். அநுதினமும், இயன்றபோதெல்லாம், சந் தடியற்ற விடத்தி லுபர்ந்தகோ ராசனத்திற் சற்று நேரம் ஏகாந்தமாக வமர்ந்து மனத்தே வேறு நினைப் பின்றித் தான் பூஜித்துவரும் தெய்வத்தின் திருவுரு வப்படத்தை ததேகத்யானமாகவுற்றுப் பார்த்தவண் ணமே தன்னை மறந்துவிடப் பழகவேண்டும். இஃது அப்யாஸயோக மெனப்படும். இவ்வப்பியாசயோகத் தினுல் காளடைவில் தன் சித்தத்தை நிற்கவேண்டு மிடத்தே நிறுத்தச் சுவாதீனமுண்டாகும். அதன்பின் னர் பரமநிஷ்டையிற் கூடவேண்டும். ஈச்வர கடா க்ஷத்தினுல் மனம் பரிபக்குவமடைந்த காலத்தில் நிஷ்டை செய்பவர் தாம் தியானிக்கும் ரூபத்தைத் தமது ஹ்ருதயாகாசத்திற் காணவுங் கூடும். அப் பொழுது அன்னவர்க்குப் புதுவாழ்வும் ஞானமும்

உண்டாகி, இறுதியில், மோக்ஷஸாம்ராஜ்யம் சித்த மாகக் கிட்டும். அதனால் ஜன்மஸாபல்யமாகும்.— இந்த ராஜயோகத்தை எல்லா வாச்சிரமிகளும் நாடி மேற்கொள்ளுதல் நலம். இத்தகை ராஜயோகானுஷ் டானத்தினால் எவர்க்கும் நன்மை யுண்டாகுமே யன் றித் துன்பமென்பதொத்துணையும் அணுகமாட் டாது. அப்பசித்தவளவுக்குத் தக்க பலன் கிட்டா தொழியாது: இடையில் விட்டுவிட்டதனால் கெடுதிபு நேராது. த்ருவ ஜநகாதி மஹான்கள் அநுஷ்டித்து வந்தது இந்த ராஜயோகந்தான். பல்வகைய யோகங்களெல்லாவற்றினும் இஃது உயர்ந்த தாகை யினால் இதற்கு ராஜயோகமெனப் பண்புப்பெயரா மாண்புப்பெயர் வாய்ந்தது.—

“தம்பி! கேள்.—கர்மயோக ஹடயோக ராஜயோ கங்களின் அநுஷ்டான முறைகளையும் அதனதன் பலாபலன்களையும் ஒருவா றுனக் கெடுத்துச்சொன் னேன்.—யோகமுயற்சி பலககூடவேண்டுமாயின், குருவுபதேசம் இன்றியமையாதது. குருவுபதேச மானது மந்திரங்கள் மூலமாகத்தான் செய்யப்படும். ஸர்வஜகத்தும் தெய்வாதீனமாகும்: அந்தத் தெய் வமோ மந்திரங்கட்கு ஆதீனப்பட்டதேயாகும். ஆத லாற் கடவுளை யடைதற்கு மந்திரஞானமே பெருங்கருவி யாகும்.—மந்திரமென்பது மறைமொழியே. எல்லா வுலகும் வேதத்தினிடத்தே பொருந்துமாக, எப்பொ

ருட்கும் உற்பவத்தானம் மந்திரமேயாம். யாதொன்று பிறத்தலும் வாழ்வுபெருகலும் முதலழிதலும் மந்திரத்தானே. மந்திரத்தால் தேவர்கள் போற்றப்பட்டு வேண்டுவன வளிக்கின்றனர்: மந்திரத்தால் தேவர்களும் சபிக்கப்பட் டழிகின்றனர்: இனி, மானிடராகுநமக்கு மந்திரம் எத்துணைச் சிறந்ததோ அறிமின்.—அன்னையிட்ட சாபத்தா லக்கினிக் கிரையாகும்படி நேர்ந்த தக்ஷகனுக்குச் சரணமளித்த தேவேந்திரன்தானும் ஜனமேஜயனது ஸர்ப்பயாகத்திற் கிரையாகுமாறு இழுக்கப்பட்டதும், பின்னர் அத்தேவேந்திரனும் தக்ஷகனும் தமக்குற்ற வாபத்தினின்றும் மீட்கப்பட்டதும், நகுஷ மஹாராஜன் தேவேந்திரனையோட்டித் தானே பிரதியிந்திரனானதும், அன்னவனே அகத்தியர் சாபத்தால் மாசுணமாகி யந்நிலைகெட்டதும், தசகண்ட ராவணன் தன்னிகரில்லா மஹிமை பெற்றுச் சிறந்ததும், அவனே இருடிகளின் சாபத்தாற் சீர்குலைந்திறந்ததும், இவையாவும் மந்திர வலிமையினாற் லன்றி மற்றொருதனாற்கொலோ? ஆதலால், நன்மந்திரத்தைத் தக்க வாசானிடம் உபதேசம் பெற்றுப் பக்தி ச்ரத்தையுட னொருவன் போற்றுவானாயின், அதா னாகாத காரியம் யாது மிலதாகும்.—தம்பி ஜயராமா! இற்றை நான் சில மந்திரங்களை யுனக் குபதேசம் பண்ணுகிறேன், பெற்றுக்கொள். இன்னும் உனக் கிவ்விஷயத்தில் நான் சொல்லவேண்டியது மிகுதியு மில்லை. நீ என்னிடம்

கேட்ட விஷயங்க ளெல்லாமும் உபதேசமாகக் கொண்டு தக்க நிலை யேற்று ஆத்மஞானம் பெற்றுக் கடவுளின் அருளுக்குப் பாத்திரனுவாயென்று நம்புகின்றேன்."—

இவ்வாறுகக் கோபாலையர் தாம் சொல்லிவந்த யோகநிலையைப்பற்றிய உபநியாசத்தை யுபஸம்ஹரித்து ஜயராமையருக்குச் சில மந்திரோபதேசஞ் செய்தார். ஜயராமையர் அதனை வெகு சுசி பக்தி விசுவாஸங்களுட னேற்றுத் தமையனுரைக் குருவாகப் பெற்றதற்கு மிகுதியும் மகிழ்ந்தார்.

16. ஆபத்ஸங்யாஸம்

ஒரு நாள் ஜமீன்தாருக்கு வழக்கம்போல் இழுப்புவலி தோன்றி அதிக கஷ்டத்தை யுண்டாக்கிவிட்டது. உடனே தக்க வைத்தியர்கள் வரவழைக்கப்பட்டபோதிலும், வியாதியோ நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டேவந்தது. இனிப் பிழைப்பது அசாத்திய மெனத் தோன்றவே, ஜமீன்தார் தமது தம்பி தங்கை சூடாமணி முதலியவர்களைச் சமீபத்தில் வரவழைத்து, தாம் சாஸ்திரப்படி ஆபத்ஸங்யாஸ மேற்பதற்கு வேண்டு மேற்பாடுகளை யக்கணமே செய்யும்படி உத்தரவு செய்தார்.

ஜயராமையர் அதற்கு வேண்டிய வேற்பாடுகளைச் செய்வதற்காகத் திரும்புகையில், வக்கீலிடமிருந்து ராஜப்பனது நன்னடக்கையைக் குறித்துக் கடிதமொன்று வந்தது. ஜமீன்தார் அதை வாசித்துத் தமது தம்பியினிடம் கொடுத்தார். ஜயராமையர் அதைப் பார்த்துத் தமையனாரது பாதங்களிற் பணிந்து, "எனதண்ணா! சத்திய நெறியினின்றும்

ளள் முனேயளவேனும் பிறழாத் தர்மஸ்வரூபியாம் நீர் உலகப்பற்றைத் துறக்க உத்தேசிக்குமிச்சமயம் அடியேனது வேண்டுகோளுக் கிணங்குவீரென்று வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன். நான் ஆறுமாதகாலமாய் இவ்விஷயத்தைக் குறித்து நும்மிடம் பேசப் பன்முறை யத்தனித்தபோதிலும், தேவரீர் என்னே யவ்வப்போது தடுத்துவந்தீர். நும்முடைய ஏராளமான சொத்திற் பெரும்பாகம் சூடாமணிக்குச் சேர வேண்டுமென்று சாசன மெழுதியிருக்கின்றீரே: எனக் கிப்போதிருக்கும் ஸ்திதியே சூடாமணிக்குப் போதுமானது: மேலும், சாசனத்தி லெழுதியுள்ளவாறு எனக்கும் உம்முடைய் சொத்திலிருந்து ஐந்து லக்ஷம் ரூபாய் சேருகின்றது. எனக்குப் பிந்தி இந்தத் தொகையும் சூடாமணிக்கே சொந்தமாகுமன்றோ? பணமுற்றும் வர்த்தக முதலியவற்றில் தோற்றுப் பிறர் சகாயத்திற் கெதிர்பார்த்துநிற்கும் நமது ராஜப்பனுக்கோ அரை லக்ஷம் ரூபாய்தான் கொடுத்திருக்கின்றீர். ஞாயமாய்த் தங்களுடைய சொத்து முழுமைக்கும் அவனே பாத்யஸ்தன். நான் அந்நிய கோத்திரத்திற்கு ஸ்வீகாரமாகக் கொடுக்கப்பட்டேனுகச் சட்டப்படி எனக்காவது சூடாமணிக்காவது உமது சொத்துக்குப் பாத்தியமில்லே. மாமன் சொத்துக்கு மருமகனே கர்த்தனுவா னன்றோ? அன்றியும், உம்முடைய உத்தரக்கிரியைகள் யாவும் அவனுற்றுன் செய்யப்படவேண்டுமென்பதையும் சற்

றுக் கவனிப்பது ஆவசியகம். அவனும் இப்போது மிகவும் யோக்கியனு யொழுகுவதாகக் கேள்விப்படு கின்றோம்: ஆகையா லவன் விஷயத்தில் நீர் கொண்ட தீர்மானத்தை மாற்றித் தக்கபடி யாலோசிப்பீரென்று வேண்டுகின்றேன்" என்று தீனமாய்க்கேட்டுக்கொண் டார்.

ஜமீன்தார் தம்பியை யழைத்துப் பக்கத்தி லுட் காரவைத்துக்கொண்டு, "ஜயராமா! உனது பெருங் குண மெனக்கு நன்றாகத் தெரியும். இவ்விஷயங் குறித்து நீ எந்த விதமான சிபார்சு மெனக்குச் செய்யலாகாதென முன்னமே யுனக்குக் கட்டளை யிட்டேனே. நீ சொல்வதெல்லாம் ஞாயமே யெனி னும், ராஜப்பன் என்னை யேமாற்றும்பொருட்டே யிப்போது நன்மார்க்கத்திலே யிருப்பதாக வேஷங் காட்டித் திரிகின்றான். அவனது குணாதிசயங்களை நான் நன்றாக வறிந்துகொண்டேன். இப்போ தவன் செய்வதெல்லாம் பெருமோசமெனவே எனக்குத் தோற்றுகின்றது: ஆகையால் நீ அவ்விஷயத்தைக் குறித்து இனிப் பேசலாகாது. நான் செய்திருக்கு மேற்பாடுகள் யாவும் தெய்வ சம்மதமானவை யென்றே யுறுதியாக நம்புகின்றேன்" என்று சொன் னார். ஜயராமையர் மௌனமா யிருந்துவிட்டார்.

யாவும் கவனித்துக் கேட்டுவந்த சூடாமணி தன் மூத்த தகப்பனாரை நமஸ்கரித்து, அவர் தனக்குத்

கொடுத்திருக்கும் சொத்து முழுவதையும் ராஜப் பனுக்கே கொடுத்துவிடவேண்டுமென்று அவரைப் பலவிதமாய் வற்புறுத்தி வேண்டினுள். அங்ஙனம் வேண்டியதால் முன்னம் தான் அவனிடத்துக்கொண் டிருந்த அபிமானம் மறுபடியுங் கொண்டதாக நினைக் கக் கூடாதென்றும், அவனது தற்கால நிலைமையும் யோக்கியமான நடவடிக்கையும் கருதியே யவனுக்கு நியாயம்புரிதல் தகுமென்று தயாவிஷயமாய்ச் சொன் னதாகவும் தெரிவித்தாள். ஜயராமையரும் அது நோக்கித் தைரியங்கொண்டு தமது மகள் சொல்லும் விதமே நடத்துவது உசிதமான காரியமென்று மறு படியு மெடுத்துச்சொன்னுர். அதுவரையிலு மொன் றும் பேசாதிருந்த பாகீரதியும் ராஜப்பனது விஷய மாய்ச் சிபாரிசு செய்து கண்ணீ ருகுத்தாள்.—

இங்ஙனம் யாவருமொருமிக்க வற்புறுத்தியதால் ஜமீன்தார் அதிக மனவருத்தத்துடன் அவர்களைத் திருப்தி செய்யும்பொருட்டே தம் சொத்தின் விஷய மாய் வேறு ஏற்பாடுகளைச் செய்வதாக ஒப்புக்கொண் டார். முன்பு ஜயராமையரிடம் பத்திரப்படுத்தப் பட்ட சாஸனம் ஆற்றூர்ப் பண்ணையிற்றுனே யிருந் தமையால், இப்போது அதனை ரத்துசெய்து வேறு சாசன மெழுதினர்.—

ஜமீன்தார் தம் சாஸனத்தின் நிருவாகாதிகாரம் தம்பியாகிய ஜயராமையருக்கே கொடுத்தார்: தவிர,

தாம் வியோகமடைந்த பின்னர், ராஜப்பன் அயோக்கியனாக ஸ்தாபிக்கப்படும் பக்ஷத்தில், தாம் நம்பியுள்ள ஸர்வசக்திக்கடவுள் அவனுக் கேற்பட்ட சொத்திற் சிறிதளவும் சேராவண்ணம் தண்டிப்பாராக வென்றும், அப்போது அந்தச் சொத்து முற்றும் சாந்தமும் தயையும் நன்னெறியுமே யுருக்கொண் டெழுந்த சூடாமணிக்கே சேரும்படியாக அனுக்ரகிப்பாராக வென்றும் சேர்த்து ஜமீன்தார் சாஸனத்திற் கையொப்பமிட்டு, அதைத் தமது தம்பியினிடங் கொடுத்துப் பத்திரப்படுத்தச் சொன்னார்: பிறகு சூடாமணியின் பெருந்தன்மைக்குப் புகழ்ந்து பேசி, தாம் நிஜபக்தராக விருக்கும் பக்ஷத்தில், அநுதினமும் தாம் பூஜித்துவரும் பாஸ்கரக்கடவுள் சூடாமணியே அந்தச் சொத்து முழுவதும் பெறும்படியாக அனுக்ரகிப்பாரென்று உறுதியாகச் சொன்னார்.—

தமது தமையனாரின் அபிப்பிராயப்படி ஜயராமையர் வேதவித்தகர் பலரை வருவிக்க, மறுநாட் காலை ஜமீன்தார் சாஸ்திர விதிப்படிச் சந்நியாச ஆச்சிரமம் பெற்றார்: உலக வின்பங்களைத் துறந்தார்: ருத்ராக்ஷம் கமண்டலம் காஷாயம் ஜடை தண்டம் ஆகிய பஞ்சமுத்திரையை மேற்பூண்டார்: அன்னபானாதிகளைத் தவிர்த்தார்: மாளிகை விட்டு வீதியடியேறி மரத்தடி சேர்ந்தார்.—நாத்தழும்பேற வேதங்களை யோதுவார்: ஹரஹரரவென்பார்: ஆனந்தக் கூத்தாடுவார்.—பஞ்சாக்னி மத்தியில் பத்மாஸனக்

கொள்வார்: கண்களை மூடிக் கடவுளைத் தியானிப்பார்: பொறிகளை யடக்கிப் புருஷோத்தமனைப் பூஜிப்பார்: நிர்மல நிஷ்டையில் நீடித்து நிற்பார்.—

இப்படி மூன்று நாட்கள் கழிந்தன: ஜயராமையர் ஜமீன்தாரதுநிலைமையைப் பலராமையர் சுப்பையர் ராஜப்பன் முதலியோர்க்குத் தெரிவிக்கவே, அவர்கள் யாவரும் நான்காநாள் ராமமந்திரம் வந்து சேர்ந்தனர்.

ஐந்தாநாட்காலை வேதியர் குழாம் வேதங்களோதச் சுற்றத்தார் சூழ்ந்து நிற்கக், கண்களை மூடிச் சமாதியோகநிஷ்டையிலிருந்த கோபாலையர் தம் கபாலம் படீரென வெடித்துப் பரமனைச் சேர்ந்தார்.

சாஸ்திர முறைப்படி அவருக்கு நடக்கவேண்டிய சமாதி முதலிய சடங்குகள் யாவும் சரிவர நடத்தப்பட்டன.

17. தைவிகம்

சாஸனத்தின் வரலாறு எவர்க்கும் தெரியாதிருக்கும்வண்ணம் ஜயராமையர் முன்ஜாக்கிரதையெடுத்துக்கொண்டார்: உத்தரக்ரியை முடியும்வரையில் சாஸனத்தின் விவரங்களை எவர்க்கும் தெரிவிக்கக்கூடாதென்று பாகீரதியம்மைக்குத் திட்டம் செய்தார்: பலராமையர் முதலாயினவர் பணத்தாசையினால் ராஜப்பனைக் கலகஞ்செய்யத் தூண்டிவிடக்கூடுமென்றெண்ணி யவனைத் தம்மிடமே யிருத்திக்கொண்டார்: அவனுக்குத் தம் படுக்கையறையிற்றானே இடம் கொடுத்து அவனிடம் வெகு அன்பு பாராட்டினார். ஜமீன்தார் சித்தியடைந்த மூன்றும் நாள் வக்கீல் ராமஸ்வாமிஐயர் சென்னையிலிருந்து வந்துசேர்ந்தார். ஜயராமையரும் வக்கிலும் தனித்துப் பேசவேண்டிப் புஸ்தகசாலைக்குட் சென்று கதவுகளை மூடிக்கொண்டனர்.

ராஜப்பன் தான் வந்ததுமுதல் ஜமீன்தார் தமது சொத்துக்களை விநியோகஞ்செய்த விவரத்தை யறிந்து கொள்ள எவ்வளவோ சாமர்த்தியமாக முயன்றானாயினும் முடியவில்லை. ஆனபோதிலும் மெப்படியாவது அதை யறிய வேண்டுமென்று மாவல் அவனுக் கதிகரித்தது: ருத்ராக்ஷ பூனைபோற் சமயம் பார்த்திருந்தான்: தன் மூதன்னையிடமிருந்து நடந்த சங்கதி தெரிந்துகொள்ள முயன்றான். ஆனால் சூடாமணி தன் அத்தையை யொரு நிமிஷமாகிலும் விட்டுப் பிரியாமலிருந்தாள்.—பாவம்! என் செய்வான் ராஜப்பன்!

வக்கீலும் ஜயராமையரும் தனித்துப் பேசச் சென்றதைப் பார்த்திருந்த ராஜப்பன் அதுதான் வாய்த்த சமயமென வெண்ணிச் சற்று நேரத்திலெல்லாம் புஸ்தகசாலையின் கதவுக்குப்பின்னர் பதிந்திருந்து ஒற்றுக்கேட்டான். இவன் மறைந்து ஒற்றுக்கேட்கத் தலைப்பட்டபோது அறையில் இரண்டாம் சாஸனத்தைப்பற்றி விரிவாய்ப் பேசிக்கொண்டிருந்தனர். சங்கதி முற்று மறிந்தான்: சந்தோஷ சாகரத்தில் மூழ்கினான்: மறை விடத்தை விட்டு வெளியே போந்து மந்திரத்தைச் சுற்றிப் பார்த்தான்: மந்திரமும் ஜமீனும் தனதாய்விட்டதென ஆநந்தக் கூத்தாடினான்: தருமத்திற்கெனக் குறித்த தொகை அநாவசியமான செலவென நினைத்தான்: முற்றும் தனக்

குச்சேரவேண்டிய தன் மாமன் சொத்தில் ஜயராமை யர் முதலாக அந்நியர் எத்துணை யடைவதும் வழி பறிக் கொள்ளேயே யென நினைத்தான் : மனம் வெந் தான் : வெகுநேரம் தனித்து ஆலோசனை செய்தான் : மற்றவர்களுக்கு ஒரு பைஸாவாகிலும் சேரலாகா தென்று தீர்மானித்துக்கொண்டான் : அன்று முழு வதும் தீர்க்காலோசனையா யிருந்தான் ராஜப்பன்.—

ஜமீன்தார் சித்தியடைந்த ஒன்பதா நாள் ராஜப் பன் வழக்கம்போல் இரவு ஜயராமையருடன் அவரது அறையிற் படுத்துக்கொண்டான். ஜயராமையர் தூங் கிவிட்டார். நடு நிசியில் யாதோ சந்தடி கேட்டது போ லிருந்தது. ஜயராமையருக்குத் தூக்கம் கலைந் தது : ஆனல் மயக்கம் தெளியாததனல் அவர் கண்களை மூடிக்கொண்டிருந்தார்: யாரோ அறை யில் நடமாடுவதாகத் தோன்றிற்று: பிறகு கண்களை மூடியவாறே தம் குரலைக் கொடுத்தார்.

உடனே ராஜப்பன், "என்ன மாமா! நான் இப்பொழுதுதான் வெளிக்குப்போய்க் கைகால்களைச் சுத்திசெய்துகொண்டு வருகின்றேன். கதவு திறக் கும்போது காற்றினல் விளக்கு அணைந்துவிட்டது" என்று சொல்லிக்கொண்டே தன் மஞ்சத்திற் படுத் துக்கொண்டான். ஜயராமையர் கள்ளங் கபடற்றவ ரானதாற் சந்தேகம் நீங்கி மறுபடியும் தூங்க வாரம் பித்தார்.

மறுநாள் துவக்கி மூன்று நாள் ஜமீன்தாரது உத்தரக்கிரியைகள் யாவும் வெகு ஆடம்பரமாக முடிந்தன. மூன்று நாள் இரவுதான் சாஸனத்தை வெளிப்படுத்தவேண்டிய சமயம். பகல் மூன்று மணிக்கு வக்கில் ஜயராமையரைக் கண்டு, "நண்பரே! பழைய சாஸனத்தையும் நீர் சித்தமாக வைத்திருக்க வேண்டும். ஏனெனில், பணத்தாசை கொண்ட நமது மைத்துன ரிருவரும் புதிய சாஸனத்திற் சுருக்கிச் சொன்ன சங்கதிகட்குத் திருப்தி படையா விட்டால், அவர்களது குணதிசயங்கள் யாவற்றையும் விவரமாகத் தெரிவிக்கும் பழைய சாசனத்தை வாசித்துக் காட்டவேண்டியது ஆவசியகமாகும்" என்று சொன்னர். ஜயராமையர் உடனே தம் பண்ணைக்குச் சென்று சுமார் ஆறுமாதத்திற்கு முன் தம்மிட மடைக்கலமாக்கப்பட்ட பழைய சாஸனத்தை யெடுத்துக் கொண்டு அந்தியில் ராமமந்திரம் வந்து சேர்ந்தார்.

இரவு யாவரும் ஆஸ்தான மண்டபத்து ஒன்று கூடிச் சுபஸ்வீகாரணச் சடங்கு முடிந்ததும், வக்கீலயர், "ஜயராமையரே! காலஞ்சென்ற ஜமீன்தாருடைய மரண சாஸனத்லதக் கொண்டுவாருங்கள். இங்கிருப்பவர்களுக்கு அவரது அபிப்பிராயத்தை வாசித்துக் காட்டவேண்டிய சமயம் இதுவே" என்ருர். ஜயராமையர், "நண்பரே! எனதருமைத் தமையனர் ஸங்யாஸம் பூணுவதற்கு முன் அரக்கு முத்திரைகளிட்டு என்னிடங்கொடுத்த சாஸனத்தை என்

படுக்கையறையிலுள்ள இருப்புப் பெட்டியிற் பத்திரப்படுத்தியிருக்கிறேன். பெட்டியைத் திறக்கும் போது உங்களில் யாராவது கூட விருப்பது நலம்" என்று சொல்லி யெழுந்தார். பலராமையர் வெகு ஆவலோடு வக்கிலுடன் ஜயராமையரைத் தொடர்ந்து சென்றார்.

மூவருமாகப் படுக்கையறைக்குட் செல்ல, ஜயராமையர் இருப்புப்பெட்டியைத் திறந்தார். சாஸனம் காணப்படவில்லை: திகிலடைந்தார்: "சாஸனம் காணோம்! சாஸனம் காணோம்!!" என்று கூக்குரலிட்டு, உடனே யோடிவந்து ஆஸ்தான மண்டபத்திலுட்கார்ந்திருந்த ராஜப்பனை யதட்டி, "துஷ்டா! நின் அயோக்யதை வெட்டவெளியாய்விட்டது! நீதான் அந்தச் சாஸனத்தைத் திருடிக்கொண்டனை. சீக்கிர மதனைத் தருவி!" என்று வெகு கோபமாய்க் கேட்டார்.

ராஜப்பன் ஒன்று மறியாதவன்போற் பிரமித்து நின்றான். பலராமையரும் சுப்பையரும், "சீ! திருட்டுப்பயலே! நீதான்சாஸனத்தைக் கைப்பற்றினை. அதனைச் சீக்கிரம் தராவிடின் ஈங்கே நின்றுயிரைப் போக்குவோம்!" என்று அவனை மிரட்டினர். ராஜப்பன் அவர்கள் சொல்வதெல்லாம் பொய்யென்று மறுத்து, ஜயராமையரைத் தூஷித்தான். ஜயராமையர் மிக்க கோபமடைந்து, "மூடா! உன் துஷ்டத்தனத்தை

இன்னும் விட்டிலேயே! நீ சாஸனத்லைதக் களவு செய்தது உண்மையே. அதை நீ இந்த க்ஷணமே வெளிக் காட்டாவிடின் அதிக நஷ்ட முண்டாகும். அன்றிரவு நீ என் மடியிலிருந்து சாவிக்கொத்தைத் திருடி இருப்புப்பெட்டியைத் திறந்த விதத்தை வெளியிடட்டுமா?" என்று கேட்டார். ராஜப்பன் பின்னும் மறுத்தான். ஜயராமையர் அன்றிரவு நடந்ததை யாவர்க்கும் விவரமாக வெடுத்துச் சொன்னார். பலராமையரும் சுப்பையரு மொன்றுசேர்ந்து ராஜப்பனது பிடரியைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, "அடா சண்டாளா! சாஸனமொன்றுமே யில்லாவிட்டாற் சொத்து முழுவது முனக்கே சேருமென்ற துராசையினால் நீ யதை யடக்கிவிட முயல்கின்றாய். அஃது எத்தகையு மொவ்வாதுகாண்! சாஸனத்தைச் சீக்கிரம் கொண்டுவருதியோ இலேயோ? இலேயேல் உனக் கபாய முண்டாகும். சத்தியம்!" என்று அதட்டிக் கேட்டனர். ராஜப்பன் அவ்விருவரையும் அதட்டித் தள்ளி, "சீ! துஷ்டப் பயல்களே! மூடுங்கள் வாயை! இதுவரையிற் பொறுத்தேன். ஏதோ என் மாமா பைத்தியத்தால் மதி மயங்கி யுளறுவதைக் கேட்டு நீங்களும் வாய்க்கு வந்தபடி பிதற்றுகிறீர்கள். பத்திரம்!" என்று சொல்லி, திரும்பி, "ஐயா! வக்கீலவர்களே! என்றன் மாமனார் கோபாலையருடைய சொத்தின் விநியோகசாஸனம் தும்மிட மிருந்தால் உடனே

வெளிவரட்டும்; அதன் நிபந்தனைப்படி நடப்போம்: இன்றேல், நீரே எனது வக்கிலாகவிருந்து இம்மந் திரமுட்பட இந்த ஜமீனும் என் மாமனாரது மற்றைச் சொத்து முழுவதும் எனக்கே சொந்தமென்று யா வர்க்கும் தெரிவித்து, இங்குக் கூடிய அனைவரையும் இக்கணமே மந்திரம் விட்டுப் போய்விடச்செய்ய வேண்டியது" என்று சொல்லி வெகு ஆடம்பரத் துட னுட்கார்ந்தான். அது கண்டு ஜயராமையர் மனந் தாளாதவராய், ராஜப்பன் அயோக்யனாக நிரூ பிக்கப்படும்பக்ஷத்தில் தாம் நம்பிய ஸர்வசக்திக் கடவுள் அவனுக்குத் தஞ்சொத்தில் எம்மட்டும் சேராவண்ணம் தண்டிப்பது மன்றித் தருமமே உருக் கொண்ட சூடாமணிக்கே அந்தச் சொத்து முழுவ தும் சேரும்படியாக அநுக்ரகிப்பாரென்று தமது தமையனார் வரைந்த வாக்கியம் நினைந்து, "தருமமே ஜயம்! விதி கடப்பதரிது! யாவும் ஈசனருளே! துஷ் டர் தண்டிக்கப்படவேண்டியது ஆவசியகமே!— சொத்து முழுவதும் சூடாமணிக்கே உரித்தாயிற்று. சூடாமணியே மாம்பாக்கம் ஜமீன்தாரிணி, ராஜப்ப னுக்கு ஒரு பைசாவாகிலும் கிடையாது. இஃது தைவிகம்! இதோ இறந்துபோனவரது மரணசாஸ னம் சர்க்காரில் ரெஜிஸ்டர்செய் துள்ளது!" என்று சொல்லித் தம் மடியில் மறைத்துவைத்திருந்த பழைய சாஸனத்தை யெல்லார் முன்னிலையில் மே ஜையின்மேல் வீசியெறிந்தார். ராஜப்பன் அதைக்

கைப்பற்றக் குதித்தெழுந்தான். வக்கீல் ராமஸ்வாமி ஐயர் அவனைத் தடுத்து அச்சாஸனத்தைத் தாம் கைக்கொண்டார்.

ராஜப்பன், "நான் கெட்டேன்! துன்மார்க்கத்தாற் கெட்டழிந்தேன்!" என்று தன்னிரு கரங்களினாலும் தலையின் மோதிக்கொண்டு கண்ணீரூற்றெடுத்துப்பெருக வழுது மெய்விதிர்ப்பக் கீழே விழுந்தான்.



18. சாஸன அநுமதம்

ஐயராமையர் வெளிக் கொடுவந்த சாஸனத்தைக் காண யாவரும் வியப்புற்றனர்: சூடாமணி ஜமீன்தாரிணி யாயினாளென்பதை யறிய மிகச் சந்தோஷித்தனர்: ருணபாதகனது தோல்வியை யுன்னித் திருப்தி யடைந்தனர்: சபை வெகு சந்தடியாயிற்று. தனக்கு வேண்டாமென மனப்பூர்வமாகக் கொடுத்துவிட்ட சொத்து யாவும் தெய்வ சங்கற்பத்தால் மறுபடியும் தனக்கே வந்து சேர்ந்ததைக் குறித்து ஆச்சரியப்பட்டாள் சூடாமணி: தானென்ன செய்தும் தன் மூதாதையினெண்ணமே பூர்த்தியானதற்காக அவரைத் தெய்வமென்றே கருதினாள்: ராஜப்பனது துஷ்டத்தனத்திற்கு விசனித்தாள். பலராமையரும் சப்பையரும் இன்னது செய்வதெனத் தோன்றாமல் பிரமித்து நின்

றனர். சூடாமணியின்பால் தெய்வமே ஸஹாயமாக நின்றதால், இரண்டாமுறை யவளுக்குக் கொடுக்கப் பட்ட சொத்தைக் காப்பாற்றத்தான்வேண்டுமென்று ஜயராமையர் நிச்சயித்தார். வக்கீலும் அங்ஙனே திடப்படுத்தினர். ராஜப்பன் இடையிற் சற்றுத் தைரி யங்கொண்டு விவாதஞ் செய்ய வாரம்பித்தான்.—

ராஜப்பன் : (வக்கீலை நோக்கி) ஐயா! நும்மால் இதில் ஏதோ மோசம் நடந் திருக்கின்றது. என் மாமன் சொத்துக்கு வார்சு நானன்றி மற்று யாவ ராவர் ?

வக்கீல் : ருணபாதகா! நீ திருடனு யிருக்க, என் னையா மோசக்காரனெனக் கூறுகின்றாய் ? இக் கணமே யுன்னைக் களவுகுற்ற மேற்படுத்திப் போலீசார்வசம் ஒப்புக்கொடுப்பேன்.—அதற் கிது சமய மல்லவென நினைத்துச் சும்மா விருக் கின்றேன்.

ராஜப்பன் : ஐயா! இந்தச் சொத்துக்கு நானே உரி யவனும் அதிகாரியும். என் மாமாவின் விருப் பமு மப்படியே யிருந்தது. சாஸனப்படி சொத்தின் விநியோக விவரத்தை இந்தத் துரோகி ஜயராமையர் உம்மிடம் சொல்லிவரு கையில் நான் மறைவிடத்திற் பதிந்திருந்து செம்மையாகக் கேட்டேன்.

வக்கீல் : சரி, இருக்கலாம். அந்தச் சாஸனம் இப்போ

திவண் வரட்டும், அதன்படியே நடப்போம். இலதேல், என்னிட மிருக்கும் சாஸனத்தின்படி தான் நடக்க வேண்டும்.

பலராமையரும் சுட்பையரும் சாஸனத்திற் றம்மைக் குறித்தெழுதியுள்ளதைத் தெரிந்துகொள்ள வெகு ஆவலாயிருந்தனர். வக்கீல் சாஸனத்தை வாசிக்கத் தொடங்கினர் :—

சாஸனம்

நான் மூப்பு மிகுந்து மெய்தளர்ந்து வலிமை குன்றி நோய்பற்றிச் சின்னாளாய் வருந்துகின்றேனாதலால், எனக் கவஸான காலங் கிட்டியதாக வறிந்து இப்போது புத்தி குசலத் தோடிருக்கும்போதே என் பின்னர் எனது சொத்தின் விநியோகத்தைக் குறித்துச் சாஸன மெழுதுகின்றேன். ஈச்வரன் அநுக்ரஹிப்பானாக !—

நான் வெகு கஷ்டப்பட்டுப் பல விடங்களிற் சம்பாதித்த வெனது சுயார்ஜித சொத்தை என் மரணத்திற்குப் பிறகு அடையத்தக்கவர்க ளின்னாரென வறிந்துகொள்ளும் பொருட்டுத் தருமாராஜைய ரென்னு மாறுபெயருடன் ஆற்றூர்ப்பண்ணை நோக்கி வந்தேன் : வழியிற் சூடாமணியைக் கண்டேன் : தம்பி ஜயராமனிடம் நான்கு மாதகாலம் வசித்திருந்தேன். இவ்விருவரிடத்திற் பன்முறை யான் பற்பல வித பரீக்ஷைகள் செய்தேன் : அவர்களது நடத்தையில் முழுத் திருப்தி யடைந்தேன். ஆகையால், சூடாமணிக்கு மாம்பாக்கம் ஜமீனுடன் முப்பத்து மூன்றரை லக்ஷம் ரூபாய் ரொக்கமும், என் தம்பி ஜயராமையருக்கு ஐந்து லக்ஷம் ரூபாய் ரொக்கமும் கொடுக்கின்றேன்.

நான் வந்திருக்குஞ் செய்தியை யொருவா றாகித்து ராஜப்பன் பண்ணைக்கு வர, நான் அவனது வரலாற்றை நன்கு யறிந்துகொண்டேன். எங்கும் ருணப்படுவதும், நட்டாரை ருணப்படுத்துவதும், வஞ்சகம் கொலை முதலிய துஷ்கருமங்களுக்குப் பின்னிடாமற் பாதகமேற்கொள்வதும் அவனுடைய புல்லியல்பென வறிந்தேன். கூடா நட்புக் கொண்ட சண்டி சாவித்திரியுடன் அவன் பூங்காவிற் பேசின சங்கதி யாவும் அறிந்து, அவனுக்கு 'ருணபாதக ராஜப்ப' னென்னும் பெயர் நன்கு வாய்ந்ததெனத் திடமாய்க் கூறுவேன். சூடாமணியை யப்பாதகனின் வலையினின்றும் தப்புவித்தேன். அவனுக் கெவ்வளவு நன்மை செயினும், தன் தீவழியே நாடிக் கடைத்தேறமாட்டா னவனெனத் தீர்மானித்தேன். எற்கனவே அவன் ஆற்றூர்ப்பண்ணை விட்டுப் போகும்போது பதினாயிரம்ரூபாயும், வர்த்தகம் விர்த்திசெய்வதற்காக நாற்பதினாயிரம் ரூபாயும், ஆக மொத்தம் அரை லக்ஷம் ரூபாய் அவனுக்கு நான் கொடுத்திருக்கின்றேன். எனது உத்தரக்கிரியை அவன்மூலமாய் நடத்தப்படவேண்டியிருப்பது கருதி, அவன் துஷ்டனாக விருந்தபோதிலும், மற்றும் அரை லக்ஷம் ரூபாய் அவனுக்குக் கொடுக்கின்றேன்.

ராமமந்திரத்து விருந்திற்கு வந்த சமயத்தில், பல ராமையர் சுப்பையரிருவருஞ் சேர்ந்து தரித்திர வேடத்துடன் காணப்பட்ட வென்னிடம் அவர்கள் வெகுஅவமரியாதையாய் நடந்தார்கள். அவர்கள் என்னையும் என் தம்பியையும் தூஷித்துப் பேசினதை மறைவாய்க் கேட்டேன். என் சொத்துக்களை விநியோகஞ் செய்யும் விஷயத்தில் நான் அவர்களி னபிப்பிராயத்தைக் கேட்கையில், அவ்விருவரும் மற்றவர்களுக்கு ஒரு பைசாவாகிலும் சேரக் கூடாதென்றும், தாங்

களே என் சொத்து முழுவதையும் அடைவதற்கு ஏற்றவர்க ளென்றும் தெரிவித்தனர். இருவரும் மிக்க ஆணவமும் பரோபகாரசிந்தையின்மையும் நன்றிகோறலுமாதிய துர்க் குணக்களஞ்சியங்க ளென்றேர்ந்தேன். ஆகையால் அவ்வி ருவர்க்கும் யான் ஒன்றும் கொடுத்தேனில்லை.

கமலா பாலாவென்னுஞ் சிறுமிகள் தம் தந்தையாற் கெட்ட வழிகளிற் பழக்கப்பட்டமையால், பெண்களுக் கணி கலமாகிய நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு என்னுங் குணங்க ளற்றுப் பொறுமையும் கோபமும் கர்வமும் பற்றித் தமது நிலைமையை யறியாமலிருக்கின்றார்கள். ஆகையால் அவர் களது விவாஹம் சீர் முதலியவற்றிற்காக ஆளுக்கு அரை லக்ஷம் ரூபாய் கொடுக்கின்றேன். அதைப் பரிபாலனஞ் செய்யவும், அவ்விருவர்க்கும் விவாஹ முதலியவை யேற் பாடு செய்து நடத்தவும் ஆத்மநிவேதனரான தந்தை பல ராமையருக்கு யாதொரு அதிகாரமு மில்லை: என் தம்பி ஜயராமையரே பரிபாலகராக விருந்து சகலமும் நடத்த வேண்டும்.

ஜானகி லக்ஷ்மி யென்னுஞ் சிறுமிக ளிருவரும் தம் தந்தையாற் கெட்ட வழிகளிற் பழக்கப்பட்டபோதிலும், போதுமான கல்வி கற்றுச் சாந்தம் தயை பச்சாத்தாபம் முத லிய நற்குணங் கொண்டவர்கள். ஆகையால் அவர்களது விவாஹம் சீர் முதலியவற்றிற்காக ஆளுக்கு ஒரு லக்ஷம் ரூபாய் கொடுக்கின்றேன். அதைப் பரிபாலனஞ்செய்யவும், அவ்விருவர் விவாஹமுதலானவை நடத்தவும் என் தம்பி ஜய ராமையருக்கே அதிகாரங் கொடுக்கின்றேன். ஆத்மநிவேத னத்திலே யதிக பிரியமுள்ள அவர்களது தந்தை சுப்பைய ருக்கு அதில் யாதொரு அதிகாரமுமில்லை.

கோயிற்றிருப்பணி முதலிய தருமங்களுக்கு ஒரு லக்ஷமும், வித்யாபிவிர்த்தி முதலிய தருமங்களுக்கு ஒரு லக்ஷமும், கைத்தொழி லபிவிர்த்திக்கான தருமங்களுக்கு ஒரு லக்ஷமும் கொடுக்கின்றேன. இந்தத் தருமங்கள் யாவும் என் தம்பி ஜயராமையராலும், அவர்க்குப் பிறகு சூடாமணியாலும், பரிபாலிக்கப்பட்டுவரவேண்டும்.

சூடாமணி மிகவும் புத்திசாலியானதனால், அவளுக்குக் கொடுத்திருக்கும் பொருளை நல்ல வழிகளிற் செலவிடுவாளென முழு மனத்துடன் நான் நம்புகின்றேன். அவள் தனக்குப் பத்தொன்பதாவது வயது வருமளவும் விவாஹஞ் செய்துகொள்ளாமலிருக்கவேண்டுமென்பது எனது அபிப்பிராயம்.

ஸர்வசக்தியுள்ள ஜகதீச்வரன் பாஸ்கரக்கடவுள் ரக்ஷிப்பாராக !

மாம்பாக்கம் ஜமீன்
ராமமந்திரம்
நொவெம்பர் 3, 1912

கோபாலையர்

முதல் சாஸனப்படி சோத்தின் விநியோக விவரம்

வித்தியாபிவிர்த்தி	ரூ.	1,00,000
கைத்தொழிலபிவிர்த்தி		1,00,000
கோயிற்திருப்பணி சத்திரம் முதலிய தருமம்		1,00,000
கமலா பாலாவின் விவாஹ சீதனங்கள்		1,00,000
வனஜாக்ஷி லக்ஷ்மியின் விவாஹ சீதனங்கள்		2,00,000
ராஜப்பன் (உத்தரக்ரியை செலவுக்காக)		50,000
ஜயராமையர்		5,00,000
சூடாமணி { மாம்பாக்கம் ஜமீன்		20,00,000
சூடாமணி { ரொக்கம்		33,50,000
	ரூ.	65,00,000

(ஆக மொத்தம் ருபாய் அறுபத்தைந்து லக்ஷம்)

மாம்பாக்கம் ஜமீன்
நொவெம்பர் 3, 1912 } கோபாலையர்

இரண்டாம் சாஸனப்படி சோத்தின் விநியோக விவரம்

கல்வி கைத்தொழில் கோயில் முதலிய தருமங்கள்		3,00,000
கமலா பாலாவின் விவாஹ முதலியன		1,00,000
வனஜாக்ஷி லக்ஷ்மியின் விவாஹ முதலியன		2,00,000
ஜயராமையர்		5,00,000
ராஜப்பன் { மாம்பாக்கம் ஜமீன்		20,00,000
ராஜப்பன் { ரொக்கம்		34,00,000
	ரூ.	65,00,000

(ஆக மொத்தம் ருபாய் அறுபத்தைந்து லக்ஷம்)

மாம்பாக்கம் ஜமீன்
மே 30, 1913 } கோபாலையர்

அடுத்த மேலே குறிக்கப்பட்ட விவரப்படி இரண்டா முறை யெழுதப்பட்ட சாஸனம் ராஜப்பனுற் களவு செய்யப்படவே, இங்ஙனமாகச் சாஸனத்தின் ஸாராம்சங்களைக் கேட்ட பலராமையரும் சுப்பையரும் அவமானத்தாற் றலைகுனிந்தனர். ராஜப்பன் தன் முகத்தை மூடிக்கொண்டான். வக்கீல் ராமஸ்வாமி ஐயர் ராஜப்பனுற் களவு செய்யப்பட்ட சாஸனம் சூடாமணியின் வேண்டுகோளினுற்றுனேற்பட்ட காரணத்தையும், அதிற் கண்டிருந்த சொத்து விநியோக விவரத்தையும் யாவர்க்கு மெடுத்துச் சொன்னர். ராஜப்பனது துஷ்ட நடத்தைகட்குக் கடவுள் தகுந்த தண்டனை விதித்தாரென்று யாவரும் பேசி யேளனஞ் செய்தனர்.

பலராமையரும் சுப்பையரும் இனிச் சூடாமணியிடமும் ஜயராமையரிடமும் சமாதானமாத விருப்பது நலமென வறிந்து அவர்களை வெகுவாகப் புகழ்ந்து பேசினர். ராஜப்பன் தனக்குச் சேரவேண்டிய அரைலக்ஷம் ரூபாயைச் சென்னையிற் றன் வியாபாரவிடத்திற் கனுப்பிவிடும்படி வக்கீலை வேண்டிக் கொண்டு உடனே பயணமாயினுன்.

சூடாமணிக்கு அதிக ஆச்சரியமுண்டாயிற்று. தன் ஏவுதலினு லெழுதப்பட்ட இரண்டாவது சாஸனம் காணுமற்போனதாற் றனக்குக் கிடைத்த ஏராளமான சொத்தை மறுபடியும் ராஜப்பனுக்கே

கொடுத்துவிடும்படி தன் தந்தையை வற்புறுத்தினாள். ராஜப்பனுடைய துஷ்டத்தனத்திற்காகக் கடவுளே தண்டித்ததாகவும், அவன் கையி லந்தச் சொத்தைக் கொடுத்தால் அவன் அதைத் துர்விநியோகஞ் செய்து சீக்கிரத்திற் பாழாக்கிவிடுவானென்றும், தமது தமையனாரின் அந்தரங்க அபிப்பிராயப்படி தெய்வ சங்கற்பத்தாற் சூடாமணிக்குக் கிடைத்த சொத்தைத் தாம் பக்தியுடன் பத்திரப்படுத்துவது முக்கிய கடமை யென்றும், ஜயராமையர் சூடாமணிக் கெடுத்துச்சொன்னார். கூடியிருந்த அனைவரும் ஜயராமையர் சொல்வதே உத்தமமென்றுமோதித்துச் சூடாமணிக்கு வெகு ஸமாதானங்கள் சொல்லினர். சூடாமணி சொத்தைப் பற்ற முழுமனமின்றிச் சும்மா விருந்தாள். சற்றுக் கழித்து அவரவர் சயனிக்கச் சென்றனர்.

19. துன்முயற்சி

சூடாமணிக்கு ஒரேகாலத்தில் மனத்தே அநேக வெண்ணங்க ளுதித்துக் குழப்ப மாயிருந்தது; தூக்கம் பிடிக்க வில்லை: நடந்தவெல்லாவற்றையுங் குறித்துச் சாவதானமாக வாலோசிக்கலாமென்று ராமமந்திரத்தைச் சார்ந்த பூங்காவுக்குச் சென்றாள். சந்திரிகை அழகாய்ப் பிரகாசிக்கத் தென்றல் ரம்யமாய் வீசியது. சூடாமணி சோலையில் ஓர் மரத்தடியி லுட்கார்ந்தாள்: தற்செயலாய் வழியிற் கண்டவர் தனக்கு உற்ற வுறவினராகி அவராற்றான் பெருஞ்சீமாட்டியாயினதைக் குறித்து நினைத்துநினைத்து ஆச்சரியப்பட்டாள்: தெய்வமே முன்னின்று தன் காரியங்களை நடத்துவதாகப் பயபக்தியுடன் நம்பினாள்: எல்லாம் ஆட்டுவிக்கும் பரந்தாமனைப் போற்றினாள்: தெய்வத்தின் வழிகளை எவராலும் அறியவும் தடுக்கவும் இயலாதென வறிந்தாள். குடுகுடுக்கைக் காரர் கண்டு சொன்ன மூன்று விஷயங்களில் முத

விரண்டும் பலித்துவிட்டனவாக, இனி மூன்றுவதா கும் 'காணுமற்போனவன் திரும்பி வந்து கலியாணஞ் செய்வா'னென்னுங் குறியும் பலிக்குமோவென்று ஐயுறலாயினுள்: அவள் மனம் சுந்தரத்தின்சார் போடிற்று: அவனைப் பார்க்கவும், பார்த்து அவனுடன் பேசவும் ஆசை கொண்டாள் சூடாமணி. சுந்தரத்தைத் திரஸ்காரஞ் செய்ததற்காகத் தன்னைப் பன்முறை வெறுத்துக்கொண்டாள்: தந்தையின் கட்டளையைக் கடந்த பாதகி தானென்று மீண்டுமீண்டுந் தன்னைத்தானேந்தாள்: சுந்தரத்தைக் கண்டுபிடிக்கும்படியான வேற்பாடுகளைச் செய்யத் தீர்மானித்தாள்: ராஜப்பனது துர்நடத்தைக்கும் துரதிர்ஷ்டத்துக்கும் மிகவும் விசனித்தாள்: அவன்பேற் பரிதாபங் கொண்டாள்.

இப்படிப் பற்பல விஷயங்களை யாலோசியாநிற்புழி, நிலவின் பிரகாசத்தில் தன் சமீபமாக ஓர் மனிதனிழல் தோன்றக் கண்டாள் சூடாமணி: நாற்புறமும் சுற்றிப் பார்த்தாள். ராஜப்பன் திடீரென அவள் முன்பாக வந்து நின்றுன். நிசி மூன்றுஞ்ஜாம சமயம். தானவன் தனித்து வந்ததற்கு விசனித்தாளாயினும், சூடாமணி மிகத் தைரிய மேற்கொண்டாள்.—

ராஜப்பன்: (சூடாமணியின் பாதங்களிற் பணிந்து) என் கண்ணே! என் கற்பகமே! என் கரும்பே! என் சூடா! இங்ஙனம் நீ தனிமையாக மந்திரத்தை-

விட்டு நடந்துள்ள விஷயம் பலவற்றைச் சாவதானமாக வாலோசிக்க வெண்ணி இங்கு வரக்கூடுமென்று ஊகித்து நானுன்னை யெதிர்பார்த்தவண்ணமே வெகு நேரமாய்க் காத்திருக்கின்றேன். நீ யென் பிழைகளெல்லா மறந்தென்னைக் கருணையுடன் மன்னிக்கவேண்டும்.

சூடாமணி: (ராஜப்பனின்றும் விலகி) துஷ்டா! என்ன பிதற்றுகின்றாய்? விலகித் தூர நில்! நீ என்னைத் தொடலாகாது. ஏதோ துரெண்ணத்தால் மறுபடியு மென்னைக் காண இவ்வேஷம் போடுகின்றாய் நீ. ருணபாதகா! நீ ப்ரஜ்ஞை தப்பியிருக்கின்றாய்போலும், உடனே யோடிப்போ!

ராஜப்பன்: (அப்புறம் விலகிப் போவாளை வழி மறித்து) சூடாமணீ! கோபிக்காதே! சற்றுத் தயை கொள். பேராசையினால் பாவி நான் கெட்டேன்: ஏழையாயினேன். நீதான் எளியேனைக் காப்பாற்றவேண்டும். நானுன் அத்தையின் மகனன்றோ? என்னைப் பார்க்க உனக்குக் கருணை யுண்டாக வில்லையா? நம்மிருவர்க்குமிருந்த அந்தரங்க நேசத்தை முற்றும் மறந்துவிட்டனையோ?

சூடாமணி: பாவீ! துஷ்டா! வழி மறிக்காதே! நமக்கிருந்த நேசத்தைக் குறித்து இனிக் கனவிலும் நினைக்காதே. நான் முன்னமே யுனக்குத் தெரி

வித்திருக்கவில்லையா? மூடா! நீ யுன் துஷ்டத் தனத்தினால் வெகு கஷ்ட மனுபவிக்கப்போகின் றாய்! என் வீணாகக் கெட்டழிகின்றனை? நான நன்மை செய்தும், அஃதுனக்கு ப்ராப்தமில்லை யாயிற்று. தெய்வமே யுன்னைத் தண்டிக்குமிட த்து மனிதரா லென்ன செய்யக்கூடும்? என்னு லாவது இனி யொன்று மில்லை. லோகாநுபவக் குறைவினாலும் என் அத்தையின் விருப்பத்திற் கிணங்கியும் உன்னிடம் அன்பு வார்த்தைகள் சில சமயம் பேசிவந்தேன்.—நீ பல்லோரிடமும் ருணஸ்தன், பல்வகைப் பாதகன்; ஆதலால் நீ ருணபாதகன்: இன்னும, ருணபாதகர்க் கெல் லாம் நீ ராஜன் போன்றவன், ஆதலால் நீ ருண பாதக ராஜன்: போதாமல், ருணபாதக ராஜாக் களுக் கெல்லாம் அப்பன் போன்றவன் நீ; ஆத லால் நீ ருணபாதக ராஜப்பன்! என்றால், வாங் கிய கடனை வாயிற் போட்டுக்கொண்டு ருணக்ர ஸ்தனைக் கிரிவானும், பொய் கொலை களவு கள்ளுண் குருநிந்தையாகிய பஞ்சமாபாதகங் களையு மொருங்கே தன்னிடத்துப் பெற்ற பாத கனும், மேற்கூறிய விரு தன்மையாரையும் அவ் வத்தன்மையே வழிகாட்டி நடத்தும் ராஜனுவா னும், இம்மூவகையாரையும் பெற்ற அப்பனே யெனுமாறு உற்பத்திஸ்தானமும் தஞ்சஸ் தானமுமாயிருந்து, ருண பாதக ராஜ அப்பன்

எனும் பெயரை நன்கமையப் பெற்றுள்ளாய்! உன்னுடன் நான் பேசத் தகாதுகாண். நான் போய்விடுகிறேன்.—

ராஜப்பன்: (போகும் சூடாமணியை வலுவிற் பிடித்து நிறுத்தி) அடீ பெண்ணே! சூடாமணீ! நான் கடைசியாகச் சொல்வதைக் கேள். நீ என்னை யெப்படியாகிலும் விவாஹஞ்செய்துகொள்ளத் தான் வேண்டும். சற்று ஆலோசித்துப் பார்.— நீ மந்திரத்துக்குத்தூரமாகத் தனித்துவந்திருக் கின்றாய். நானிப்போதுன்னை யேன் காந்தர்வ விவாஹஞ் செய்துகொள்ளலாகாது? நீயோ இக் கலிகால ரம்பை! ஏதோ, ஒரு முத்தம் கொடு!

சூடாமணி: (முத்தமிட வந்தவனைத் தடுத்துத் தன் தனி நிலைமையைக் கருதி யவனை இன்சொற்களால் ஏமாற்ற நினைத்துப் போலிப்புன்சிரிப்புடன்) அத்தான்! நின் நடத்தை வெகு நன்றாயிருக்கிறது! மதியீனத் தா லிவ்வேளையிற் றனித்துவந்த வென்னைத் துரா க்ருதமாய் வழி மறிப்பது நியாயமோ? நீ கற்ற கல்வி யெங்கொளிந்தது? பெற்றஞானம் யாதா யிற்று?—துராக்ருதமாய் அஹல்யையின் கற் பழித்த தேவேந்திரனும், சீதையைச் சிறைகொ ண்ட ராவணனும், பாஞ்சாலியைப் பங்கப்படுத்த முயன்ற கீசகனும், யாது கதி யடைந்தனரென் பதை நீ யறிந்திலாயோ? மதிமயங்கி யுன்னையே

மறந்தனையா நீ? ஏன் வீணாயழிகின்றாய்? ஏன் கொடு நரகம் தேடுகின்றாய்? நன்னெறி கடந்து நடவேல். அபலையாகிலு நான் சபலையன்று. இச்சமயம் தனிமையா யகப்பட்டுக்கொண்டே னென்று நினைத்திடாதே. நான் சூரலெடுக்கு மாத்திரத்தானே உனக்குக் கஷ்டம் சம்பவிக்கும். என்னிட மெப்போதாகிலு முனக்கு உள்ளன் பிருந்த துண்மையாயின், இக்கணமே என்னைவிட் டகன்றிடு, வழி மறிக்காதே!—

ராஜப்பன்: (வேகமாய்ப்போவாளை மறுபடியும் வழிமறித்து) கண்மணி! சூடா! நீ சாஸ்திரம் பேசி என்மேல் சஸ்திரம் தொடுக்கின்றாய்! உன் அழகோ என் கண்களை யிருட்டி என்னை யஞ்சாமற் செய்கின்றது. உன் குணமோ என் மனத்தைக் கவர்ந்து உன்னை யெத்துணையும் விடே னென்கின்றது. உன் ரூபமோ எக்கணமும் என் மனத்தின் நீங்காது உன்னை யழைத்தேகத் தூண்டுகின்றது. உன் பணப் பெருக்கோ உன்னை இக்கணமே எனதாக்கிக்கொள்ள வற்புறுத்துகின்றது. ஆதலால் யாது நேர்வதாயினும் உன்னை விட்டிடேன்; நீ என்னவ ளாகத்தான்வேண்டும். என்னிஷ்டத்திற் கிணங்காவிடின், இனி யுனக்கு நானென்றும் ஜன்ம விரோதியே யாய்விடுவேன். அதான உனக்கு வெகு சங்கடங்கள் சம்பவிக்கும். எனக்குச் சேரவேண்டிய பொருளை நீ

யடித்துக்கொண்டு போகின்றாய். அதை நான் மறுபடியும் அடையவேண்டும். ஆகலால் இப்போதே யுன்னைக்காந்தர்வமுறையான் விவாஹம் செய்து கொள்ளாமல் விட்டகல்வே னல்லேன். பின்னர் வெளிப்படையா யுன்னை விவாஹஞ் செய்துகொள்வேன். சாஸ்திரமு மிங்ஙனஞ்செய் தற் கிடந்தருகின்றது.—கண்ணே! ஏதோ ஒரு முத்தம் தா! என் காதலியே! என்னிட மோடி வா!—

ராஜப்பன் இங்ஙனமாகச் சொல்லிச் சூடாமணியைப் பலாத்காரமாய்த் தன்னிரு கரங்களினு லணைக்க முயன்றான். சூடாமணி கூக்குரலிட் டழுது அவனைத் திமிறிக்கொண் டோடினாள். குணபாதகன் மறுபடியு மவளைத் துரத்திப் பிடித்து வாய் மூடி முகத்திற்கு நேராகக் குனிந்து முத்தமிடப் போகுந் தருவாயில், திடீரென வொருவன் ஓடிவந்து வலுத்த தொரு தடியினுல் அச்சண்டாளன் மண்டையிற் புடைத்தான். அவன் அவ்வடி பொறுக்கமாட்டாதவனுய்ப் பொறிகலங்கிக் கீழே விழுந்தான். சூடாமணியும் பிரமித்து மூர்ச்சை யடைந்தாள்.—

வந்தவன் தன் மேல்வேஷ்டியைத் தரையில் விரித்துச் சூடாமணியை மெல்லென வெடுத்து அதன்மே லிருத்திப் பின் தான்தாக்கிய வடியினுற் கீழே விழுந்த ராஜப்பனிடம் சென்றான். ராஜப்பன் அறிவு மீள மெல்லென வெழுந்து தன் மண்டையிற்


பெருகும் இரத்தத்தைத் துடைத்துக்கொண்டு தன்னெதிரியை யுற்றுப்பார்த்தான். ஒருவரையொருவர் இன்னாரெனத் தெரிந்துகொண்டனர். ராஜப்பனுக்குத் திகி லுண்டாயிற்று. கைகால் நடுக்க முற்றன. குணபாதகன் வாய் குழறத் தன்னை மன்னிக்கும்படி வந்தவனை வேண்டிக்கொண்டு அவ்விடம் விட்டோடிப்போனான்.

வந்த ஆசாமி தன்னை யெவரும் நபரறியாவண்ணம் முகத்தை மூடிக்கொண்டு, உடனே மூர்ச்சித்துக் கிடக்கும் சூடாமணியைத் தோண் மேற் சுமத்தி மந்திரத்துப் பின்புறவாயிலாக வுண்ணுழைந்து அங்குச் சூடாமணியைக் கிடத்தி, தூங்கிக்கொண்டிருந்த வேலைக்காரரிலொருவனை யெழுப்பிச் சூடாமணியின் விஷயமா யெச்சரிக்கை செய்துவிட்டு மற்றவன் தூக்கக்கலக்கந் தெளியாமுன்னமே திடீரென மறைந்து சென்றான்.

வேலைக்காரன் தூக்கந் தெளிந்து சூடாமணி மூர்ச்சித்திருப்பதைக் கண்டு பயந்து மற்றை வேலைக்காரரையு மெழுப்பிச் சங்கதி தெரிவிக்க, யாவருமாக அவளைப் பாகிரதியம்மையிடம் கொண்டு சேர்த்தனர். ஜயராமையரும் பலராமையருட்பட மற்றைப் பந்துக்களும் சூடாமணியி னலங்கோலத்துக்குக் காரணம் தெரியாதவர்களாய் அதிக திகிலடைந்து அவளது மூர்ச்சையைத் தெளிவிக்கப் பலவித சைத்தி

யோபசாரஞ் செய்தனர். ஒரு மணிநேரஞ் சென்று சூடாமணி மூர்ச்சை தெளிந்தாள்: வனஜாக்ஷி லக்ஷ்மி முதலியவர் தனக்கு வெகு உபசாரஞ் செய்வதைக் கண்டாள்: அவர்களுக்கு வந்தன மளித்தாள்: தென்னஞ்சோலையில் தான் மூர்ச்சையாய் விழுந்தவரையும் நடந்த விருத்தாந்த மனைவர்க்கு மெடுத்துச் சொன்னாள்.

யாவரும் ராஜப்பனுக்குத் தகுந்தபடி தண்டனை விதிக்கவேண்டுமென்று தீர்மானித்துக் கருவினர். அவனை மன்னிக்கும்படி சூடாமணி யவர்களை வேண்டிக்கொண்டாள்: கடவுட்செயலாய்த் தன்னை யந்த ஆபத்தினின்றும் மீட்டிய மஹானுபாவனை நேரிற் கண்டறிந்து வந்தனமளிக்க ஆவல் கொண்டவளானாள். ஆனால் யாரும் அவனை யின்னானென் றறிந்தவரிலாரயினர்.



20. சுந்தரி

அக்கம்பக்கத்துப் பல கனவான்களும் ஜமீன் தார்களும் ராமமந்திரத்திற்கு வந்து சூடாமணிக்கு உபசாரம் சொல்லிப் போயினர். பலராமையர் முதலாயினோர் ஒரு மாதம் வரையிற் றங்கியிருந்து பின்னர் யாவரும் சென்னைக்குச் சென்றனர். ஜயராமையர் தம்பண்ணையின் பாமரிப்பைத் தகுந்த காரியஸ்தரிட மொப்புவித்து மாம்பாக்கத்திற் குடிவந்து சேர்ந்தார்.

நான்கு மாதங்களாயின.— அருகே கால் மைல் தூரத்தில ராமமந்திரத்தைச் சார்ந்து கதலீக்ரஹ மென்று பெயர் வாய்ந்ததோர் சிறிய தோட்டத் துடன் கூடிய பங்களா வொன்று புதுப்பிக்கப்பட்டு வாடகைக்குத் தயாராயிருந்தது. ஒரு நாட்காலை சுமார் 30 வயதுள்ள வோரழகிய பிராமண ஸ்திரீ அக்கதலீக்ரஹத்தை வாடகைக்குக் கொள்ளச் சூடாமணியைப் பார்க்க வந்தாள். ஜயராமைய ரச்சமயம்

தமது பண்ணைக்குப் போயிருந்தார். சூடாமணி வந்த ஸ்தரீக் குபசாரவார்த்தைகளுடன் மரியாதை செய்தாள்.

இருவரும் சற்று நேரம்வரையிற் பேசிய பின்னர், சூடாமணி, "அம்மணி! பின்னர் நீ இருபதினாயிரம் ரூபாய் பெறுமான ஆஸ்தி பெற்றவ ளென்கிறாயே— ஏன் மனக்கவலை கொண்டவள்போற் பேசுகின்றாய்? செங்கற்பட்டைவிட்டு இங் கேன் வரவேண்டும்?" என்று ஏதோ சமுசயத்துடன் கேட்டாள். "குழந்தாய்! என் துக்கம் உனக்குத் தெரியக் கூடாதென் றெண்ணினேன். ஆயினும் நீயே கேட்டமையாற் சொல்லநேர்கிறது.—இளம்பிராயத்திற்றானே கலியாணஞ் செய்யப்பெற்றும், மனத்திற் கிசைந்தபடி அநேக நாள் புருஷவின்பங்களை நுகராமலே மாங்கலிய மிழந்து அநாதையாயினேன். சொத்துக்கு வழக்கிட்டுப் பங்காளிகள் என்னைக் கோர்ட்டுக் கிழுக்க, அதனாற் பொருணட்டமும் மானக்கேடும் மிக வடைந்தேன். என் கணவரது ஏராளமான சொத்தில் எனதெனக் கிடைத்த இருபதினாயிரம் ரூபாயைக் கைக்கொண்டு, எந்தை யிறந்துவிட்டதா லாதரவிழந்த வென் தாயையும் சகோதரச் சிறுவனையும் என்னிடமே வைத்துக்கொண்டு, சுமார் ஒரு வருட காலமாய்ச் செங்கற்பட்டி லுறைந்துவருகின்றேன். பட்டினமாகையா லவ்வூர்வாழ்க்கை யென் மனப்போக்கிற்கும் தேஹதத்வத்திற்கும் பொருந்திற்றன்றாக, நான் ஈங்கு

வந் துறைய வெண்ணுகின்றேன். என் வரலாற்றைப் பின்னும் செங்கற்பட்டில் விசாரித்தறியலாம். செங்கற்பட்டி லிருந்தாற் பிரதி தினம் எத்தனையோ வெண்ணங்கள் ஞாபகத்திற்கு வந்துவந்து வருத்துகின்றன. அன்றியும்—'' என்று கண்ணீர்விட்டாள். சூடாமணி அவளது விர்த்தாந்தத்திற்கு மனமிரங்கித் தானுங் கண்ணீர்விட்டு அவளைச் சமாதானப்படுத்தினாள். வந்தவள் பின்னும் சற்றுநேரம் பேசிப் பின்பு இரண்டு நாட்கழித்து மறுபடியும் வந்து பார்ப்பதாகச் சொல்லிப் போயினாள்.

சூடாமணிக்குச் சுந்தரியுடன் பேசும்போ தவள் மீதோர்விதப் பற்றும் அபிமானமு முண்டாய்விட்டன. தந்தை மந்திரம் வந்து சேர்ந்த வுடனே சங்கதியைத் தெரிவித்தாள். அதன்மே லவர் செங்கற்பட்டிற்கு ஆளை யனுப்ப, அவ்வாள் மறு நாட்காலை திரும்பி வந்து சுந்தரியைக் குறித்து நல்ல சரித்திரமே கூறினான். சொன்னபடி மூன்று நாள் செங்கற்பட்டினாள் தன் தாயையும் தம்பியையும் பின்னிட்டுச் சூடாமணியைப் பார்க்க வந்தாள். ஜயராமையரும் அவர்களைக் கண்டு திருப்தி யடைந்து கதலீக்ரஹத்தை யவர்களுக்குச் சொற்ப வாடகைக்கு விடுத்தார். மறு நாளே யவர்கள் வந்து புதிய வீட்டிற் குடி புகுந்தார்கள். சுந்தரி அதி ரூபவதியாயும், கல்வி கற்றவளாயும், சங்கீதஞானம் தெய்வபக்தி தருமசிந்தை

முதலிய நற்குணங்கள் மிகப் பெற்றவளாயும், சித்திரவேலையிலும் தையற்படங்கள் போடுவதிலும் திறமையுள்ளவளாயும் காணப்பட்டாள். இத்தகைச் சுகுணங்கள் பொருந்தியவள் தம் மகளுக்குத் துணையாக வேற்பட்டது தைவாநுக்ரஹமென்று ஜயராமையர் சந்தோஷித்தார்.

சுமார் ஆறு மாதங்களாயின.—சுந்தரியிடம் தந்தைக்கும் மகளுக்கும் அதித நம்பிக்கையும் கௌரவமும் விசுவாஸமும் ஏற்பட்டுச் சுந்தரி சூடாமணிக்கு அந்தரங்க சிநேகிதையாயினள். சுந்தரியைக் காணுத நிமிஷமொவ்வொன்றும் சூடாமணிக்கு யுகம் யுக்மாய்த் தோன்றியது. சூடாமணியே சுந்தரியைத் தேடித்தேடித் தானே கதலீக்ரஹத்திற்கு வந்துவிடுவாள்: பிரதி தடவையும் வேடிக்கையாக நெடு நேரம் பேசியிருப்பாள்.

ஒரு நாள் சூடாமணியிடம் வழக்கம்போற் பேசிக்கொண்டிருக்கையில், சுந்தரி தான் விவாஹஞ் செய்துகொண்ட வேடிக்கையும், தன் கணவனுடன் வாழ்ந்தனுபவித்த சுகமும், தன் கணவனுக்கும் தனக்கு மிருந்த அந்தரங்க விசுவாசமு மெடுத்துச் சொல்லி விசனித்தாள். பேச்சொடுபேச்சாய்ச் சூடாமணியின் விவாஹத்தைக் குறித்துப் பேசலாயினர். சூடாமணி தன் விவாஹ விஷயம் இன்னும் ஒன்றரை வருஷம் கழிவதற்குமுன்னுல் யோசிக்க லாகாதென்று தெரிவித்தாள்.—

சுந்தரி, "சூடா! நான் சில வேலைக்காரர் பேசிக் கொள்ளக் கேட்டிருக்கிறேன்: உன் தந்தை யுன்னை விவாஹத்திற் கொடுப்பதாக நிச்சயித்திருந்த வோர் வாலிபன் திடீரென் உங்களை விட்டுப் போய்விட்டா னுமே? அதன் காரண மென்னவோ?" என்று கேட்டாள். சூடாமணி, "சுந்தரீ! உண்மைதான். நான் யாரைக் கலியாணஞ்செய்துகொள்வேனென்று என் விருப்பத்தை நிச்சயித்துச் சொல்வதற்கு என் தந்தையினிடம் ஆறுமாதம் தவணை வேண்டினேன்: அப்போது பண்ணைக்கு வந்திருந்த எனது அத்தை மகனமேற் சற்று மனஞ்செலுத்தினேன்: முடிவில் அவன் அயோக்கியனென் றறிந்து அவனை வெறுத்து விட்டேன். இடையிற் சுந்தரம் காணமற் போய் விட்டான்" என்றாள்.

இங்ஙனமாகப் பேசிக்கொண்டுவருகையில், சுந்தரி, "சூடாமணி! நீ சொல்வதைக் கேட்க வெனக் கொரு சங்கதி நினைவுக்கு வருகின்றது.—சுமார் ஒரு வருஷத்திற்கு முன், நானும் என் தாயுமாகச் சேர்ந்து சேது ஸ்நான யாத்திரையாய்ச் செல்கையில், ராமநாதன் தரிசனார்த்தம் ராமேச்வரம் சேர்ந்து அங்கோர் சாவடியிற் றங்கினோம். சுமார் இருபது வயதுள்ள அழகிய ஓர் சிறுவனும் அதே சாவடியில் வந்திறங்கினன். அவன் காஞ்சிமண்டலத்தைச் சேர்ந்தவ னென்றார்கள். அவனுக்கு இருந்தாற்போ லிருந்து விஷச்சுரங் கண்டது. அச்சமயம் அவனைத்

தொடர்ந் தெவரும் வந்ததாகக் காணப்பட்டா ரில ராதலின், நானே மருந்து முதலியன புகட்டி வேண் டிய சிசுரூஷை செய்தேன். அச்சிறுவன் அழகிலும் குணத்திலும் கல்வியிலும் நிகரற்ற செல்வனாகத் தோன்றினன். அவனை யொருதரம் கண்டமாத்திரத் தானே எவ்வித வருத்தமும் தீர்ந்து மனங்குளிரச் செய்யும். சகல புண்ணியமும் நலமும் திரண் டுருக் கொண் டெழுந்ததெனத்தகு மகானுபாவனாய் விளங் கினன் அவன்!" என்றாள். சூடாமணி, மனத்தடு மாற்றத்துடன், "அவன் பெய ரென்னவோ அறி வையோ நீ?" என்று கேட்டாள். சுந்தரி, "அச்சிறு வன் பெயர் 'சுந்தர'மாம்" என்றாள். சூடாமணி, "ஹா! அவன கடைசியில் சொஸ்தமாயினனா?" என்று பரபரப்புடன கேட்டாள். சுந்தரி, "அந்தோ! அது விஷயஞ்சொல்ல வெனக்கு நா வெழவில்லையே! இரண்டாநாளேயவன் அவ்வியாதி திரும்பாமல் உயிர் மாய்ந்தான். அவனை நினைக்கப் பரிதாப மேலிடுகின் றது.—சூடாமணீ! என்ன ஒருவாறா யிருக்கின்றாய் நீ? அவன் இன்னனெனத் தெரியுமா உனக்கு?", என்று கேட்டாள். சுந்தரியின் கடைசி வாக்கியத் தைக் கேட்கு முன்னமே திடுக்கிட் டலறிக் கீழே விழுந்தாள் சூடாமணி: பெருமூச்சுவிட்டாள்: கண் ணீர் பெருக்கினள்: "ஆ! இலவு காத்த கிள்ளையா னேனே! ஆ தெய்வமே! என்வாழ்வு பொய்த்ததே!" என்று ஹோவென்று புலம்பி மூர்ச்சையடைந்தாள்.

சுந்தரி யுடனே மூர்ச்சித்தவளை வாரியெடுத்துத் தன் மார்புடன் கட்டியணைத்து முன்றானையால் அவள் கண்களைத் துடைத்துக் குளிர்ந்த ஜலம் சிறிதூட்டிப் பஞ்சணைமே லிருத்தி விசிறி யுபசரித்தாள். சூடாமணி தெளிந்து கண் திறந்து பார்த்ததும், சுந்தரி, "சூடாமணி! என்ன இப்படி நிலை மாறினையே? அந்தச் சிறுவனை யுனக்குத் தெரியுமா வென்ன? அப்படியானால் நா னிந்தச் சங்கதியை யுனக்குச் சொல்லியிருக்கமாட்டேனே! சும்மா வீண் பழிக் காளாயினேனே நான்! இச் செய்தி நிகழ்ந்து ஒருவருடத்திற்கு மேலாய்விட்டதே!" என்று சொல்லிப் பரிதபித்தாள்.—

பண்ணை விட்டுச்சென்ற சுந்தரமே யவனென்று நிச்சயித்தறியும்பொருட்டுச் சூடாமணி இறந்தவனது அடையாளங்களைக் கேட்டாள்: சுந்தரி யெடுத்துச்சொன்ன அடையாளங்களைக் கேட்டறிந்தாள்: இரு கண்களினின்றும் நீர் வெள்ளமாய்ப் பெருக்கினாள்: அழுதவாறே சுந்தரியை விட்டுச் சென்றாள்: தந்தையிட மோடினாள்: அலறினாள்: உளறினாள்: மெய்விதிர்த்தாள்: பெரு மூச்சுவிட்டாள்: சங்கதி தெரிவித்தாள். ஜயராமையர் சரேலெனச் சுந்தரியிட மோடிவந்தார்: செய்தி விசாரித்தார்: சுந்தரி சொல்வது உண்மையேயென் றோர்ந்தார்.

ராமமந்திரத்தில் அனைவரும் அதிக விசனங்

கொண்டாடினர். சுந்தரிபிரதி தினமும் சூடாமணிக்குச் சமாதானம் சொல்லித் தேற்றிவந்தாள். சூடாமணி பன்முறை யாலோசிப்பாள்; விசனமும் சந்தேகமும் கொள்வாள்; குடுகுடுக்கைக்காரன் சொன்ன சாமுத்திரிகம் பொய்க்குமோவென் றையுறுவாள்; தன்னை அத்யந்தம் நேசிக்கும் சுந்தரியும் யாது பற்றியேனும் பொய் சொல்லியிருப்பாளோவென்று சந்தேகிப்பாள்; ஆனால் தன் சந்தேகத்தை வெளிக்காட்டினளில்லை; சிற்சில வமயங்களிற் சுந்தரி சொல்வது உண்மைதானென்று நம்பித் தேம்பித் தேம்பி யலமந்து நிற்பாள். சுந்தரியும் இன்னன அவஸ்தைகளின்போதெல்லாம் தக்க விதமாய்ச் சமாதானஞ் சொல்லி யவளைத் தேற்றுவாள்.

சுமார் ஆறுமாதங்க ளாயின. சூடாமணிக்குச் சுந்தரத்தின் ஞாபகம் நாளுக்குநாள் ஓங்கிவளர்ந்தது: அவன் இறந்துவிட்டதாகக் கேட்டபோதிலும் உயிருடனிருப்பதாகவே நினைக்கலானாள். உண்மை யின்னதென்று துணியமாட்டாமல் அவள் மனம் தத்தளித்தவண்ணமாக விருந்தது.

பின்னும் ஒரு பக்ஷங்கழிந்தது. ஓர்நா ளந்திப்போழ்தில் வழக்கம்போற் சுந்தரியும் சூடாமணியும் சுந்தரியுடன் வசித்துவரும் பெருங்கிழவியும் ஆற்றோரத்திற் கண்மைத்தாய மாஞ்சோலையிலுட்கார்ந்து கொண்டிருந்தார்கள். சம்பாஷணை யிடையில், கிழவி,

“குழந்தாய் சூடா! நமது சுந்தரி கைம்பெண்ணா யிருப்பது பாலிய விவாஹ ஆசாரத்தின் கொடுமை யென்கின்றனையே: நீ யெடுத்துச் சொல்வதெல்லாம் தற்காலத்து நாகரீகமுறைகளை யொத்திருப்பதுபோற் காணிடினும், நம் பெரியோரராற் றொன்றுதொட்டு அநுஷ்டித்துவராநின்ற ஆசாரங்களை நாமும் ‘கேளாதே யோடுக ஊரோடு மாறு’ எனும் பழமொழிக் கேற்பக் காரிய காரணங்களிற் புகாதே கைக்கொண்டு நமது அந்தஸ்தைக் காப்பாற்றிக்கொள்வது உசிதமல் லவா? விவாஹித்த வோர் பெண் சுமங்கலியாய் வாழ்ந்து களிப்பதும் அமங்கலியாகிச் சீரழிவதும் விதிவசத்தானே யென்று கருதற்பாலதே யன்றோ? விதி வெல்லப் போமா? பாலிய விவாஹஞ் செய்து கொண்ட வெல்லோரும் கைம்பெண்களே யானார் களா? அன்றிப் பிரௌடையான பிறகு விவாஹித்த வர்கள் கைம்பெண்க ளாகமாட்டார்களா? வகுத் தான் வகுத்திட்ட வகை வழியே யல்லாது கோடி தொகுத்தாரேனும் அவ்வழி நய்த்துப் பிறிது நடத் தல் அரிதேயாகும்.—குழந்தாய்! ஓர் கன்னிகையை யெட்டு வயதுக்குள் விவாஹஞ் செய்வித்து அன்ன வளது க்ஷேமலாபங்கள் முதலாய முற்றும் அவள் வா ழ்க்கைப்பட்ட புருஷனைப் பொறுத்ததே யென்று அவ னிட மொப்புவிப்பது ‘கன்னிகாதான’ மெனப்படும். இக்கன்னிகாதானமாவது குறைவுறுச் சம்பத்தும் பழிப்பில் குலமும் எந்தெழின்மிக்க ரூபமும் யௌ

வன பிராயமும் சுப லக்ஷணமும் பந்து விசேஷமும் மாண்பெறு வித்தியையும்—இன்னன நலங்கள் பொருந்தியவனுக்குச் செய்யவேண்டும். இத்தகைக் கன்னிகாதானம் செய்த புண்ணியவான் தன் குலம் முன்னரேழும் பின்னரேழுமாகப் புனிதனுக்கப்படு வானென்று சாஸ்திரங்கள் கூறும். லோக விவகார மின்னதென்றறியாத எட்டு வயதுக்குட்பட்ட விவா ஹமான சிறுமி தனக்குக் கணவனைத் தவிர வேறு கதியில்லை யென்று கருதி அவனையே தெய்வமாகப் பாவித்துத் தன் அன்பும் அபிமானமும் முற்றும் அவன்பாலே செலுத்துமாறு குழந்தைப் பருவமுதற் கொண்டே பழகிவர, அதனலச் சதிபதிகளிருவர்க்கும் பிரியா நேச முண்டாதற் கிடமுண்டாகின்றது. ஓர் கன்னியின் மனம் எவ்விடத்தையாகிலு நாட வறியா முன்னமே விவாஹஞ் செய்யவேண்டும். விவாஹித்த வொரு பெண்ணுவாள் அன்னிய புருஷனைப்பற்றித் தன் மனத்தில் வேறுவிதமான வெண்ணத்தா னினைத் தவக்கணமே யவளது கற்புக்குக் குறை நேருகிற தென்று தரும சாஸ்திரங் கூறுகின்றமையால், அப் படிப்பட்ட வெண்ண முதித்தற்குப் போதுமான வய தடையா முன்னரே யவளை யோர் புருஷன் வசப் படுத்துவதே யுத்தமமாகும்” என்று சொல்லி முடித் தாள்.

சூடாமணி பதில் சொல்லப் புகுமுன்னமே, சுந் தரி, “தங்காய் சூடாமணி! என் தாயார் சொல்லு

கிறபடி யுனக்கு எட்டு வயதிற்றனே விவாஹமாயி ருந்தால், உன் புத்தி சபலிக்காமல் ஒரே நிலைத்ததா யிருக்குமல்லவா? நீயப்போது சுந்தரத்தை விவா ஹஞ்செய்துகொண்டிருப்பாய்; உன் மனத்தை ராஜப்பனிடம் நாட்டியிராய்: அல்லது உன்னை ராஜப் பனுக்கே மணஞ்செய்திருந்தக்கால், உன மனம் இப் போதுபோற் சுந்தரத்தின்மாட்டு நாடியிராதன்றோ? சுந்தரமோ—அந்தோ! இறந்துவிட்டானே! அவனி றந்த விதத்தை நினைக்கும்போதெல்லாம் என் மனம் அனலிலிட்ட மெழுகுபோ லுருகிப் பரிதபிக்கின்றதே! அன்னவன்மேற் காதல்கொண்டு அவற்பற்றி யேங்கி யல்லற்படும் பேதை யுன்னைக் காண வெங்ஙனஞ் சகித் திருப்பேன்? ஆ! இறந்தவனைப்பற்றி யேங்குதலாற் பயனென்னவோ? ராஜப்பனையோ நீ வெறுக்கின் றாய்: இனி மூன்றுவது மனிதனை யன்றோ நீ தேட வேண்டும்? அதனு லுன் கற்புக் கிழுக் குண்டாகா தோ? ஒரு ஸ்திரீ தன் மனத்தைப் பலரிடஞ் செலுத் தத் தகுமோ? நீ சற் றுன் தற்கால நிலையை யாலோ சித்துப் பார்: அது பால்ய விவாஹ முறையை நிஷே தித்ததான் விளைந்த கேடல்லவா?" என்றாள்.

சுந்தரி சொல்வதில் உண்மை யுண்டென்று நினைத்துக் கண்களிற் சலம் பெருக்கினுள் சூடாமணி. சுந்தரி மறுபடியும், "என்னருமைச் சூடா! விசனப் படாதே: நானோர் ஆலோசனை சொல்லுகின்றேன்:

அதன்படி நடந்தாயேல் உனக்கியாதொரு குறையும் வாராது. ராஜப்பனை நீ விவாஹஞ்செய்துகொள்ள எந்த க்ஷணம் நினைத்தாயோ அந்த க்ஷணமே யவன் உனக்குக் கொழுநனாய்விட்டான்: இதுவே நமது தருமசாஸ்திரக் கொள்கை. கணவனாயினான் எத்துணைத் துராத்மாவாயிருந்தானாயினும் அவனை யநுசரித்தொழுகுவதே பதிவிரதையின் லக்ஷணமாகும்: ஆதலால் நீ ராஜப்பனுக்கே மணமாலை சூட்டி யுன் கற்பைக் காப்பதே மாண்பதாகும். உன்மீதெனக்குள்ள அன்பின் மிகுதியால் இவ்வாலோசனை சொல்லத் துணிந்தேன்.—ஒருவர் மற்றவர்மேல் வைக்கும் பரஸ்பர விசுவாஸத்திற்கு 'அன்பு' எனப்படும். அஃது சந்தர்ப்பங்களை யொட்டி வெவ்வேறு பெயரான் வழங்கும். அது கடவுளிடத்ததாயின் 'பக்தி' யெனவும், அடியாரிடத்ததாயின் 'கிருபை' யெனவும், மற்ற இனத்தாரிடத்ததாயின் 'காதல்' எனவும், மக்களிடத்ததாயின் 'பாசம்' எனவும், நண்பரிடத்ததாயின் 'நேசம்' எனவும் சொல்வார். இவ்வித விசுவாஸம் பரஸ்பர முண்டாகிவிட்டால் அதற் கிலக்காவார்க் கிடுக்கணுற்றபோது மற்றவர் அதை நீக்கும்பொருட்டுத் தம்மா லியன்றவளவும் சகாயஞ் செய்யப் பின்னிடார். ஆநலாற் சூடாமணி! நீ காதலித்த ராஜப்பனையே மணத்தானேற்றுக்கொள்வது ஏற்றதே" என்று சொல்லிக் கடைக்கண்ணாற் பார்த்தாள்.

சூடாமணி சுந்தரியிடத்துச் சிறிது சந்தேகங் கொண்டாள்: அவள் சொன்னவற்றை யெல்லாம் இரண்டொரு நிமிஷம் மனத்துளாராய்ந்து சரே லென வெழுந்து, "அம்மா சுந்தரீ! நீங்கள் சொல் லும் ஆலோசனைக்காக அநேக வந்தனமளிக்கின் றேன். ஆயினும் ஒரு விஷயம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். பெண்ணானவளுக் கென்றும் சுதந்தரமில்லை யென்று தர்மசாஸ்திர மெடுத்துப் போதிக்கு முனக் குத் தெரியாதா? விவாகமாகும்வரையிற் பெண் தன் பெற்றோர்க்கும், விவாகமாகியபின் கொழுநனுக் கும், பின்னர் தன் மக்கள் விவகாரதசை யடைந்தா ராயின் அவர்களுக்கும், மக்களில்லாவிடத்துத் தன் சகோதரர்க்கும் உட்பட்டு நடக்கக் கடமைப்பட்டி ருக்கிறாளென்று உன் தர்மசாஸ்திரம் முறையிடுகின்ற தில்லையா? பெண்ணாய்ப் பிறந்தவளுக் கென்றேனும் சுதந்தரமுண்டோ? உலகப் பழக்கமற்ற வோர் சிறுமி தக்கதும் தகாததும் இன்னதென் றறியாமல் ஓர் புரு ஷனை விவாஹிக்க வெண்ணங்கொண்டகான் மட்டும் அப்புருஷனே யவட்குக் கட்டிய கணவ னாய்விட் டானா? சாஸ்திர விதிப்படிப் பெற்றோரால் ஒருவ னுக்கு விவாஹ பூர்வமாய்த் தத்தஞ் செய்யப்பெற்ற பின்னர்த்தான் அப்பெண் வேறு புருஷனிடம் காதல் கொள்வாளாயின் அவளது கற்புக் கிழுக் குண் டாகும். கேவலம் அஞ்ஞானத்திற் செய்த காரிய மொன்றும் எவரையும் பிணைப்படுத்த வியலாது: அதனு

லுண்டாகும் ப்ரத்யவாயத்திற்கு ஞானத்தினுற் பரிகார மேற்படுவது ஒக்கும்: முற்றிய வாலோசனை யும் முயற்சியு மில்லாததனுற் காரியங் கெட்டுப்போ மாயின், அதை விதியெனக் கருதிக் கடவுளை நிந்தித் தல் தகுமோ? நம்மாற் கூடிய முயற்சி யாவும் செய் து இறுதியில் முடிவைக் கடவுளினனுக்ரஹத்திற்கு விட்டுவிடவேண்டியதே நமது கடமை. செய்காரி யங் கைகூடிற்றுயின் அது நம் புத்தி சாதுரியத்தான் முடிந்ததென்றும், பிரதிகூலப்பட்டதாயின் அது கடவுட் செயலென்றும் நினைத்து முறையே இறுமாப் படைவதும் நிந்திப்பதும் தப்பிதமாகும். 'நாம்' 'என்னை' என்கிற அஹங்கார மமகாரங்களை விட்டு நமக்கு நேரும் நன்மை தீமைகள் யாவும் கடவுளால் வகுத்தளிக்கப்பட்டனவே யென்று கருதிக் கடவுளை நம்பினுர்க் கியாதொரு கெடுதியு மணுகாது. நன்னெ றியின் நீங்கா தொழுகியும் முற்பிறப்பிற் செய் கரு மத்தின் பயனுய்ச் சென்றடையும் நன்மை தீமை களைத்தான் 'விதி' யென்பர். அவ்வாறு சென்று படும் விதியை விலக்க எவராலு மாகாது. பிரம்மசரிய மொழுங்குற வனுஷ்டித்துவரும் கைம்பெண்களால் அந்தஸ்துக் குறைவு யாது நேர்ந்தது? தற்கால வியல்பினைக் கருதி ப்ரௌடா விவாஹ முதலிய சீர் திருத்தங்களை முறைக்குக் கொணர்ந்தொழுகுதல் நல மேயாகும். ஆனுல் இத்தகைப் பெரிய விஷயங்களைச் சிறுமிகளும் பெண்டிருமாகிய நம்போல்வார் தப்பு ஒப்

புத் தீர்மானித்தலும் மனம்போன போக்கெல்லாம் போகலும் கேட்டைத் தருவனவாகும். ஆதலால் சிறுமியராகிய நாம் தாய் தந்தையர் செயும் எவ்வித மான வேற்பாட்டிற்கு முட்பட்டு நடத்தலே முறையாகும்.—சுந்தரீ! இவ்விஷயத்தைப்பற்றிப் பின்னும் மற்றோர் சமயம் பேசுவோம். பரிதியும் மேற்றிசையின் மறைந்தான். அன்னையுடன் நமது மந்திரஞ் சேருவோம் வா" என்று சொல்லிப் புறப்பட்டு மூவரும் அவ்விடம் விட்டுச் சென்றனர்.

அன்றிரவு முழுவதும் சூடாமணி சுந்தரியுடன் பேசிய விஷயங்களைக் குறித்து ஆலோசிக்கலானாள்: ஆலோசிக்கவாலோசிக்கச் சுந்தரியிடம் அவளுக்குச் சந்தேக மதிகரித்தது: தான் ராஜப்பனை விவாஹஞ் செய்துகொள்ளும்படி சுந்தரி வற்புறுத்தின விதத்தையும், அதற்கேற்பச் சாஸ்திர வாதாரங்களைக் கொணர்ந்ததும், அவள் தன் புத்தியைத் திருப்ப முயன்ற சாமர்த்தியத்தையு மெண்ணி யவளிடத்துச் சமுசய முற்றாள்.

மறுநாட் காலே பண்ணைக்குப் போயிருந்த ஜயராமையர் மந்திரம் வந்து சேர்ந்தார். அவரிடம் தன் சமுசயத்தைத் தெரிவித்தாள் சூடாமணி. ஜயராமையர் அவ்விஷயத்தைத் தீர விசாரித்தறிந்து தக்கவாலோசனை செய்வதாகச் சொல்லிச் சூடாமணியைத் தேற்றினர்.

21. சூது விரும்பேல்

சென்னையில் ஒற்றைவாடைத் தெருக்குச் சமீபமாகப் பைராகி மடமென் றோர் கொட்டகை யுண்டு. அதை யடுத்துத் தென்மேற்கு மூலையி லோர் சாறாயக் கடையும் தென்கிழக்குமூலையி லொரு மிட்டாய்க் கடையும் உண்டு. இக்கொட்டகையின் உட்புறத்தே யோர் பாகத்திற் பைராகிகள் தங்குவதற்குப் பக்குவமான வசதியொன் றுண்டு. மற்றொரு பக்கத்தில் விசாலமானதோ ரழகிய மண்டபம் நிருமிக்கப் பட்டுளது. ஏழைச்சனங்களும் தனவான்களும் மற்றைச் சாமானிய மனிதரும் ஓய்ந்த நேரங்களில் இங்குக் கூடி வேடிக்கையாகக் காலங்கழியாநிற்பர். சிலர் சமாசார பத்திரிகைகள் வாசிப்பதும், சிலர் சொக்கட்டான் சதுரங்க முதலிய ஆட்டமாடுவதும், சிலர் ஸ்பேட்காகிதம் பந்தயம் வைத்து விளையாடுவதும் உண்டு. அக்காலங்களில் தனவந்தருடன் சாமானியரும், சாமானியருடன் ஏழைகளுமாக வித்தியாச

மின்றிக் கலப்பதுண்டு. பந்தயம் வைத்தாடுவோர் சாதாரணமாய் இராக்காலங்களிற்றுனே சேர்வர்.

இப்படி வேடிக்கையாகக் காலங்கழிப்பதற் கென்றே ஏற்படுத்தப்பட்ட அவ்விநோதக் கொட்டகை நாளாவட்டத்திற் சூதாட்டக்கொட்டகையாய்விட்டது. கொண்ட மனக்கவலை போக்க வெண்ணியவர்களும், வேடிக்கையாகப் பொழுதுபோக்க நினைத்தவர்களும், சிநேகிதர்களைக் காண விரும்புமவர்களும், சோம்பேறிகளாய்த் திரியுமவர்களும், புதுச்சிநேகிதம் சம்பாதிக்க வெண்ணமுள்ளவர்களும், தம் வீட்டுச் சொத்தை விற்றுகிலும் சகோதரி தாயார் மனைவி வந்தசுற்றத்தார் விருந்தினர் முதலியவர்களின் ஆபரணுதிகளைக் களவு செய்தாகிலும் சூதாடுவதில் மனஞ்செலுத்தியவர்களும், சாமர்த்தியமின்றிச் சூதாட்டத்திற் பணம் தோற்கும் சுபாவமுள்ளவர்களும், திறமையாய்ச் சூதாடிப் பணங் கவரும் சாமர்த்தியமுள்ளவர்களும், சேருமவர்களிடத்துத் துரோக சிந்தனையுடன் தங்காரிய முடிக்கக் கருதியவர்களும்—இத்தகை நாலுவகைக் கருத்தினரும் இம்மடத்தில் ஒன்றுசேர்வர்.—

ராமமந்திரத்திற் சூடாமணி சுந்தா மிறந்துவிட்டதாகக் கேள்விப்பட்டு மனவருத்தத்துடன் வேதனைப்பட்டிருக்கும் தினம்—இரவு பத்து மணிக்குச் சென்னையில் ராஜப்பன் மேற்குறித்த சூதாட்டக்கொட்டகையை நோக்கிப் போய்க்கொண்டிருந்தான்.

போகும்போ தவனிடம் ஐயாயிரம்ரூபாய் இருந்தது. அற்றை யிரவு ஆட்டத்தில் தான் ஜயமடையாவிட்டால் தன் நிலைமை யாதாகுமோ வென் றாலோசித்த வண்ணமாய்ச் சென்றானவன்; சூதாட்டத்திலே ஏராளமாகப் பணத்தைத் தோற்றுவிட்டதற்காக மிக விசனித்தான்; ஆயினும் தான் தோற்ற பணத்தை மீண்டும் சம்பாதிக்கவேண்டுமென்னு மெண்ணத்தினால் தன்னிட மிருந்த தொகை முழுவதையும் எடுத்துக் கொண்டான்; பைராகி மடம் சேர்ந்து உண்ணுழைந்தான். அங்குச் சேர்ந்திருந்த பல தனவான்களும் ஏழைகளும் அவனைச் சூழ்ந்துகொண்டனர். அச்சமயம் அங்கு ஓர் மேசையின்மேல் ரங் என்னு மாட்டம் வெகு மும்முரமாக நடந்துகொண்டிருந்தது. ராஜப்பன் சென் றுடனே யதிற் கலந்து கொண்டான்: முதலிற் சற்று அபஜயமடைந்தான்: பிறகு வரவர அவனுக்குச் சயம் திரும்பித் தான் கொண்டுவந்த ஐயாயிரம் ரூபாய் பத்தாயிர மாய்விட்டது.—

அதே சமயம் ராஜப்பன் ஆடிவந்த மேஜைக்குச் சமீபமாக மற்றோர் மேஜையின்மேல் இருவர் சொக்கட்டா னுடிவந்தனர். அவர்களிலொருவன் வலுத்த சரீரம் படைத்தவன்: சுமார் ஆறடிக்குமேல் உயரமுள்ளவன்: குறுங் கழுத்தன். அவன் முகத்தில் மீசையில்லாதிருந்தது. சாராயம் கள் கஞ்சா முதலிய குடிமயக்கத்தினுற் கண்கள் சிவந்திருந்தன. அவன்

பெயர் பங்கி பார்த்தசாரதி யென்பர். அவன் முதலில் தனவந்தனுயிருந்து துர்நடத்தைகளினல் நல்குரவா னலியப்பட்டவன்: இச்சூதாட்டக் கொட்டகைக்கு வருபவரிடம் சிநேகம் பாராட்டிப் பணம் பறித்துத் தந்திரமாய்ச் சீவித்துவருபவன். இப்போ தவனோடு விளையாடிக்கொண்டிருந்த மற்றவனும் அவனைப்போற் பலசாலியாகக் காணப்படினும், பார்வைக்குக் கச்சலாக விருந்தான். இவன் சுமார் ஐந்தடி யுயரமுள்ள வன்: கறுத்து நீண்ட மீசையும் சிவந்த கண்களும் வலுத்த தோளும் விகாரமான பார்வையும் படைத்தவனுகக் காணப்பட்டான். இவன் முகலாயம் கர்நாடகம் கள்ளரடி முதலிய கோல்விளையாட்டிற் கைதேர்ந்தவன்: குஸ்திக்கொட்டகையில் நன்றுயப்யாஸமடைந்தவன்: இவன் பெயர் வஸ்தாத் விசுவநாதனென்பர். இவன் மகா துஷ்டனென்று பேரெடுத்தவன்: ஆனபோதிலும், பெரிய தனவந்தர்களின் வேலைகளைச் சீக்கிர முடித்துக்கொடுத்து அவர்களி னபிமான மிகப் பெற்றவன். இவனும் தன் தோழனைப்போற் சூதாட்டக் கொட்டகை சுற்றிவருமவர் பலர் மூலமாய்க் காலங்கழிப்பன்.

வஸ்தாத் விசுவநாதனும் பங்கி பார்த்தசாரதியும் சொக்கட்டா னுடிக்கொண்டிருக்கையில் ராஜப்பன் ஜயமடைவதையும் அவன் மேஜையின்மேற் சுமார் பத்தாயிரம் ரூபாய்க்குமேல் நோட்டுக்கள் அடுக்கடுக்காக வைத்திருப்பதையும் கண்டனர்: ஒருவரொருவர்

முகம் பார்த்துக்கொண்டனர்: மறுபடியும் சொக்கட்டா னுடினர்: பின்னும பனமுறை நோட்டுக்கட்டுகளைக் கண்டனர்: வெகு ஊக்கத்துடன் தமதாட்ட மாடினர்.—ராஜப்பன் ஆட்டத்தை முடித்துச் சீக்கிரமாக வீட்டுக்குப் பயணமாயினுன். அப்போதொருவன், "ராஜப்பா! நீ இன்று அதிக ஜயமடைந்திருக்கின்ருய்! பணம் பத்திரம். பத்து நாளுக்கு முன் நமது நண்பர் ஜாகீர்தார் ஹநுமந்தராயர் ஆயிரம் ரூபாய் கெலித்துக்கொண்டு வீட்டுக்குப் போகும் வழியிற் சில கள்வர் அவரை நன்ருய்ப் புடைத்துக் காயமாக்கிப் பணத்தைப் பறிக்கப்போகும் சமயத்தில், இரவு இரண்டுமணி யானதனுல், அவ்வழியாகச் சில பொலீஸ் சேவகர் பாராக் கொடுத்துவந்தனர். திருடர் பணத்தைக் கவனியாமல் விட்டிட்டுத் தப்பி யோடிப்போயினர். அக்கள்வர்கள் இன்னும் கண்டுபிடிக்கப்பட வில்லையாம். ஆகையால் நீ இன்று பத்திரமாகப் போகவேண்டும்" என்ருன். ராஜப்பன் தன் சட்டைப்பையில் கைத்துப்பாக்கி (ரிவால்வர்) வைத்திருப்பதால் தனக்குப் பயமில்லையென்று சொல்லி நோட்டுக்கள் யாவையும் பத்திரப்படுத்திக்கொண்டான். பின்னர் சற்று நேரம் மற்றவர்களுடன் அவன் வேடிக்கையாய்ப் பேசிக்கொண்டிருந்தான். வஸ்தாத் விசுவநாதன் தனக் கேதோ அவசரவேலையிருப்பதாக யாவர்க்கு முன்னமே புறப்பட்டுப் போய்விட்டான். ஓரரைமணி நேரத்திலெல்லாம்

ராஜப்பன் கொட்டகைவிட்டுப் புறப்பட்டான். பங்கி பார்த்தசாரதியும் மற்றுஞ் சிலரும் தத்தம் இருப்பிடங்களுக்குப் போகப் பயணமாயினர்.—

இரவு நிசி வேளை: எங்கும் காரிருள் படர்ந்திருந்தது. ராஜப்பன் அவ்வேளையில் நிர்ப்பயமாய்க் குறுக்கு வழியாகச் சென்முன். வழக்கமாய்ப் பாதையில் எரியும் விளக்குக்கள் அப்போ தணைந்திருந்தன. ராஜப்பன் சற்றுத் தூரஞ் சென்றவுடனே யொருவன் திடீரெனப் பின்புறமாக வந்து அவன் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்ள, வேறொருவன் எதிராகத் தோன்றி அவன் மண்டையிலோர் வலுத்த தடியினுற் புடைத்தான். ராஜப்பன் அவ்வடி பொறுக்கமாட்டாமல் ஓலமிட்டழுது கீழே விழுந்தான். பின்புற மிருந்தவன் ராஜப்பன் சட்டையிலிருந்த கைத்துப்பாக்கியைப் பற்றிக்கொண்டான்: மற்றவன் நோட்டுக்களை யெடுக்க வாரம்பித்தான். அச்சமயம் ஓர் சிறுவன் வேகமா யோடிவந்து அவ்வழிப்பறித்திருட ரிருவரையும் நன்றுகப் புடைத்து ஒருவனிட மிருந்த கைத்துப்பாக்கியைப் பற்றிக்கொண்டான். திருட ரிருவரும் உயிர்க்குப் பயந்து நோட்டுக்களை விட் டோட்டம்பிடித்தனர்.

இவை யாவும் ஒரு க்ஷணநேரத்திலே முடிந்தன. புடைக்கப்பட்டுக் கீழேவிழுந்த ராஜப்பன் சமாளித்தெழு முன்னமே திருடர் ஓடிப்போய்விட்டனர்.

தன் பணமுற்றும் பத்திரமாகத் தன்னிடமே நின்று விடுமாறு சகாயமாகத் தோன்றிய சிறுவனுக்கு ராஜப்பன் மனப்பூர்வமாக வந்தன மளித்தான். ராஜப்பன் குரலைக் கேட்டுச் சிறுவன், "யார் இது?— ராஜப்பனு?" என்று வெகு ஆச்சரியத்துடன் கேட்டான். ராஜப்பன், மறுமொழியாக, "எனக்கிப்போது இப் பேருதவி யிழைத்த மஹான் பெய ரென்னே?" என்று கேட்டான். அச்சிறுவன் பதி லொன்றும் பேசாமல் ராஜப்பனைத் தெருக்கோடிமட்டும் அழைத்துச் சென்று, அங்கு வெகு பிரகாசமாக வெரிந்து கொண்டிருந்த காந்தவிளக்குக்குச் சமீபமாக நின்று தன் முகத்தை நன்றாகக் காட்டினான். ராஜப்பன் அதிக ஆச்சரியப்பட்டு, "ஆஹா! நீ யார்?—சரி! சரி!! கண்டுகொண்டேன், ஞாபகத்திற்கு வந்தது. இது வெகு அபூர்வ தரிசனம்.—நேசா! நீ எவ்வளவு மாறியிருக்கின்றாய்? அடையாளமே தெரியவில்லையே சொற்பகாலத்தில்! முன் ராமமந்திரத்துத் தென்னஞ் சோலையினருகே நாமிருவருஞ் சந்தித்தோ மல்லவா? அது ஓர் சமயம், இது ஓர் சமயம். நீ இன்றெனக்குச் செய்த வுபகாரத்தை நான் என்றும் மறக்க மாட்டேன்" என்று சொல்லிவருகையிலே யச்சிறுவன் திடீரென மறைந்துபோய்விட்டான்.

ராஜப்பன் வீடு சேர்ந்ததும் நடந்த வெல்லாவற்றையுங் குறித்து ஆலோசிக்கலானான். தன்னை வழி

மறித்தவர் இன்னாரெனத் தெரிந்துகொள்ளக் கூட வில்லை: கொட்டகையில் தன் சமீபமாக வுட்கார்ந்து சொக்கட்டானாடிவந்த இருவர்பேரிலும் சந்தேகங் கொண்டான்: ஆயினும் அது நிச்சயமாகத் துணியக் கூடவில்லை யாதலால், அச்சந்தேகத்தைத் தன் மனத் தின் நீத்தான்.

மறுநாட் சாயங்கிரம் ராஜப்பன் வழக்கம்போற் சூதாட்டக் கொட்டகைக்குப் போயினான். அவ னது வரவை யெதிர்பார்த்திருந்த பலர் அவனைக் கண் டதும் வெகு சந்தோஷமடைந்தனர். வழக்கம்போல் ராஜப்பன் பணத்தைத் தோற்பது மாறி அன்று ஜயமடைந்தது யாவர்க்கு மாச்சரியத்தை யுண்டாக் கிற்று. இப்போ தவன் கையில் ஆட்டத்திற்கென்று எண்ணாயிரம் ரூபாய் நோட்டுக்க ளிருந்தன. அக் கொட்டகையிற் சாதாரணமாக மதுரமங்கலம் ஜமீன் தார் நாராயணையர் மனங்கூசாமல் அதிக பந்தயம் வைத் தாடக்கூடியவர்: சொக்கட்டா னாட்டத்திற் பிரியமுள்ளவர். ராஜப்பன் அன்னவருடன் சொக்கட் டானாடப் புகுந்தான். முதனாட்போற் சமீபமாகப் பார்த்தசாரதியும் விசுவநாதனும் சதுரங்கமாடிவந்த னர். ராஜப்பன் அவர்களை யுற்றுப் பார்த்தான். அவர் களும் நெருங்கி வந்து ராஜப்பனுடன் வேடிக்கை யாகப் பேசிக்கொண்டே அவனுக்குத் துணையாக ஆட் டத்திற் கலந்தார்கள். ராஜப்பன் அவர்கண்மேற் சந் தேகம் நீங்கினவனானான்.—ஆட்டமோ வெகு மும்முற

மாய் நடந்தது. முதல் நாட்போலவே ராஜப்பனுக்கு ஆட்டம் ஜயமாயிருந்தது. ஜமீன்தார் நாராயணையர் அதிக பலமான பந்தயம் வைத்தார். அதற்குச் சரியாக ராஜப்பனும் பந்தயம் வைக்க நேரிட்டது. இப்படிச் சுமார் இரண்டுமணி நேரம் ஆடின பின்பு, அங்கிருந்தவர்களிற் சிலர் காப்பி சோடா முதலியனவும், சிலர் விஸ்கி ப்ராண்டி முதலிய சாருய வகைகளையும் சிரமபரிகாரமாக வுட்கொண்டனர். யாவர்க்கும் ராஜப்பனே பணஞ் செலவுசெய்தான்.—

மறுபடியும் ராஜப்பனும் நாராயணையரும் ஆட்டம் துவக்கினர். ராஜப்பன் தோற்க வாரம்பித்தான். இருகக்ஷியாரையும் பலர் சூழ்ந்துகொண்டனர். மதாமங்கலம் ஜமீன்தாரே ஜயமடைந்துவந்தார். ராஜப்பனிடமிருந்த தொகை யாவும் மற்றவர்க்குப் போய்ச் சேர்ந்துவிட்டது: ராஜப்பனுக்கு மனத்திற் கலக்கமுண்டாயிற்று: முகம் வாடிவிட்டது: மேற்பந்தயம் வைத்தாடக் கையிற் பணமில்லை: ஆட்டத்திற் பின்வாங்கினுற் கௌரவம் கெடும்: தான் ஜயித்ததுடன் கையிற் கொண்டுவந்ததும் போய்விட்டது. ஜமீன்தாரோ மேன்மேற் பந்தயம் வைக்கப் பின்னிட்டாரில்லை: ராஜப்பன் முகம் வாடித் தடுமாறுவதைக் கண்டார்: பந்தயத்திற்கு வேண்டுமானுல் அவனுக்கு முன்பணம் தாமே கடன் கொடுப்பதாகச் சொன்னுர். ராஜப்பனுக்குச் சற்றுச் சந்தோஷமுண்டாயிற்று: மறுநாள் திருப்பிக் கொடுப்பதாகச் சொல்லி அவரிடம் ஐயா

யிரம் ரூபாய் கடன் வாங்கினன்: ஜமீன்தாருக்குச் சமமாக அதிக பந்தயம் வைத்தான்: கடன் வாங்கின தொகை முழுவதையும் தோற்றான். ஆட்டத்தை நிறுத்தினர்கள்.—ஜமீன்தார் நாராயணையர் மறுநாளிரவு கீழ்ப்பாக்கத்தில் லக்ஷ்மீ விலாஸ மென்னும் தமது மந்திரத்திற் சில நண்பர்க் களிக்கப்போகும் விருந்திற்கு ராஜப்பனையும் வரும்படி யழைத்தார். ராஜப்பன் அங்ஙனமே வருவதாக ஒப்புக்கொண்டான்.—இரவு மூன்று மணியாயிற்று. யாவரும் தம திருப்பிடங்களுக் கேகினர். ராஜப்பன் முதனாள் சென்ற வழியே அன்றிரவும் சென்றான். ஒருவரும் அவனைத் தொட்டாரில்லை.

ராஜப்பன் வழித்தடங்க லொன்றுமின்றி வீடு சேர்ந்தான்: தூக்கம் பிடிக்கவில்லை: அவன தன்னிடம் இரண்டாயிரம் ரூபாய்தான் வைத்திருக்கிறன். ஜமீன்தார் நாராயணையரோ அவனை மறுநாள் விருந்திற் கழைத்திருக்கின்றார். அச்சமயம் அவரிடம் கடன் வாங்கின தொகையைச் செலுத்திவிடவேண்டியது அத்யாவசியகம். ஜமீன்தார் மிகவும் கண்டிப்பானவர்: அதிக கௌரவமும் மரியாதையு முள்ளவர்: அவர் தம்மிருப்பிடத்திற்குச் சாதாரணமானவர்களை யழைப்பதில்லை: அவரிடம் நெருங்குவார் யாவரும் உயர்ந்த அந்தஸ்தின ரல்லாது சாமானிய ரல்லர். அப்படிப்பட்டவர் தன்னை விருந்திற் கழைத்ததனுல் ராஜப்பன் தான் போகாமலிருப்பது

உசிதமல்லவென்று நினைத்தான்: தான் சொல்லிய பிரகாரம் அக்கௌரவக் கடனை மறுநாள் தீர்க்கா விட்டால் தன் நிலைமை யாவர்க்கும் வெளிப்பட்டு அதுவரையிலும் தான் வாழ்ந்த வாழ்வெல்லாம் வீணாய்விடுமென் றேக்கங்கொண்டான். — கடன் செலுத்து மார்க்க மேற்படவில்லை. காலஞ்சென்ற தன் தாய் மாமனாற் கொடுக்கப்பட்ட ஐம்பதினாயிரம் ரூபாயும் ஒரு பைசாவாகிலும் கையிலில்லாமல் நானா விதமாய்ச் செலவாய்விட்டது: ஜமீன்தார் கோபாலை யர் பரலோக மடைந்தாரெனக் கேள்விப்பட்டவுட னே தான் செய்துவந்த ஜவுளி வர்த்தகத்தை நிறுத்தி விட்டான்: அந்தப் பணத்தையும் செலவழித்துவிட் டான்: தற்சமயம் பட்ட கடனைத் தீர்க்க வழியில் லாதவனானான்: ஜமீன்தாரை யேமாற்றவு முடியா தென வறிந்து விழிக்கின்றான்: இனி யொருவ ரும் தன்னை நம்பிக் கடன் கொடுக்கமாட்டாரெனத் தெரிந்துகொண்டான்: கவலை யதிகரித்துச் சித்தம் கலங்கினான்: தாமரையிலை நீரொப்பத் தத்தளித் தான்: தான் தொடர்ந்து நாடிய சூதாட்டம் பொய் களவு முதலிய துர்நடத்தைகளின் கெடுதிகளைக் கணக்கிட்டான்: தன் மனத்துள்ள வோர் சூழ்ச்சி யை நினைத்தான்: முகம் சற்றுத் தெளிவுற்றது: ஆனா லது பலிப்பதற் கின்னுஞ் சிலநாட் செல்லும்: அது பலித்தக்கால் தானெப்போதும்போலத் தனிக னாய்விடலாமென வெண்ணினான். மாம்பாக்கத்துத்

தென்னஞ்சோலையில் தன் முயற்சியைக் கெடுத்தவனும், முந்தை நாளிரவு தன்னை வழிப்பறிக்கொள்ளையினின்றும் காப்பாற்றியவனுமாகிய சிறுவனை நினைத்தான்: அவனால் தன் பிரயத்தனம் வீணாய்விடுமோவென்று பயந்து மனங் குன்றினான்: தற்கால விடுக்கணொழிப்பதற்கு வகையில்லாமல் தடுமாற்றத்துட னேங்கி வாளாவிருந்திட்டான்: இந்நிலையினும் தற்கொலையே மேலானதென் றெண்ணினான்: வேண்டுமிடத்து இச்சமயம் பிசாசநாதனுக்காகினும் தன்னாத்மாவை யடிமையாக்கப் பின்னிடுவானாகான்.—

அந்தோ! துர்நடத்தைக் கடிமைப்பட்ட ராஜப்பனை எங்குக் கொண்டழுத்தப்பட்டான் கண்டீரோ?—


இந்நிலையிற்றானே பொழுது விடிந்தது. வஸ்தாத் விசுவநாதனும் பங்கி பார்த்தசாரதியும் ராஜப்பனிடம் வந்தனர். ராஜப்பன் அவர்களிடம் சூதாட்டக்கொட்டகையிற் றவிர மற்றைச் சமயங்களிற் பேசுவதில்லை. அவர்களை யவன் தன் அந்தஸ்திற்குக் கீழ்ப்பட்டவர்களென மதித்திருந்தானாக, அவர்கள் தன்னிடம் வந்ததற்குப் பிரியப்படவில்லை: ஆகினும் தன்னைத் தேடி வந்தவர்களை விசாரித்தறிவது நலமெனவெண்ணி யவர்களுக்குக் காப்பி ரொட்டி முதலிய சிற்றுண்டிகளைக் கொடுத் துபசரித்தான்.—

அவ்விருவரும் ராஜப்பனது தற்கால நிலைமை

யை யுத்தேசித்து வந்ததாகத் தெரிவித்தனர். ராஜப்பன் அவர்களால் தனக்காகவேண்டிய தொன்றுமில்லையென நினைத்துத் தன் மனக்கவலையை யவர்களுக்குத் தெரிவிக்க மனமில்லாதவனு யிருந்தான். அதை யறிந்து அவர்கள் ராஜப்பனுக் கவன் மாமனுராற் கொடுக்கப்பட்ட ஐம்பதினுயிரம் ரூபாய் முற்றும் செலவழிந்திட, அன்று மதாரமங்கலம் ஜமீன்தாரிடம் பட்ட கௌரவக்கடனைத் தீர்ப்பதற்கு வகையில்லாமல் தடுமாறுவதாகும் அவனது உண்மைநிலைமையை விவரமாக வெடுத்துச்சொல்லி யவ்விஷயமாகத் தானே யவனுக் கச்சமயம் தாம் சகாயஞ்செய்ய வந்திருப்பதாகத் தெரிவித்தார்கள்.

கிணற்றில் வீழ்ந்தவனுக்கு மரவேரொன் றகப்பட்டாற்போலச் சந்தோஷ மடைந்து ராஜப்பன் அவர்களிட மிக்கன்பு பாராட்டினுன்.—சற்று நேரம் அவ்விருவரும் வேறு விஷயங்களைப் பேசியிருந்து ராஜப்பனுக் கோர் மார்வாடியிடம் ரூபாய்க் கிரண்டணு வீதம் மூன்றுநாட்டவணைக்கு ஐயாயிரம் ரூபாய் கடன் வாங்கித் தருவதாகச் சொல்லினர். ராஜப்பன் வெகு ஆவலுடன் அந்தப் பிரேரணைக்குச் சம்மதித்து அவர்களுக்கு வெகு வந்தன மளித்தான். பின்னர் அவ்விருவரும் ராஜப்பனுக்குச் சில சங்கதிகளைச் சொல்லிப் போயினர். ராஜப்பன் இனி யேராளமாகப் பணம் சம்பாதித்துவிடலாமென்று மனவெழுச்சியுட னிருந்தான்.

அன்றிரவு குறித்த வேளையில் ஐயாயிரம் ரூபாய் ரொக்கம் கைக்கொண்டு ராஜப்பன் மதுரமங்கலம் ஜமீன்தாரின் விருந்துக்குச் சந்தோஷமாகச் சென்ருன்: போகும் வழியில் வஸ்தாத் விசுவாநாதனையும் பங்கி பார்த்தசாரதியையும் நினைத்தான்: தன்னையும் ஜாகீர்தார் ஹநுமந்தராயரையும் வழிப்பறித்த கள்வர் அவ்விருவருமேயென்றாகித்து நிச்சயித்தான்.—



22. லக்ஷ்மீ விலாஸம்

சென்னையினோர் பிரிவாகிய கீழ்ப்பாக்கத்திற் பூமாதினுக் கெழின் முகமாய் விளங்குவதாம் வஸந்ததோட்ட மொன்றுண்டு. அது மிகவும் விசாலமும் ரமணீயமுமானது. அதனிற்பற்பலவித புஷ்பச்செடிகளும் மதுரமான பழங்களை யளிக்கும் விருக்ஷ வர்க்கங்கள் பலவும் நிறைந்திருக்கும். அதன் மத்தியிற் பூமகளே தானுறைவதற்கேற்றதெனவுவந்து குடிகொண்டதாமோர் பெரிய மாளிகையமைந்துளது. குணத்திற்கேற்ப வதற்கு லக்ஷ்மீவிலாஸ மென்று பெயர் வழங்கும். அது விலையுயர்ந்த அநேக வற்புத சாமான்களும் சித்திரப்படங்களும் நிறையப்பெற்றது. தோட்டத்துடன் கூடிய அந்தப் பங்களாவை மதுரமங்கலம் ஜமீன்தார் நாராயணையர் நான்கு வருடங்களுக்குமுன் விலைக்கு வாங்கினார். அவர் சுமார் 50 மைல் தூரத்திலுள்ள தமது ஜமீனிலிருந்து வருஷா வருஷம் சென்னைக்கு வந்து சுமார் நான்கு மாத

காலங் கழிப்பதுண்டு. அவருக்குப் பாலியத்திற்றனே தைவீகமாகச் சில அஸம்பவங்கள் நேர்ந்ததாகவும், அதனால் என்றும் தம்மை விட்டகலா மனக்கவலையைப் போக்குவான் கருதி யப்போ தப்போது தம் சிநேகிதரை வரவழைத்து விருந்து முதலியன செய்து யாவருடனும் உல்லாசமாக நடந்து தற்காலச் சுக மனுபவித்து நடப்பதாகச் சொல்லிக்கொள்வர். அவர் பி. ஏ. பரீக்ஷயிற் றேறினவர்: வெகு பணக்காரர்: அதிக செல்வாக்குப் பெற்றவர். சத்தியவானென்று யாவராலும் மிகுதியும் நன்குமதிக்கப்பட்டவர். ராஜப்பன் ஜவுளி வர்த்தகம் செய்யுமோர் பெரிய குடும்பத்துப்பிள்ளை யென்று கேள்விப்பட்டு அவர் அவனுடன் நெருங்கிப் பழகலாயினர்.

லக்ஷ்மீ விலாஸத்தில் நடக்கும் விருந்திற்கு அநேக கனவான்களும் மிகு தனவான்களும் பெரிய உத்யோகஸ்தரும் வக்கீல்களும் வர்த்தகர்களும் சேர்ந்தனர். ராஜப்பன் அங்கு வரவே ஜமீன்தார் அவனைப் பலர்க்குப் பரிசயப்படுத்தினர். யாவரும் லோக சமாசாரங்களையும் பொதுநன்மை விஷயங்களையும் தத்தம் க்ஷேமலாபங்களையும் குறித்துச் சில நேரம் பேசிக்கொண்டிருந்தனர். போஜனத்திற்கு யாவும் சித்தமாக்கப்பட்டன. ஜமீன்தார் தம் விருந்திற்கழைத்த வொரு சிறுவனது வரவை யெதிர்பார்த்துப் பங்களா வாசலில் நின்றுகொண்டிருந்தார். மணி

ஒன்பது அடித்தது. அப்போது அழகுமிகுந்த இரட்டைப்பரி வண்டி யொன்று வந்து நின்றது. அதனின் றழகிய வோர் சிறுவன் இறங்கி வர, ஜமீன்தார் அவனை யெதிர்கொண்டோடி யழைத்துக் கை குலுக்கி யாலிங்கனஞ்செய்துகொண்டு பின்னர் . அவனுடன் ஆஸ்தானமண்டபஞ் சேர்ந்தார். சேர்ந்து, "இதோ வந்துவிட்டான் ஜடாவல்லபன்!" என்று சொல்லி யச்சிறுவனை யனைவர்க்கும் பரிசயம்பண்ணினர்.

ஜடாவல்லபன் சுமார் இருபது வயதினன்: அவன் முகத்திற் பிரம்ம தேஜசும் வித்யா தேஜசும் விளங்கிக்கொண்டிருந்தன: டம்பமற்று விமரிசையொடு தரித்திருந்த சரிகை வேஷ்டியினுல் அவனோர் ஸ்ரீமந்த செல்வப்புதல்வனென வெண்ணுதற் கிடமுண்டாயிருந்தது: கூந்தல் பரிமளத் தைலத்தால் அழகாய் வாரி யொதுக்கப்பட்டிருந்தது: முகத்திற் சிறு மீசையும் தாடியு மிருந்தன: கைவிரல்களில் அவன் விலையுயர்ந்த வைர மோதிரங்களை யணிந்திருந்தான்: சட்டைப் பைக்குட் போட்டிருந்த கடியாரத்தினின்றும் ஆங்காங்கு வைர மிழைத்த தங்கச் சங்கிலியொன்று துலங்கிக்கொண்டிருந்தது: அவன் கலைமகளிடத்து மிகுதியு மீடுபட்ட மாணுக்கனென்பதற் கறிகுறியாகக் கையிற் சிறிய புத்தகமொன்று பிடித்திருந்தான்.—

ராஜப்பன் ஜடாவல்லபனைக் கண்டதும் திப்பிர

மித்தான்: அவன் இம்மாதிரியாகக் கனவான்க ளுடுவே பழகிவருவது நோக்கி வெகு அச்சமும் ஆச் சரியமும் மாச்சரியமும் கொண்டான். ஜமீன்தார் ஜடாவல்லபனை ராஜப்பனிட மழைத்துவந்து பரிசயஞ் செய்வித்தார். ராஜப்பன், "இவரை முன்னமே யறிந் திருக்கும் பாக்கியம் பெற்றுளேன் நான். இரண்டு நாட்குமுன் எனது பதினையிரம் ரூபாயையும் இன்னு யிரையும் காப்பாற்றித் தந்த மஹானுபாவர் இவரே கண்டீர். என் மனப்பூர்வவந்தன மிவர்பாற் கடமைத் தாகிற்கின்றது" என்றுசொல்லிக்கொண்டே யச்சிறு வனிடம் தன் கை நீட்டினன். ஜடாவல்லபன் ராஜப்ப னைக் கவனியாதவன்போல் மற்றவரிடம் பேச வாரம் பித்தான். அதனல் ராஜப்பனுக்கு மனவருத்த முண் டாயிற்றெனினும், அதை வெளிக்குக் காட்டக்கூட வில்லை. விருந்து மிக ப்ரபலமாய் நடந்து யாவர்க் கும் வெகு திருப்தியை யுண்டாக்கிற்று.—அவரவர் சந்தன தாம்பூலாதிகளைக் கொண்டு வேடிக்கையாகச் சற்றுநேரம் காலங் கழித்தனர்.

அச்சமயம் ஜடாவல்லபன் பேசுந் திறமையும், யாவரிடத்துமொழுகு நடத்தையும், அவனது வார்த் தைகளில் யாவருங் கொள்ளு மோகமும், அனைவரும் அவனைச் சூழ்ந்து அவனுடன் பேச வெண்ணும் விருப்பமும் ராஜப்பன் கவனித்துப் பிரமித்து நின்று விட்டான்: மனத்திலோர் சந்தேகத்துடன் அவனை

யுற்றுப்பார்த்தான்: சிற்சில குறிகளால் ஜடாவல்லப னின்னுனென ஷூகித்தான். அவனிடம் சிநேகம் பாராட்டிப் பேசப் பன்முறை முயன்றபோதிலு மச் சிறுவன் ராஜப்பனுக் கிடங்கொடுத்தானல்லன். ஜடா வல்லபனைக் காண ராஜப்பனுக்கு மனச்சோர்வும் திகிலு முண்டாயின.—ஜடாவல்லபனது ரகசியத்தை வெளியிட் டவனை யவமானப்படுத்தலாமென வெண் ணினுன் ராஜப்பன். ஆனு லவன் தன் (ராஜப்பனின்) சரித்திரத்தை வெளியிட்டானுகில், அதான் றனக்கு விளையக்கூடிய அவமானமே ஆயிரமடங் கதிகமாக விருந்து தானே கெட்டுப்போவானென்று பயந்து சும்மா விருந்துவிட்டான் ராஜப்பன். ஜடாவல்லபனே ராஜப்பனைத் திருணமாகமதித்து ஒதுக்கிவிட்டான்.—

யாவரும் சபாமண்டபத்தில் வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருக்கையில், ஜமீன்தார் ராஜப்பன் மு தலியவர்களை யோர் தனியறைக் கழைத்துப் போயி னுர்.—குழந்தைகள் மாணுக்கர் சிறுவர் முதலியவர்க் காக அஹஸ்ய முதலிய வேடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. சிறுவர் முதலியோர் அவற் றைக் கவனித்திருந்தனர்.

தனியறைக்குட் சென்ற ஜமீன்தார் ராஜப்பனு டன் சொக்கட்டா னுட வுட்கார்ந்தார். ராஜப்பன் ஜமீன்தாரிடம் ஐயாயிரம் ரூபாய்கொண்ட நோட்டுக் கட்டை இரகசியமாகக் கொடுத்து அவர்செய்த சகா

யத்திற்கு வந்தனமளித்தான். ஆட்டம் துவக்கி ராஜப்பன் பக்கம் அபஜயம் அதிகமாய்க்கொண்டே வந்தது. ஆட்டமோ மும்முறமாய் நடக்கலாயிற்று. அச்சமயத்தில் வீட்டிற்குப் போக விடைபெறும் பொருட்டு ஜடாவல்லபன் ஜமீன்தாரிடம் வந்தான். ஜமீன்தா ரெழுந்து அவனுக் குபசாரவார்த்தைகள் சொல்லிக்கொண்டு வழிவிடச் சென்றார். அது சமயம் பார்த்து ராஜப்பன் ஓர் வஞ்சனை செய்தான். ஜடாவல்லபன் அவ்வறையை விட்டு வெளியே போகக் கதவு திறக்குஞ் சந்தர்ப்பம்—தற்செயலாய்ப் பின் திரும்பிப் பார்க்க, ராஜப்பன் செய்யும் வஞ்சனை யவன் கண்களுக்குப் புலப்பட்டது. ஜடாவல்லபனோ அதைக் கவனியாதவன்போலச் சும்மா போய்விட் டான். ராஜப்பனுக்குமட்டும் சந்தேக முண்டாயிற்று யினும், அவன் தன் தைரியத்தை விட்டானில்லை.

ஜமீன்தாரும் ஜடாவல்லபனை வழிவிட்டு வந்து ஆட்டத்தி லுட்கார்ந்தார். ஜடாவல்லபனை யவருக் கெத்தனைக் காலமாய்த் தெரியுமென்று கேட்டான் ராஜப்பன். ஜமீன்தார், “ராஜப்பா! நான் ஜடாவல் லபனைப் பார்ப்பது இரண்டா முறை யிது. என் நண்பர் ஜட்ஜ் நடேசையர் தம் மக்களுடன் சில மாதங்களுக்கு முன் ஓர் நா ளிரவு பன்னிரண்டு மணிக்குமேல் ஒற்றைவாடை வழியாக விரட்டைப் ரிபமாவண்டியிலேறி வந்துகொண்டிருக்கையில், வழி

பதிக்கள்வரிருவர் அவாது வண்டியை நிறுத்திக் குதிரைக்காரரைப் புடைத்து வண்டியிலிருந்த குழந்தைகளின் நகைகளைப் பறிக்கத் தொடங்கினர். அச்சமயத்திலிந்த ஜடாவல்லபன் திடீரெனத் தோன்றி யக்கள்வரைப் புடைத்து அவர்களைப் போலீசார் வசம் ஒப்புவித்தான். காவலிலிடப்பட்ட அக்கள்வரிருவரும் சிறைதப்பி யோடிப் போயினர்: இதுவரையும் அகப்படவில்லை. அன்றுமுதல் ஜடாவல்லபன் நடேசையருக்கு உயிர்த்தோழனு யிராநின்றான். அவனுக்கு மாதப்ரதிமாதம் ஆயிரம் ரூபாய் வருமானமாம். அவன் பி. ஏ. பரீக்ஷை இப்போதுதான் தேறினன். இவ்வளவுதான் அவனைக் குறித்தெனக்குத் தெரிந்த வரலாறு'' என்றுசொல்லி ஆட்டம் துவக்கினர்.

ஜயம் இப்போது ராஜப்பன் பக்கம் திரும்பிற்று. ஜமீன்தார் பெரிய பெரிய பந்தயங்கள் வைக்க வாரம்பித்தார்; யாவையும் தோற்றார். இப்படி விடியற்காலம்வரையு மாடினர். வைகறை மணி ஐந்தாயிற்று. ஆட்டம் நிறுத்தினர். ராஜப்பன் தான் ஜயித்த தொகையைக் கைக்கொண்டு ஆநந்தபரவசனாய்த் தன்னிருப்பிடஞ்சேர்ந்தான்.

23. கோதாட்டொழி

முன்னளிரவு முற்றும் சூதாட்டத் தான் விழித்திருந்ததனல் ராஜப்பன் காலை பத்து மணிக்குமேல் நித்திரை விட்டெழுந்தான்: எழுந்ததும் ரொட்டி காப்பி முதலியன வுட்கொண்டு சென்ற விரவு ஜயித்த ஐம்பதினயிரம் ரூபாய் நோட்டுக்களை யெடுத் தெண்ணிப் பத்திரப் படுத்தி, இரவு தனக்குச் சயங்கொணர்ந்த கவறுகளை மேஜையின்மேல் வைத்து அவற்றைப் பார்த்தவாறே தானடைந்த லாபத்தை யுன்னிக் களிப்புடனுட்கார்ந்திருந்தான். அறையின் கதவு திடீரெனத் திறக்கப்பட்டது: ஜடாவல்லபன் உண்ணுழைந்தான்: ராஜப்பன் அவனைக் கண்டதும் திகிலடைந்தான். மேஜையின்மேலிருந்த பாச்சிகைகளை மறைப்பதற்

கவகாச மில்லை: தன் மனநிலைமையை வெளிக்குக் காட்டாவண்ணமாய்ப் புன்முறுவலுடன் தன்னிடம் வந்த ஜடாவல்லபனுக்கு முகமன் கூறி யவனை யாசனத் திருக்கச்செய்தான். ராஜப்பன் சொல்லியுஞ் சொல்லா முன்னமே ஜடாவல்லபன் அப்பாச்சிகைகளுக்குச் சமீபமாக நாற்காலி யிழுத் திட்டமர்ந்தான். ராஜப்பனுக்கு அதிக திகிலுண்டாகி மெய் நடுக்குற்றது: வாய் குழற லெடுத்தது: முகம்வாடியது: கண்கள் கலங்கின: நாச்செயலற்றது.

ஜடாவல்லபன் ராஜப்பனது உண்மை நிலைமையைக் கவனித்து அவன் குற்றவாளியே யெனத் தீர்மானித்தான்: தன் முன்பிருந்த பாச்சிகைகளைக் கையிலெடுத்துக்கொண்டான்: "ராஜப்பா! துணை பாதகா! நான் வந்த காரிய மின்னதென் றுனக்கு விளங்கிவிட்டதன்றே! நான் வெளிப்படையாகச் சொல்லவும்வேண்டுமோ? இதோ இந்தப்பொய்க்கவறுகளே யுண்மையைக் கதறுகின்றனவே! நேற்றிரவு ஜமீன்தாரைக் கொள்ளைகொண்ட ஐம்பதினாயிரம் ரூபாயையும் உடனே நீ யவரிடம் சேர்த்துவிடுதி: இன்றேல் நீ யதிக கஷ்டத்திற் குட்படுவாய்! உன் பெரியோரிட மெனக் குள்ள கௌரவத்தை யுத்தேசித்து உனக் கிந்நன்மொழி யோதுகின்றேன்: மறுத்தனையேல் நீ போலீசார்வசம் ஒப்புவிக்கப்பட்டு விசா

ரனைக் குட்பட நேரும். யாது சொல்கின்றனை?" என்று கடிந்து கேட்டான்.

ஜடாவல்லபன் சொல்வதெல்லாம் பொய்யென மறுத்தான் ருணபாதகன்: ஜடாவல்லபனது இரகசியத்தை வெளியிட்டுவிடுவதாக மிரட்டினான். ஜடாவல்லபன் பின்னிடாமல், "ருணபாதகா! ஏன்வீணுகக் கெட்டுப்போகின்றாய்? உன் மிரட்டலுக்கு நான் பயந்தேனல்லேன். நீ சொல்வதா லெனக்குக் கெடுதி யாதும் விளையமாட்டாது.—நேற்றிரவு நீ பாச்சிகைகளை மாற்றினதை நான் ப்ரத்யக்ஷமாய்க் கண்டேனே. அநாவசியமா யவமானப்படாதே! ஜமீன்தாருக் கின்னும் இச்சங்கதி நான் தெரிவிக்கவில்லை. நீயவரைப் பக்குவமாக விப்போ திவ்விடம் வரவழைத்து அவரிட மவ்வைம்பதினாயிரம் ரூபாயையும் திருப்பிக் கொடுத்துவிட்டு அவரது மன்னிப்பைக் கேட்டுக் கொள். நான் இங்கே மறைவிடத் திருந்து உன் காரியத்தைக் கவனித்துவருவேன். ஜமீன்தார் ஒருவேளை யுன்னிடங் கடுமையாகவிருப்பாராயின், நானே வெளித் தோன்றி யுன் பக்ஷமாகப் பரிந்து பேசுகிறேன்: அப்போதவர் இணங்காமலிரார். என் சொல் மறுத்தாயேல், உனக்கின்றே காராக்ரஹம் ப்ராப்தமாகும். யாது சொல்கின்றனை?" என்று மறுபடியும் கடினமாய்க் கேட்டான். ராஜப்பன் தப்பித்துக்

கொள்ள வேறு வகையில்லாமல் அங்ஙனே செய்வதாக வொப்புக்கொண்டான்.

ஜடாவல்லபன் ராஜப்பனுக் கின்னுஞ் சில புத்திமதிகளைச் சொல்லி யவ்வஞ்சக்கவறுகளை யெடுத்துக் கொண்டு அங்கு ஜமீன்தார் வருமளவும் புத்தக சாலையிற் காலங்கழிப்பதாய்ப் போகப் புறப்பட்டான்: எதிரே பங்கியும் வஸ்தாதும் ராஜப்பனிடம் வருவதைக் கண்டான். வந்த விருவரும் தன் சிநேகிதரென்று ராஜப்பன் தெரிவிக்க, அவர்கள் ஜடாவல்லபனுக்கு நமஸ்கரித்து சில வுபசார வார்த்தைகள் சொன்னார்கள். வஸ்தாதின் குரலைக் கேட்ட ஜடாவல்லபன் சற்று ப்ரமித்துநின்று அவனை யுற்றுப் பார்த்தான்: தன் மனத்திலோ ரெண்ண முதித்தது; சரேலென் றவ்விடம் விட்டுப் பின்னர் சமயத்திற்குத் திரும்பிவருவதாகப் போய்விட்டான்.

ஜடாவல்லபன் போய்விட்டானென்று பார்த்தறிந்த வுடனே யவ்விருவரும் அறையின் கதவுகளை நன்றாகச் சாத்திக்கொண்டு தம தேற்பாட்டின்படி சென்ற இரவு கிடைத்த லாபத்திற் பாதியைத் தமக்குக்கொடுத்துவிடும்படி ராஜப்பனை வற்புறுத்தினார்கள். ராஜப்பன் தான் ஜடாவல்லபனிட மகப்பட்டுக்கொண்ட விதத்தை யெடுத்துச்சொன்னான். அவ்விருவரும் ஒப்பினாரிலர்; பணத்தை யெடுத்துக்கொண்டு மூவருமாக வெளிநாட்டிற் கோடிப்போகலா மென்ற

னர். ராஜப்பன் அதற்குச் சம்மதித்தா னல்லன்: ஆக மூவர்க்கும் கலகமூண்டது.

இது சமயத்தில் வெளிப் போந்த ஜடாவல்ல பன் யாதோ நினைத்து ராஜப்பனிடம் திரும்பி வர, அறையின் கதவு சாத்தப்பட்டு அங்குச் சச்சரவு நடந்துகொண்டிருக்கக் கேட்டான்: அங்கே நின்று விட்டான்.—அறைக்குள் :—

குணபாதகன் : (தனியாய்) நண்பர்களே! நீங்க ளென் னிட மிங்ஙனம் கலகஞ் செய்வதிற் பிரயோஜன மொன்று மில்லை. உங்கள் சரித்திர முற்றும் நா னறிவே னன்றோ!— நீங்களன்றோ ஜமீன் தார் ஹநுமந்தராயலரை—?

வஸ்தாத் : அதைக் குறித்து என் பேசுகிறாய் ?

குணபாதகன் : நீங்களன்றோ என்னை —?

பங்கி : சரிதான்! சரிதான்!!

குணபாதகன் : நீங்களன்றோ ஜட்ஜ் நடேசையரை—?

வஸ்தாத் : இவற்றை யெல்லாம் என் சொல்லுகிறாய்?

குணபாதகன் : நீங்களன்றோ அப்பொய்ப்பாய்ச்சிகை களை யென்னிடம் கொடுத்து—?

பங்கியும் வஸ்தாதும் : சரி சரி! ஒன்றும் சொல்ல வேண்டாம். இனி நாம் மூவரும் ஒற்றுமையா யிருந் தெல்லாக் காரியங்களையும் நடத்துவோம். நமக்குள் கலகம் வேண்டாம்.

இங்ஙனமாக மூவரும் சமாதானமாகி மற்றுஞ் சில விஷயங்களைப் பேசிய பின்னர், வஸ்தாதும் பங்கியும் சந்தோஷமாய் ராஜப்பனிடம் விடை பெற்றுச் சென்றனர். இதற்குட் சுந்தரம் அறையில் நடந்த ஸம்பாஷணையின் ஸாராம்சத்தை யறிந்துகொண்டு அம்மனை விட்டுப் போய்விட்டான்.—

பின்னர் இரண்டு மணி நேரங்கழித்து ராஜப்பன் தன் க்ருஹத்தில் ஜமீன்தார் நாராயணையருடன் பேசிக்கொண்டிருப்பதைக் காண்போம்:—

ராஜப்பன் : நண்பரே! நான் அந்தரங்கமான தொரு சங்கதியை நும்மிடம் தெரிவிப்பான் பொருட்டு நும்மை யென் னிக்குடிலுக்கு வர வழைத்தேன். தயைசெய்து கருணையுடன் கேட்கவேண்டும்.—நும்மிடத் தொருவன் மிகப் பெரிய தொரு அபராதஞ் செய்யமுயன்றான். அவனை நீர் மன்னிப்பதாக வெனக்கு வாக்களிக்க வேண்டுகின்றேன்.

ஜமீன்தார் : நண்ப! இன்னான் இன்ன அபகார மியற்றினானென்று எனக்குத் தெரியு முன்னமே நானவனை யெங்ஙனம் மன்னிக்க வியலும் ?

ராஜப்பன் : அப் பெரும் பிழை யிழைத்தவன் நும் மால் மிகவும் அபிமானிக்கப்பட்டுவருபவன். நேற்றிரவும் மிக்க அன்புடன் நீரிட்ட விருந்திற்கு வந்து வெகுவாக வுபசரிக்கப்பட்டவன் : ஏதோ

கையிற் பொருளில்லா நிமித்தம் தன் கஷ்ட நிவர்த்திக் கருதி யிந்தத் தப்பிதஞ் செய்துவிட்டான். ஈயக்குண்டுகே ளுண்ணிறையைப் பெற்ற பொய்க்கவறுகளைத் தயார் செய்துகொண்டு நும்மைச் சொக்கட்டானுட்டத்தில் வென்று பெருந்தொகை பறிக்—

ஜமீன்தார்: (ராஜப்பன் சொல்லி முடிப்பதற்குள் மிக்கெழுந்த கோபத்துடன்) என்ன என்ன! என தன்னத்தைப் புசித் தென்னையே யேமாற்ற நினைத்த பாதகனைக் குறித்தா ராஜப்பா! நீ சிபார்சு செய்வது? அப்பாதகன் யாவன்? அவனை யுடனே நீ தெரிவிக்காவிடினும் நான் தண்டிக்காவிடினும் நாமிருவரும் நாட்டிற்குப் பெருங்கே டிழைத்தவ ராவோம். அவனைச் சும்மா விடுவேனாகில் அவ னினிப் பலபேரை மோசஞ்செய்து நாசஞ்செய்யக்கூடும். அவனை யிக்கணமே தண்டனைக் குட்படுத்துகிறேன். அந்தச் சண்டாள னெங்குளன்?

ராஜப்பன்: நண்பரே! சற்றுக் கோபந் தணிவீர். அவன் செய்திருக்கும் தப்பிதம் மிகக் கொடியதாயினும், அவனுடைய தற்கால வறுமையை யுன்னி பவனை யித்தடவை காப்பது ஓர் பேருபகாரமாகு மென்று பிரார்த்திக்கின்றேன்.

இது சமயம் வஸ்தாத் விசுவநாதனும் பங்கி பார்த்தசாரதியும் அவ்விடம் வந்து சேர்ந்து ஜமீன்தாருக்கு வந்தன மளித்து நின்றார்கள். சூதாட்டக் கொட்டகையிற் பன்முறை யவர்களைக் கண்டிருக்கும் ஜமீன்தார் அவர்களது வரவைக் குறித் தாலோசிக்கலாயினர்.—

ராஜப்பன்: ஐயா! இந்நண்ப ரிருவர்க்கும் அதன் உண்மை தெரியும்.

ஜமீன்தார்: (கோபத்துட னெழுந்து) அப்பாதகன் யார்? இக்கணமே யவனை யென்னிட மொப்புவிக்க வேண்டும்!

ராஜப்பன்: இதோ பாருங்கள் அந்தப் பாதகனை!—

இவ்வாறு சொல்லிச் சமீபமாயுள்ளதோ ரறையின் கதவுகளைத் திறந்தான் ராஜப்பன். அவ்வறைக்குள் ஜடாவல்லபன் பிரமித்து நிற்பதைக் கண்டார் ஜமீன்தார்: ஆச்சரியப்பட்டார்: யாதோ சந்தேகங் கொண்டார்: திகைத்து நின்றார். ராஜப்பன், "தன் மடியிற் பொய்க்கவறுகளை வைத்திருக்கின்றான் பாரும், அவன்!" என்றான். பங்கியும் வஸ்தாதும், "ஆம் ஆம்! இதோ அவனிடம் பாச்சிகைக ளிருக்கின்றன!" என்று சொல்லிக்கொண்டே ஜடாவல்லபன் மடியைச் சோதனைசெய்யப் போனார்கள்.

திப்பிரமித்து நின்ற ஜடாவல்லபன் உடனே தன்னைச் சமாளித்துக்கொண்டு தைரியஞ் சோராமல்

அவ்விருவரையும் நெட்டித் தள்ளித் தன் சட்டைப் பையிலிருந்து இரண்டு பாச்சிகைகளைக் கையிற்கொண்டு, "ஜமீன்தாரவர்களே! இதோ விருக்கின்றன அப்பாச்சிகைகள்! இவற்றைக் கொண்டு தங்களை மோசஞ்செய்து கொள்ளையிட்டது இந்தப் பாவி குணபாதக ராஜப்பன்தான்! நான் முயலவில்லை. இவ்விஷயத்தைத் தாங்கள் அமரிக்கையுடன் விசாரித்துக் குற்றவாளியைத் தண்டிக்கவேண்டியது மிகவும் ஆவசியகம்" என்று சொல்லி யப்பாச்சிகைகளை ஜமீன்தாரிடங் கொடுத்து அவர் பக்கலிலோர் நாற்காலியில் வந்துட்கார்ந்தான்.—ஜடாவல்லபன் முகத்திற் கபடமாவது பயமாவது காணப்படவில்லை. ராஜப்பனும் தைரியமாகவேயிருந்தான். இவ்விருவருள் யாவன் குற்றவாளியென் றறிந்துகொள்ள வெகு ஆவல் கொண்டார் ஜமீன்தார். உடனே யவர் இரண்டு கடிதங்களை வரைந்து தம் வேலைக்காரனிடங் கொடுத்தனுப்பினர்.—

சுமார் ஒருமணி நேரத்திற்குள் பொலீஸ் கம்மிஷனர் அங்கு வந்துசேர்ந்தார். ஜமீன்தா ரவர்க்குபசாரங்கூறி யவரைத் தம்மருகே யுட்காரவைத்துக்கொண்டார். வஸ்தாத் விஸ்வநாதனும் பங்கி பார்த்தசாரதியும் அதிக திகிலடைந்தார்கள்: ராஜப்பனுக்கும் அச்சமேலிட்டது: ஜடாவல்லபனோ கம்மிஷனரைக் கண்டதும் உள்ள வுண்மை வெளியாகிவிடுமென் று

மிகவும் சந்தோஷித்தான். பொலீஸ்கம்மிஷனர் யாவ ரையும் நன்று யுற்றுப்பார்த்துவிட்டு, ஜமீன்தாரைக் கண்டு, "நண்பரே! தங்களுடைய கடிதம் கிடைத்த சமயத்திற்றனே நான் இரண்டு வாரண்டுகளை யுத்த ரவு செய்து வந்தேன். அஃதிருக்கட்டும். இப்போ தெ ன்னை வேண்டிய விஷய மென்ன?" என்று கேட்டார். ஜமீன்தார் தம்மிடத்திருந்த பாச்சிகைகளைக் கம் மிஷனரிடங் கொடுத்து ராஜப்பனை விளித்துச் சங் கதி தெரிவிக்கும்படி யேவினர். ராஜப்பன் ஜடா வல்லபனைச் சுட்டிக் காட்டி, அவன் வறுமையின் கொடுமையினுற் சிலரை யேமாற்ற வெண்ணிப் பொய்ப்பாச்சிகைகளைத் தயார் செய்து ஜமீன்தாரை யேமாற்றும்பொருட் டவனுக் குடந்தையாக வரும் படி விசுவநாதனையும் பார்த்தசாரதியையும் வேண்டிக் கொண்டதாகத் தனக்குத் தெரியவே, ஜடாவல்ல பன் நான்கு நாளுக்கு முன் பதினுயிரம் ரூபாய் வ ழிப்பறிக்கொள்ளைக்காரரிடமிருந்து தப்பித்துக் கொ டுத்தது மன்றி யச்சமயத்திற் றன்னின்னுயிரையும் காப்பாற்றின சகாயத்தைக் கருதி யவன்மேல் தயை கூர்ந்து, தனது நண்பரான ஜமீன்தாருக்குச் சமாதா னஞ் சொல்லி மன்னிப்புப் பெறுவதற்காக வவனை யங்கழைத்துவந்ததாகத் தெரிவித்தான். விசுவநாத னும் பார்த்தசாரதியும் ராஜப்பன் சொன்னதைத் திடப்படுத்தினர். அவ்விருவர் பேசும்போதெல்லாம் ஜடாவல்லபன் மருண்டுமருண்டு அவர்கள் முகத்தை

யுற்றநோக்கிவந்தான்: அவர்களிடத் தொருவா றுய்ச் சந்தேகங்கொண்டான்: ஆனா லதை வெளிக் காட்டவில்லை.

இதுசமயம் ஜட்ஜ் நடேசையரும் ஜமீன்தாரனுப் பின கடிதங் கண்டு அங்கு வந்துசேர்ந்தார்: ராஜப் பன் சொல்லிய விஷயங்களைக் கேட்டு, ஜடாவல்ல பன் குற்றவாளியாயிருப்பது எக்காலத்தும் பொருந் தாதெனத் தம்முள் துணிந்தார். தான் ஜமீன்தார் நாராய்ணையரது விருந்திற் கழைக்கப்பட்டுச் சென் றதும், அங்கு ராஜப்பன் ஜமீன்தாரோடு சொக்கட் டானுடுகையிற் பாச்சிகைகளை மாற்றியதைக் கண்ட தும், அதன் விஷயமாய் ராஜப்பனைக் கண்டு கண்டித் ததும், வஸ்தாத் விசுவநாதனும் பங்கி பார்த்தசாரதி யும் ராஜப்பனுமாக மூவரும் தனித்துப் பேசுகையில் தான் மறைவிடத்தில் நின்று கேட்டறிந்த சங்கதி களும், பின்னர் அம்மூவரது சங்கேதப்படி தன்மீதே குற்றஞ்சாட்டப்பட்ட விவரமும், இடையில் மற்ற விஷயங்களும் ஜடாவல்லபன் விரிவா யெடுத்துரைத் தான்.

ஜடாவல்லபன் சொன்னவற்றையெல்லாம் ராஜப் பன் மறுத்துரைத்து, “ஐயன்மீர்! இவன் பெயர் ஜடா வல்லபன்தானோ? எவ்வளவு காலமாய் இங்கிருக்கின் றான் இவன்? இவனுக்கு வருமானம் யாது? எவ் வகையாற் காலங்கழிக்கின்றானிவன்?—இவ்விஷயங் களைச் சற்று விசாரித்தறிவீராகில், இவனது யோக்

கியதை தெற்றென விளங்கும்" என்றான். ஜடாவல்லபன், "எனக் கோர் கனவானால் மாதப்பிரதிமாதம் ஆயிரம் ரூபாய் அனுப்பப்படுகின்றது. என் இயற்கைப்பெயர் ஜடாவல்லப னல்ல: நான் இரண்டு வருஷகாலமாகத்தான் இங்குச் சென்னையில் வித்தியாப்பியாஸார்த்தம் உறைந்துவருகின்றேன். என்னைக் குறித்துத் தற்காலம் இம்மட்டே வெளியிடக்கூடும். மற்று நான் சொல்லிய விஷயங்களெல்லாம் உண்மையேயன்றிப் பிறிதன்று" என்றான். பொலீஸ் அதிகாரி, "அப்பா! ஜடாவல்லபா! நீ யுன் உண்மைப் பெயரையும் வருமான விதத்தையும் வெளியிடாத பக்ஷத்தில் உன்மேற் சந்தேகம் தோன்றி யுனக்குக் கஷ்டம் சம்பவிக்கக் கூடும். ராஜப்பன் கேட்ட கேள்விகளுக்குத் தக்க சமாதானமுரைத்து உன் கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டியது மிகவும் ஆவசியகமாகின்றது: இன்றாயின், நீ பலரை மோசஞ்செய்து ஜீவித்து வருவதாகத்தான் ருஜுவாகின்றது" என்றார்.

ஈடேசையரும் உள்ள விரகசியத்தை யிச்சமயம் வெளியிட்டு ஜடாவல்லபன் தன் அந்தஸ்தைக் காப்பாற்றிக்கொள்வது ஆவசியகமென்று வற்புறுத்தினார். ஜமீன்தாரும் அச்சிறுவன் குற்றவாளியல்லனென்று நிரூபிக்கப்பட வேண்டுமென்று தம்முள் கடவுளைத் தியானியாநின்றார்.

பொலீஸ் அதிகாரி ஜடாவல்லபனை மறுபடியும் கேட்க, அவன் முன் தெரிவித்ததற்குமேல் ஒன்றும் வெளியிட முடியாதெனத் திடமாய்ச் சொல்லிவிட்டான். அது கேட்டு ஜமீன்தாரும் நியாயாதிபரும் அதிக விசனப்பட்டனர். ராஜப்பன் ஆனந்தக் கூத்தாடினன். விசுவநாதன் பொலீஸ் அதிகாரியைக் கண்டு, "ஐயா! நாங்கள் சொன்னது உண்மையாய் விட்டதா?" என்று சொல்லித் திரும்பிப் பார்த்தசாரதியைக் கண்டு, மெல்லென, "பங்கி! பார்த்தனையா நமது சூழ்ச்சி முற்றும் பலித்துவிட்டது!" என்றான். பார்த்தசாரதியும், மெல்லென, "ஆமாம், வஸ்தாத்! யாவும் நமது ருணபாதக ராஜப்பனுடைய சாமர்த்தியமே!" என்றுரைத்துக் குதூஹலித்தான்.

இங்ஙனமவர்கள் மெல்லெனப் பேசிக்கொண்டதை யவர்கட்குத் தெரியாமலே கவனித்துக் கேட்ட நியாயாதிபர் மறுபடியும் அவர்களைப் பார்த்துப் பிரமித்துத் திரும்பி ஜடாவல்லபனைப் பார்த்தார். உடனே ஜடாவல்லபன் தான் கொண்ட சந்தேகம் நீங்கி, "ஐயா! பொலீஸதிகாரியே! இவ்விருவருந்தான் நமது ஜட்ஜவர்கள் தம் குமாரத்தியுடன் போய்க்கொண்டிருக்கையில் வழிப்பறிக்கொள்ளையிட்ட பாதகர்!" என்றான். ஜட்ஜ், "ஆமாம்! ஆமாம்!" என்றவாறே பார்த்தசாரதியைப் பிடித்துக்கொண்டார்: ஜடாவல்லபன் விசுவநாதனைப் பிடித்துக்கொண்டான்.

இது சமயம் பொலீஸ் கிழுத்யோகஸ்தரிருவர் பரபரப்புடன் இவர்கள் கூடியிருக்கு மறையிற் புகுந்து கம்மிஷனரிடம் ஓர் காகிதக்கட்டைக் கொடுத்தார்கள். அவ்வதிகாரி யதைப் பார்த் ததிற் கையொப்பமிட்டுப் பிடிக்கப்பட்டு நிற்கு மிருவரையும் நோக்கி, "நீங்களிருவரும் சில நாளுக்கு முன்பு ஜாகீர்தார் ஹநுமந்தராயரை வழிமறித்துப் பணம்பறித்துக் கொள்ளையிட்டுப் பொலீஸாரால் பிடிக்கப்பட்டுக் காவலில் வைக்கப்பட, அங்கிருந்து தப்பி யோடிவிட்டீர்களே! உங்களிருவரையும் பிடிக்க விதோ விரண்டு வாறண்ட்கள் வந்திருக்கின்றன!" என்று சொல்லிக் கபட்ச்சிரிப்புக் காட்டினர். வந்த பொலீஸார் இருவரும் அவர்களைப் பிடித்து விலங்கிட்டனர்.—

பொலீஸாரிடம் அகப்பட்டுக்கொண்ட பார்த்தஸாரதி, "அண்ணே வஸ்தாத்! மோசம்போனோமே! பாவி நுனைபாதகன் ராஜப்பன் நேற்று தான் மோசஞ் செய்து சம்பாதித்த ஐம்பதினாயிரத்தில் நமக்குச் சேரவேண்டிய இருபத்தையாயிரம் ரூபாயைக் கொடுத்திருந்தால்—" என்று சொல்லிக்கொண்டிவருகையில், விசுவநாதன், "ஆமாம் பங்கி! ஆமாய! நாம் இந்நாட்டைவிட்டு வெகுதூரம் போயிருப்போம்! பாவி நம்மையும் கெடுத்துக் குற்றமற்ற அச்சிறுவனையும் கெடுக்கப் பார்த்தானே!" என்றான். அது கேட்டுக் கம்மிஷனர் ராஜப்பனுக்கும் விலங்கிட வுத்தரவிட்

டார். ராஜப்பன், "அந்தோ! பாவியமுதல் நன்னெறி நீத்துப் புன்னெறிபற்றி ஔவையா ரருளிச்செய்த 'கோதாட்டொழி' யெனும் நீதிச்சொல்லின் பொருளறியாப் பேதையாய்ப் புகலிட மொழிந்து கைப்பொருளிழந்து பதவி யழிந்த பாவியானேனே!" என்று கண்ணீர் மிக விட்டுக் கரைந்தான்.

ஜமீன்தார் நாராயணையரும் ஜட்ஜ் நடேசையரும் 'தர்மம் தலைகாக்கும்' என்று சொல்லித் தம் ஜடாவல்லபனுக்குண்டான அபவாதம் நீங்கினதற்காகச் சந்தோஷித்து அவனைத் தம் மார்போடிறுகக் கட்டியணைத்து ஆனந்தபாஷ்பஞ் சொரியாநின்றனர். பொலீஸ் கம்மிஷனரும் ஜடாவல்லபனுடன் கைகுலிக்கிச் சந்தோஷித்தார்.—

24. காணாமற் போனவர்

சாவித்ரி

சென்னையில் ராஜப்பன் சிறையி லடைக்கப்பட்ட மூன்றுநாட் பகல் மாம்பாக்கத்து ராமமந்திர த்திற் சூடாமணி வாட்டமுற்ற முகத்துடன் தன்னறையிற் றனிமையா யுட்கார்ந்திருந் தாள். வழக்கம்போற் சுந்தரி யவளுடன் சற்று நேரம் காலங் கழித்துப் போக வவண் வந்து சேர்ந்தாள்: சூடாமணியின் முகம் வாடியிருக்கக் கண்டாள்.

"தங்காய் சூடா! ஏன் விசனத்தான் மெலிவுற் றிருக்கின்றாய்? சுந்தரத்தை நினைத்தா என்ன? அவன்தான் இறந்துபோய்விட்டானே! இனி யவனைக் குறித்து விசனித்தலாற் பய னென்னே? மே னடக்கவேண்டியதைப் பற்றி யன்றோ ஆலோசிக்க வேண்டும்?—ராஜப்பனிருக்கின்றான்; அவனிட முன் புத்தியைச் செலுத்து: அவன் உன் அதிர்ஷ்டவசத்தா னன்னெறித் திருப்பிவிடுவானென்று உறுதியாய்க்

கொள்" என்று சொல்லிக் கடைக்கண்ணாற் பார்த்தாள் சுந்தரி. சூடாமணிக்குக் கோபமும் சந்தேகமும் அதிகரித்தன: ஆயினு மவற்றைத் தன்னுள் அடக்கிக்கொண்டு, "அம்மா சுந்தரீ! உன்னை யது விஷயமாய்ப் பேசவேண்டாமென்று பின்முறை வேண்டிக்கொண்டே னில்லையோ? அவ்விஷயத்தை யிடித்திடித்துப் பேசி யேன் என் மனத்தைக் கொன்னே புண்படுத்துகின்றனை?" என்றாள். சுந்தரி, "சூடா! இன்றேனோ நீ கோபமா யிருக்கின்றாய்போலும். நான் உன்னிடத்துக் கொண்ட ஸ்நேக வாஞ்சையினால் உள்ள விஷய மெடுத்துச்சொல்லத் துணிந்தேன். உனக் கியாதாமொரு விஷயமா யபகீர்த்தி நேருமாயின் அஃ தெனக்கு மிக்க மனவருத்த முண்டாக்கும். உனது க்ஷேமத்தை நான் மிகுதியும் நாடியவளாதலின் நீ ராஜப்பனையே விவாஹித்தல் உசிதமென்றேன். அஃதுனக்குக் கோபமூட்டுமென்று நினைத்தே னில்லை. என்னை மன்னிப்பாய், நான் போய் வருகின்றேன்" என்று சொல்லி யெழுந்தாள்.

உடனே சூடாமணியு மெழுந்து சுந்தரிமாட்டன்புகூர்ந்து அவள் கைப்பிடித் திழுத் துட்கார வைத்துக்கொண்டு, "என் தமக்காய்! கோபிக்காதே. ராஜப்பன் விஷயமாய் உனக்குத் தெரியாத பல குடும்ப ரகசியங்க ளிருக்கின்றன. அவற்று ளொன்றைமட்டு முனக்குச் சொல்லுகின்றேன். கேள்:—

நீ சிபாரிசு செய்யும் ராஜப்பன் ஓர் கனவானைப் பொய்ச்சூதாடி மோசஞ்செய்ததாகவும், அவ்வஞ்சனையைக் கண்டுபிடித்த ஜடாவல்லப னென்னுஞ் சிறுவனையே யவன் குற்றவாளியாக்கி யவனுக்குத் தீங்கிழைக்க முயலுங்கால் தானே குற்றவாளியென்று நிரூபிக்கப்பட் டிப்போது சிறைச்சாலையி லடைக்கப்பட்டிருப்பதாகவும், இன்று காலை யெங்கள் வக்கீல் ராமஸ்வாமி ஐயரிடமிருந்து கடிதம் வந்திருக்கின்றது" என்றாள். அதைக் கேட்டதும் சுந்தரி ஓலமிட்டுக் கீழே விழுந்தாள். சூடாமணி பிரமித்து நின்றாள். சுந்தரி மெல்லெனத் தன்னைச் சமாளித்துக் கொண் டெழுந்து தன் நிலைதடுமாற்றத்திற் கேதோ சாக்குச் சொல்லிச் சூடாமணியிட மிருந்து ராஜப்பனைக் குறித்த மற்ற விவரங்களைத் தெரிந்துகொண் டவ்விடம் விட்டுச் சென்றாள்.

சுந்தரியின் நடத்தையினாற் சூடாமணிக்குப் பின்னும் சந்தேக மதிகரித்தது. சுந்தரி கீழே விழுந்த விடத்தி லோர் கடிதங் கிடக்கக் கண்டாள் சூடாமணி: அது தன் தந்தையா லவ்விடம் நழுவவிடப் பட்டிருக்கலாமென் றெண்ணி யதை யெடுத்துப் பார்த்தாள்: அது ராஜப்பனது லிகிதமெனத் தெரிந்தாள்: அக் கடிதத்தின் துவக்கத்தில் 'என் காதற் கிளி சாவித்திரி!' என் றெழுதியிருக்கக் கண்டாள்: ஆச்சரியப்பட்டாள்: அக் கடிதத்தின் உறையின்மேற்

போடப்பட்டிருந்த தபால்முத்திரையிற் பதிந்திருந்த தேதியைக் கவனித்தாள்: அக்கடிதம் சுமார் பத்து நாளுக்கு முந்தித்தான் எழுதப்பட்டிருப்பதாகத் தெரிந்து சந்தேகம் நீங்கி மிக்க வெறுப்புட னதை மேஜையின்மேற் போட்டாள்: மாண்டுவிட்டதாகச் சொல்லப்பட்ட சண்டி சாவித்திரியே ராஜப்பனது தூண்டுதலினுல் தன்னை யேமாற்றும்பொருட்டுச் சுந்தரி யென்னும் பெயரான் வந்திருப்பதாக வறிந்தாள்: அதிக கோபங்கொண்டாள்.

அச்சமயம் சாவித்திரி மறுபடியும் வேகமாகத் திரும்பிவந்து அறைக்குண் ணுழைந்தாள்: மேஜையின்மேலிருந்த தனது கடிதத்தைக் கண்டாள்: சூடாமணியின் முகவிலாசத்தைக் கவனித்தாள்: அவளுக்கு யாவும் தெரிந்துவிட்டதாக வறிந்தாள். சூடாமணி சாவித்திரியைக் கண்டதும் அக்கடிதத்தை யெடுத்து வீசி யெறிந்து, "சண்டாளீ! இவ்விடம் விட் டிக்கணமே யோடிடு! உன் வரலாறு முற்றும் நன்கு தெரிந்து தெளிந்தேன். உடனே யோடிப்போ! இங்கு நில்லாதே!" என்று கடுமொழி கழறினள். சாவித்திரி, "சீ! பட்டிக்காட்டுக் கட்டையே! என் னிரகசியம் உனக்குத் தெரிந்துவிட்டதா? இருக்கட்டும். இனி நானுனக் குயிர்ப் பகைஞி யென்றறிதி!" என்றிறுமாப்புடன் கூவினள். சூடாமணி, "ஹே துரோகீ! நீ சுந்தரத்தைக் குறித்

துச் சொன்ன சங்கதியாவும் வெறும் பெரும் பொய் தானே?" என்று கேட்டாள். சாவித்திரி கொடுமனத் தினளாய்க் கள்ளச்சிரிப்புடன், "நீலி! சுந்தரம் இம் மண்ணுலகை விட்டு இப்போது விண்ணுலகத்தே வாழ்ந்துகொண்டிருப்பது உண்மைதான்! உண்மை தான்!! நீயும் சீக்கிரமே யங்குச் சென்று அவனுக்கு வாழ்க்கைப்படப் போ!" என்று சொல்லிக்கொண் டே யவ்விடம்விட் டோடிப்போயினள்.—சூடாமணி விசனத்தாற் றன்னிலை யழிந்து அறிவு மயங்கிக் கீழே விழுந்தாள்!

அன்றே பிற்பகல் சாவித்திரி கதலீக்ருஹத்தை யொழித்துச் சென்றாள்.—

பத்மாக்ஷி

ராஜப்பன் மோசக்குற்றத்திற்காகத் தண்டனை விதிக்கப்பட்ட ஆறுமாதங் கழிந்தோர் நாள் முற் பகல் ஜமீன்தார் நாராயணையர் தமது ஆப்தமித்திரர் ஜஸ்டிஸ் நடேசையருடன் லக்ஷ்மீ விலாஸத்தில் தம் வீட்டு விவகாரங்களைக் குறித்துத் தாம் செய்துள்ள வாராய்ச்சிகளின் பலாபலன்களை யெதிர்பார்த்தவண் ணமாய்ச் சம்பாஷித்துக்கொண்டிருந்தார்.

சம்பாஷணை யிடையில், ஜமீன்தார், "நண்பரே! ஊற்றெடுத்துப் பொங்கியெழு மென்மனக்கவலை மறை த்து மறப்பான் கருதி யவ்வப்போது நான் ஆன்றோரால் நிஷேதிக்கப்பட்ட சூதாட்ட முதலியவற்றின் மனஞ்

செலுத்திப் பணத்தைப் புல்லிய வழிகளிற் பறி கொடுத் துழலாநிற்புழி, அம்மகாறுபாவன் ஜடா வல்லபனது பேருதவியால் ருணபாதக ராஜப்பன் வஞ்சகக்கவறுகளா லென்னிடத் தியற்றிய வபரா தத்தை வெளியிட்ட நாண்முதல் வேடிக்கை யாட் டக் கூட்டங்களிற் புகுதனீத்து மிகுதியும் தனிமை யிற் காலங்கழித்தல் மேற்கொண்டே னல்லவா? அன்று ஜடாவல்லபனைக் கண்டதுமுதல் என் மனம் கட்டுக்கடங்காது அவனிடத்தே நாடி யநேக வெண் ணுவெண்ணங்களையும் தோன்றுத்தோற்றங்களையு மெழுப்பி யல்லற்படாநின்றது: அன்றியும், அந்நாள் முதல், காணுமற்போன வென தருமைமிகு மனையா ட்டி பத்மாக்ஷியின் ரூபம் அடிக்கடித் தோன்றித் தோன்றி யென்னை யாதோ செய்யும்படி யேவுகின் றூற்போற் படுகின்றது. அஃ தேனே? என்னே? அறி கிலேன்!—ஜப்பான் தேசத்துப் பொக்கிஷமந்திரியாக விருந்த வென் றந்தை சதாசிவையர் கல்கத்தாவுக்குச் சென்று திரும்புழி, ரங்கூனுக்குத் தம் மிளஞ் சகோ தரியைப் பின்னிட்டுச் செல்லுங் கோபாலையரென் பார் தம் கப்பல் ஆகஸ்மிகமாய்த் தம்முடன் புயற் காற்றூற் கவிழ்க்கப்படவே, எந்தை ஆதரவிழந்த வப் பத்மாக்ஷியெனுஞ் சிறுமியை மிக்க பரிவுடன் வளர்த்து நாளாவட்டத்தில் எனக்கே மணமுடிப்பித் ததும், அவ ரிறந்தபின்னர் நான் கண்ணுடி யந்திர சாலை யொன்றைத் தாபித்து நடத்திவருகையில் என்

பகைவரது உபபலத்தாற் காரியகாரணமாராயப்படா மலே ஜப்பானிய ராஜாங்கத்தாரால் ராஜத்ரோஹ குற்றஞ் சாட்டப்பட்டு ஓசாகா வென்னுந் தீவிற் சிறை யிடப்பட்டு ருஷிய சகாயத்தாற் சிறைதப்பி யஞ்ஞாத வாசமா யிங்குமங்கு மலேந்து திரிந்ததும், பின்னர்ப் பத்து வருஷங் கழித்து ருஷியாஜப்பானியயுத்த மடங் கியதும் எனது நண்பராகிய ருஷியகலாசாலைத்தலை வரது பிரேரணையால் ஜப்பானியர் கைப்பற்றிய வெ னது அறுபதுலக்ஷம் ரூபாயும் கூடிய வட்டியுடன் எண்பதுலக்ஷமாக வெனக்குக் கொடுக்கப்பட்டதும், இடையில், நான் வீட்டைவிட்டுப் புறப்பட்ட சமயத் தில் நான்குமாதக் கர்ப்பிணியாயிருந்த பத்மாக்ஷியும் வயதின் மூத்த வெனதன்னையாரும் காணுமற்போய் இதுவரையும் நான் அவர்களைத் தேடி யடைவதற் காகச் செய்த முயற்சி யாவும் பயனற்றிருப்பதும், அக்காரணத்தா னுன் மனவாட்டமுறலும் விவரமா யுமக்கு முன்னொருகாற் சொல்லியுளே னல்லவா? இன்றேதோ வென்னையறியா மனவெழுச்சி தோன்று நின்றது: சுபசூசனங்கள் பல தென்படுகின்றன. வல துகண் துடிக்கின்றது: பேரி சங்கம் முதலிய மங்கல வாத்தியங்களி னேசை கேட்கின்றது: மதலையற்றவிக் கிருகத்தில் எங்கிருந்தோ மழலைச் சொற்கள் காதிற் படுகின்றன: காஞ்சிமண்டலத்தைச் சார்ந்த ஆற் றார்ப்பண்ணை வாசியாம்—கிருஷ்ண கனபாடிக ளென் னும் பெயரினரா மொரு பெரியவர் இன் றென்னைப்

பார்க்க வருவதாக வெழுதியிருக்கின்றார்: அவரா லென் மனக்குறை எம்மட்டேனும் தீரக் கடவுள் அநுக்ரஹிப்பரோ வென் றெக்களித் தெதிர்பார்க்கின் றேன்" என்றார்.

ஜட்ஜ் நடேசையர், "நண்பரே! இங்கு ஒன்றொ டொன்றை மூட்டி முயங்குவிப்பானும் முயன்ற வினை தன்னைக் கூட்டி யிருவினைப் பாசக்கயிற்றின்வழி யாட்டுவிப்பானுமாம் அரன் இருக்க, நம்மா லாவ தென்? அணுவைப் பிரம்மாண்டமாகவும் பிரம்மாண் டத்தையணுவாகவும் செய்ய வல்ல பரந்தாமனன்றோ எது நடத்தற்கும் காரணகர்த்தா வாவன்? அவன்வழி களை யார் அறியவல்லார்? ஒருகால் இப்பிராமணர் மூலமே நமது மனநோய் அகலவுங்கூடும்.—அதோ, யாரோ வருகிற சத்தம் கேட்கின்றது" என்று சொல் லித் திரும்பிப் பார்த்தார்.

ப்ரஹ்மா விஷ்ணு ருத்ர ரெனு முப்மூர்த்திகளு மோரிடத்தே யுறைந்து விளையாடிக் களித்தற் கேற்ற தானமே போன்றொளிரும் தமது படர்ந்த நெற்றியில் மூவிரேகையாய் வெண்டிருநீறிட்டும், கலைவாணி கமலை கிரிஜையா முத்தேவிகளுங் கூடி நடனமாடுமா போற் றம் புருவ மத்தியிற் சிவப்புக் குங்குமப் பொட்டுத்தீற்றியும், அகன்று பொலிவுறு தம்மார்பிற் பொன்னுற் கட்டி யாங்காங்கே ரத்னங்க ளிழைக்கப் பெற்று ஜ்வலிக்கா நின்ற ருத்ராக்ஷ மாலையும் முப்புரி

றாலும் துலங்கவும், வேத நன்மொழி நவிலு நாவின ராய்ப் பார்ப்போருள்ளங் களிப்புறச்செய்யும் முக விலாஸத்துடன் ஆற்றூர்க் கிருஷ்ண கனபாடிகள் தோன்றி யங்குக் கூடியிருக்கு மிருவர்க்கும் ஆசி கூறுகின்றார். இருவரு மெழுந்து நமஸ்கரித்து வந்த வர்க்கு ஆசனமளித்தனர். கனபாடிகள் அமர்ந்த தும், நாராயணையர், "ஐயன்மீர்! நுமது வரவு நல் வரவாகுக! பல்லாண்டுகளாய் நலிந் திளைத் தல்லற் படு மென் னிருதயந் தழைக்கத் தண்மொழி கூறி யெளியேனைக் கரையேற்றிக் காக்கவல்லீரோ? தமி யேன்பா லியாது கருதி இவணுற்றீரோ விளம்புவீர். நும்மைக் காண வெனக் கோர்வித கொண்டாட்டம் ததும்பித் துள்ளி யெழாநின்றதே!" என்று விநய மாய்ச் சொற்றார்.

கனபாடிகள், "நீவிரிருவர்க்கும் மங்கள முண் டாகுக!—ஜமீன்தாரையரவர்களே! நும்பால் நான் முன்னிட்டு வந்துள்ள விஷயம் மூன்று வருஷத் திற்குமுன் நுமக்குத் தெரிவித்திருப்பேனாயின், யான் நுமது நன்றியறிவுக்கு மிகுதியும் பாத்திரனாவேன்: ஆயினும் நான் சொல்ல வந்த விஷயத்தை யப்போது வெளியிடக்கூடாமல் என் வாக்கினால் கட்டுப்பட் டிருந்தேன்—" என்று சொல்லிக்கொண்டுவருகை யில், நாராயணையர் அஞ்சலிபத்தராய் வெகு பரபரப்புடன், "ஸ்வாமி! நுமது பீடிகையைச் சற்று

உபஸம்ஹரிப்பீர். அடியேன்பால் தயை கூர்ந்து விஷயத்தி லேக்ஷணமே புகுவீர். என்னிடத் தெழுந்த ஆவல் அடக்கமுடியாததாயிராநின்றதே!" என்று வேண்டினார். கனபாடிகள், "ஐய! சமாசாரப் பத்திரிகைகளிற் பிரசுரித்துவினவிய நுமது இல்லாளின் செய்தி—"என்று சொல்லுமளவே, ஜமீன்தார், "ஆ! என்னருமைப் பத்மாக்ஷியைப் பற்றிச் சொல்ல வந்தீரோ? அவ ளெங் கிருக்கின்றாள்? நான்கு மாதக் கர்ப்பிணியாயிருக்க விட்டுப் பிரிய நேர்ந்த பாவியே னென் னுயிர்க் காதலியைக் காணப் பெறுவேனோ? அன்னவ ளுதரத் துதித்த மதலையைக் கண்டு என தெனக்கொண்டு களிப்புறப் படைத்தேனோ? ஆஹா! வயது முற்றிய வெனதன்னை யின்னும் இம் மண்ணுலகத்தே வாழ்கின்றனளோ? அன்றி யவ் வம்மையின் அந்தி நாள் எத்தகைத்த தாயிற்றோ? என்னவர் என்னை நினைத்துக் காணப்பெறுராகி யேங்கியேங்கி யென்னென்ன பாடு பட்டனரோ? ஆ! மஹாநுபாவ! என்னவரின் க்ஷேம விசேஷங்களைச் சொல்லி ஆசை நீங்கி யேங்கி வாடிப் பரிதபிக்கு மென் மனத்திற்குத் தைரியமாரி பொழிந்து பயனற்றதாய்த் தாங்கி யிருக்கு மிவ் வென் சடல பாரத்தைப் பயனுற்றதாக்கிக் காப்பீரோ வென்னை?" என்று மூச்சுத் தணர வேகமாய் வெள்ளமிட்டுப்பெருகு கண்ணீருடன் கரைந்து தன் நிலை மாறினர்.

கனபாடிகள், "ஐயரே! அமைதியாய்க் கேண்மின்.—நீர் ஜப்பானியராற் பிடிக்கப்பட்டுச் சிறை வைக்கப்பட்டபின்னர், நுமது தாயாரையும் மனைவியாரையும் ஜப்பானியர் குண்டுக் கிரையாக்கிவிடத் தீர்மானித்ததை யறிந்து நுமது குடும்ப பௌரோகிதராய் நும்முடன்கூடவே வதிந்துவந்த சிவராம தீக்ஷிதர் அவ்விருவரையும் பின்னிட்டு மாறுவேடத்துடன் கப்பலேறிச் சென்னை வந்திறங்கிச் சேது க்ஷேத்ரமடைந்து தீர்த்த ஸ்நானமாடி ராமேச்வரஞ் சென்று ராமநாதனைத் தரிசித்துத் திரும்புழி மதுரை மாநகரிற் றங்கினர். அங்குத் திருமணக்கோலத்துடன் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் வெள்ளியங்கிரியானின் அநுக்ரக விசேஷத்தால் நுமது மனைவியார் ஓராண் மகவை யீன்றுச் சூதகநாட்கழியு முன்னமே சிவனுல கடையவே, தீக்ஷிதரும் நுமது தாயாரும் அச் சிசுவின் போஷணார்த்தம் ஆங்கே சில மாதம் தங்கலாயிற்று. இடையில், வயது முற்றிய வத் தீக்ஷிதர்க்குத் தேக வசௌக்கிய முண்டாக, அவரது மைத்துனராகிய வெனக் கிரகசியமாய்க் கடிதமெழுதினர். பண்டரிநாதன் திருச்சேவை கங்கா ஸ்நாநம் முதலிய சற்கரும மேற்று யாத்திரையாய்ச் சென்றிருந்த நான் ஒரு மாதங் கழித்துத் திரும்பி வர வக்கடிதம்பெற்று உடனே மதுரைக்குச் சென்றேன். சில நாட்குப் பிறகு சிவராம தீக்ஷிதரும் காலகதியடைந்தார்.—பிறக்கு முன்னமே தந்

தையைப் பிரிந்து பிறந்தவுடனே தாயையும் இழந்த குழந்தையுடன் தனிமையாக்கப்பட்டு விசனபாரம் பொறுக்கமாட்டாமல் நமது தாயாரும் தேஹபாரந் தாலேக்கு நிலேயி லிருக்கக் கண்டேன். யாவரு மங்கு மாறுபெயருடன் வாழ்ந்துவந்தமையால், உள்ள விஷயம் யாவும் அச் சிசு வளர்ந்து இருபதாவது வயது பூர்த்தியாகு முன்னர் அதுவுட்பட வெவர்க்கும் வெளியிடக்கூடாதென்றும், அதைக் காப்பாற்றுவதாகவும் என்னிடம் ஈச்வரனாணையின்மேல் வாக்குப் பெற்றுத் தன்னிடமிருந்த ரொக்கம் ஐம்பதினுயிரம் ரூபாயையும் ஓர் சிறு பெட்டியையும் அரக்கு முத்திரைகளிட்ட தோர் காகிதக்கட்டையும் நமதன்னை என்னிட மொப்புவித்து மற்றும் சுந்தரத்தின் விஷயங்களைச் சொல்லிவருகையில் பேசமுடியாமல் மெய் சோர்ந்து நாச்செயலொடுங்கிப் புலனறி வடங்கிப் பிராணவாயு வெளிக்கிளம்பச் சிவபத மடைந்தனள்.

கனபாடிகள் இங்ஙனஞ் சொல்லிவருகையில், நாராயணையர், " ஆஹா ! என்னிருவரையு மொழித்தேனே!" ஹா! பத்மா!! ஹா! அன்னாய்!! என்று கதறிச் சோகத்தால் மூர்ச்சை யடைந்தார். நடேசையர் உடனே யவர்பாற் சென்று அவருக்குச் சைத்யோபசாரஞ்செய்து களை தெளிவித்து, "நண்பரே! இங்ஙனஞ் சோக முறுவதாற் பயன் யாது? யாவும் அவன் காரியமே யன்றோ? 'ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ

மாநிலத்தில்?' லோகத்தி லெந்தப் பிராணியும் இறப்பை முன்னிட்டுத்தான் உற்பவிக்கும்: 'பிறப்பு' எனுஞ் சொல் காதிற் பட்ட மாத்திரத்தானே 'இறப்பு' எனு முடிவும் கட்டாய மேற்படுமென்று துணிதல் வேண்டுமே. பஞ்சபூதங்களாலாய காயம் பஞ்சபூதங்களையே சேர்வது இயல்பே. இம்முடிவினின்றும் தப்பிப் பிழைத்தல் எவர்க்கும் அரிதேயாகும். எவ்வெக் காரியத்தின் முடிவை முன்னிட்டுத் தோன்றியதோ அவ்வக்காரியம் முடிவுபெற்றதும் ஒருகணமேனும் எந்தப் பிராணியும் இங்கு நில்லாது மறைந்துவிடும் கண்டீர். பல்லாவு ளுய்த்து விடினும் குழக்கன்று வல்லதாம் தாய் நாடிக் கோடலை யறிந்திலீரோ? அஃதேபோல் பூர்வஜன்ம ஸம்ஸ்காரத்தான் வினையும் பலாபலன்கள் யாவும் அவனவனை நீங்கா நிழல் போல முறைமுறையே தொடருமென்பது திண்மையன்றோ? ஆகலால் நீர் இவ்விஷயத்திற் கேவலம் அஞ்ஞான மேற்கொண்டு நிலைகெடுதல் சீரன்றே! நமக்கென்று முன்செய் வினைப்பயனுக் கடவுளால் வகுக்கப்பட்ட கடமைகள் மற்று மென்னுளவோ அவை யனைத்தும் நம்மாற் செய்யப்பட்டே யாக வேண்டுமன்றோ? நம் தாயினையும் தாரத்தையும் தன்னிடமே எற்றுக்கொண்ட பரமன் அவர்கட்குப் பிரதியாய்ச் சுதனை யளித்துதவியது மறந்நீரோ! சுதனைப் பெற்று இனி நீர் அடையத்தகாச்சுகமும் உண்

டோ? இறந்தவர்பாற் சோக நீத்துப் பிறந்தவன் பால் மோக பேற்றல் பான்மைத் தாகுமே!—மே னிகழ்ந்ததைக் கேட் டறிவோம். சோகந் தணிவீர். கடவுள் நமக்குக் கரைகாணாச் சுக மளிக்கின்றாரென வென் மனத்தே யாதோ வோர் சூசனை படுகின்றது: கனபாடிகள் கருணையுடனும் அபிமானத்துடனும் விளம்புஞ் சரிதத்தைத் தைரியத்துடன் தீரக்கேட் டுப் பின்னர் செய்வன திருந்தச்செய்வோம்" என்று தேறுதல் சொற்றார்.

நாராயணையர், "கனபாடிகளே! அடக்க முடி யாத சோகப் பெருக்கினால் நமக்கிடையில் தடங்க லுண்டாக்கினேன். மன்னித்து மேல் நடந்த விசே ஷங்களை யநுக்ரஹிப்பீர்" என்று வேண்டலும், கன பாடிகள், "ஐயன்மீர்! நீர் கொண்ட சோகம் இயற் கைப்பாலதே. பிறர்க் குபதேசஞ் செய்யுமிடத்து எவ்வளவோ தைரியத்துடன் போதிக்கலாம்: விஷ யம் தம்மைப்பற்றியவிடத்துத் தம்மை யறியாச் சோகமோகங்க ளுதித்துச் செயலொடுக்குதல் இயல் பே யாவர்க்கும்.—நமது குடும்ப ரகசியங்களை யொருவா றறிந் தனுபவிக்க நேர்ந்த யான் அவ்வப் போது கொண்ட பல்வகைத்த வெண்ணங்களைச் சொல்லப்போமோ? அங்ஙன மிருக்க, நான் சொல் வதைக் கேட்குங்கால் நீர் இடர்ப்படுதல் ஒக்குமே; ஆயினும் பரமேச்வரன்பாற் பாரஞ்சுமத்திச் செயற் பால செய்வோமாயின் நன்மை நாடாதொழியா.—

மேல் நடந்ததைக் கேட்பீர்.—ஆலவாயில் அங்ஙனம் நமது அன்னை யச்சிசுவை யென்னிட மொப்புவித்து மண்ணைத் துறந்து விண்ணுக்கேகவே, அன்னவட்குச் செய்யவேண்டிய கிரியைகளனைத்தும் ஆங்கே சாஸ் திரமுறையொப்ப வொழுங்குற முடித்து நான் குழந் தையுடன் எனது ஆற்றூர்ப்பண்ணை சேர்ந்து பாலக னுக்குச் சுந்தரமெனப் பெயரிட்டு நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாகச் சாலப் பரிவுடன் வள ர்த்துத் தகுமான கல்வியுங் கற்பித்தேன்: எனது ஆப்த மித்திரராகின்ற ஜயராமைய ரது அருமைப்புதல்வி சூடாமணியை யவனுக்கு வயது வந்ததும் மணமுடிக்கக் கருதியவனைச் சில வருஷங் கழித்து அவரிடமே யிருந்து பழகும்படி யேற் பாடு செய்தேன். ஜயராமையரும் அவனைத் தம் சான்முளையே போற் கருதி யாதரித்துவந்திருந்தார்: சுமார் மூன்று வருஷத்திற்குமுன் அவர்தம் தமைய னான மாம்பாக்கம் ஜமீன்தார் கோபாலையரென்பார் உருமறைத்துப் பண்ணைக்கு வந்திருக்கையிற் சுந்தரம் திடீரெனக் காணமற் போய்விட்டான். அவனைக் கண்டுபிடிப்பதில் கோபாலையர் கருத்துள்ளவராகக் காணப்படவில்லை. மற்று, அது விஷயத்தில் ஜயரா மையரது முயற்சி யாவும் எனது முயற்சி யாவும் ஏனையோரது முயற்சி யாவும் பயன்படா தொழிந் தன. அவன் எங் குற்றனே? இப்போது ஜயரா

மையரை விட்டுச் சென்று மூன்று வருஷகாலமா யும் அவன் அகப்பட்டானில்லை. இதுவரையில் அவ னுக்குத் தன் வமிச விவர மொன்றும் தெரியாது. அவன் தந்தைக்குப் போலாம் அவனுக்கும் முது கில் முப்புள்ளி மச்ச மொன்றுண்டு. அவன் இருபத் தோராவது வயதடைந்து இப்போது ஒரு மாத மா யிற்று. அவனெவனுற்றானென்பதைப்பற்றி நாங் கள் செய்யும் விசாரணை யாவும் பயனற்றவாகின்றன. கொடுத்த சொல்லுக்குக் கட்டுப்பட்டு இவ்விஷயங் களை முன்னரே பெவர்க்காயினும் வெளியிடக் கூடா மையால் இதுகாறும் எனது அந்தரங்கத்திற்றானே வைத்திருந்தேன். இனியவனைப்பற்றி மற்றும் தேட முயலுதல் பெருங் கடனாகும்" என்று சொல்லித் தம்மிட மிருந்த பெட்டியையும் அரக்கு முத்திரை யுடன் கூடிய காகிதக் கட்டொன்றையும் நாராயணை யருக் கெதிரில் வைத்தார்.—

கனபாடிகள் இச்சரிதஞ் சொல்லிவருகையில் நாராயணையர் பெருமூச்சுவிட்டுக் கதறி, "ஆ! பாவி யானேன்! ஈன்ற வன்னையை யிழந்தேன்! கொண்ட மனைவியைக் கொன்றேன்! பெற்ற சுதனைத் துறந் தேன்! மதலையைப் பெற்றும் பெறு மலடனானேன்! இனிப் பாரினி லென் வாழ்க்கை யென்கொலோ! விணே! விணே!!" என்று கண்ணீர் நனிபெருக்கிச் சோகத்தான் மூர்ச்சையடைந்தார். ஜட்ஜ் நடேச

ஐயரும் கிருஷ்ண கனபாடிகளும் அவரை வெகுவா கச் சமாதானஞ் சொல்லித் தேற்றினர். அவர்தம் எதிரில் வைக்கப்பட்ட கைப்பெட்டி கோபாலையரால் பத்மாக்ஷியுடன் விடப்பட்டதென்று தேர்ந்து அதை யெடுத்து முத்தமிட்டார்: காகிதக் கட்டை யரக்கு முத்திரை யுடைத்து அவிழ்த்துப் பார்த்தார்: அதில் முன் ஜயராமய்யர் தமது தமையனார் கோபாலய்யருக் கெழுதிய சில நிருபங்களையும், தமது அன்னையின் திருக்கரத்தினால் தமக்கென் றெழுதியுள்ள அவர்களு டைய அனுபவ விவரங்களையும், எக்காலத்தாயினும் அந்தக் கட்டைக் காண நேருமிடத்துத் தாம் நடந்து கொள்ளவேண்டிய சில முறைகளையும், குழந்தை சுந்தரம் தீர்க்காயுவாய்ச் சீர்த்தி சிறக்க நீடூழி வாழ வேண்டுமென்று ஆசிர்வதித்துக் கடவுளைப் போற்று வதையும், தாம் பத்மாக்ஷிக்குச் சில சமயங்களிலெழு தியுள்ள அன்பு பெருகு கடிதங்களையும், ஐம்பதினா யிரம் ரூபாய் நோட்டுக்களையும் கண்டு யாவும் கரதலா மலகமாய் விளங்க, நெற்றியின் மோதிக்கொண்டலறி உயர்குன்றத் தருவி நீரொப்பப் புட்கலமாய்க் கண் ணீருகுத்துக் கரைந்து மெலிந்தார்: தம் முதுகிற் படர்ந்துள்ள முப்புள்ளி மச்சம் தென்பட மூர்ச்சை யாய்க் கீழே விழுந்தார்: மறுபடியும் தெளிந்தார்: கனபாடிகள் சொல்லியவெல்லாம் உண்மைதானெனச் சந்தேகமறத் தீர்மானித்தார்.

சுந்தரம்

இந்தச் சமயத்தில் வக்கீல் ராமஸ்வாமி ஐயர் ஜயராமையரையும் சூடாமணியையும் பின்னிட்டு நடேசையரைத் தேடி நம்மவர் கூடியிருக்குமறையில் வந்து சேர்ந்தனர். நாராயணையர் தமக் கெழுந்த சோகத்தை யுள்ளடக்கி நடேசையருடன் கூடித் தம்மைக் காணவந்தவர்க்கு வெகு உபசரணை செய்தார். வந்தவர் கனபாடிகளை யங்கிருக்கக் கண்டு ஒருவரை யொருவர் குசலப்ரச்னஞ் செய்தனர். யாவரும் அமர்ந்த பின்னர், ராமஸ்வாமி ஐயர் நடேசையரைக் கண்டு, "நண்பரே! நமது ஆற்றூர்ப் பண்ணை ஜயராமையர் காலஞ்சென்ற தமது தமையனாரின் சாஸனத்திற் கண்டுள்ள சில சொத்துக்களின் நிருவாகத்தைத் தம் குமாரத்தி சூடாமணியின்பேரில் மாற்றி யெழுதியிருக்கும் பத்திரத்தில் லோர் நியாயாதிபர் சாக்ஷியிடவேண்டியிருப்பதால், அவர்களைச் சென்னைக்கு வரவழைத்து நும்மைக் காண்பான் கமல விலாசத்திற்குச் சென்றோம்: நீர் இங்கு வந்திருப்பதாக வறிந்து, நம்மவர் சீக்கிரமே தம் பண்ணை சேர வேண்டியிருப்பதுபற்றி, யாவருமாக இங்கு வந்தோம்.—மூவருமாகக் கூடியிருக்கும் சபைக்கு எங்கள் வரவு அகாலத்ததோ?" என்றார். நாராயணையர், "நண்பரே! சிறிது நேரத்திற்குமுன் நிகழ்ந்த சந்தர்ப்பங்களைக் கருதி நானே யுங்களைக் காண வெண்ணி

யிருக்குங்கால், கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததெனுமாபோல், நீவிர் யாவருமாக வென் குடிலைத் தேடி வந்ததால் யான் தன்ய னுயினேன்.—காணு மற்போன வென தன்னையினுடையவும் தாரத்தினு டையவும் சரிதங்களை இம்மஹாநுபாவர் கிருஷ்ண கனபாடிகளால் தெரியலாயினேன்: அந்தோ! அவ் விருவரையும் ஒழித்த பாவியானேன்: மற்றும், ஜய ராமையரே! பிறக்கும்போதே அநாதையாய் நின்ற வென் புத்திரனைச் சகல சௌகரியங்களு மமைத்துக் காப்பாற்றிவந்த நமது கனபாடிகளிடத்தும் நும் மிடத்தும் என தாயுட்கடன் பட்டவனுயிருக்கின் றேன். ஆனுல்,—" என்று சொல்லிவருகையில் பார்வை மழுங்கக் கண்ணீர் பெருக்கினுர்: நாக்குழற மேலே பேச முடியாமல் ஹா வென்று அலறித் தமது நாற்காலியிற் பின்சாய்ந்துவிட்டார். அது நோக்கி ஜயராமையர், "நண்பரே! நுமது சொல்லைக் கேட்க வெனதுள்ளங் கலங்குகின்றதே!—கனபாடிகளே! என்ன! நம்மால் வளர்க்கப்பட்டுவந்த சுந்தரந் தானே—?" என்று கேட்கையில், நாராயணையர், "ஆம்! ஆம்! அந்தச் சுந்தரம் எனது சுதன்தான்! அந்தோ! நான் என் சுதனைக் காணப்பெறுப் பாவி யானேனே!" என்றலறி ஜயராமையரைக் கட்டித் தழுவி மூர்ச்சையடைந்தார். வக்கீல் அமைதியுடன் நாராயணையரைத் தேற்ற முயற்சியிலிருந்தார்.

இடையில், வந்தவர்க்குச் சுருக்கமாய் விஷயந் தெரிவித்தார் கனபாடிகள்.

இது சமயம் ஜடாவல்லபன் ராஜப்பனைப் பின்னிட்டு அங்கு வந்து சேர்ந்தான்: கனபாடிகளைக் கண்டான்: ஜயராமையரைக் கண்டான்: சூடாமணியைக் கண்டான்: வக்கீலையரைக் கண்டான்: மனவெழுச்சி கொண்டான். முதற் குறித்த மூவரும் அவனைப் பலதடவையும் ஏறெடுத்துப் பார்க்கலாயினர்: பார்க்கப் பார்க்க ஓருவித சந்தேகங் கொண்டனர். நாராயணையருக்கும் ஜடாவல்லபன்மீது சொல்ல முடியாத வோர் பாச முண்டாயிற்று.—ஜடாவல்லபன் இவர்களைக் கண்டதும், தன் மனத்தெழுந்த பலவித வெண்ணக் குறிகளை மறைப்பான்வேண்டித் தன் அரைவேட்டியினின்று முலர்ந்ததோர் பூங்கொத்தைக் கையில் வைத்து யாதோ விநோதார்த்தயாகப் பலகணிவாயில் திரும்பித் தோட்டத்தை நோக்குவான் போல் மற்றவரறியாவண்ணம் கடைக்கண்ணாற் சூடாமணியைப் பார்த்தவாறிருந்தான். அங்குக் கூடியிருக்குமவர்களது மனங் குளிர்விக்குமாபோற் சோலையில் அன்று மலர்ந்து நனிமணங் கமழும் நானாவகைப் பூக்களின் வாசமேற்றுத்தென்றற்காற்றானது இனிதே குளிர்ந்து வீசலாயிற்று: அதனால் ஜடாவல்லபன் போர்த்திருந்த மேலாடை சற்று விலக, அவன் முதுகிற் படர்ந்திருந்த முப்புள்ளிமச்சம் தென்பட்டது:

அதைக் காணவே, "ஆ சுந்தரம்!" "சுந்தரம்!!" "என்னருமைக் குழந்தாய்!!!" என்று முறையே ஜயராமையரும் கணபாடிகளும் நாராயணையரும் கூக்குரலிட்டோடி யவனை யிறுகக் கட்டி யாலிங்கனம் செய்யலாயினர்: சூடாமணியும் பிரமித்து ஜடாவல்லபனெனும் பெயரான் நடித்துவந்த தன் காதலனாகிய சுந்தரத்தைக் கண்சிமிட்டாமற் பார்த்தவண்ணமே செயலற்று நின்றுவிட்டாள்: ஓரிரண்டிமைநேரங் கழித்துத் தன்னிலை தெளிந்து ஆனந்தபாஷ்பமிட்டுக் காணமற் போனவனைக் கண்டதற்காகக் கடவுளுக்கு அநேக வந்தனமளித்தாள். பிரிந்தவர் யாவருமிங்ஙனம் பரமேச்வரனது அநுக்ரஹ விசேஷத்தால் ஒன்று கூடியதற்குச் சந்தோஷித்தனர். ஜமீன்தாரும் ஜயராமையரும் இவ்வாறு நேசம் பெற்றதற்காகக் களித்து ஒருவரையொருவர் ஆலிங்கனஞ் செய்துகொண்டனர். கூடியவர்களில் சுந்தரமுட்பட வெவர்க்கும் அவன் வரலாறு முற்றும் தெரியாதாதலால், அதை யாதியோடந்தமாய்க் கேட்டறிய யாவரு மாவலாயிருந்தனர்.—

நாராயணய்யரது செல்வப்புதல்வனும் சுந்தரம் மதுரைமாநகரிற் பிறந்து அதனாற் சுந்தரேசனெனப் பெயரிடப்பட்டு அவணிருந்து தம்மால் ஆற்றூர்க்குக் கொண்டுவரப்பட்டுச் சிலவருஷஞ்சென்ற பின்னர் ஜயராமையரது இல்லத்திற்றானே வளர்ந்துவருகையிற்

காணமற்போனதுவரைக்கும் உள்ள சரித்திரத்தைக் கனபாடிகள் விரிவாயெடுத்துச்சொன்னர் : தவிர, நாராயணையரது தாயாரால் தம்மிடம் ரொக்கமாய்க் கொடுக்கப்பட்டதென ஐம்பதினுயிரம் ரூபாயை ஏறிய வட்டியும் அசலுமாக எண்பதினுயிரம் ரூபாயாக நோட்டுக்களாய்ச் சுந்தரத்தினிட மொப்புவித்து, அவனுக்கு இருபதாவது வயது கழிந்து ஒருமாதகால மாயிற்றுதலால் தாம் அவ்வம்மைக் களித்த வாக்குத் தவருமலே நடத்திட்டதாகச் சொல்லிச் "சூடா! இனி யெமது சுந்தரத்தை யேற்றுக்கொள்வதற்குச் சமுசயிப்பையோ?" என்றுர்.

வக்கில் ராமஸ்வாமி அய்யர், "கனபாடிகளே! நீர் சொல்லி முடித்த சரிதம் துவக்கிப் பின் நிகழ்ந்த செய்தி சொல்லுவேன், கேண்மின்.— தருமராஜையரென்று மறுநாமங் கொண்டு ஆற்றார்ப்பண்ணையில் வந்து சேர்ந்த கோபாலையர் சூடாமணிக்குச் சுந்தரத்தின்மேலல்லாது ராஜப்பன்மீது மனம் நாடியிருப்பதும், ஆனல் சுந்தரமட்டுஞ் சூடாமணிமாட்டு மனமோட்டியிருப்பதும், அதற்கு ஜயராமையர் சம்மதி கொடுத்திருப்பதும், ராஜப்பன் சூடாமணியை மணத்திற் கொள்ளத்தக்க யோக்கியதை யில்லாதவனுயிருப்பதும் நன்கறிந்து, சுந்தரத்தை யுடனே சென்னைக் கேகி மாறுபெயருடன் வசித்துக் கல்வி பூர்த்தி செய்துகொண்டு பின்னர்ச் சூடாமணியை வந்து

காணும்படியாக ஏவி, அவனது செலவிற்காக மாதப்பிரதிமாதம் ஆயிரம் ரூபாய் அவனுக்குக் கொடுத்துவருமாறு என்னிடம் ஐந்து லக்ஷம் ரூபாய் ரொக்கமாகக் கொடுத்தார். அந்நாட்டுவைக்கிச் சுந்தரம் ஜடாவல்லபனெனும் பேராற் சென்னையி லுறைந்து வருகின்றான்: அவன் எந்நிலை யடைந்திருக்கின்றா னென்பது நீவிர் யாவருமறியலாம்.—ராமமந்திரத்துப் பூங்காவில் ராஜப்பன் சூடாமணிக்குத் தீங்கிழைக்க முயல்கையில், ஆள் தெரியாவண்ணம் தோன்றிக் காத்தது இச்சுந்தரம்தான்: நமது நண்பர் ஹநுமந்தராயரையும் ஜட்ஜ் நடேசையரையும் ராஜப்பனையும் தனித் தனி வழிப்பறிக்கொள்ளையினின்றும் காத்ததும் இச் சுந்தரம்தான்: ராஜப்பனால் மோசக்குற்றஞ் சாட்டப்பட்டுத் தனது யதார்த்தப்பெயர் வருமானமூலம் முதலிய விவரங்களைப் போலீசதிகாரியினால் வினவப்பட்டபோது, தனக்கு இடுக்க ணுறுவதாயினும், தான் கோபாலையரிடமும் என்னிடமும் பெற்ற கட்டளைப்படி, தன் இரகசியங்களை வெளியிடாமல் நிக்ரஹித்த மனோதிடங் கொண்டவன் இச்சுந்தரம்: அன்றியும், ராஜப்பனாற் பற்பல வகையுங்களிற் பெருந் தீங்குகளிழைக்கப்பட்டபோதிலும், அவற்றைப் பாராட்டாமல் மஹா கருணையுடன் ராஜப்பன் சிறைப் பட்டிருந்த ஆறுமாத காலமும் அவனுக்கு வேண்டிய சௌகரியங்களெல்லாம் கூடியவரையிற் குறையின்றி நடக்கத்தகு மேற்பாடுகள் செய்து, அவன் விடுதலையா

னதும் ஒருவாரமாய்த் தன்னிடமே யவனை யிருத்திக் காப்பாற்றிவருகின்றான் இச்சுந்தரம்!—நாராயணையரே! இத்தகை நற்குணத்த சுந்தரத்தைப் புத்திரனாக வேற்றுக்கொள்வதில் நமக்குச் சந்தோஷக்குறை யென்பதுண்டாமோ?—சூடாமணீ! இவ்வளவு பெருங்குணமும் பழியிற்சிறும் வாய்ந்த வாலிபப் பெருமானைக் கணவனாகப்பெறுதல் நீ தேடிப்பெற்ற பெரும்பாக்கியமென்று நினைத்துக் களிக்கின்றிலையோ?—ஐயராமையரே!—கனபாடிகளே! காணமற்போன சுந்தாத்தைக் கண்டு களிப்பீரே!" என்றார். யாவரும் சுந்தரத்தைக் கட்டிக் தழுவிக்கொள்ள, நாராயணையர் அவனைத் தமது மடியில் உட்காரவைத்துக்கொண்டு புத்ர வாத்ஸல்யத்தால் உச்சிமோந்து பெருமகிழ்ச்சியினால் மெய்ம்மறந்தார். அனைவரும் ஒருவரிடமொருவர்க் கேற்பட்ட சுற்றமும் நேசமும் உன்னிக் களிக்கலாயினர்.—

ராஜப்பன் எழுந்து, "ஐபன்மீர்! மஹான்கள் கூடிய விச் சபையில் இவ் வெளியேன் வாய்திறக்குமாண்மைப் பெற்றிலேனாயினும், எனது ஆப்த மித்திரனாய் என்னைக் கடைத்தேற்றி இப்போதெனக்குப் பிரிய பந்துவாய் விளங்கும் சுந்தரத்தைத் தெய்வமாகப் பாவித்து அவன் என்மாட்டியற்றிய பேருதவியை யொருவாறெடுத்துச்சொல்லவேண்டியது என் கடமையாகின்றது.—இறந்துவிட்ட வென தம்மான் எழுதிட்ட முதற் சாஸனத்தை யச் சண்டி சாவித்

திரியின் துர்ப்போதனையினாற் களவு செய்து உடனே யக்கினிக் கிரையாக்கிவிட்டேன்: அதனா லவர்சொத் துக்குச் சுதந்தா மிழந்தேன்: அந்தச் சண்டாளி யிறந்துவிட்டதாக வதந்தி யுண்டாக்கி யவட்கு நடக் கவேண்டிய உத்தரக்ரியைகள் முதலாயின யாவும் நடத்திட்டுச் சின்னாட் கழித்துச் சுந்தரியெனுங்கள்ள ப்பேரால் அவளைத் தந்திரமாய் ராமமந்திரத்துக் கதிலீக்ருஹத்தி லிருக்கச்செய்து, அவள் அநுகூலத் தாற் சூடாமணியை யேய்த்து மணமுடித்துப் பின்ன வள் சொத்து யாவும் கவர நினைத்தேன்: சூடாமணி யின்பாலும் சுந்தரத்தின்பாலும் நா னிபற்றிய பல் வகைத் துன்முயற்சிகளைக் கடவுள் அநுக்ரஹித்தா ரில்லை. அந்தச் சண்டியும் காரியம் தோற்று என்னைக் காண வருமார்க்கத்தில் ஓரடவியிற் பெரும் புலிவாய்ப் பட்டுத் தானிழைத்த குற்றங்களை யெல்லாம் கணக் கிடுவான் நமன்பாற் சென்றாள். இறுதியில், நானே கஷ்டநஷ்டங்களுக் குட்பட்டு என்னால் தீங்கிழைக்கப் பட்டவனாற்றானே காக்கப்பட்டேன். இனி யென் உடல் பொருளாவியெல்லாம் சுந்தரத்தவே யாயின. நா னிழைத்த பிழை யொன்றும் பாராட்டாமல், தௌர்ப்பாக்யனாப் பின்ற வெனக்குச் சிவன மேற்படு த்தக் கருதி, வக்கீலவர்களே! இச்சுந்தரமென்னை இன்று நம்பா லழைத்துச் சென்றான். நுமது மாளிகைவிட்டு நீர் இங்கு வந்ததாக வறிந்து நம்மைத் தேடி யிருவருமாக விங்கு வர, தைவீகமாய் அநேக

நன்முடிவுகளைக் காணலாயிற்றே.— சூடாமணீ!—மாமா!—நீவிர் என்னை மன்னிக்கவேண்டும்!" என்று வெகு விநயமாய்க் கழறி ஜயராமையர் பாதத்தில் விழுந்தான். ஜயராமையரும் சூடாமணியும் ராஜப்பனை மன்னித்ததாக வாக்களித்தனர்.—

இடையில், சுந்தரம் சமயம் நோக்கிச் சூடாமணியிடத் தேகி, "சூடா! இப்பூங்கொத்து யாதென்றறிவையோ? இப்போதாகிலு மிதனை யுவந் தேற்றுக் கொள்வையோ?" என்று சொல்லித் தன்னிடத்தவாடிய வப் பழம்பூங்கொத்தை நீட்டி யவள் முன்னிலையில் மண்டியிட் டெழுந்தான். சூடாமணி வெட்கித் தலை குனிந்து மௌனமாய்ச் சுந்தரத்தின் கைப்பிடித்து அப் பூங்கொத்தைத் தன் கையில் வாங்கிப் புன்முறுவல்பூவாநின்றாள். யாவரும் களிப்பெனும் பால் பருகி யின்ப மெய்தினர். சுந்தரம் தனித்தனி ஜயராமையர் கனபாடிகள் நாராயணையரவர்களின் பாதங்களிற் பணிந்து அவர்களால் அன்புடன் வாரியெடுத் தணைக்கப்பெற்று அவர்களது ஆசீர்வாதமும் பெற்று விளங்கினான்.

வக்கீல் ராமஸ்வாமி ஐயர் தம்மிடத்துள்ள ஐந்து லக்ஷம் ரூபாயையும் சேர்ந்த வட்டியுடன் சுந்தரத்தினிட மொப்புவித்தார்.—ஜட்ஜ் நடேசையர் தாம் சொன்னபடி சர்வ காரிய நியாமகக் கடவுளின் பிரேரணையினாலும் இச்சையினாலும் நடந்த யாவற்

றையும் நோக்கிச் சந்தோஷித்தார். ஜமீன்தார் கோபாலையர் தமது சாஸனத்திற் குறித்தபடி சூடாமணிக்குப் பத்தொன்பதாவது வயது நிரம்பியதால், அவ்வரின் அபிப்பிராயப்படி, சூடாமணியைச் சுந்தரமே பாணிக்ரஹணஞ் செய்யவேண்டுமென்று நாராயணையர் ஜயராமையரை வேண்ட, ஆங்கே அக்கணமே விவாஹநாள் நிச்சயித்தனர்.—யாவரும் நடந்த விஷயங்களைப் பேசிப்பேசி யானந்தமதுப்பருகியவராய் லக்ஷ்மீவிலாஸத்திற்றானே ஒருவாரந் தங்கியிருந்து விவாஹ மஹோத்ஸவத்திற்குச் சென்றனர்.

விவாஹம்

சூடாமணிக்குஞ் சுந்தரத்துக்கும் விவாஹத் திருவிழா மாம்பாக்கத்து ராமமந்திரத்திலே வெகு விமரிசையாய்ப் பதினறு நாட்கள் நடந்தது. ஜயராமையரும் ஜமீன்தார் நாராயணையரும் ஏராளமாக வேதியர் முதலியவர்கட்கீந்து விருந்துகளளித்துப் பெருமையுறப் பணஞ் செலவழித்துத் தம் மக்களது விவாஹ மஹோத்ஸவங் கொண்டாடினர்.

விவாஹ முடிவுநாளிரவு சூடாமணியுஞ் சுந்தரமும் பந்துமித்திரவர்க்கம் புடைசூழ, மணக்கோலத்துடன் நீலவேணிக்குதிரைகள் நான்கு கட்டிப் பொலிவுறுமோர் சித்திரவண்டியிலேறி நானவகை மங்கல வாத்தியங்கள் எண்டிசையுஞ் செவிடுபடுத்தி முழங்க, தேவேந்திரன் சபையில் கந்தருவஸ்திரீகள்

போல் நாட்டியப் பெண்கள் நடனமாடி வர, ஆங் காங்கே மங்கலப்பெண்கள் ஆலத்தி சுற்றித் திருஷ்டி கழிக்க, வண்டமிழ்க் கவிவாணர் இசை பாடிப் புகழ நல்லந்தணர் பல்லாசி கூறுநிற்ப, இரப்பவர்க்கும் மற் றவர்க்கும் தக்கபடி பொருளும் பரிசும் உதவி யாவ ராலும் ஜேஜே யென்று போற்றப்பெற்றவராய் நகர் வலம் வந்து நனிநல முய்த்தனர்.

25. ஆங்கில ப்ரபாவம்

மாம்பாக்கத்தில் சுந்தர சூடாமணி விவாஹத்திற்குச் சென்னையினின்றும் மற்றும் பல விடங்களினின்றும் அநேக கனதனவான்கள் வந்திருந்து கௌரவித்தனர். வந்தவர்களில் ஜாகீர்தார் ஹநுமந்தராயரும் ஜட்ஜ் நடேசையரும் வக்கீல் ராமஸ்வாமி ஐயரும் ஆண்டிபட்டி ஜமீன்தாரும் முதன்மையாயினர். பதினாறுநாள் கொண்டாட்டங் கழிந்து கடைசி நாளிரவு ஊர்கோலஞ் சென்று திரும்பி வந்து விருந்தருந்திய பின்னர், யாவரும் மூன்றாமுப்பரிகை சேர்ந்து சந்தனதாம்பூலாதிகளைக் கொண்டு ரம்மியமாய்ப் படர்ந்த நிலாப்பிரகாசத்தில் உட்கார்ந்து லோக விஷயமான சங்கதிகளைப் பேசலாயினர். அது சமயம் ஜாகீர்தார் ஹநுமந்தராயர், "எனது நண்பராகிய ஜட்ஜவர்களே! இனி நாம் இவ்வளவு சங்கமாகக் கூடி யின்பம் விழைவ தென்நாளோ? யாவரும் இன்ப மிகுந்து வாழ்ந்துவருவது நமது ஆங்கில வரசாட்சியின் இணையற்ற பெருங்கருணையி

ஞாலும் பேருதவியினாலுமே யெனத் துணிகின்றேன். ஆகலால், எற்கெனவே நமதராசாங்கத்தினிடத்து யாவர்க்கும் உண்டாயிருக்கும் நம்பிக்கையும் நன்றியறிதலும் விசுவாஸமும் தழைத்தோங்கிப் படருமாறு ஓர் உபந்யாஸஞ்செய்வித்தல் மிக்க நலந்தருவதாகுமெனக் கருதுகின்றேன்'' என்றார். ஜட்ஜ் நடேசையர், ''நண்பரே! நீர் நினைப்பூட்டிய விஷயம் மிகவும் சிரேஷ்டமானதெனக் கொள்கின்றேன். மிகப் பெருமைவாய்ந்த நமது ஆண்டிபட்டி ஜமீன்தார் விஜயஞ் செய்திருக்கின்றார். இவர் எவ்வித பொதுநன்மை விஷயங்கட்கும், வித்தியாபிவிர்த்தி கைத்தொழிலபிவிர்த்தி முதலிய விஷயங்கட்கும், தேவாலய நிருமாண மஹோத்ஸவ விஷயங்கட்கும், எத்தகைப் பரோபகார விஷயங்கட்கும், மதோத்தாரண விஷயங்கட்கும், இன்னன பற்பல நலம்பெறு தேசாபிவிர்த்தி விஷயங்கட்கெல்லாம் சிறிதும் மனஞ்சலியாமல் தலைகொடுத்து வலது கையளிப்பு இடதுகைக்கும் இடதுகையளிப்பு வலதுகைக்கும் தெரியாவண்ணம் வேண்டுவோர்க்குதவிக் கலியுக கர்ணனெனப் பேர் பெற்று முதியோர் இளையோராலும் ராஜாங்கத்தார் குடிகளாலும் உள்ளார் இல்லாராலும் நாடெங்கும் கொண்டாடப்பட்டு விளங்காநின்றார். உலகிற் கலியால் வாடி வருந்துமவர்க்குப் பிரதியுபகாரங் கருதாமற் றனைக்கரம் தந்துத் துன்பம் களையும் துப்புடை மன்னராவார் இச்செல்வச்சீமானார்: வயதிற் சிறியோ

ளாயிருப்பினும் குணத்திற் பெரியோராவர் இவர்:
கல்வி ஞானம் சாந்தம் தயை தெய்வபக்தி முதலிய
வற்றிற்சிறந்து தருமமே ஜபமெனும்கொடியைக் கைப்
பிடித்தவர்: தேசாபிமானமும் ராஜவிசுவாஸமும் நிரம்
பப்பெற்றவர். ஆகையால் நம்மில் உபந்நியாஸஞ் செய்
தற்குத் தக்க வேற்றம் வாய்ந்தவ மஹான் ஆண்டி
பட்டி ஜமீன்தாரேயாவர்" என்று சொல்லி அன்னா
வரை அக்ராஸநாதிபத்யம் வகித்துப் பேசும்படி வேண்
டிக்கொண்டார். யாவரும் கரகோஷஞ்செய்து ஆர
வாரித்தனர். ஆண்டிபட்டி ஜமீன்தார் எழுந்து பேச
லுற்றார்:—

"ஆரியர்காள்! நண்பர்காள்! நீவிர் இச்சமயம்
ஆங்கிலப்பிரபாவத்தைக் குறித்து விளங்குறப் பேசும்
படி கேட்டுக்கொண்டதற்கு யான் மிகுதியும் வந்தன
மளிக்கின்றேன். நீவிர் கருத்துக் கொண்டது அரிய
பெரிய விஷயமாயிருப்ப வதனைச் சிறியேனாகிய
வெனது அற்ப அநுபவத்தாற் பழுதறப் பேச விய
லுமோவென் றையுறுகின்றேன். ஆயினும் உங்கள்
கருத்தை நிராகரிக்கலாகாதென வெண்ணி யுங்கள்
நல்லறிவினும் பெருமையினும் பொறுமையினும் நம்பி
இரண்டொரு சொற்கள் பேசத் திடங்கொள்கின்
றேன்: குறைகளேதேனு மேற்படுமாயின், விஷய
வேற்றத்தை யுன்னிக் குற்றத்தை யொரீஇக் குண
த்தைத் தழீஇ யென்னைப் பெருமைப்படுத்துவீ
ரென நம்புகின்றனன்.—

ராஜவிசுவாஸம்

எண்ணுதற்கரியவாய் நான்முகன் படைத்த நானுவித ஜீவராசிகளுள், ஐயறிவும் பெற்று மானிடராய்ப் பிறத்தல் வரம் பின்றி முன்ஜன்மத் தியற்றிய நல்வினைப்பயனே யாகும். மானிடராய்ப் பிறந்தோரிலும் மெய் வாய் கண் மூக்கு செவியெனும் பஞ்சேந்திரியங்களின் சௌகரியங்களை முற்றும் நுகர்தற் கேற்றவனுய்க் கூன் குருடு செவிடு பேடு மூடம் உன்மத்தம் மூகம் முதலிய குறைகளில்லாதுதல் மற்றும் புண்ணிய விசேஷமாம். ஸகல சராசர ப்ரஹ்மாண்டங்களையும் காத்தற்றொழில் பேற்கொண்ட மஹாவிஷ்ணுவுக்கு நிகராய்த் தன்னுளுகைக் குட்பட்ட குடிஜனங்களைத் தினையளவும் துன்ப மணுகாவண்ணம் காத்தற்குக் கர்த்தாவாகிய இறைவனை ப்ரத்யக்ஷ தெய்வமெனப் போற்றற்குத் தடை யென்னுளது? 'கோன் உயரக் குடி யுயரும்' என்பதற் கிணங்கக் குடிகளின் ஏற்றமானது புரக்கு மன்னனு லுண்டாகிய தென்றே யறிவீர்.—

'குலமகட்குத் தெய்வம் கொழுநனே மன்ற
புதல்வர்க்குத் தந்தையும் தாயும்—அறவோர்க்கு
அடிகளே தெய்வம் அனைவோர்க்கும் தெய்வம்
இலைமுகப் பைம்பூண் இறை'

என்னும் சாஸ்திரத்திற் கேற்ப, மனைவிக்குக் கொழுநனும் புதல்வர்க்கு ஈன்றாரும் நன்னெறி நிற்

போர்க்குக் குரவரும் தெய்வமாவார். இவர்களனை வர்க்கும் ஒருங்கே மன்னனே தெய்வமாவான். ஆகவே, தீயாரொறுத்து நல்லார்ப் புரத்தலால் திருமாலெனவும், வேண்டுமிடத்துப் பொருள் சொரிந்து போஷித்தலாற் புனல்வேந்தனெனவும், அருள்கூர்ந்து அன்புடனாதரித்தலால் அன்னையெனவும், துன்மார்க்கங் கடிந்து நன்மார்க்கமோட்டலால் நற்பிதாவெனவும் கருதி யாவரும் அரசனைப் போற்றுதல் முறைமையே யாகும்.—

'கண்கூடாப் பட்டது கேடெனினும் கீழ்மக்கட்கு
உண்டோ உணர்ச்சி? மற்றில்லாகும்—மண்டெரி
தான்வாய் மடுப்பினும் மாசுணம் கண் துயில்வ
பேரா பெருமூச் செறிந்து'

என்பதற் கிணங்க, காட்டுத்தீயானது மிகுந்து வளர்ந்து எதிர்ப்பட்டவற்றை யெல்லாம் சாம்பராக்கித் தன்னையே வளைத்துக்கொண்டபோதும் உற்ற ஆபத்தினை மதியாமற் பெருமூச்சு விட்டு உறங்கிக் கொண்டிருக்கும் பெரும்பாம்பானது அவ்வெந்தழல் வாய்ப்பட்டு வெண்ணீறாகி நாசமடைவதுபோல, தனது பொருளுக்கும் நிலைக்கும் உயிருக்குமே ஆதாரமாகிய வரசுக்கு யாதேனும் ஆபத்தொன்று அணுகுமாயின் அவ் வாபத்தின் வலிமை குன்றி அதானுண்டாகும் தீமைகள் நீங்குமாறு தன்னாற் கூடிய துணையெத்துணைத் தாயினுஞ் செய்யாமல் தனக் கென்

னென்று உன்மத்தனுயிருக்கு மதியீனன் நாட்டை கலியச்செய்து இறுதியில் தன் சுக சௌக்கியமெல்லா மிழந்து துன்புறுவான். ஆகலால், நாம் யாவரும் தற்சமயம் நமது ராஜாங்கத்தாருக்கும் எதிரிகளுக்கும் உண்டாயிருக்கும் அகோர யுத்தத்தின் நன்முடிவுக் காக நம்மாலியன்ற பொருள் உதவி செய்தும், யுத் தத்திற்குவேண்டிய ஆட்களை நமது ராஜாங்கத்தாருக் குச் சகாயமாய்ச் சேர்த்துக் கொடுத்தும் உதவி புரிதல் முக்கிய கடமையாகும். உள்நாட்டில் சண்டை சச்சர வுகளுக் கிடங்கொடாமல் ராஜபக்தி குன்றிய காரியங் களிற்றலையிடுமவர்களைக் கண்டித்து ராஜவிசுவாஸம் கற்பித்துக் காக்க வேண்டியது நமது அருங்கடமை.—

இந்தியாவில் ஆங்கிலேயரின் செய்கை

நமது காருண்ய துரைத்தனத்தார் இவ்விந்தி யாவைச் சுவாதீனப்படுத்திக்கொள்வதற்குமுன்னம், நம் முன்னோர்கள் அநுபவித்த கஷ்டங்களும் தேச மிருந்த விதமும் இன்றும் பெரியோர்களால் கதை களாகச் சொல்லப்படுவதை நாம் கேட்கின்றோம்.—

முற்காலத்தில், ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குப் போகவேண்டுமாயின் நல்ல பாதைகள் கிடையா. மேடும்பள்ளமுமாய் அடவிகளின் மத்தி யிற் கொடிவழிகள் யாவும் துஷ்ட மிருகங்களினாலும் பழிபாவங்களுக் கஞ்சாத கிராதர்களினாலும் கள்வர்க ளினாலும் நிறைந்திருந்தன. வெளியூர்க்குச் சென்ற

வர் திரும்பி க்ஷேமமே வீடுவந்து சேரவேண்டுமே யென்னுங் கவலையோடு வீட்டிலுள்ள யாவரும் எதிர் பார்த்திருப்பர். சிற்சில பட்டணங்களைச் சார்ந்து மட்டும் சில பெரிய சாலைக ளிருந்தன. நமது ஆங்கி லேயவரசாட்சி துவக்கிய பிறகு, கொடிய மிருகங்கள் கூத்தாடாநின்ற வனங்கள் யாவும் பலனுதவும் புலங் களாகவும் விசாலமா யழகிய சாலைகளாகவும் பிரயா ணிகளின் போக்குவரவுக்குச் சௌகரியமாகவும் நிர்ப் பயமுள்ளனவாகவுஞ் சீர்திருத்தப்பட்டு ஆங்காங் குப் போலீஸ் முதலிய பந்தோபஸ்துக்களுடன் வெகு ஜாக்கிரதையாய்க் காக்கப்பட்டுவருகின்றன.

பூர்வம் தூரதேசத்துப் பந்துக்கள் ஒருவரொரு வர் பார்த்துக்கொள்வதாவது க்ஷேம சமாசாரம் தெரிந்துகொள்வதாவது வெகு கடினம். இப்போதோ ஒரு காலணாவினாற் காசிமுதற் கன்னியாகுமரிவரை யிலுமுள்ள அநேக ஆயிரமைல் தூரத்திலுள்ள ஜனங் களின் க்ஷேமசமாசாரங்களை ஒன்றிரண்டு மூன்று தினங்களுக்குள்ளே தெரிந்துகொள்ளும்படியாகத் தபாலாபீசுகளும், மணியளவில் விஷயம் தெரிந்து கொண்டு காரியமுடிக்கும்படியாகத் தந்தியாபீசுக ளும், நிமிஷவளவில் நேரிற்பேசிக்கொள்ளும்படியா கட் டெலிபோனுபீசுகளும் ஆங்காங்கு ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. த்வீபாந்தரங்களில் வசிக்கும் ஜன ங்களைக் காணவும் வர்த்தகச் சரக்குகளை ஏற்றுமதி இறக்குமதி செய்யவும் நீராவியந்திரக்கப்பல்களும்,

உள்நாட்டிற் சுலபமாய்ச் சொற்ப தொகைக்கு ஊரூர்க்குப் போகவும் வர்த்தகச் சரக்குக்களைக் கொள்வனை விற்பனை செய்யவும் சௌகரியமாக இருப்புப்பாதைகளும் ஏற்பட்டுள. மஹா நதிகளிற் பிரவகிக்கும் ஜலம் வீணாய்க் கடலிற் போய்ச் சங்கமிப்பதைத் தவிர்த்து ஆங்காங்கு அதிக பொருட் செலவிட்டுத் தக்க யந்திர அணைகளைக் கட்டி வாய்க்கால்களை வெட்டிச் சலத்தைத் திருப்பி நாட்டில் விட்டு ஏரி குளங்களை நிரப்பிப் புன்செய் கரம்பு நிலங்களை நன்செய் நிலங்களாக்குகின்றனர். பாழடைந்து கிடந்த பாலைவனங்கள் யாவும் நெற்பயிர் நிறைந்த நற்புலங்களாயின. இவற்றான் விளைவுப்பலன் பெருகி நாட்டிற் பஞ்சம் அரிதாகி அந்தந்தத் தேசத்து லாபநஷ்டங்கள் அந்தந்தத் தேசத்துடனே தங்கியிராமல் நாடு முழுதும் சமமாகப் பாவிச் சனங்கள் கஷ்டமின்றிச் சுகமாக வாழ்ந்துவருகின்றனர். நரபலி சிசுஹத்தி ஸஹகமநம் முதலிய கொடிய வழக்கங்கள் யாவும் நிவர்த்திக்கப்பட்டன. லக்ஷாதிகாரிக்கும் பிக்ஷாதிகாரிக்கும் சமமாகவே நியாயம் கிடைக்கும்படியாகச் சட்டங்களேற்பட்டு ஆங்காங்கு நியாயஸ்தலங்களும் நியாய விதாயகரும் ஸ்தாபிக்கப்பட்டுத் தருமம் தழைத்தோங்கப் பிரஜாபாலநம் நடைபெறுகின்றது.

நாணயமாகவும் விலை சுலபமாகவும் வஸ்திரங்களை நெய்யவும், சர்க்கரை எண்ணெய் அரிசி முத

லிய பதார்த்தங்களை மட்டுச்செலவினால் தயார்செய்ய வும், இரும்பு முதலிய லோஹங்களை யுருக்கி விதம் விதமாக வார்ப்படச் சாமான்களைப் பண்ணவும், இன்னும் பற்பல கைத்தொழில்கட்கு அநுகூலிக்க வும் வேண்டிய அநேக உபகரண யந்திரங்கள் தயா ர்ராய்க் கிடைக்கின்றன. வெகு காலமாய் ஓலைகளில் எழுதிவைத்திருந்த அரிய கிரந்தங்கள் நேர்த்தியாயும் யாவருமெளிதில் வாசிக்கக்கூடியனவாயும் நன்றாய்ப் பளபளப்பாய்த் தயார்செய்யப்பட்ட காகிதங்களில் சித்திரவிசித்திரமாக யந்திரங்களினால் வெகு சுலப மாக அச்சிடப்படுகின்றன. எப்போதோ முன் இருந்ததாகச் சொல்லப்பட்ட மின்சாரமானது இப் போது யாவராலு மறியப்பெற்று அநேக வித நன்மை களுக்கு ஆதாரமாகவிருக்கின்றது. வைசூரி கொள்ளை நோய் முதலிய கொடிய வியாதிகளுக்குத் தகுந்த மருந்துகள் தயாராக்கப்பட்டு ஆங்காங்குத் தரும ஆஸ்பத்திரிகள் ஜனோபகாரார்த்தமாக வேற்பட்டி ருக்கின்றன. கல்வியானது மிகுதியும் அபிவிருத்தி யாகும்படியாய் ஆங்காங்குப் பாடசாலைகள் ஸ்தாபிக் கப்பட்டிருக்கின்றன. அவரவர் தத்தம் வர்ணாச்ரம தருமத்திற் கேற்ப மேற்கொள்ளும் ஆசாரக்கொள் கைகளுக்கு யாதொரு பழுதும் நேராவண்ணம் நமது தேசத்தை ஆங்கிலேயர் ஆண்டுவருவது யார்க்கும் தெற்றெனத் தெரிந்த விஷயமே.

ஆங்கிலேய ஆளுகையில் அடிமைத்தனமென்பது நீங்கிற்று. அவரவர்தம் சுதந்தரங்களை நிலைநாட்டிப் பேசலாம். இந்தியர்கள் சுய அரசாட்சியின் சூக்ஷ்மங்களைக் கற்று அரசுக்கு உதவியாயிருத்தற்பொருட்டு முதலிற் பெரிய பட்டினங்களின் பரிபாலனாதிகாரம் நாட்டு ஜனங்களுக்கே கொடுத்தும், அவர்களில் மேம்பாடடைந்தாரை ராஜாங்க சட்டநிரூபண சபைகளில் அங்கத்தினராகச் சேர்த்தும், சிலர்க்கு ராஜாங்க நிர்வாஹ சபையிலும் அதிகாரமளித்தும் நமது கவர்ண்மெண்டார் நமக்கு ராஜ்ய பரிபாலன விஷயங்களில் ஊக்கத்தை யுண்டாக்கியிருப்பது யாவரும் நன்று யறிந்துள்ள விஷயமேயல்லவா? இனி யவர் நாளாவட்டத்தில் நமக்கு வேண்டிய சுதந்தரங்கள் யாவும் தந்து நம்மை மேன்மைப்படுத்திப் புரப்பரென்று துணிவுறச் சொல்லற்கிடமுண்டு.

நமது கல்வியும கைத்தொழில்களும் அபிவிர்த்தியாதற்காக நாம் முறையொப்ப முயலவேண்டும். ராஜாங்கத்தார் அத்தகைக் காரியவிடேற்றத்திற்காக உதவிபுரிவா ரென்பது திண்ணம்.

இம்மாதிரியாகக் கோடி சுகங்களைக் குடிகளுக்களித்து அன்புடன் ஆதரிக்கும் ஆங்கிலேய ராஜ்யம் நீடூழி வாழ்ந்து வளம்பெறுமாறு கருணைக்கடலாகிய ஜகதீச்வரன் அநுக்ரஹிப்பானாக!"

இவ்வாறாக ஆண்டிபட்டி ஜமீன்தார் உபந்யசித்து நிறுத்திய பின்னர்ச் சபையினர் யாவரும் அவர் சொற்றவற்றை யாமோதித்தற் கறிகுறியாகக் கரகோஷஞ்செய்து புஷ்பமாலையிட்டுப் பெருமைப்படுத்தினர். சபை கலைந்தது.

மறுநாளுதயம் விவாஹத்திற்கு வந்தவர் தம்தம் இருப்பிடங்களுக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

முடிவு

கமலா பாலா வனஜாக்ஷி லக்ஷ்மி—இவர்களது விவாஹங்கள் ஐயராமையரது ஏற்பாட்டின்படி யொழுங்குற நடத்தப்பட்டு அவரவர் இல்லறமேற்று இன்புற்றனர்.

* * *

பலராமையரும் சுப்பையரும் தம் மக்களது பெருவாழ்வு நோக்கி யின்புற்று அவர்களிடமே தங்கிக் காலங்கழிக்கலாயினர்.

* * *

ராஜப்பன் சுந்தரத்தாலும் சூடாமணியாலும் போதுமான திரவிய மளிக்கப் பெற்றுத் தனது அம்மான் ஐயராமையரின் சகாயத்தால் விவாஹம் செய்விக்கப்பட்டுச் சேர்க்கை நலத்தால் நன்மார்க்க மேற்று நமது கதாநாயகர்க்கு உற்றதுணைவனா யொழுகி வந்தான்.

* * *

வஸ்தாத் விசுவநாதனும் பங்கி பார்த்தசாரதியும் அவ்வப்போது செய்த பெருங் குற்றங்களுக்காக

ஸெஷன்ஸ் விசாரணையில் தம்மாயுள்ளவும் த்வீபாந்தர சிக்ஷை விதிக்கப்பட்டனர்.

* * *

சாவித்திரி யிறந்தபின்னர் அவள் தாயாரும் சகோதரனும் திக்கற்றவர்களாய்ச் சோற்றுக்குத் திண்டாடித் திரிந்து விஷரோய் பற்றித தருமவைத்திய சாலை யடைந்து துன்புற்று உயிர்நீத்தனர்.

* * *

நாராயணையர் தமது குமாரன் சுந்தரத்துக்குத் தம் ஜமீன் மற்றிதர சொத்துப பரிபாலனசுதந்தரம் யாவும் கொடுத்துவிட்டுச் சுகமே அவனுடனே யுறைவாராயினர்.

* * *

கிருஷ்ண கனபாடிகள் ஆற்றூரில் பெரிய மிராசுதாரராகி நமது தம்பதிகளின் க்ஷேமத்திற் கருத்துள்ளவராய்த் தம் குடும்பம் செழிக்கப் பழிப்பறப் பல்லாண்டு சுகித்து வாழ்ந்தனர்.

* * *

ஜயராமையரும் பாகிரதியம்மையும் சூடாமணியிடமே யிருந்து களிப்புற்றனர்.

* * *

ஜாகிர்தார் ஹநுமந்தராயர் சுந்தரத்தினிடம் அதிக பற்றுக் கொண்டு வித்தியாபிவிர்த்தி விஷயத்திற் றலையிட்டு அதனிமித்தம் ஏராளமாகப் பொருட் செலவிட்டு நாட்டினரால் மிகுதியும் நன்குமதிக்கப் பெற்றுக் கீர்த்தி யடைந்தார்.

* * *

ஜட்ஜ் நடேசையர் தமது உத்தியோகத்திற்கு ராஜீநாமா கொடுத்துவிட்டுத் தமைழுத்தோங்கு தம் குடும்ப நடப்பைப் புத்திரரிட மொப்புவித்து ஆத்ம தத்வத்தில் மனஞ்செலுத்திக் கடவுளைத் தியானித்த வண்ணமாய் அநுதினம் நிஷ்டையிற்கூடிக் களித்துக் காலங்கழிப்பாராயினர்.

*　　　*　　　*

வக்கீல் ராமஸ்வாமி ஐயர் சென்னையில் நிகரற்ற நியாய நிபுணரென்றும் சத்திய சந்தரென்றும் கீர்த்தி பெற்று நடேசையரது ராஜீநாமாவினல் காலியான நியாயாதிபதியின் உயர்தர வுத்தியோகஞ் செலுத்து வான் ராஜாங்கத்தாரால் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்த ஸ்தானத்திலே இரண்டாம் அறக்கடவுளேயென மதிக் கப்பெற்று நீதி செலுத்துவாரானர்.

*　　　*　　　*

ஆண்டிபட்டி ஜமீன்தார் தமது வமிசத்திற்கே யுரித்தான தரும கைங்கரியங்களும பொதுநன்மைச் செலவுகளும் சமயம் வாய்த்தபோதெல்லாம் மன மூவந்து மேற்கொண்டு அரசுக்கு மிகுதியும் துணை புரிந்தொழுகுவாராயினர்.

*　　　*　　　*

குண்டல தீக்ஷிதரின் குடும்பத்தார் யாவரும் தாம்கொண்டிருந்த மாச்சரிய மொழித்துச் சூடா மணியிடம் சிநேகம் பாராட்டி யொழுகலாயினர்.

*　　　*　　　*

சூடாமணியும் சுக்கரமும் பாலும் நிறமும் போல லும், மலரும் மணமும் போலும், நதியும் மதகும் போலும், ரோஹிணியும் அம்புலியும் போலும் பிரியா நேசத்தினராய் இல்லறம் நடாத்திச் சாஸ்திர விதிப்படி யொழுகித் தானாதி சற்கருமங்களை யியற்றித் தம்மைச் சார்ந்த பண்ணைக்கிராமங்களும் ஜமீன்களும் களிப்புற வோங்கிச் செழிக்க யாவராலும் போற்றப்பட்டுப் பன்னெடுநாட் பேறு பதினாறும் பெற்றுச் சிறப்புற வாழ்வாராயினர். சுபம்.

ராஜவிசுவாஸம்

இந்தற்போத வியாஸத்தில் நாட்டின் அபிவிருத்திக்காக முதியோர் சிறுவர் சிறுமிகள் உபாத்தியாயர் மாணுக்கர் முதலிய எல்லாக்குடிகளும் அரசாங்கம் செவ்வனே நடந்து யாவரும் சுகித்து வாழ்வதற்கு இன்றியமையாதனவான முறைகள் பல புகட்டியுள்ளன: நாடு அமைதியுடன் ஒழுங்காய் நடக்குங்காலத்தும், பகைவரால் பயம் உண்டாகிக் குழப்பமாயிருக்குங்காலத்தும், குடிகள் தம்முள் ஒருவரொருவருடனும அரசாங்கத்தாருடனும் பகைவருடனும் எங்ஙனம் நடந்துகொள்ளுதல் முறைமையென்பதும் யாவர் க்ஷேமத்திற்கும் யாது உற்றதென்பதும் மேற்கோள்களுடன் நன்கெடுத்துச் சொல்லியுள்ளன. சென்னைக் கவர்ன்மெண்டாரும் கவர்னருமுட்பட அநேக சீமான்கள் புஸ்தகத்தை ஆமோதித்து நற்சாக்ஷி பத்திரங்கள் அளித்துளர். நிகழும் ஐரோப்பிய யுத்தத்தினுல் குடிகள் வெவ்வேறு மனநிலைகளுடைய பலருடனும் அடைந்து நாடு அல்லற்படும் இச்சமயத்தில் ஒவ்வொருவரும் இப்புத்தகத்தை ஊன்றி வாசித்துத்தேர்ந்து முறைப்படி நடந்து நலம் பயக்கவேண்டுமென்னும் விருப்பத்துடன் இதற்கு விலை அணு இரண்டேயாக வைக்கப்பட்டது.

யுத்தமும் ஆங்கிலேய ராஜ்யமும்
துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டு அபிமானிக்கப்பெற்றது

இதில் தற்போதைய ஐரோப்பிய யுத்தத்தைப்பற்றிய அநேக விஷயங்கள் உள்ளவாறு விளக்கப்பட்டுள்ளன. ராஜவிசுவாஸத்தின் சிறப்பும் இன்றியமையாமையும் குடிகளின் செம்முறைகளும் கடமைகளும் நன்கு போதிக்கப்பட்டுள்ளன. யாவரும் வாசித்து யதார்த்த விஷயம் நன்கறியுமாறு இதன் விலை அணு எட்டேயாக வைக்கப்பட்டது.

மேற்கூறிய இரண்டு புத்தகங்களின் பிரதிகள் ஆங்கிலத்திலும் தெலுங்கிலும் அந்தந்த விலைக்கு அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.